# கர்த்தருடைய ஜெபம்





சாமுவேல் பவுல் ஐயர்

# THE LORD'S PRAYER

*Adapted from Charles Stanfords' Discourses on "The Lord's Prayer."*

BY

THE REV. S. PAUL, C.M.S.

---

# கர்த்தருடைய ஜெபம்

இதில்

கர்த்தருடைய ஜெபத்தின்பேரில்

பல பிரசங்கங்கள் அடங்கி இருக்கின்றன.

BISHOP STEPHEN NEILL LIBRARY
Palayamkottai

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

சென்னை

# கர்த்தருடைய ஜெபம்

சாமுவேல் பவுல் ஐயர்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

*Published by*
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX NO. 501, PARK TOWN, MADRAS - 3

**KARTHARUḌAIYA JEBAM**
BY REV. SAMUEL PAUL

© CLS

*First edition 1898*
*Reprinted, 1996*

Printed at THE C.L.S. PRESS, MADRAS—7. L 5864

# பதிப்புரை

**சீ**முவேல் பவுல் ஐயரின் 152 ஆம் பிறப்பாண்டு ஜூன் 15 ஆம் தேதி நிறைவுறுவதை ஒட்டி அவருடைய சில நூல்களை மீண்டும் வெளிக்கொணரும் திட்டத்தின்படி இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மூன்று நான்கு தலைமுறையினர் வாசித்துப் பயன டைந்து வந்திருக்கும் இந்நூல் உங்களுக்கும் நலம் பயப்ப தாக அமைய ஆண்டவர் அருள்புரிவாராக.

அருள்திரு. டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ்
பொதுச் செயலாளர்
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை

ஜூன் 11, 1996
சென்னை

# முகவுரை

கர்த்தருடைய ஜெபத்தின்பேரில், சார்லிஸ் ஸ்ற்ருன்போர்ட் (Charles Stanford, D.D.) என்னும் வேத சாஸ்திரியார் எழுதிய பிரபந்தத்தை மேற்கோளாக வைத்துக்கொண்டு, தமிழ் கிறிஸ்தவர் களுக்கு உபயோகமாக இதை எழுதிப் பிரசித்தப்படுத்துகிறோம்.

இந்த ஜெபம் நமது இரட்சகரால் இரண்டுதரம் போதிக்கப்பட்ட படியால், இதின் அவசியம் விளங்கும் (மத். 6:9-13; லூக். 11:2-4). இது மனுஷஜாதி அனைத்துக்கும் பொதுவான ஒரு ஜெபமாயிருக்கிறதுடன், கிறிஸ்தவர்களாகிய அவருடைய பிள்ளை களுக்கு விசேஷமாய் வேண்டிய ஒரு ஜெபமாயிருக்கிறதென்ற கருத்துடன் பல ஞானபோதனைகளை உணர்த்தியிருக்கிறோம். இதில் அடங்கிய கருத்துக்கள் ஆவிக்குரிய ஞான சாஸ்திரத்தை ஒருவாறு தெளிவிக்கின்றன.

இந்த ஜெபத்தின் இரகசியங்களை ஜனங்களுக்குப் பிரசங்கமாக முறையே சொல்ல உதவிசெய்யும்படி அந்தந்த பாகத்துப் போதனை யின் முடிவில் பொழிப்புரை எழுதிவைத்திருக்கிறோம்.

*July, 1898*
SACHIAPURAM

S. PAUL

# பொருளடக்கம்


பக்கம்

1. **இயேசு ஜெபத்தின் உபாத்தியாயர்.** — 'ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்க வேண்டும்' (லூக். 11:1) ... ... ... ... ... ... 1

2. **கர்த்தருடைய ஜெபம் ஒரு மாதிரியாகக் கொடுக்கப் பட்டது.** — 'நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது.' 'நீங்கள் ஜெபம்பண்ணும்போது' (மத். 6:9; லூக். 11:2) ... ... ... ... ... ... 21

3. **கடவுள் வணக்கம்.** — 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' (மத். 6:9; லூக். 11:2) ... ... ... ... 36

4. **முதலாம் விண்ணப்பம்.** — 'உம்முடைய நாமம் பரி சுத்தப்படுவதாக' (மத். 6:9; லூக். 11:2) ... ... 57

5. **இரண்டாம் விண்ணப்பம்.** — 'உம்முடைய இராஜ்யம் வருவதாக' (மத். 6:10;..லூக். 11:2) ... ... ... 75

6. **மூன்ரும் விண்ணப்பம்.** — 'உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல, பூலோ கத்திலேயும் செய்யப்படுவதாக' (மத். 6:10; லூக். 11;2) ... ... ... ... ... ... ... ... ... 85

7. **நாலாம் விண்ணப்பம்.** — 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.' 'எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்.' 'அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும்' (மத். 6:11; லூக். 11:3 ஜெப புஸ்.) ... ... ... 102

8. **ஐந்தாம் விண்ணப்பம்.** — 'எங்கள் கடனுளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்.' 'எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களுக்குக் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே' (மத். 6:12; லூக். 11:14) ... ... ... ... ... 118

9. **ஆறும் விண்ணப்பம்.** — 'எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணுதிரும்' (மத். 6:12; லூக். 11:4) ... 135

10. **ஏழாம் விண்ணப்பம்.** — 'தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்' (மத். 6:13; லூக். 11:4) ... 149

# ராவ் சாஹிப் சாமுவேல் பவுல் ஐயரவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

கனம் சாமுவேல் பவுல் ஐயரவர்கள் திருநெல்வேலி மாவட்டம் தென்கரையைச் சேர்ந்த பாட்டக்கரை என்னும் கிராமத்தில் 1844ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் தேதி பிறந்தார். இக்கிராமம் மெஞ்ஞானபுரத்திற்கருகில் உள்ளது. நிலவளம், நீர் வளம் பொருந்தி, மாந்தோப்புகள் அடர்ந்த செழிப்பான ஒரு சிற்றூர். இவருடைய தந்தையார் கனம் தானியேல் பவுல் ஐயரவர்கள். சிறந்த பக்தன். வைராக்கிய பிரசங்கி. புகழ்பெற்ற மிஷனெரியாகிய கனம் ஜே. தோமாஸ் ஐயரவர்கள் இவருடைய பிரசங்கங்களைக் கேட்டு எழுப்புதலடைந்து கூறியதாவது: ''பவுல் தானியேல் ஐயர் செய்யும் பிரசங்கங்களைப்போலொத்த பிரசங்கங்கள் லண்டன் பட்டணத்துப் பொறப்பங்களில் செய்யப்படுமாகில், ஆலயங்களில் இடம் காணுதேபோம். ஒருவேளை இந்தியாவில் எழும்பின குருக்களில் இவர்தான் மகோன்னத பிரசங்கியாயிருக்கலாம்.''

இச் சிறந்த பக்தனின் பதினொரு பிள்ளைகளில் சாமுவேல் பவுல் ஐயர் ஆருவது பிறந்த ஆண் மகன். இவருக்கு முந்தின ஐந்து பேரும் பெண்கள். சாமுவேல் பவுல் ஐயர் இளமையில் தம் தந்தையார் உபதேசியார் அலுவல் பார்த்த கிராமத்தில் மூலாதாரக் கல்வி கற்றுக்கொண்டார். வேத அறிவைப் பெருக்கி வந்தார். மெஞ்ஞானபுரம் கலாசாலையில் கனம் ஜே. தோமாஸ் மிஷனெரியின்கீழ் உயர்தரக் கல்வி கற்ருர். பாளையங்கோட்டையில் கனம் சார்ஜென்ற் மிஷனெரியின்கீழ் வேத சாஸ்திரக் கல்வி பெற்ருர். பின்னர் சென்னப்பட்டணத்தில் கனம் சத்தியநாதன் ஐயரவர்களின்கீழ் உபதேசியாராகச் சிறந்த பணியாற்றினுர். திருநெல்வேலி அத்தியட்சாதீன குருவாகிய கனம் பரமானந்தம் சிமியோன் ஐய்ரவர்களின் குமாரத்தியை 1868ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6ஆம் தேதி அன்பினகரம் என்னும் கிராமத்தில் மணம்புரிந்து மீண்டும் சென்னப்பட்டணத்திற்கே தேவ ஊழியம் செய்யும்படி வந்தார். 1871இல் குருத்துவ ஊழியத்திற்கெனத்

தெரிந்துகொள்ளப்பட்டு, அதற்குரிய பரீட்சைகளில் முதல்தரமாகச் சித்திபெற்று, 1874ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி மகா கனம் ஜெல் அத்தியட்சரவர்களால் திருச்சிராப்பள்ளி எஸ்.பி.ஜி. ஆலயத்தில் குருப்பட்டம் பெற்று, உதகமண்டலம் சி.எம்.எஸ். சபைக்குக் குருவாக நியமிக்கப்பட்டார். அதற்குப் பின்னுள்ள ஊழியத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம்: (1) மலை ஊழியம், (2) நகர ஊழியம், (3) நாட்டுப்புற ஊழியம்.

**உதகமண்டலம்:** (1) மலை ஊழியம் (1874-1883). உதகமண்டலத்துத் தமிழ்ச் சபையில் ஒன்பது வருடங்கள் அதிக ஊக்கத்தோடும் பிரயாசத்தோடும் உழைத்துக் கடைசியாக மரணத்துக்கேதுவான வியாதிநிலையுண்டாகி அநேக நாள் ஆஸ்பத்திரியிலிருந்து சற்று சுகமானபின் நீலகிரி மலை அவருக்கு ஒத்துக்கொள்ளாதென்று வைத்தியர் அபிப்பிராயப்பட்டதால் அவ்விடத்தை விட்டு சென்னப்பட்டணத்துக்கு மாற்றப்பட்டார். நீலகிரியிலிருக்கையில், உவைநாடு சபையை (Wynaad Mission) ஸ்தாபித்துக் கவனித்து வந்தார். 1882ஆம் வருஷம் கள்ளிக்கோட்டையில் சிதறியிருந்த தமிழ்ச் சபை அங்கத்தினரை ஒன்றுசேர்த்து அச்சபையை ஸ்திரப் படுத்தினர். அங்ஙனமே குன்னூரிலும் சர்ச் மிஷன் சபையை ஸ்தாபித்தார். உதகமண்டலத்தில் ஐரோப்பியருடைய வீடுகளில் வேலைசெய்யும் வேலைக்காரருக்குப் பிரசங்கிக்கும்படியாக வேலைக்காரர் மிஷன் (Servants' Mission) என்று ஓர் மிஷன் ஏற்படுத்தி, அதற்கு ஒரு உபதேசியாரை நியமித்து அவருடைய சம்பளம் முழுவதும் மிஷனில் பொறுக்காதபடிக்கு ஒவ்வொரு துரைமார் வீட்டிலும் மாதம் 1 ரூபாய் வீதம் வசூல்செய்து உபதேசியாருடைய சம்பளத்தில் பாதி அவ்விதமாய்க் கிடைக்கும்படி ஒழுங்குசெய்தார். இதர மதஸ்தருக்குக் கிறிஸ்து மார்க்கத்தைப் பிரசங்கிப்பதற்குப் பற்பல முறைகளைக் கையாடி வந்தார். ஹோபார்ட் பாடசாலையில் இரண்டு வாரத்துக்கொரு தடவை தமிழிலாவது இங்கிலீஷிலாவது இதர மதஸ்தருக்கு விசேஷ பிரசங்கம் செய்து பிரசங்கம் முடித்த பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சந்தோஷமாய் விடையளிப்பார். வாரந்தோறும் சந்தைக்கூட்டங்களில் புறமதஸ்தருக்கென்று

பிரசங்கம் நடத்துவார். மாதத்துக் கொருமுறை பௌர்ணமி தின இரவில் சதுர்ப் பிரசங்கம் செய்வார். அடிக்கடி சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருக்கும் கைதிகளுக்குப் பிரசங்கம் செய்வார்.

**சென்னையில் குருத்துவ ஊழியம்:** (2) நகர ஊழியம் (1883-1887). சென்னப்பட்டணம் டக்கர் கோவிலுக்கு 1883ஆம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியில் குருவாக நியமிக்கப்பட்டு அதிக உண்மையோடும் ஊக்கத்தோடும் தேவ ஊழியத்தை நடப் பித்தார். இவர் நடத்திவந்த ஆராதனைகளும் பிரசங்கங்களும் அதிக பக்தி விநயமும் எழுப்புதலுமுள்ளவைகளாயிருந்தன. இவர் காலத் தில் தான் பாடகர்கள் நியமிக்கப்பட்டுக் கின்னர வாத்தியத்தோடு ஆராதனைகள் முதல் முதல் நடத்தப்பட்டன. இளைப்பாறும் நேர மெல்லாம் தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு எழுப்புதலும் பிரயோஜனமு மான நூல்களைத் திரளாக எழுதினர். இதினுல் தமிழ்ச் சபையோ ரெல்லாம் ஐயருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

**சாட்சியாபுரம்:** (3) கிராம ஊழியம் (1887-1900). இது வட திருநெல்வேலி சபையை விசாரணைசெய்த காலத்தைக் குறிக் கும். வட திருநெல்வேலிக்காகத் தன் ஜீவனைக்கொடுத்த கனம் ராக்லாண்டு ஐயருடைய கல்லறை இந்நாள்வரையும் கிறிஸ்துவின் சுவிசேஷத்து ஞாபகஸ்தம்பமாக விளங்கிநிற்கும் சிவகாசியென் னும் ஊருக்கருகிலுள்ள சாட்சியாபுரம் என்னும் கிராமத்தில் அவர் தம் கிராம ஊழியத்தை ஆரம்பித்தார். சாட்சியாபுரம், வாகைக் குளம் ஆகிய இரண்டு வட்டாரங்களுக்கும் தலைவராக நியமிக்கப் பட்டு மரணபரியந்தம் அங்கேயே தங்கி மிக ஆர்வத்துடன் திருப்பணியாற்றினுர். தவச உற்சவத்தை ஏற்படுத்துவதற்கு முதல் முதல் ஆலோசனை சொன்னவர் இவரே. இவருடைய ஏற்பாட்டின் படிதான் தவச உற்சவம் நம் நாட்டில் முதல் முதலாக 1891ஆம் வருடம் ஜூன் மாதம் சாட்சியாபுரத்தில் கொண்டாடப்பட்டது.

**இதர தொண்டு:** 1890ஆம் வருஷம் முதல் 'நற்போதகம்' என்னும் மாதாந்தர தமிழ் பத்திரிகைக்குப் பத்திராதிபராயிருந்தார். 1894ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி சென்னை அத்தியட்சரவர்கள் இவரை ஆனரெரி சாப்பிளனாக (Honorary Chaplain) நியமித்தார். திருநெல்வேலி சபைகளைக் கண்காணித்து வந்த கனம் மோர்ளி (Bishop Morley) அத்தியட்சரவர்களுக்கும் இவர் ஆனரெரி சாப்பிளனாகவிருந்தார்.

**ராவ் சாஹிப் பட்டம்:** சபையின் வாழ்வை வெகுவாய்க் கருதியிருந்ததுமல்லாமல் இராஜாங்க விஷயமாகவும், பொதுஜன நன்மைக்காகவும் பலவாறாகத் தம்மால் கூடியமட்டும் உழைத்து வந்தார். சிரிவிலிப்புத்தூர் தாலூகா போர்டு மெம்பராகவும், திருநெல்வேலி ஜில்லா போர்டு மெம்பராகவும் நியமகம் பெற்று அச் சங்கங்களில் நல்ல ஆலோசனை கொடுத்துவந்தார். பிரஜைகளின் நன்மைக்கென்று இவர் எழுதிய அபரிமிதமான புத்தகங்களை நன்கு மதித்து இந்தியாவின் கவர்னர்-ஜெனரலவர்கள் 1898ஆம் வருஷம் இவருக்கு ''ராவ் சாஹிப்'' (Rao Saheb) என்னும் பட்டம் கொடுத்துக் கனப்படுத்தினார்கள். இந்தியாவில் இந்தக் கவுரவத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது சுதேச குரு இவரே.

இவர் மரிப்பதற்கு முந்தின வருடமாகிய 1899ஆம் வருஷம் மே, ஜூன் மாதங்களில் சிவகாசியில் பெருத்த கலகங்களும் கொள்ளைகளும் உண்டாகி, அனைவரும் கலங்கி நிற்கையில், கலகத்துக்குத் தளகர்த்தனாயிருந்தவனோடு இவர் சமாதான உடன்படிக்கை செய்து சாட்சியாபுரத்தையும் அதிலிருந்த கிறிஸ்தவர்களையும் தற்காத்தார்.

**இறுதிக் காலம்:** தமிழ்க் கிறிஸ்தவச் சபையின் உள்ளான ஆவியின் வளர்ச்சியைக் கருதிக் கிறிஸ்துவைப்போல் ஜீவித்தல் (Imago Christi) என்னும் ஓர் அருமையான புத்தகத்தை எழுத எண்ணங்கொண்டு ஆறு மாத காலமாய் அதற்கு வேண்டிய ஆதாரங்களைத் தேடி, ஆழ்ந்த யோசனையுடன் அதை எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் திடீரென்று 1900 வருஷம் மார்ச்சு

மாதம் 4ஆம் தேதி ஞாயிறு காலை ஜுரம் ஆரம்பித்து, கபால வியாதியும் அத்துடன் இருமலும் கலந்து, வைத்தியர்களின் பிரயாசத்துக்கு வியாதி அடங்காமல், மார்ச்சு மாதம் 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் ஒரு மணிக்குச் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் தம் பரம இளைப்பாறுதலுக்குட் பிரவேசித்தார். வியாதி ஆரம்பிக்கிற கடைசி நேரம் வரை தம் வேலையில் மிக ஊக்கமுள்ளவராயிருந்தார். வியாதிப்படுவதற்கு முந்தின தினமாகிய சனிக்கிழமை இரவு சுமார் 12 மணிக்குத் தம் சபையைச் சேர்ந்த சில வியாதியஸ்தரைச் சந்தித்து, அவர்களுக்கு உதவி புரிந்து, அவர்களோடு ஜெபம் செய்தார். இதுவே அவருடைய குருத்தொழிலின் கடைசி ஊழியம்.

**மரணப்படுக்கை:** அவர் மரிப்பதற்கு முன் செய்த கடைசி ஜெபத்தில் ஆண்டவரே சிறு வயது முதல் என்னை உமது ஊழியத்தில் அமர்த்தி இதுவரையில் என்னில் உம்முடைய நாமம் மகிமைப்படக் கருணைகூர்ந்தீர். இப்போதும் என்னை உமது சமுகத்துக்கழைத்துக்கொள்ளச் சித்தங்கொண்டீர். ஆனால் இன்னும் சில காலமாத்திரம் ஜீவித்திருப்பேனானால் நான் இயற்றத் துவக்கின இரண்டு புத்தகங்களை (Imago Christi and Imitation of Christ) முடித்துத் தேவரீருடைய சந்நிதி சேர சந்தோஷத்தோடு எதிர்நோக்கியிருப்பேன். ஆயினும் என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தமே ஆகக்கடவது என்றார். கடைசியாக அருகிலிருந்த தமது உடனூழியனாகிய அருளப்பன் உபாத்தியாயரைப் பார்த்துத் தம் வீட்டைச் சுட்டிக்காட்டி, சகோதரனே, இந்தக் கூரையைப் பார்த்தீரா? என்ன கேவலமாயிருக்கிறது! இது என் வீடல்ல. நான் போகும் மாளிகைக்கு இது ஈடாகாது. இதைப் பார்க்கிலும் மிக அலங்காரமான மாளிகை எனக்கு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்துக்கு நான் போக வேண்டும்; கோவில் மணியடிக்கிறது; கோவிலுக்கு நான் போகிறேன் என்று சொன்னார். இதுதான் அவருடைய கடைசி வார்த்தை. தம் அருமை மனைவி அவரிடம் வந்து தனக்கு என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்க, தன் கையை உயர்த்திக் காட்டிக் கண்ணை மூடினார். அதன்பின் அவர்

மனதிலே ஜெபித்து அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தை யும், கர்த்தருடைய ஜெபத்தையும் வாய்க்குள் சொல்லி முடித்தார். உடனே அவருடைய ஆவி அகமகிழ்வுடன் ஆகாயப் பிரவேசமா யிற்று. மரித்தபின் அவருடைய முகத்தில் காணப்பட்ட முகமலர்ச்சி யும், சந்தோஷமும், அழகும் அனைவரையும் பிரமிக்கச் செய்தன. இவருடைய சரீரம் சாட்சியாபுரம் கோவிலைச் சேர்ந்த கல்லறைத் தோட்டத்தில் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டை அத்தியட்சாலயத்தில் ஒரு ஞாபகார்த்த கல்லும் பதிக்கப்பட்டிருக் கிறது.

அவர் எழுதிய 16 சிறந்த நூல்களில் ''ஆத்தும நேசரின் அங்க மகத்துவ''மும், மொழிபெயர்த்த 26 நூல்களில் ''மோட்சப் பிரயாணம்'' என்னும் புத்தகமும் இன்றுவரை மிக அருமையாக மதிக்கப்பட்டு வருகின்றன. பவுல் ஐயர் மரித்தும் இன்னும் பேசுகிறார் என்று உண்மையாகவே சொல்லலாம்.

THE LORD'S PRAYER.

# கர்த்தருடைய ஜெபம்.

## 1. இயேசு ஜெபத்தின் உபாத்தியாயர்.

"ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்." (லூக். 11. 1.)

இப்பொழுது நான் சொல்லப்போகிறது முகவுரைப் போதனையாக மாத்திரமிருக்கிறது. கர்த்தருடைய ஜெபத்தின் வாசகங்களைப்பற்றியும், அதின் சரித்திர சம்பவங்களைப்பற்றியும் இதில் அங்குமிங்கும் அற்ப சொற்பமான குறிப்புகள்மாத்திரம் அடங்கியிருக்கும்; என்றாலும் இதினால் அநேகருடைய மனம் பரவசப்பட ஏதுவாயிருக்குமென்று நம்புகிறேன். இந்த ஜெபத்தின் மூலமாய் இரட்சகர் போதிக்கும் ஞானபோதனைகளை அறியவும், நமது ஆவியானது இந்த மகத்துவ ஜெபத்தைத் தக்கபிரகாரம் உணர்ந்துகொள்ளவும் பரிசுத்த ஆவியானவர் நம்மை எவி எழுப்பிவிடுவாராக. இயேசுவை ஜெபத்தின் உபாத்தியாயராக ஏன் மதிக்கவேண்டுமென்றும், அவர் போதிக்கிறதின் போக்கென்னவென்றும் நாமிங்கே கவனிப்போமாக.

I. இயேசுவை ஜெபத்தின் உபாத்தியாயராக ஏன் மதிக்கவேண்டும்?

ஜெபத்தின் விஷயத்தில் எப்படி ஜெபிக்கிறது என்று அறிந்துகொள்வதுதான் முதற்காரியமென்பதை நாம்

ஒத்துக்கொள்ளவேண்டியது. தெய்வீக தத்துவசாஸ்திரத்தின் நுட்பங்களை நான் அறிவேன் என்று எண்ணுவதும், அப்படி அறிந்தவர்களைப்போலப் பேசுவதும் தங்களை "ராஜாதிராஜாவின் அந்தரங்க ஆலோசனைக்காரர்" போல் நினைத்துக்கொள்வதும் மனுஷருக்கு இயல்பு; என்றாலும் ஜெபத்தைப்பற்றிய நுட்ப அறிவு அவர்களுக் கில்லாதபட்சத்தில், அவர்கள் அறிவெல்லாம் வெளிவேஷந்தான். தேவன் இன்னும் இரகசியத்திலிருக்கிறார்; கிருபாசனத்தை ஒரு திரை மறைத்துக்கொண்டிருக்கிறது. சுவிசேஷ சத்தியத்தின் புதியதும் பழையதுமான இரகசியப் புதையல்களெல்லாம் நமக்குத் தெரியும் என்று மனுஷர் சொல்லிக்கொண்டபோதிலும், அவர்கள் வெளியிலுள்ள விஷயங்களை மாத்திரம் அரைகுறையாக அறிந்திருக்கிறார்கள்; தேவ இரகசியங்களின் பொக்கிஷசாலையானது, பூட்டப்பட்டிருக்கிறது; அதற்குத் திறவுகோலுமில்லை; என்றாலும் ஒரு ஆத்துமாவாவது அறிவில்லாமல் அழிந்துபோக வேண்டியதில்லை; நாம் அறிவடைய ஆசித்தால் அதற்கு நல்ல வழியுமிருக்கிறது.

ஒருகாலத்தில் பலஸ்தீனாவில் ஒரு ஆள் தோன்றி, தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னார்; அவர் செய்த செய்கையானது, அவருடைய சொல் மெய்யென்பதைத் திருஷ்டாந்தப்படுத்திற்று. அவரைக்குறித்து பரிசுத்த ஆவியானவர் எழுதுகிறதாவது:—"தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை; பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்பதே.* அவர் பிரசங்கித்த சுமார் மூன்று வருஷங்களில், அநாதிகாலமுதல் அடக்கமாயிருந்த தேவனுடைய நித்திய அன்பை அவர் வெளிப்படுத்தி, நித்தியஜீவனுக்குரிய வார்த்தைகளை அவர் விளம்பி, சிருஷ்டிகர்த்தாவுக்கும், சிருஷ்டிகளுக்கும், பாவத்தாலுண்டாயிருந்த பிரிவினையையும் பகைமையையும் அவர் தம்மு

* யோவா. 1. 18.

டைய பிராயச்சித்தப்பலியால் நிவிர்த்தியாக்கி, சிலுவையின் மரணத்தில் அவர் நமது சுபாவத்தையும் பாவங்களையும் சுமந்தவராய் விளங்கிப் பின்பு மாயமாய் மறைந்துபோகாமல், மறுபடியும் மகிமையுள்ள ஒரு சரீரத்தோடு அவர் உயிர்த்தெழுந்து, பரமேறி, மத்தியஸ்தராய் ஆசனத்தில் வீற்றிருந்து, என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறவராய், தாம் மரணத்தால் சம்பாதித்த வாழ்வுகளை மனுப்புத்திரருக்கு அளித்துவருகிறார்.

நாம் எப்படி ஜெபம்பண்ணலாம் என்று ஆசைப்படும்போது, அவர் சீஷர் நினைத்ததுபோல, நமக்கு ஜெபம்பண்ண வகைசொல்லத்தக்கவர் அவர்தானென்று நினைத்துக்கொள்ளுகிறோம். சீஷர் இயேசுவிடம் கேட்ட சம்பந்தத்தை நாம் கவனித்தால் அவர்கள் அப்படிக் கேட்டது சரிதான் என்றும், அந்தப்படி இயேசுவிடம் கேட்டது நியாயந்தானென்றும் உணர்ந்துகொள்வதுடன், நாமும் அவரிடத்தில்தான் கேட்டுப் படித்துக்கொள்ளவேண்டும் என்றும் அறிந்துகொள்ளுவோம். அவர்தான் ஜெபத்தின் உபாத்தியாயர். இதுதான் அவருடைய வேலை. இப்பொழுது அவர் பரலோகத்திலிருக்கிறார்; அவருடைய பக்தர் எப்போதும் ஜெபம் செய்ய அவரிடத்தில் படிக்கிறார்கள்; அவர் படிப்பித்துக்கொண்டே வருகிறார்.

இல்லை!—இப்படிப் படிப்பிக்கும் வேலை குமாரனையடுத்ததல்ல; பரிசுத்த ஆவியின் வேலை என்று சிலர் சொல்லலாம். ஆனால் பரிசுத்தஆவி படிப்பிக்கவேண்டுமென்றுகேட்டுக்கொண்ட குறிப்பு புதியஏற்பாட்டில் ஒன்றாவது இல்லை. சீஷர்கள் பரிசுத்த ஆவியிடம் போய், "ஆண்டவரே ஜெபம்பண்ண எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்று கேட்கவில்லை. அறியப்படாத தேவனுடைய சமுகத்திற்கு நாம் போகும்போதெல்லாம் முதலாவது இயேசுவண்டை போகவேண்டியது; நாம் பதிலை எதிர்பார்க்குமுன், நம்முடைய ஜெபங்க ளொவ்வொன்றும் 'இயேசுவண்டை போகவேண்டியது. நம்முடைய பயங்கள், கவலைகள், விருப்பங்கள் எல்லாம், ஸ்தேவான், பவுல், அப்போஸ்தலர் முதலியவர்கள் மாதிரிப்

படி இயேசு நமது முன்னிருக்கிறார் என்ற நினைவோடு, அவருக்குப் படைக்கப்படவேண்டும். நாம் அவரிடத்தில் பேசும்போது ஆவியானவரிடத்திலும் பேசுகிறோம்; ஏனெனில், பரிசுத்த சத்துவங்களை அருளும்படி, திருச்சபையின் தலைவராகிய இயேசுவில், அவருடைய ஆவியுமிருக்கிறார். அவர் ஜெபத்தின் உபாத்தியாயராய்த் தமது ஆவியைக்கொண்டு நமக்குப் போதிக்கிறார். அந்த ஆவியைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறதாவது:—"அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்." "ஆவியே உயிர்ப்பிக்கிறது" "ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்" என்பதே.*

II. அவர் போதிக்கிறதின் போங்கென்ன? என்று இனிப் பார்ப்போமாக.

நாம் கர்த்தாவையும், கருவியையும் பகுத்தறிந்து கொள்ளவேண்டியது. கர்த்தா ஒருவர், அதாவது இயேசு பரிசுத்த ஆவியைக்கொண்டு போதிக்கிறார். அதின் கருவிகளோ அனந்தம். இரட்சகர் போதிக்கும் போங்கை, நாம் திட்டமாய் அறியும்படி அவர் தமது ஆவியால் பிரயோகிக்கும் பல கருவிகளின்னதென்று சற்று ஆராய்வோமாக.

1. நாம் காதால் கேட்கும் ஒரு ஜெபத்தைக்கொண்டு நமக்குப் படிப்பிக்கிறார். நம்மைப் படிப்பிக்கிற விஷயத்தில், முதலாவது படிக்கும்படி நமக்குள் ஒரு

---

* ரோ. 8. 26, 27.

ஆசையை எழுப்பிவிடவேண்டும். ஒரு பாவி இரட்சகனை முந்தி நோக்குகிறதேயில்லை. நாம் கேட்குமுன், அவர் நமக்குப் படிப்பிக்கிறார்; அவருடைய அந்தரங்க ஏவுதலினால்தான் நாம் ஜெபம்பண்ண படிப்பிக்கக் கேட்கும்படித் தூண்டப்படுகிறோம். இந்தத் தூண்டுதல் பெரும்பாலும் நாம் காதால் கேட்கும் ஜெபமாயிருக்கிறது. நாம் தியானிக்கும் வாசகத்தின் சந்தியும் அப்படியே இருக்கிறது.

"அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்த பின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்றான்.

பரி. லூக்கா எழுதிய குறிப்புகளை நாம் கவனித்தால், இந்தச் சம்பந்தத்தில் பரிசுத்த இயேசு செய்த ஜெபத்தை சீஷர் தூரத்தில் கேட்டதாக நினைக்கலாம். அவர் அன்று செய்த ஜெபத்தில் ஏதோ அதிசயமிருப்பதுபோல அவர்கள் மனதிற்குப் பட்டது என்று சொல்லவேண்டியதிருக்கிறது. இந்த ஜெபமானது அவர்களெல்லாரும் கூடியிருந்த பல சமயங்களில் இயேசு செய்த குடும்ப ஜெபத்தைப்போ லிருக்கவில்லை. இது அவர்களை விலக்கிவிட்டு, தாம் தனிப்பட்டு, ஒருகாலமும் அவர்கள் காணாதவகையான மகத்துவம்போல மனதில் படும் புதிய போங்காயிருந்தது. இந்தமாதிரி தனித்திருந்து அவர்கள் இதற்குமுன் ஜெபம் பண்ணாததுபோலும், இதைப் புதிதாகப் படித்துக்கொள்ளும்படி விரும்புகிறதுபோலும் ஒரு குறிப்பு விளங்குகிறது. பூர்வத்தாரில் ஒருவன் யாதொரு கருத்துமறியாமல் யாக்கோபு ஆகாயமுகமாய்ச் செய்த ஜெபத்தையும், மூன்று வருஷமாக மழையை அடைத்ததும் அதன்பின் திறந்ததுமான எலியாவின் ஜெபத்தையும், சிங்கங்களின் கெபிக்குள்ளிருந்து தானியேல் ஒரு இரவில் செய்த ஜெபத்தையும், மீன் வயிற்றிற்குள்ளிருந்து யோனா செய்த விண்ணப்பத்

தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்குள் பிரதான ஆசாரியன் பண்ணின ஜெபத்தையும் பக்கத்திலிருந்து கேட்டான் என்று வைத்துக்கொள்ளுவோம். அந்த ஜெபங்கள் இந்தப் பரிசுத்த ஜெபத்துக்கு இணையாகுமா! அவை எம்மாத்திரம்! அது எப்படியிருந்ததென்று கண்டறிந்து சொன்ன கண் தெளிவிக்கப்பட்ட புருஷன் ஒருவனுமில்லை. என்றாலும் அதின் இரகசியம் ஒருவாறாக இப்போது வெளிப்படுகிறதுபோலிருக்கிறது. இயேசு ஒரு மலையின்மேல் இராவெல்லாம் தங்கி ஜெபம் செய்கிறார், அவர் அதிகாலையில் மலையிலிருந்து வரும் சமயத்தில் அவருடைய சிஷர் அவரைச் சந்திக்கப் போகிறார்கள். அவர்கள் செடிகளையும், புதர்களையும் தாண்டி மலையேறுகிறார்கள். அப்பொழுது அமைதல்—அமைதல்!

அங்கே "ஒரு இடத்தில்" இயேசு ஜெபம் செய்துகொண்டிருக்கிறார். அதைக் கண்டவுடனே, அவர்கள் தங்களை மூன்றும் வானத்திலிருக்கிறவர்களைப்போல நினைத்து மனஎழுச்சி யடைகிறார்கள்; இம்மட்டும் அவர்கள் கேளாத வார்த்தைகளையும், மனுஷர் பேசக்கூடாத வாசகங்களையும் கேட்கிறார்கள். ஐயோ, சும்மாயல்லோ இங்கே வந்துவிட்டோம் என்றெண்ணி, பின்னடந்துபோக யோசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் பலத்துக்கு மிஞ்சின ஒரு பலம் அவர்களுடைய கைகளைப் பிடித்து நிறுத்தினாற்போல, அவர்கள் நின்று அந்த ஜெபம் முழுவதையும் கேட்கிறார்கள், அந்நேரத்தில் அவர்கள் "சரீரத்திலிருந்தார்களோ சரீரத்துக்குப் புறம்பே இருந்தார்களோ?" சந்தோஷமாயிருந்தார்களோ, சஞ்சலமாயிருந்தார்களோ? அவர்கள் அறியார்கள்; அவர்கள் தங்களை மறந்தவர்களானார்கள். அவர் ஜெபம் பண்ணி முடித்தபின்பு, "அவருடைய சிஷரிலொருவன்.........ஆண்டவரே, எங்களுக்கு ஜெபம்பண்ணப் போதிக்கவேண்டும்" என்று கேட்டான்.

அந்த ஜெபதொனியைப்போல இன்பமான தொனி இந்தகிரகத்தில் இதற்குமுன் கேட்கப்படவுமில்லை, இனிக்

கேட்கப்படவுமாட்டாது! இப்போது அவருடைய திருமுகம் இருந்த சாயலையும், திருவுதடுகளின் தொனியையும் நாம் பார்க்கவும் கேட்கவும் விரும்பினால், அதற்கு முன் நாம் மரிக்கவேண்டும். என்றாலும் அவருடைய ஆவிக்குரிய பிரசன்னமும், கிருபையின் அவதாரமும் இப்பொழுது மிருக்கிறது. அது ஒரு போனதாயல்ல, லட்சாதி லட்சம் போனதாயிருக்கிறது. அவருடைய ஆவி இன்னும் நம்மோடிருக்கிறது; இன்னும் அவர் மனுப்புத்திரரின் உதடுகளின் மூலமாய் ஜெபம்பண்ணுகிறதை நாம் கேட்கலாம்.

ஜெபத்தைப்பற்றிய அதிசயத்தை அவர் நமது மனதில் எழுப்பும் யத்தனங்களில் நாம் காதால் கேட்கும் ஜெபங்கள் ஒன்றாயிருக்கிறது. உங்களில் சிலர், இது மெய்தானென்று சாட்சி பகரக்கூடும். தன் தாய் ஜெபம் செய்வதைப் பார்த்து, தானும் ஜெபம் செய்ய ஏவப்பட்டவர்கள் சிலர் இருக்கலாம். இப்பொழுது ஊருக்குத் தலைவனாய் அல்லது சபைக்கு மூப்பனாயிருக்கிற ஒருவன் ஒரு சிறுபையனால் அல்லது வேலைக்காரனால் ஜெபம் செய்ய ஏவப்பட்டிருக்கலாம். தன் சிறிய மகன் ஜெபிப்பதைப் பார்த்து, தானும் ஜெபம் செய்ய ஏவப்பட்ட தகப்பனுமிருக்கலாம். "சிறு பிள்ளைகள் தேவனுடைய சர்வகலாசாலையின் சாஸ்திரிகளாயிருக்கிறார்கள்" என்று ஒரு பெரிய ஞானி சொல்லியிருக்கிறார். சிலதரம் நீ வேத வசனங்களை வாசிக்கும்போது உன் பிள்ளை அதைக் கேட்டு, நீ இம்மட்டும் கவனியாத ஒரு கேள்வியைக் கேட்கலாம்; அல்லது உன் மனதில் இதுவரையும் தென்படாத புதிய கருத்தைச் சொல்லலாம். அவன் வார்த்தைகள் புது அம்புபோல உன் மனதில் தைக்கலாம். சிலதரம் அவன் அச்சமற்று தைரியத்துடன் தன் பரமபிதாவைப் பார்த்து ஜெபிக்கும் மாதிரியை நீ பார்த்து, உனக்குள்ளே வெட்கப்படவேண்டியது மிருக்கலாம். இச்செய்கையானது, ஆண்டவரே, நான் ஜெபம்பண்ணும்படி எனக்குப் போதித்தருளும் என்று மன்றாட உன்னை ஏவும் கருவிபோலிருக்கிறது.

2. இயேசு நம்முடைய வருத்தங்களைக்கொண்டு நம்மை ஜெபம்பண்ணப் போதிக்கிறார். கிறிஸ்து திருச்சபைக்குத் தலையாயிருக்கிறார். அவருடைய அன்பின் ஒரு போக்கு, உலக சம்பவங்களைக்கொண்டு, தமது பிள்ளைகளைப் பரிசுத்தப்படுத்தி, சத்தியத்தை நிலைப்படுத்தும்படியான முறையாக அவர்களை ஆளுகை செய்வதுதான். இவ்வித வேலையில் அவர் நம்மை ஜெபம் பண்ண ஏவும்படிப் பலதடவை நமக்கு வருத்தங்களையும் சங்கடங்களையும் கட்டளையிடுகிறார். நாம் வருத்தப்படும்போது செய்யும் ஜெபங்களெல்லாம் நம்மைப் படிப்பிக்கும்படி ஆவியானவரால் நடப்பிக்கப்படுகிற பிரயத்தனம் என்பது என் கருத்தல்ல; அப்படிப்பட்ட அநேக கூப்பாடுகள், கடலில் புசலடிக்கும்போது கடற்காகங்கள் பயந்து அலறுகிறதுபோலொத்த சரீர உணர்ச்சிக்குரியவைகளாக மாத்திரமிருக்கலாம்.

“தேவன் இல்லை யென்பார் பித்தர்;
துக்கம் இல்லை என்பார் இல்லர்,
கஷ்ட காலம் கேட்கும் சத்தம்
ஆவி ஏவும் சத்தம் போலாம்.”

“தன் அவதிகாலத்தில் நாஸ்திகனே இல்லை” என்றொருவர் எழுதியிருக்கிறார். ஒருகாலத்தில் தேவனேயில்லை என்று சாதுரியமாய் நியாயம்பேசி தன்னைப் பிரஸ்தாபப்படுத்திவந்த ஒருவன் பாயும் படுக்கையுமானான். அவனுடைய மனோராஜ்ய நியாயங்களுக்கும் அவன் வியாதிக்கும் எவ்வளவேனும் பொருந்தவில்லை. அவனை ஆறுதல்படுத்தும்படி வந்த சிநேகிதனை அவன் கூப்பிட்டு, “ஒருவேளை ஒரு தேவன் இருக்கலாம், எங்கேயோ இருக்கலாம், யாராவது ஜெபம் செய்யுங்கள்” என்று அவஸ்தைக்குரலோடு சொன்னான். இன்னொரு காலத்தில் நாஸ்திகன் என்று பேரெடுத்த ஒரு பதிதன், தனக்குச் சங்கடம் நேரிட்டபோது, “கர்த்தாவே, இரக்கம் காட்டும்” என்று அபயமிட்டான். ஆத்துமத்துக்கடுத்த சரித்திரங்களில் இது சகஜமாயுள்ள காரியம்தான். “ஆண்டவரே, ஜெபம்

பண்ண எங்களுக்குப் போதித்தருளும்" என்று கேட்டதற்குச் சுமார் ஐஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னே, ஒரு புலவன் இதுபோலொத்த ஒரு சரித்திரத்தைத் தன் கவியில் பாடியிருக்கிறான். கிரேக்க சேனை பனிக்கட்டியான ஒரு பாறையைக் கடந்தபோது, தேவன் இல்லையென்று மறுத்த பதிதருங்கூட முழங்காலூன்றி, "கர்த்தாவே, நாங்கள் கடந்துபோகுமட்டும் இந்தப் பனிக்கட்டி உருகாதபடிக் கிருபை செய்யும்" என்று மன்றாடினார்களாம். ஒரு பயங்கரமான வருத்தம் நேரிட்டபின்பு ஜான் நியூட்டன் என்பவர் "இக்காலத்தில்தான் ஜெபத்தைக் கேட்கிறவரும், ஜெபத்துக்குப் பதிலளிக்கிறவருமான ஒரு தேவன் இருக்கிறார் என்பதை அறிந்தேன்" என்றெழுதியிருக்கிறார். உன் ஜீவியத்திலுள்ள அலுவல்களில் நேரிடும் நஷ்டங்கள், ஆபத்துகள், நோய்கள், இடறல்களில், உன் ஆவி ஏவப்பட்டு நீயும் ஜெபம் செய்ய ஆரம்பிக்கலாம். லண்டன் நகரத்தில் கொள்ளை நோய் உண்டாயிருந்தகாலத்தில் எல்லாக் குடிகளையும் கோயிலுக்குள் முழங்காலில் நிற்கக் காணலாம்; அது நின்றுபோனபின்பு, ஆலயத்தையும் ஜெபத்தையும் ஒருவரும் எண்ணாதேபோனார்கள். ஆகவே "ஜெபமுமில்லை, பரமண்டல மந்திரமுமில்லை" என்ற பழமொழி அக்காலத்தில் வழங்கப்பட்டது. 1588-ல் ஸ்பானியருடைய போர்க்கலங்கள், இங்கிலாந்துக்கு விரோதமாய்ப் படையெடுத்து நின்றபோது, அத்தேசத்திலுள்ள ஆலயங்களெல்லாம் ஜெப தூபத்தால் பரிமளித்தது, அந்தப் பயம் நீங்கி, காலம் செல்லச்செல்ல ஜெபங்கள் ஓய்ந்து ஆலயங்கள் வெறுமையாயின. நாம் நமது ஜீவிய சரித்திரத்தைக் கவனித்தாலும், காரியம் அப்படியே இருக்கிறதென்றுஉணர்ந்துகொள்ளுவோம். இது சரியான ஜெப ஜீவியமா? முன் இஸ்ரவேலரைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பதுபோல "கர்த்தாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடினார்கள்; உம்முடைய தண்டனை அவர்கள்மே லிருக்கையில் அந்தரங்க வேண்டுதல் செய்தார்கள். என்று சொல்லப்படலாமா" (ஏசா. 26. 16.).

நாம் நஷ்டம் வந்தவுடனே ஜெபிக்கிறவர்களாயும் லாபம் வந்தவுடனே ஜெபத்தை நிறுத்துகிறவர்களாயு மிருக்கலாமா? ஜெபத்தின் ஆதாரமான மெய்த்தேவ பக்தியானது உலகவாழ்வால் குறைந்துவரும்போது, உபத்திரவங்களும் துன்பங்களும் நம்மை ஜெபத்துக்குத் திருப்பிவிடும் கருவிகளாயிருக்கின்றன. இது, நீங்கள் ஜெபம் செய்யும்படி தேவன் உங்களை நடத்தும் போக்கேயன்றி வேறல்ல.

ஒரு இராஜன் ஒருநாள் ஒரு சமுசாரியின் வீட்டுக்கு முன்னின்று, அவன் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு, வெளியே வா, உன்னோடு நான் பேசவேண்டியதிருக்கிறது என்று சத்தமிட்டார். அவன் அச்சத்தத்தைக் கவனிக்கவில்லை. மறுபடியும், வா—வா—என்று கூப்பிட்டார், சத்தமில்லை; மூன்றுந்தரம் சீக்கிரம் வா, உன்னோடு பேசவேண்டும் என்று கத்தினார்; அதற்கும் மறுமொழியில்லை; அப்போது அந்த அரசன், அவன் வீட்டுப் பக்கத்திலிருந்த வைக்கோல் படப்பில் தீக்கொளுத்தினான். உடனே வீட்டுக்குள்ளிருந்த சமுசாரி வெளியே வந்து, என் படப்பில் ஏன் தீக்கொளுத்தினீர், இந்த அநியாயமுமுண்டா! என்று அலறினான். தேவன் நம்மை ஜெபத்துக்கு வழிநடத்தி வருவதும் இதுபோலிருக்கிறது. இப்படி ஒரு மனுஷன் எரிச்சலால் செய்த செய்கையைக்கொண்டு தேவ நடத்துதலை உணர்த்துவது சரியா என்று ஆட்சேபிக்கவேண்டாம். தேவன் தமது அன்பால் சிலதரம் நம்மைத் தம்மண்டை வர இழுக்கிற முறை துன்பத்தினால்தான் என்ற சத்தியத்தைக் காட்டவே இத்திருஷ்டாந்தத்தை இங்கே உபயோகித்தோம் என்று நினைத்துக்கொள்ளுங்கள். நாம் தேவனோடு அடிக்கடி நெருங்கி ஜீவிக்காமலிருக்கும்போது, தேவன் துன்பமாகிய அக்கினியைக் கொண்டு நமது குடும்ப ஜீவியத்தைக் கொளுத்தி நம்மைத் தம்மண்டை இழுக்கப் பார்க்கிறார் என்பதுதான் அந்த திருஷ்டாந்தத்தின் கருத்து.

3. இயேசு தாமே ஜெபத்தின் வாய்க்கால் என்று வெளிப்படுத்துகிறதால் நம்மை ஜெபம் செய்யப் படிப்பிக்கிறார். இதை அவர், முதலாவது தாம் போதித்த ஜெபத்தின் வாசகத்தாலும், இரண்டாவது அவருடைய ஆவியின் போதனையாலும் படிப்பிக்கிறார். நாம் கிறிஸ்து மார்க்க சாஸ்திரப்படி பாவமின்னதென்றும், ஜெபம் இன்னதென்றும் அறியும்போது, கிறிஸ்துமார்க்க ஜீவியத்துக்கு அஸ்திபாரமானவரை அண்டி அவர் படிப்பித்த ஜெபத்தை நாடுகிறோம். அப்போது அவர், "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவண்டை வரான்" என்று நமக்கு உணர்த்துகிறார். அவருடைய மற்றெல்லாப் போதனைகளும், முந்தின வாசகத்திலும், "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச்செய்வேன்" என்ற வாக்கிலும் தொங்கி நிற்கிறது. நாம் அவருடைய பள்ளிக்கூடத்தில் சேரும்போது, நமக்குக் கொடுக்கும் பாடப்புஸ்தகத்தின் பொருளடக்கமெல்லாம், பாவியின் ஜெபங்கள் தேவனிடம் போக அவர்தான் வழி என்பதும், அவர் அந்த வழியைத் தமது பிராயச்சித்த பலியினால் உண்டுபண்ணியிருக்கிறார் என்பதும்தான் என்று அறிந்துகொள்ளுகிறோம். இந்த வழி "இரத்தம்" என்ற வார்த்தைக்குள் அடங்கியிருக்கிறது. நாம் பயபக்தியோடும் பிரமிப்போடும் வாசிக்கும் "கிறிஸ்துவின் இரத்தம்" என்ற வாசகம், எந்தப் பரிசுத்தனையும் பக்தி விநயத்துக்கு ஏவிவிடுகிறதால், அவன் தன் முகத்தை மூடிக்கொண்டு பரவசப்பட்டு, தெய்வீக அச்சத்தால் பரிசுத்த, பரிசுத்த, பரிசுத்த இரத்தம்! என்று தனக்குள் சொல்லிக்கொள்ளுகிறான். நியாயப்பிரமாணமும், சுவிசேஷமும் இதே சத்தியத்தை ஸ்தாபிக்கிறது: ஒளியாயிருக்கிற அவரோடு ஐக்கியப்பட்டவர்களானால், "அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்." நாம் தேவனுக்குச் சமீபமாக

வேண்டுமானால், "இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் சமீபமாகிறோம்." பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்க நமக்கு தைரியம் வேண்டுமானால், "புதிதும் ஜீவனுமான இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாகத்தான்" அது கிடைக்கிறது.

கிறிஸ்துவின் இரட்சிப்பைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், "இயேசுகிறிஸ்துவின் இரத்தம்" என்பது கவி அலங்காரமான பாஷைப் போக்கேயன்றி வேறல்ல; அது இயேசு ஏதோ ஒருவழியாக நம் இருதயத்தைக் கழுவிச் சுத்தமாக்குகிறார் என்ற பொதுக்கருத்தை மாத்திரம் கொடுக்கிறது என்கிறார்கள். ஆனால் இது கவி அலங்கார வாசகமல்ல! கவிகள் உலக இயல்புப் பிரமாணங்களின் வர்ணிப்பாயிருக்கின்றன. கவிகள் இயற்கையின் அழகையும், அலங்காரத்தையும் சார்ந்து செல்லுகின்றன. இயற்கையானது பலிசடங்குகளை உணர்த்துகிறதா? இரத்தம் அழகுள்ளதா? யுத்தகளத்து இரத்தங்கள் அழுக்கை வெண்மையாக்குகின்றதா? பூர்வகாலத்தில் கிருபாசனத்தின்மேல் தெளிக்கப்பட்ட பலி இரத்தமானது, அதின் பொன்னைப் பிரகாசமாக்கிற்றா? பரிசுத்த பணிமுட்டுகளில் தெளிக்கப்பட்ட இரத்தங்கள் அதின் அழுக்கை அகற்றிவிட்டதா? அதின் சிவந்த நிறமும், அதுபட்ட கறையும் தீட்டல்லவா? இரத்தத்தைக் கண்டவுடனே மனுஷர் பெரும்பாலும் மயங்கி, முகம் கறுத்து, வாந்திபண்ணுகிறதில்லையா? சுத்தத்தை விளக்கும் கவிப்போக்கொன்றும், இரத்தத்தை வர்ணித்ததில்லை; கவிகள் ஜலத்தை சுத்திகரிக்கும் கருவியாக வர்ணிக்கும். தாம் ஒருவரே ஞானமுள்ளவராயிருக்கிறவர்மாத்திரம் ஆத்தும சுத்தத்துக்கு இரத்தத்தைக் கருவியாக ஸ்தாபித்தார். "இரத்தமே உயிர்" என்று மோசே எழுதியிருக்கிறார். அதெப்படியாகும்? அவர் உடலுக்குள்ளிருக்கும் உயிரையல்ல; உடலை விட்டுப் பிரிந்த உயிரைக்குறித்து அப்படிச் சொல்லியிருக்கவேண்டும். உடலை விட்டு வெளியேறின உயிர் என்பது, அந்த உடலின் மரணத்தை உணர்த்துகிறது.

"என் ஆடுகளுக்காக என் ஜீவனைக் கொடுக்கிறேன்" என்ற வாசகத்தை நிறைவேற்றுகிறவராய், "இரத்தம்" என்ற வார்த்தையின் முன்குறிப்புக் கருத்தை நிறைவேற்றினார். பலியில் "சிந்தப்பட்ட" அல்லது "ஊற்றப்பட்ட" அல்லது "செலுத்தப்பட்ட" இரத்தமானது ஜீவனுக்காக அவர் கொடுத்த ஜீவனாயிருந்தது. இரட்சண்யத்தை யடுத்த தேவ தீர்மானத்தின்படி இந்த பலியினிமித்தமே ஒரு பாவியாவது, அவன் ஜெபமாவது தேவனால் அங்கிகரிக்கப்படக்கூடியது.

இந்த பலியை முன்னிட்டே சிலகாலமாயாவது அநேக நாட்களாயாவது, பரமபிதாவின் சமுகத்தை மறந்த ஒரு பிள்ளை மறுபடியும் நாடிப்போகவேண்டியது. பிராயச்சித்த விஷயமோ வானத்துக்குரியதும், பூமிக்குரியதுமான அநேக வாழ்வுகளைக் கொடுக்கும் பல பிரிவுள்ளதாயிருக்கிறது. அதற்கு ஜெப சம்பந்தமான ஒரு பிரிவுமிருக்கிறது. ஜெபிக்கவேண்டியது இருதயந்தான்; இருதயந்தான் ஜெபம் படிக்கும் பள்ளிப் பிள்ளையா யிருக்கவேண்டும். இயேசு ஜெபசாஸ்திரத்தைக் கற்பிக்கும்போது, ஆட்சேபிப்பது இருதயந்தான்; இயேசுவின் பிராயச்சித்தத்தை முன்னிட்டு ஏன் ஜெபிக்கவேண்டும்? இரட்சிப்படைய அதுதான் ஏன் வழியாயிருக்கவேண்டும்? நான் ஏன் அந்த வழியாய் தேவனிடம் போகவேண்டியது? வேறு வழியாய்ப் போனால் ஆகாதா? நான் எந்தவழியாய் வந்தாலுமென்ன? வரத்தானேவேண்டும் என்றிப்படி வழக்குப் பேசுவதெல்லாம் இருதயந்தான். உணர்ச்சியின்படி ஒருவன் பாவியாயிருந்தாலும், அப்பாவம் நீங்கவேண்டிய வழியைப்பற்றிய விஷயத்தில், அவன் கிரியைகளை விசேஷிக்கும் அஞ்ஞானியாயிருக்கலாம். ஒரு கப்பல் கடலில் யாத்திரை செய்தபோது அதின் திசை காட்டும் கருவியானது பக்கத்திலிருந்து ஒரு பீரங்கியால் தடுக்கப்பட்டு, அதின் ஊசியைத் திருப்பி, சரியான திசையைக் காட்டவிடாதபடி இடைஞ்சல் படுத்தினது; அத்தால் மாலுமி எவ்வளவு அநுபோகசாலி

யும், சமர்த்தனுமாயிருந்தும், அக்கப்பல் பாறையில் மோத நேரிட்டது. நமது இருதயத்திலிருக்கும் ஏதாவதொரு இரும்பால் (பாவத்தால்) ஆத்துமாவின் திசைக் கருவியாகிய மனச்சாட்சி திசை தப்புவதால், நமது ஜெபங்களும் சரியான பாதையை விட்டு விலகிச் செல்லலாம். "என்னிருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" என்று சங்கீதக்காரன் சொல்வது இதின் சத்தியத்தை உறுதிப்படுத்துகிறது. இயேசு அந்தப் பாவ இரும்புத்தடையை நீக்கி, உன் ஜெபம் சரியாய்ச் செல்லத்தக்க வகையை உனக்குப் போதிப்பார். பரிட்சிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் இதற்குச் சாட்சியாயிருக்கிறான்.

4. இயேசு தமது சொந்த ஆவியை நமது ஜீவியத்தின் ஆவியாக்கி நம்மை ஜெபிக்கப் படிப்பிக்கிறார். நமக்குள் வசிக்கும் ஆவியானவர் நமது ஜீவியத்தை ஜெப ஜீவியமாக்குகிறார்; ஆகவே நாம் மூச்சுவிடுவது எப்படி இயல்பாகிவிடுகிறதோ, அதுபோல ஜெபம் செய்வதும் இயல்பாகிவிடுகிறது. உத்தம பக்தரும்கூட சிலதடவை, ஜெபிக்கிறவிஷயத்தில் மந்தமாய்ப் போகிறார்கள்; ஓர் வகை மந்தாரம் அவர்களுடைய மனமலையை மூடுகின்றது; அவர்கள் மறுபடியும் விழித்து "என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது, உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" என்று அழுகிறார்கள் (சங். 119. 29.). அக்காலத்தில் ஜெபமானது உயிரற்றதுபோல தோன்றுகிறது. ஜெபிக்கிறவன் சரியான ஜெபவாசக மின்னதென்று அறிகிறான்; அதை ஒழுங்குபடுத்தவும் அவனாலாகிறது, ஆனால் அதற்குச் சிறகு முளைக்கப்பண்ண அவன் தன்னைச் சக்தியற்றவனென்று காண்கிறான். இயேசுவின் பாலிய சரித்திர சம்பந்தமாகச் சொல்லப்படுகிற ஒரு கதையுண்டு; அதாவது, அவரும் அவருடைய விளையாட்டுத் தோழரும், மண்ணால் குருவிகளைச் செய்து வைத்து விளையாடிக்கொண்டிருக்கும்போது, இயேசு அவைகளுக்கு

உயிர் கொடுத்து பறந்துவிடச் செய்வாராம். ஜியார் மக்டானல்ட் என்பவர் இக்கதையை அமைத்துக் கட்டியிருக்கிற கவியின் சாரமாவது:—

“என் ஜெபகுருவியை, நான் தூக்கி
கூண்டின்வாயில் வைத்தேன்; அது செத்து,
பறந்தோட மாட்டாதே போயிற்று;
பழங்கதை நினைத்தேன் அப்போது;
பாலர் செய்த மண் குருவிகளை
பறந்தோடும் பட்சி யாக்கினாராம்;
நீர் அறிவீர் அதின் நிசம் பொய்யை,
என் ஜெபத்தை உம் கையில் வாங்குமேன்!
தேவா, அதற்குயிரைக் கொடுமேன்.”

நாம் நமது ஜெபத்தை ஒழுங்குபடுத்தின பின்பு, “நன்றாயிருக்கிறது” என்று சொல்லிக்கொள்ளுகிறோம். ஆனால் எது காரணத்தாலோ, சத்ததூரத்துக்குமேல் அது எழும்புகிறதில்லை. ஆதலால் அதை மறுபடியும் ஜெபித்து, அதற்கு உயிர் கொடுக்கிறவருடைய தயவுக்குக் காத்திருப்போமாக. நம்முடைய ஜெபங்களுக்கு அவர் மூர்த்தியாவது, பிந்தியாவது உயிர் கொடுக்கும்போது, அதற்கு முன்னமே, நமக்கு உயிர் கொடுக்கிறார் என்ற உண்மையை உணர்ந்துகொள்வோமாக. முதலாவது நமக்குள் அவர் உயிர்தந்து, நாம் ஜெபம்பண்ணப் படிப்பிக்கிறார்.

இதே சத்தியத்தை நாம், சமாரிய ஸ்திரீக்கும், இயேசுவுக்கும் நடந்த சம்பாஷணையாலும் உணர்ந்துகொள்ளலாம். இயேசு அவளைப் பார்த்து “நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்” என்றார். இது கிறிஸ்தவர்க்கு உள்ளான ஜீவியத்தின் போக்கை ஒருவாறு காண்பிக்கிறதென்னலாம். நாம் கருதாமலும், ஆயத்தப்படாமலும், நமது நடையிலும், பேச்சிலும், மௌனத்திலும் ஊடே பூடே ஒரு சிறிய ஜெப

வார்த்தையை வசனிப்போம்; அல்லது அர்த்தராத்திரியில் விழித்து, பயத்தால் அல்லது சந்தோஷத்தால் அல்லது நம்பிக்கையால் ஒரு விண்ணப்பத்தைச் செய்ய ஏவப்படலாம்; வர வர பெருமூச்சின்போல் பெருமூச்சும் மன்றாட்டின்மேல் மன்றாட்டும் பெருகலாம்; இவை எல்லாவற்றின் கருத்தென்ன? இவை, இயேசு எனக்குப் படிப்பிக்கும் ஜெபபாடந்தான்; இந்த மனோவாஞ்சை "நித்திய ஜீவகாலம்வரையும் ஊறுகிற" என்னுடைய நீரூற்றின் குமிழிகள்தான். சிறு ஊற்றுகளாய் ஆரம்பித்து, கற்களுக்கும், வேர்களுக்குமிடையில், அரவந்தெரியாமல் கசிந்துவரும் மெல்லிய நீரோடைகள் ஒன்றோடொன்று கூடி மைதானங்களில் விஸ்தாரமான ஆறுக ஓடுகின்றனவே. அந்நதிகள் பலவற்றில் வியாபார கப்பல்களும் செல்லுகின்றன. நமக்குள்ளிருக்கும் ஜெப ஊற்றுகள் அதிகப்பட்டு அகன்ற நதிபோல வானம் நோக்கிப் பாயும்போது, வானவாழ்வுகளில் அநேகத்தை நமது இருதயம் அநுபவிக்க இடம்பெறுகிறது.

5. சரியாய் ஜெபம் பண்ணுவதிலிருக்கிற வருத்தத்தை உணர்த்துவதால் இயேசு நமக்கு ஜெபம்பண்ணப் படிப்பிக்கிறார்.

பேலி சாஸ்திரியார் "நான் என் மாணக்கருக்கு எந்தக் கருத்தையும் லேசில் விளக்குவித்தேன்; ஆனால் அந்த மாணக்கர் அதிலிருக்கிற வருத்த மின்னதென்பதை அறியாமலிருக்கிறதுதான் எனக்கிருக்கிற ஆச்சரியம்" என்று சொல்லியிருக்கிறார். வைதீக, லௌகிக விஷயமான எந்தப் படிப்பிலும் இந்த ஆச்சரியத்தைக் கவனிக்கலாம். ஜெபம் செய்யப் படிக்கும்விஷயத்தில், இதில் மகா வருத்தமும் சங்கடமுமான பாகமிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளாதபட்சத்தில் அந்தச் சாஸ்திரத்தில் நீ பாண்டித்திய மடையமாட்டாய். இயேசு தமது அளியால் நீ ஜெபிக்க பலத்தைக் கொடுக்கிறார்; அதை யடுத்த வருத்தத்தால் உன்னைப் படிப்பிக்கும்படி முயற்சிக்கிறார்.

என்றாலும் பலர், ஜெபம் பரிசுத்தமும், நன்மையுமான ஒரு செய்கையாயிருந்தாலும், வெறும் பேச்சும், மனோக்கியானமும்; வெகுலேசுமான ஒரு விஷயம், அது பெண்டுகளுக்கும், பிள்ளைகளுக்கும், பாதிரிகளுக்கும், பக்தருக்குமாத்திர மடுத்தவிஷயம்; அது வேலையற்றவர்களுக்கும், காலம்போக்க வழியற்றவர்களுக்கும் அடுத்தது; அது ஒரு அந்நியபாஷையைக் கற்பதுபோல அவ்வளவு வருத்தமா? சாஸ்திர ஆராய்ச்சிபோல அவ்வளவு சங்கடமா? கல்வி கற்பதுபோல கஷ்டமா? கல்வி கற்பிப்பதும், பிரசங்கிப்பதும் பிரயாசை. வைத்தியமும், வஸ்தாதுத் தொழிலும் வருத்தம். ஆனால் ஜெபம் செய்வதோ மகா லேசு என்பார்கள். வேலை செய்தலையும், ஜெபம் செய்தலையும் பற்றிப் பேசும்போது, பிந்தினது ஒரு வேலையா என்று சொல்வாருண்டு. உலகத்தார் "வேலை தான் வணக்கம் என்பார்கள்." நாமோ "வணக்கந்தான் வேலை" என்கிறோம்.

ஜெபத்திலிருக்கிற ஒரு பெரிய வருத்தம் தேவபிரசந்நத்தை உணருதல்தான். முழங்கால் ஊன்றுவதும், ஜெபிப்பதும் லேசுதான். ஆனால் அச்சமயத்தில் தேவன் தனக்கு முன்னிருக்கிறார் என்றும், தான் அவர் சமுகத்துக்கு முன்னிருக்கிறான் என்றும் உணர்ந்துகொள்ளுதல் வருத்தம். ஒருகாலத்தில் நாம் இதைப்பற்றிக் கவலையற்றிருந்தாலும், அவ்வுணர்ச்சி யுண்டானபின்பு ஜெபமும், அச்சமயத்தில் நமது நடபடிக்கைகளும் நமது மனதுக்குப் பல வருத்தங்களை உண்டுபண்ணுகின்றன.

இன்னொருவருத்தம், தேவ முகமாயுள்ள நமது வாஞ்சையின் குளிர்ச்சிதான். லைபிரதார் நாட்டு பழங்குடிகளான கிறிஸ்தவர்கள், மோரேவியன் குருக்களைப் பார்த்து, "ஒரு குழந்தை தன் தாயை நாடும் வாஞ்சைபோலும், ஒரு வேட்டைக்காரன் மான்பேரில் கொள்ளும் வாஞ்சைபோலும், எங்கள் மனம் தேவன்மேல் வாஞ்சைகொள்ள விரும்புகிறோம்" என்று சொன்னார்கள். இந்த உணர்ச்சி விக்கிரகத்தொழும்பருக்கு வரமாட்டாது. இது ஞானஜீவனுக்கு அதிபதியாகிய இயேசு

கிறிஸ்துவால் மாத்திரமுண்டாகிறது. நாமும் நமது ஆவியில் அடிக்கடி குளிர்ந்துபோகிறதில்லையா?

வேறொரு வருத்தம், அக்கம் பக்கமுள்ள சகவாசத்தாலும், சங்கடங்களாலும் நேரிடுகிற பல இடையூறுகள் தான், நாம் கருத்தோடு ஜெபம்பண்ண ஆசித்தாலும், இப்படிப்பட்ட தடைகளால், மனம் அலைசடிப்பட்டு ஒரு நிலையிலிராமல் அவதிப்படுகிறோம். அதிகமாய் ஜெபித்துவந்த முற்காலத்திலிருந்த ஒருவர் முதலாய், "ஜெபம் செய்யப் போகும்போது, நமது மனமானது, அடுப்பில் வைக்கும் பச்சை விறகுக்குச்சுகள்போல தீப்பிடியாமல் புகைந்து, கருகி, திக்குமுக்கடைக்கிறது" என்று எழுதியிருக்கிறார். இந்தக் கலக்கத்தை யுண்டாக்குகிறவர் இயேசுதான். நாம் அவருடைய சகாயத்தையும், அவருடைய ஆவியின் துணையையும் பெற்றுக் கொள்ளும்படி இப்படிச் செய்கிறார்.

மற்றொரு வருத்தம், வீணான எண்ணங்கள் குறுக்கிடுவதுதான். "நம்முடைய ஜெபத்தின் வார்த்தைகளை எழுதி, அதின் இடைக்கிடையே, அப்போதுண்டான வீண் எண்ணங்களையும் குறிப்பிக்கிறதுண்டானால் எவ்வளவாக நமது மதியீனம் விளங்கும்" என்று பிலிப்பு என்றி என்பவர் எழுதியிருக்கிறார். இயேசு ஜெபம் பண்ணப் படிப்பிக்குமுன், ஜெபத்தில் வரும் வீண் எண்ணம் அவ்வளவு விசேஷமானதென்று அவர் உணர்ந்துகொள்ளவில்லை.

வேறொரு வருத்தம் மனச்சிதைவுதான். சிமித் கோல்வில்லி என்பவர் தமது ஆத்தும அநுபோகத்தைப்பற்றி எழுதியநூலில், "ஜெபம் செய்கையில் என் மனம் கண்டபடி ஓடிக் கலவரப்படுத்தினது, அதை நான் பிடித்து உட்காரவைக்க வேண்டியதாயிருந்தது" என்கிறார். இப்படி அறிவீனத்தாலும், பலவீனத்தாலும் நமக்குண்டாகிற வருத்தங்களை எண்ணிமுடியாது. மொத்தமாய்ச் சொன்னால், கோல்டிரிஜ் சொல்வதுபோல் "ஜெபத்திற்குரிய சரியான தன்மைப்படி ஜெபிக்கப் பழகுவதுதான்

மனுஷனுடைய மனமுயற்சிகள் எல்லாவற்றிலும் கடின
மானது". என்றுணர்ந்துகொள்ளவேண்டியது.

மேலே காட்டிய வழியாலும் இன்னும் வேறு பல
வழிகளாலும் இயேசு, நம்மை ஜெபம் செய்யப் படிப்பிக்
கிறார். அவர் நமக்கு ஜெபத்தைப் படிப்பிக்கிறாரே
யல்லாமல் அதின் சாஸ்திர ஆழங்களைப் படிப்பிக்கிற
தில்லை. அநேகர், இந்த சாஸ்திரத்தைப் பற்றித்தான்
நாம் முதலாவது அறிந்துகொள்ளவேண்டுமென்று அபிப்
பிராயப்படுகிறார்கள். கிறிஸ்தவர்கள் முதலாய் பெரும்
பாலும், இக்காலத்தில் ஜெபசம்பந்தமான ஆட்சேபங்
களையும் சமாதானங்களையும் எழுதிவருகிறார்கள். இக்
காலத்தின் இயற்கை அவர்களை அப்படி எழுத ஏவிவிடு
கிறது. தத்துவசாஸ்திரிகள் என்று சொல்லிக்கொள்ளு
கிற பலர், "ஜெபத்தாலாவதென்ன? உன் ஜெபத்தினால்
இயற்கை மாறுமா?" என்று பிதற்றுவதை இக்கால வாலி
பர் கேட்டு மனம் பேதலிக்கிறார்கள்.

அவர்களுக்கு உத்தரவாக நாம் சொல்லவேண்டியதெ
ன்ன? இயற்கைப் பிரமாணத்தை மாற்றும்படி யார் கேட்
கிறார்கள்? நான் அப்படிக் கேட்கிறதில்லை. இயற்
கைப் பிரமாணத்தைப்பற்றி நான் அறிந்தது சொற்பம்.
நீ அறிந்ததும் கொஞ்சந்தான். "தேவன் இயற்கையை
மாற்றாமலே ஜெபத்தைக் கேட்டு பலனளிக்கக் கூடும்"
என்பதுதான்.

நம்முடைய சரீர அமைப்பிலேயே, நம்மை ஜெபத்
துக்கு ஏவிவிடும் ஒரு தத்துவமிருக்கின்றது என்றுணரு
கிறோம். இதே பிரமாணம் வேதாகமத்தில் புதுப்பிக்கப்
பட்டு, அதற்குரிய போதனைகள், உதாரணங்கள், வாக்குத்
தத்தங்கள், நிறைவேறுதல்கள் ஆகிய இவைகளால் உறு
தியாக்கப்பட்டிருக்கின்றன. சிருஷ்டிப்பு எப்படி தேவ
னுடைய கிரியை என்பது நிச்சயமோ அதுபோல்
வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதும் நிச்சயமா
யிருக்கிறது. காரியங்கள் இப்படியிருக்க, ஆதிமுதல்
அந்தம்வரையும் அறிகிற சர்வஞானமுள்ளவர், இப்

போது ஜெபம் செய்கிற ஒருவனைப் பார்த்து, நீ இரவு பகலாய் ஜெபித்து என்னை நோக்கி ஓலமிடுவதினால் லாபமில்லை; எல்லாம் உலக இயற்கைக்குள் அமைக்கப் பட்டாயிற்று; நான் எதிர்பாராத சம்பவங்கள் என்னை அறியாமலே குறுக்கிட்டுத் தடுத்துவிடுகிறது; என்னசெய்வேன். உனக்காகத் துக்கப்படுகிறேன். ஆனால் இயற்கையை மாற்றி உன் விண்ணப்பத்திற்குச் செவிகொடுக்கவும் பலனளிக்கவும் நான் கைமுடங்கி, என் வாக்கை நிறைவேற்ற வகையற்றிருக்கிறேன் என்பார் என்று எண்ணுவது நமக்குத் தூரமாயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஆட்சேபங்களை நாம் நிராகரித்துவிட்டு, அப்புறம் ஜெபம் பண்ணலாம் என்றெண்ணாமல், "இந்தக் காரியங்களைக்குறித்து உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை" என்று மாத்திரம் சொல்லிவிட்டு, நமக்குச் சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தங்களை நம்பி, ஜெபத்தில் உறுதியாயிருப்போமாக. விசுவாசத்தில் பிசகுள்ளவர்கள் மாத்திரம் சாஸ்திரத்திலுள்ள பிசகுகளை நம்புவார்கள். ஒவ்வொரு சத்தியமும், இவ்வுலகத்திலுள்ள மற்றச் சத்தியங்களுக்கு விரோதமாயிருக்கலாகாது. ஜெபத்தைப்பற்றிய உபதேசம் எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு ஜெபத்தினால் வரும் பலன்கள் உலக இயற்கைப் பிரமாணங்களுடன் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பதும் நிச்சயந்தான். ஜெபத்தின் சத்து, இயற்கையின் ஸ்தாபகம்போல் உறுதியானதாயிருக்கிறது. இவைதான் ஜெபசம்பந்தமான நமது நிச்சய உணர்ச்சிகளாயிருக்கின்றன. ஜெபசாஸ்திரத்திலிருந்தெழும்பும், தருவல் தப்புகள் என்று தோன்றுவதெல்லாம் நிராகரிக்கப்படும் காலம் சீக்கிரம் வரலாம். அது விஷயமாய் தத்துவஞானிகளுக்கு இம்மட்டும் புலப்படாத இரகசியங்கள் எல்லாம் இனிமேல் புலப்படலாம். அதினிமித்தம் நான் ஜெபிக்கத் தாமதிக்கவேண்டாம். நமது போஜனம் எப்படி ஜீரணமாகிறதென்பதை நாம் அறியாதிருந்தும், அன்றாடகம் புசித்துவருகிறதுபோலும், நினைவின் சாஸ்திர கூறுபாடுகளை அறியுமுன் நினைக்

கிறதுபோலும், அசைவின் அந்தரங்கங்களைப் பகுத்தறியுமுன் அசைகிறதுபோலும், இயற்கைப் பிரமாணத்தில் ஜெபமானது என்ன ஸ்தானத்திலிருக்கிறதென்று அறியுமுன் ஜெபம் செய்யலாம். ஒரு சத்தியம் நிலைவரப்பட்டு, அச்சத்தியம் தன் மனதிற்குச் சுகமானதுதான் என்று உணர்ந்துகொண்டவுடன், அதற்கு விரோதமாக வரும் சாஸ்திரக் குப்பைகளாவது, சந்தேக இருளாவது நமது மனதின் விசுவாசத்தைக் கலைத்துவிடமாட்டாது. தேவன் ஜெபத்தைக் கேட்கிறார் என்றும், இயேசு ஜெபம் செய்யப் படிப்பிக்கிறார் என்றும் நாம் கவனித்துக்கொண்டு, சாஸ்திர ஆராய்ச்சியைச் சற்று தூரவைத்துவிட்டு, ஜெபம் செய்யும் வேலையில் முயற்சியாயிருப்போமாக.

## 2. கர்த்தருடைய ஜெபம் ஒரு மாதிரியாகக் கொடுக்கப்பட்டது.

"நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது." (மத். 6. 9.)
"நீங்கள் ஜெபம்பண்ணும்போது." (லூக். 11. 2.)

எபிரெயர் நிருபத்தை எழுதினவர், "மோசே கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில், மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" என்று சொல்லுகிறார் (எபி. 8. 5.). இதை நாம் சற்று மாற்றிப் பிரயோகிப்போமாக. சீஷர், ஆண்டவரே "ஜெபம் பண்ணும்படி எங்களுக்குப் போதித்தருளும்" என்று கேட்டபோது, இப்பொழுது நாம் கவனிக்கும் ஜெபம் ஒரு மாதிரியாகக் கொடுக்கப்பட்டது. கடுதாசியில் வரையப்பட்ட ஒரு கட்டிடத்

தின் மாதிரியைப் பார்த்து, ஒரு சிற்பாசாரி ஒரு மாளிகையைக் கட்டுவதுபோல, நாம் ஜெபிக்கும்போதெல்லாம் இதைப் பார்த்து நமது ஜெப மாளிகையை எடுப்பிக்கலாம்.

*1.* இந்த மாதிரி ஜெபம் இயேசுவின் சொந்த ஜெபங்களில் ஒன்றல்ல என்று கவனிக்கவேண்டியது. அவர் செய்த ஜெபத்தைத்தான் தங்களுக்குப் படிப்பிக்க அவர்கள் கேட்டார்கள் என்று நினைக்கத்தக்கது. அவருடைய ஜெபத்தின் சத்தம் நின்றவுடனே, இது நல்ல ஜெபமாயிருக்கிறது, இம்மாதிரி நாமும் ஜெபித்தால் நன்ருயிருக்குமே என்று நினைத்து,— ''ஆண்டவரே எங்களுக்கு ஜெபம் பண்ணப் போதித் தருளும்'' என்று கேட்கிருர்கள்.

கிறிஸ்து நமக்கு மாதிரி என்பதைப்பற்றி பல தப்பான அபிப்பிராயங்கள் இக்காலத்தில் பிரபலப்பட்டு வருகின்றன. ''ஒவ்வொரு விஷயத்திலும் கிறிஸ்துவின் மாதிரியைப் பின் பற்றுகிறவன் அல்லவா உத்தம கிறிஸ்தவன்'' என்று ஒரு உலகத்தான் உன்னிடத்தில் கேட்கையில், அது சரியான கேள்விதானே என்று நினைத்து உடனே, ''ஆம்'' என்கிருய்; அவனே, நீ ''ஆம்'' என்று சொன்னதை வைத்து உன்னைக் கவிழ்த்திக்கொள்ளுகிருன்; ஏனெனில் உடனே அவன் மாறி, ''இவ்வுலகத்திலுள்ள எல்லாரும், இயேசு பேசினதுபோலும், செய்ததுபோலும், நினைத்ததுபோலு மிருக்கிறதுண்டாளுல், நகர வாழ்வெங்கே, நாட்டு வாழ்வெங்கே, அப்போது இவ் வுலகத்தைவிட்டு நாம் ஓடிவிட வேண்டியதாகுமே'' என்று சொல்லி, தன் உள் கருத்தின்படி, இவ்வுலகத்தில் பூரண கிறிஸ்தவனுகிறது கூடாதவிஷயம். ஆகவே கிறிஸ்து மார்க்கமானது நமது நாடோடிய ஜீவியத்துக்கேற்றதாயிராத படியால் அது சத்தியமான மார்க்கமல்லவென்று ஸ்தாபித்து விடுகிருன்.

ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவைப் போல நடந்துகொள்ளவேண்டும் என்ற பொதுச் சத்தியத்தில் ஒரு பிசகான கருத்திருக்கிறது. ஒரு விசுவாசி தன் அந்திய

காலத்தில் ''என் இரட்சகருடைய வார்த்தைகளை நான் மதித்து வந்தேன், இப்பூமியில் அவர் இருந்தபோது நடந்த அடிச்சுவடுகளிலெல்லாம் நானும் என் அடிகளை வைக்க ஆசைப்பட்டேன்'' என்று சொன்னார். இதேமாதிரி நாம் சொல்லலாமென்றாலும் நாம் நடக்கக்கூடாத சில பாகங்களுமிருக்கின்றன. அவர் கால்வைத்த சில இடங்களில் நாமும் கால்வைப்பது பெருமையும் பரிசுத்தக் குலைச்சலுமாகும். அவர் நமது தீர்க்கதரிசியும், ஆசாரியரும், இராஜனுமாயிருக்கிறதிலும், பாவமற்றிருப்பதிலும், இருதயங்களை ஆராய்கிறவராயிருப்பதிலும், அவர் சத்தியத்தை வெளிப்படுத்துகிறதிலும், நீதியுள்ள நியாயாதிபதியாவதிலும் அவருடைய அடிச்சுவடுகளில் நாம் கால்வைப்பது நமக்கு மரணமாய் முடியும்; இதேமாதிரி ஜெபத்தின் விஷயத்திலும் நாம் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க இயலாது.

இருட்டாகி, பட்சிகள் அடங்கி, துஷ்ட ஜந்துக்கள் இரைக்காகத் திரிந்து, அரவம் காட்டாமல் மனுஷர் நித்திரைபோகையில் நாம் வீடு விட்டு, காடு கடந்து, மலையேற முயன்று, புதர்களையும், காவுகளையும் தாண்டி, செடிகளையும் கொடிகளையும் ஊடறுத்து, மேடு பள்ளங்களுக்கப்பாலுள்ள பாறையின்மேலேறி, தலையின்மேல் வானமும் தரையிலே பாறையுமிருக்க, ஒண்டியாய் பரம பிதாவிடம் ஜெபிக்க நம்மால் முடியுமா? அவர் போன ஸ்தானத்தையும் மாதிரியையும் பின்பற்றி அம்மாதிரி ஜெபிக்க நம்மாலாகுமா? அவரை விசுவாசிக்கிறவர்கள் இப்படியே ஒவ்வொரு இரவையும் பின்னிட்டு முடியுமா? இப்படிச் செய்ய நம்மால் முடியாதென்று நாம் கவலைப்படவேண்டியதில்லையே. அவர் குடித்த பாத்திரத்தைக் குடிக்கவும், அவர் ஏறின கல்வாரியில் நாம் ஏறவும் வேண்டியதில்லை. அவர் பாவமில்லாத மீட்பராக, தாம் நிறைவேற்றவேண்டிய வேலைக்காக ஜெபித்தார். நாமோ பாவிகள்; அவர் குமாரனாக ஜெபித்தார். அவரைப் பின்பற்ற வேண்டுமென்று, அவரைப்போல கடல்மேல் நடக்கவும், குஷ்டரோகிகளைக் குணமாக்கவும்,. செத்தவர்

களை எழுப்பவும், சிலுவையில் மரணமடையவும், நம்மால் முடியுமா? அதுபோலதான் ஜெபிப்பதிலும் அவரைப்போல ஜெபிப்பது நம்மால் கூடாதவிஷயம். பூரண மனுஷன் அவர் ஒருவரே. அவர் அறிக்கையிடவேண்டிய பாவமாவது, மன்னிப்படையவேண்டிய அக்கிரமமாவது அவரிடத்திலிருக்கவில்லை. "அவர் நம்முடைய பிதா" என்று ஒருக்காலும் சொல்லவில்லை; தம்மைச் சீஷரிலிருந்து பிரித்து "என் பிதாவண்டைக்கும் உங்கள் பிதாவண்டைக்கும்" என்று சொல்லியிருக்கிறார். அவருக்கும் பிதாவுக்குமிருந்த அந்நியோந்நியத்தில் பல இரகசியங்களிருக்கலாம். அதைக் கண்டுபிடிப்பதும், கவனிப்பதும் நமது வல்லமைக்கு மிஞ்சினது. அவரைப்போல பேசுவதிலும், செய்வதிலும், நினைப்பதிலும் அல்ல, அவருடைய சுபாவத்தின்படி நமது நாடோடிய ஜீவியத்தில் நடக்க முயல்வதுதான் நமக்கடுத்த கடமை. ஆதலால் இயேசு செய்த ஜெபத்தின் வார்த்தைகளை நாமும் ஜெபிக்கவேண்டுமென்று ஆசைப்படுவது சரியல்ல. சீஷர் அப்படிக் கேட்டபோது, உங்களுடைய ஜெபம் என் ஜெபத்தைப் போலிருக்க வேண்டியதில்லை. நான் என் போக்கின்படி ஜெபிக்கிறேன், "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதம் இன்னமாதிரி."—நான் ஆண்டவராக ஜெபம்பண்ணுகிறேன், நீங்கள் இன்னபிரகாரம் ஜெபம் பண்ணுங்கள் என்று சொல்லி ஜெபத்தையும் கற்பிக்கிறார்.

2. இந்த ஜெபமானது, "யோவான் தன் சீஷருக்கு ஜெபம் பண்ணப் போதித்ததுபோல் நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டதின்பேரில் படிப்பித்த ஜெபமாயிருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டியது. இப்படிக் கேட்டவனும், அப்போது கூட நின்றவர்களும், இதற்குமுன் யோவானுடைய போதனைக் குட்பட்டவர்களாயிருந்தார்கள். என்றாலும், இந்தச் சந்நிதியில் அவர்களுக்கு அவனைப் பற்றிய நினைவு வந்தது அதிசயமாயிருக்கும். அவர்கள் இயேசு ஜெபம் செய்ததைக் கண்டு, அதின் ஜாடையை

அறிந்த அந்தச் சமயத்தில், யோவானைப்பற்றிய நினை
வை வருவித்ததால், ஸ்நானகனையும் சாமானிய மனுஷ
னாக அவர்கள் மதிக்கவில்லை என்று வெளியாகிறது.
அவன் தன் சொற்பக்கால ஊழியத்தில் எவ்வளவு வல்
லமையான முன்மாதிரியை வைத்துப்போனான் என்று
நாம் அறிய யாதொரு விவரமும் சொல்லப்பட்டிருக்க
வில்லை. தீர்க்கதரிசிகள் ஓய்ந்து, சுமார் நானூறு வரு
ஷங்களுக்குப்பின், இவர் நூதன வால்வெள்ளிபோல்
தோன்றி அத்திசையை ஆச்சரியப்படவைத்தார். மார்க்க
அபிமானம் மங்கி, தேவதாபக்தி குன்றிப்போன காலத்
தில், மரித்த தீர்க்கதரிசி யொருவன் உயிரடைந்து வந்
ததுபோல் மற்றவர்கள் மனதில்பட ஸ்நானகன் தோன்றி
னார். அவருடைய போதனை எல்லாங்கூடி "மனந்
திரும்புங்கள்; தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்
கிறது" என்ற ஒரே வாசகத்தில்தான் அடங்கியிருந்த
தென்று சொல்லக்கூடாது. பரிசேயர், சதுசேயர், வேத
பாரகர், போர்ச்சேவகரான பலவகுப்பார் அவரிடம்
வந்து உபதேசங் கேட்டார்கள். அவரவர் மனச்சாட்சி
யில் படத்தக்க அநேக போதனைகளையும் அவர் சொன்
னார். அவர் தமது சீஷருக்குச் சொன்ன போதனைக
ளின்னதென்று நாம் அறிந்துகொள்ள இடமில்லாதே
போனாலும் வானத்துப் பொன்போன்ற அநேக அரிய
போதனைகளை அவர் உரைத்திருப்பாரென்பதற்குச் சந்
தேகமில்லை. அவற்றில் ஜெபத்தைப்பற்றிய போதனை
களும் ஒருபாகமாயிருந்தது. அவர் தமது தாயின்
வயிற்றிலிருந்ததுமுதல் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்
டிருந்தபடியால், அவனைப்போல அக்காலத்தில் ஜெபத்
தைக்குறித்து சிறந்த போதனைகளைக் கொடுக்க வேறொரு
வரும் தகுதியுடையவர்களாயிருந்திருக்க மாட்டார்கள்.
அக்காலத்து ரபிமார், தம் தம் சீஷர், அந்தி சந்தி
ஜெபம் செய்யும்படி சில ஜெபங்களை எழுதிக்கொடுத்
ததுபோல, ஸ்நானகனும் தன் சீஷருக்குச் செய்திருப்
பார் என்றெண்ணுவது சரியல்ல. ஸ்நானகன் பூர்வ
ரபிகளைப் பின்பற்றாமல் தம் சுயமான புதுமாதிரி

யைக் கையாடிவந்தாரென்றும், இராக்காலங்களில் வனங்களில் தனித்திருந்து, ஜெபத்தியானத்தில் தமது இரவுகளைக் கழித்திருக்கலாமென்றும் நாம் நினைக்கவேண்டியதாயிருக்கிறது. எப்படியும் சீஷர், ஜெபம் செய்வதற்குத் தங்களுக்கு ஒரு நல்ல மாதிரி வேண்டியது என்பதை உணர்ந்து, ஸ்நானகன் போங்கைப்பற்றி ஞாபகப்படுத்தி "ஆண்டவரே நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும்" என்கிறார்கள். ஸ்நானகன் மாதிரி எங்களுக்குத் தெரியும், உம்முடைய மாதிரி அதைவிட நன்றாயிருக்கிறப்போ விருக்கிறது. நீரும் உம்முடைய மாதிரியைச் சொல்லித்தாரும் என்கிற கருத்தாகக் கேட்கிறார்கள். அவர்களுக்கு இயேசு அருளிச்செய்த மாதிரி ஜெபமானது, நமக்கும் தேவனோடு அந்நியோந்நியத்தை நாடும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் பிரயோசனமான ஒரு ஆஸ்திபோலிருக்கிறது.

3. இந்த மாதிரி ஜெபமானது இரண்டு தடவை கொடுக்கப்பட்டது என்பதைக் கவனிக்கவேண்டியது. கிறிஸ்து தமது மலைப்பிரசங்கத்தில் இந்த ஜெபத்தை ஒருதரம் சொன்னார். அவர் அப்போது சொல்லிக்கொடுத்தது தெரியாததுபோல் இந்தச் சீஷர் மறுபடியும் கேட்கிறார்கள். இதின் காரணமென்ன? முதலாவது இந்த ஜெபம் சொல்லப்பட்ட சமயத்தில் சில சீஷர் மாத்திரமிருந்தார்கள்; மற்றவர்கள் பிந்தியகாலத்தில் அவரிடத்தில் சேர்ந்திருக்கிறார்கள். பிந்தி வந்தவர்கள், முந்தின நடபடிக்கையை அறியாமல் கேட்டிருக்கிறார்கள்; ஆதலால் இயேசு அதே ஜெபத்தை இரண்டாந்தரம் திருவளம்பற்றியிருக்கிறார்.

ஸ்நானகன் தன் சீஷருக்கு, "இவரே தேவாட்டுக்குட்டி" என்று சுட்டிக்காட்டி, அவரிடம் போகும்படி ஏவியும் இன்னும் அவன் சீஷரில் சிலர் இயேசுவைப் பின்பற்றாதிருந்த காரணமென்ன? ஒருவேளை அவர்கள் இயேசுவின் சீஷராயிருந்தாலும், ஸ்நானகனை முற்றிலும் விட்டுவிடலாகாது என்று அவனைச் சார்ந்து இருக்க

லாம்; அல்லது "பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று ஸ்நானகன் சொன்ன கருத்தை அறியாமல், அந்த ராஜ்யம் வருமட்டும், இவரோடிருக்க எண்ணியிருக்கலாம்; ஒருவேளை அவர்கள் ஆவியின் அனல் குன்றிப் போனதால், இயேசுவைப் பின்பற்றக் காலதாமதம் பண்ணியிருக்கலாம். ஒருவேளை அவர்மேலிருந்த ஒருவித பாசமானது அவர் மரணம் வரையும் அவரை விடக்கூடாதென்றதீர்மானத்தைஉண்டாக்கியிருக்கலாம்; ஆனால் ராஜ அரண்மனையில் ஒருநாள் விருந்து நடந்தது. அந்த அரண்மனையை அடுத்த ஒரு கிடங்கிலே கைதியாயிருந்த ஸ்நானகனின் சிரசு அன்று அறுக்கப்பட்டு, அவர் பிரேதமானார். அவருடைய சீஷர் அதைக் கேள்விப்பட்டுப் போய், அவர் உடலை எடுத்து அடக்கம் பண்ணிவிட்டு, அந்தச் செய்தியை இயேசுவுக்கும் வந்து அறிவித்து, அதுமுதல் அவருக்குப் பூரண சீஷரானார்கள். அவர்கள் பிந்திவந்ததால், முந்தினவர்கள் படித்த பழைய பாடங்களையும், மற்றப் புதிய பாடங்களையும் படிக்கவேண்டிய அவசரம் நேரிட்டது. மலைப்பிரசங்கத்தையும், முந்தி சொன்ன ஜெபத்தையும் அவர்கள் இழந்தார்கள்; அவர்களுடைய தோழர் அவர்களுக்கு நினைப்பூட்டவுமில்லை. ஆகவே மறுபடியும் கேட்கிறார்கள். இரட்சகரும் தயவாக அவர்களுக்கு மறுபடியும் போதிக்கிறார். இப்படியே ஆவியில் மந்தமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பார்த்து "நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன், என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று இயேசு அறிவிக்கிறார். (மத். 11. 29.)

4. இந்த ஜெபமானது கிறிஸ்துமார்க்க வெளிப்படுத்தல்களுடன் சேர்ந்ததாக எண்ணப்பட்டு வியாக்கியானப் படுத்தப்படவேண்டும் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

இக்காலத்தில் கிறிஸ்துமார்க்கச் சித்தாந்தங்களுக்கு விரோதமாகப் பேசவும் எழுதவும் பிரயத்தனப்படுகிறவர்கள், அடிக்கடி "உங்கள் உபதேசங்களும், தாற்பரியங்

களும் ஒரு பக்கத்திலிருக்கட்டும், எங்களுக்கு மலைப்பிரசங்கமே போதுமானது" என்றும், வேறுசிலர், "இயேசு விசுவாசப்பிரமாணத்தையல்ல, திரு ஜெபத்தைத்தான் கற்றுக்கொடுத்தார்" என்றும் சொல்லுகிறதைக் கேட்கலாம். மார்க்க சுயாதீனம் என்ற பேரால் ஓர்வித மார்க்க சித்தாந்த அசட்டை, இக்காலங்களில் பலர் மனதில் உண்டாகிறது. மலைப்பிரசங்கத்தில் இயேசுவை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் கல்வாரிமலை மரணத்தில் ஒப்புக்கொள்ளுகிறதில்லை; அவருடைய ஜெபம் வேண்டுமென்கிறவர்கள் அவரைப்பற்றிய வேறு சில விஷயங்களை அசட்டை செய்கிறார்கள். தங்கள் கருத்துக்கிசைந்தவர்களை சரியான அகன்ற மனமுடையவர்களென்றும், அதை ஆட்சேபிக்கிறவர்களை இடுக்கமும் நெருக்கமுமான மனமுடையவர்கள் என்றும் பழித்துப்பேசுவார்கள். இப்படிப்பட்டவர்கள், மலைப்பிரசங்கமும் கர்த்தருடைய ஜெபமும், முதற்பாகமும் அவசியமுமானதென்றும், மற்றப்பாகம் அவ்வளவு அவசரமல்லவென்றும் எண்ணுகிறவர்களைப்போலிருக்கிறார்கள்.

வேதசத்தியங்களின் ஒரு பாகத்தைப் பிடித்துக்கொண்டு, இவ்வளவு போதும், மற்றது வேண்டியதில்லை என்று சொல்வது பிசகு. இயேசு நேராகப் பேசியதும், தமது ஆவியைக்கொண்டு ஏவிப் பேசினதும் எல்லாம் ஒன்றுபோல மதிக்கப்படவேண்டியது. புதிய ஏற்பாடு ஏக ஆகமமாயிருக்கிறது. இப்பொழுது நாம் துண்டுதுண்டாகவல்ல, முழுவதும் ஒரே ஆகமமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஒன்றை ஒப்புக்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளவேண்டியது.

கர்த்தருடைய ஜெபமானது கிருபை உடன்படிக்கையின் முடிவான பாகம் என்றெண்ணுவது பிசகு; இந்த ஜெபத்தையும் மலைப்பிரசங்கத்தையும் இயேசுவின் பிற்தின உபதேசங்களுடன் ஐக்கியப்படுத்தி விஸ்தரிப்பதுதான் சரியான முறை. இவை சொல்லப்பட்ட காலத்தில், கிறிஸ்து தமது சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்பற்றிச் சொல்லவில்லை. ஏனெனில் அவற்

றை வெளிப்படுத்தும் காலம் பிந்தியிருந்தது. இந்த ஜெபமானது, சுவிசேஷமாயிராமல், சுவிசேஷமாகிய கதவு வழிகாட்டும் இராஜ்யத்தை யடுத்ததாயிருந்தது.

இந்த ஜெபம் தெளிவாயிருப்பதால் இதற்கு வியாக்கியானம் வேண்டியதில்லை என்றெண்ணுவதும் பிசகு. ஜனங்கள் இதின் கருத்தை உணரவேயில்லை; உணர்ந்தது மெய்யானால், இதைப் போதித்த குருவை அவர்கள் கொலைசெய்திருக்கமாட்டார்கள். அவருடைய சீஷரும், சுவிசேஷ விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டு ஆவியானவர் அருளப்பட்ட பின்புதான் இதின் கருத்தை அறிந்துகொண்டார்கள்.

யாராமொருத்தர் ''மலைப்பிரசங்கமே எனக்குப் போதுமான சுவிசேஷமாயிருக்கிறது, கர்த்தருடைய ஜெபத்தில் திரித்துவத்தைப்பற்றியும், பிராயச்சித்த பலியைப்பற்றியும், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதலைப்பற்றியும், ஆவியாலுண்டாகும் மறுபிறப்பைப்பற்றியும் ஒன்றும் சொல்லப்படுகிறதில்லை'' என்று சொல்வதுண்டானால், நாம் கொடுக்கும் மறுமொழி, ''கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லிக்கொடுத்தவர் யார்? சிலுவையிலறையுண்டு நித்திய இரட்சிப்பை உண்டுபண்ணின கர்த்தரே கொடுத்தார், ''நானே வழி'' என்று சொன்னவரும், ''நம்முடைய நீதி''யாயிருக்கிறவரும்; நமக்காக வேண்டுதல் செய்யும்படி எப்பொழுதும் உயிரோடிருக்கிறவரும்; நாம் ''மறுபடியும் பிறக்கவேண்டும்'' என்று சொன்னவரும்; ''வாக்குத்தத்தமான பரிசுத்த ஆவியைக் கொடுத்தவருமே'' என்பதுதான். இதிலுள்ள மன்றாட்டுகளெல்லாம், மேலே காட்டிய உபதேசங்களின் அடக்கமாயிருக்கின்றதால், அவற்றோடு இந்த ஜெபத்தை ஐக்கியப்படுத்தியே வியாக்கியானப்படுத்தவேண்டும்.

5. எவ்வித வயசும், ஸ்திதியும், திறமையுமுள்ள தேவனுடைய பிள்ளைகளெல்லாருக்கும் இந்த ஜெபம் மாதிரியாயிருக்கும்படிக் கொடுக்கப்பட்டது. கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் ஒரு ஜாதியும் மற்றவர்கள் வேறு

ஜாதியும், சிலர் படித்தும் மற்றவர்கள் படியாமலும், சிலர் சிறுவரும் மற்றவர்கள் பெரியவரும், சிலர் தனவந்தரும் மற்றவர்கள் தரித்திரரும்; சிலர் அநேக வருஷ கிறிஸ்தவர்களும் மற்றவர்கள் நூதன கிறிஸ்தவர்களுமாயிருந்தாலும் அவர்களெல்லாருக்கும், இது பொதுவான ஒரே ஜெபமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலர் இதை ஆட்சேபித்து, இது "எல்லாருக்கும் ஏற்றதல்ல" என்பார்கள். ஒரு நெடுங்கால கிறிஸ்தவன், "இந்த ஜெபம் மகா ஆழ்ந்த உபதேச மடங்கியதால் அதை நான் சிறு பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கிறதில்லை" என்று சொன்னார். இது சிறுவருக்கும் ஏற்றதென்பதை விளக்க ஒரு சரித்திரம் சொல்லுகிறோம்.

ஜான் கிங் என்னும் ஒரு வேதசாஸ்திரி ஒரு அநாத பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குள்ளே போய் அங்குள்ள மேடையின்மேலேறி, பிள்ளைகளே, வந்து என் முன் வரிசையாய் நில்லுங்கள் என்று சொன்னார்; அவர்கள் வந்து நின்றபோது:—

"இது அநாத பள்ளிக்கூடமல்லவா?—பிள்ளைகளே, உங்களுக்குப் பிதாவாவது, மாதாவாவது உண்டா என்று கேட்டால், நீங்கள் இல்லை என்பீர்கள்" என்றார்.

ஒரு பிள்ளை ஒருபக்கத்தில், நின்று "ஆம்" என்று சொன்னது.

"உங்களில் யார் யாருக்கு பிதா இல்லையோ அவர்கள், தங்கள் கையை உயர்த்தலாம்" என்றார்.

ஏறக்குறைய எல்லாரும் உயர்த்தினார்கள்.

"உங்களுக்குப் பிதா இல்லையாக்கும்?" என்றார்.

"இல்லை—இல்லை" என்று சொன்னார்கள்.

"நல்லது கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லுங்கள்" என்று சொன்னார்.

உடனே "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே"— என்று துவக்கினார்கள்.

“நிறுத்துங்கள் — நிறுத்துங்கள் — அது சரிதானா?” என்றார்.

அவர்கள் மறுபடியும் “பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே” என்று சொல்லி ஆரம்பித்தார்கள்.

மறுபடியும் அவர், “நிறுத்துங்கள்”—“எங்கள் பிதாவே என்று சொன்னீர்கள் அல்லவா?—ஆம், அது சரிதான்; உங்களுக்கு ஒரு பிதா உண்டு; அவரைப்பற்றி நான் உங்களுக்குச் சில வார்த்தைகளைச் சொல்லுவேன்” என்றார். அவர் சொன்ன கருத்து விளங்கினபின்பு பரம பிதாவின் அன்பைக்குறித்து அவர்களுடன் பேசி அவர்களைச் சந்தோஷிப்பித்தார். கர்த்தருடைய ஜெபம், அந்தக் குழந்தைகளுக்கு ஆழ்ந்த இரகசியமா யிருக்க வில்லை.

இதில் விசுவாச குட்டையனுக்கேற்ற மேடும், நெட்டையனுக்கேற்ற ஆழமுமுண்டு. பலவகையான ஆத்தும ஸ்திதி யுடையவர்களுக்கும் இது ஏற்றது. நமக்கு வேண்டியவைகள் கொஞ்சமானாலும் அதிகமானாலும், நமது பயண ஆரம்பத்துக்கானாலும் முடிவுக்கானாலும், அதிகாலைக்கானாலும், அந்திவேளைக்கானாலும், சுககாலத்துக்கானாலும், துக்ககாலத்துக்கானாலும் இது ஏற்றதாயிருக்கிறது. இந்த ஜெபத்தைக்குறித்து அகுஸ்தின் சொல்வதாவது:—“இது சின்னவர்களுக்குச் சின்னதும், பெரியவர்களுக்குப் பெரியதுமா யிருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் ஜெப வித்துப்போலிருக்கிறது. ஜெபமாகிய விருட்சம் இதிலிருந்து வளர்ந்து படர்ந்து, நமது ஜீவியத்தை ஜெப ஜீவியமாக்குகிறது” என்கிறார்.

6. இந்த ஜெபமானது நமது ஜெபத்துக்குச் சட்டமும் மாதிரியுமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதின் விண்ணப்பங்கள் சுருக்கமாயிருக்கின்றன. ஒரு வித்வான் தன்காலத்திலிருந்த ஒரு ஆக்கியோனைப்பற்றி, “அவன் அதிகமாய்ப் பேசுவான், அந்தப் பேச்சில் ஒரு பிரயோசனமுமிராது” என்று சொல்லியிருக்கிறான்.

சிலருடைய ஜெபம் இப்படித்தான் இருக்கின்றது. அகுஸ்தின் என்பவர் புரோபா என்னும் அம்மாளுக்கு எழுதிய கடிதத்தில் "அதிகம் பேசுதல், அதிகம் ஜெபித்தலுக்கு முற்றிலும் வித்தியாசமானது" என்று சொல்லியிருக்கிறார்.

இந்த ஜெபம் வீண் வசனிப்பைத் தடுத்துவிடுகிறது. வீண் வசனிப்பு என்பது, சொன்னதையே சொல்வதைக் குறியாமல், கருத்தும் கவனமும் இல்லாமல் செய்யும் ஜெபத்தையே குறிக்கிறது. நம்முடைய ஜெபத்தியானங்களில் ஒரே மாதிரி வாச்சுத்தைத் திரும்பத் திரும்பக் கருத்துடன் சொல்லித் தியானிப்பது வீண் வசனிப்பென்று சொல்லக்கூடாது. ஏனெனில் இயேசு தாமே அப்படிச் செய்து நமக்குத் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறார். "வீண் வசனிப்பு" கருத்தற்று, கண்டபடி உளறுகிறதைத்தான் குறிக்கிறது.

இந்த வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்கவே இது கொடுக்கப்பட்டது. "நீங்கள் ஜெபம்பண்ணும்போது" என்று இரட்சகர் சொல்லுகிறார் (லூக். 11. 2.). இதிலிருக்கிற ஒரு கருத்து, நாம் ஜெபம் பண்ணுகிற சமயத்தில் இதைச் சொல்லவேண்டியதில்லை என்பதுதான். ஜெபமானது, ஜெபவாசகனத்துக்கு வித்தியாசமானது. ஜெபஜீவியத்துக்கு இந்த ஜெபமானது ஒரு ரதம்போலிருக்கிறதேயன்றி இவ்வளவுதான் நாம் செய்யவேண்டிய ஜெபமல்ல. இது கிளிப்பிள்ளை பாடம்போலப் படித்துச் சொல்லிவிடவும், மந்திரமோதுகிறதுமான ஒரு ஜெபசூத்திரமல்ல; நம்முடைய நன்மைக்காக இதை ஒருமாதிரிபோல வைத்து, இதின் பொருளைக் கவனித்து, அந்தியிலும் சந்தியிலும் நாம் பண்ணவேண்டிய ஜெபங்களைச் செய்து, தேவாசீர்வாதத்தை நமது இருதயத்தில் பெற்றுக்கொள்ளும்படிக்கு இது ஒரு மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் நமது ஜெபத்தின் முடிவில் இதைக் கருத்தோடும், பக்திவிநயத்தோடும் சொல்வது அவசியம்.

இது அந்நியோந்நிய ஜெபமாயிருக்கிறது. "நீங்கள்" ஜெபம் பண்ணும்போது என்றும், "நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது" என்றும் இரட்சகர் சொல்லுகிறார்.

இந்த விதமாக ஜெபம் பண்ணுங்கள் என்கிறார். இந்தக் கிருபை உடன்படிக்கையின் பாகத்தை, ஆண்டவர் அருளினபோது இக்கட்டளை கொடுக்கப்படுகிறது. ஜெப வேளையில் நமது குணம் இந்தவிதமாயிருக்கவும், நாம் கேட்கும் விஷயங்கள் இந்தவிதமாயிருக்கவும் விரும்புகிறார். நமக்கு வேண்டிய காரியங்களென்னவோ அவை ஒவ்வொன்றும், இதில் அடங்கிய சுருக்க விண்ணப்பத்தின் சுருக்கத்துக்குள் அடங்கிப்போய்விடும். இந்தவித ஒழுங்குப்படி நமது ஜெப ரதம் பரலோகத்துக்குப் பயணப்படுவது சரியாயிருக்கும். "என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்" என்று யோபு சொல்லுகிறார் (யோபு, 23. 4.). தமது காரியத்துக்கேற்ற வார்த்தைகள் எவ்வளவு அவசியம் என்று அவர் நாடினாரோ, அவ்வளவு அதை வரிசைப் படுத்துவதும் அவசியம் என்று நாடினார். நம்முடைய ஜெபங்களுக்குமாதிரியாயிருக்கிற இந்த மன்றாட்டுகளால், நாம் ஏதேது விஷயங்களுக்காக ஜெபம்பண்ணவேண்டுமென்று மாத்திரமல்ல, முதலாவது எதற்காக, இரண்டாவது, மூன்றாவது, கடைசியாவது, எதற்காக நாம் ஜெபிக்கவேண்டுமென்ற ஒரு வரிசையையும் இயேசு காட்டியிருக்கிறார். எல்லாக்காலத்திலும் இந்த வரிசையைப் பிடித்து, நமது ஜெப ரதத்தை ஓட்டக்கூடாதே போனாலும், இதிலடங்கிய சுருக்கத்தை விட்டுவிடாமலிருப்பது நலமாயிருக்கும். ஒவ்வொருவரும் தங்கள் வணக்கத்தைச் செலுத்த இதுதான் வழிகாட்டியாயிருக்கிறது.

7. இந்தமாதிரி ஜெபத்தை, கர்த்தருடைய ஜெபம் என்றழைப்பது சரியாயிருக்கிறது. இதற்கு அந்தப் பேர் வழங்கப்படுவது சரியல்ல என்று பலர் ஆட்சேபிக்கிறார்கள். அது சரியல்ல.

சிலர் இந்த ஜெபத்தை "ரபிகளின் ஜெபம்" என்றழைக்க விரும்புகிறார்கள். அவர்கள், இந்த வாசகங்கள் இயேசுவின் சொந்த வாசகங்களாயிராமல், தமக்கு முன்னிருந்த பல ரபிமாருடைய வாசகங்களிலிருந்து திரட்டிச் சேர்த்துப் போதித்தவைகள் என்றும் சொல்லுகிறார்கள். இதை ரூபிக்க அவர்களால் கூடாது. ஏனெனில் ரபிமாரின் போதனைகளைப்பற்றிய நூல்கள், கிறிஸ்துவுக்கு இருநூறு வருஷங்களுக்குப் பின்புதான் சேர்க்கப்பட்டன. அப்படி அவர்கள் சொல்லுகிறபிரகாரம், ரபிமாரே, இந்த வாசகங்களில் சிலவற்றைச் சொன்னார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம், அதினாலென்ன?--அந்த ரபிமார் வாயில் இந்த வாசகங்களை அருளினவர் யார்? ஆண்டவர்தான். பரி. அம்புரோஸ் "என்பவர் "சத்தியம் யார் மூலமாய் விளம்பப்பட்டாலும், அது பரிசுத்த ஆவியாலுண்டானது" என்கிறார். கிறிஸ்துவின் மனுஷாவதாரகாலத்தில், இஸ்ரவேலின் போதகரான பலர், தங்களுடைய ஜெபமுறைகளில், இந்த ஜெபத்திலடங்கிய வாசகத்துக் கிசைவான வார்த்தைகளைப் பிரயோகித்து வந்திருக்கலாம. ஏனெனில் "நியாயப்பிரமாணங்களையும், தீர்க்கதரிசனங்களையுங்கொண்டு, கிருபை பெற்ற ஆத்துமாக்கள், கிருபையுள்ள வார்த்தைகளை மொழிந்திருக்கலாம். அப்படியிருந்தாலும், அநாதிகாலமுதல் ஜெபத்தின் உபாத்தியாயராயிருந்து வந்தவரே அவர்கள் மனதிலும் அந்தக் கிருபா வசனங்களை வைத்தார்" என்று சொல்லவேண்டியது.

கர்த்தருடைய ஜெபமானது, பரிசேயருக்குள் வழங்கிவந்த ஜெபமாலைகளிலிருந்தாவது, தல்மூத்தென்னும் ஆகமங்களிலிருந்தாவது பொறுக்கி எடுக்கப்பட்ட வாசகக் கோர்வையல்ல. இக்காலத்தில் வேத வியாக்கியானங்களை எழுதியிருக்கிற பல வித்வான்கள், இந்த ஜெபவாசகங்களுக்குச் சார்பாய்த் தோன்றும் ரபிமார் வாசகங்களையெல்லாம் எடுத்தெழுதிப் பிரசித்தப்படுத்தி யிருக்கிறார்கள்: அதைப் பார்வையிட்டால், அவ்வாசகங்களின் போதனைகளுக்கும், இதின் வாசகப்போதனை

களுக்கும் எவ்வளவு பெரிய வித்தியாச மிருக்கிறதென் பதை எளிதில் அறிவார்கள்.

வேறு சிலர் இது "சீஷருடைய ஜெபம்" என்றழைக் கப்பட விரும்புகிறார்கள். இவர்கள் "இது கர்த்தரு டைய ஜெபம் அல்லவே, சீஷருடைய ஜெபமாயிருக்கி றது; இது சீஷர் செய்யும்படிப் போதிக்கப்பட்டது" என்கிறார்கள். அப்படியானால், கர்த்தருடைய இராப் போஜனமும், "சீஷருடைய இராப்போஜனம்" என் றல்லவா அழைக்கப்படவேண்டியது? ஏனெனில் அது சீஷருக்குத்தானே பரிமாறப்பட்டது. எங்கள் கருத்தை நாங்கள் சொல்லுகிறோம், எங்கள் வாயைமூட யாரா லாகும் என்று கண்டபடி அவசரமற்ற ஆட்சேபங் களைப் பொழிவது, கிறிஸ்தவர்களின் பொதுநன் மைக்கு அதிக நஷ்டத்தை யுண்டாக்கிவிடும் என்பதை மறக்கலாகாது. "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபம்பண் ணப் போதியும்" என்று சீஷர் கேட்டுக்கொண்டதின் பேரில், இயேசு இந்த ஜெபத்தைக் கற்பித்தாரென்பது தெளிவாயிருக்கிறபடியால் இதற்குக் கர்த்தருடைய ஜெ பம் என்பதுதான் சரியானபேராய் இருக்கிறது. கர்த்த ருடைய இராப்போஜனமானது ஒரு ஞாபக விருந்தா யிருக்கிறதுபோல, நமது ஆத்துமா பரமபிதாவின் சிம்மா சனத்தண்டை போய்ச் சேருமட்டும் இது நினைவுகூரு தலின் ஜெபமாய், நமது காத்துக்கும் ஜெப ஸ்ரீவியத்துக்கு மிருக்கிறது.

## 3. கடவுள் வணக்கம்.

"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே."

(மத். 6. 9. லூக். 11. 2.)

தேவ வணக்கமாகிய இந்த விண்ணப்பத்தில் இரண்டு பங்குகள் அடங்கியிருக்கின்றன. அதில் ஒன்று தேவன் நமக்குப் பிதா என்பதும், மற்றொன்று அவர் பரலோகத்தில் இருக்கிறார் என்பதுமே. இதைத் தனித்தனி கவனிப்போம்:—

### 1. "எங்கள் பிதாவே."

(1) "எங்கள் பிதா" என்ற வாசகமானது, கிறிஸ்துவின் பள்ளிப் பிள்ளைகளெல்லாரும், தேவன் ஒரு வஸ்துவாயிருக்கிறார் என்று ஒப்புக்கொண்டு வருகிறதை உணர்த்துகிறது. அநேகர் மனதில், தேவன் ஒரு சத்துவேயன்றி, வஸ்துவல்ல என்கிற எண்ணமிருக்கிறது. இந்த எண்ணம் மனதில் பலப்படும்பொழுது, ஜெபம் அவசியமில்லை என்றாகிறது; ஏனெனில் ஒரு சத்துவைப் பார்த்து யார் ஜெபிப்பார்? அன்பின் ஆவலைப் பார்த்தாவது, கவர்ச்சியின் பலத்தைப் பார்த்தாவது ஜெபிப்பாருண்டா? உலகம் உனக்கு க்ஷேமமாயும், ஜீவன் இன்பமாயுமிருக்கும்போது ஜெபத்தைப்பற்றிய எண்ணம் எங்கிருந்து வரும்? ஆனால் பல்மான உபத்திரவங்களையும், இருட்டான ஆபத்துகளையும் நீ கடந்துபோக நேரிடும்போது, தேவனை நோக்கவும், கெஞ்சவும், கேட்கவும், நீ ஏவப்படுவாய் அல்லவா? ஜர்மனிதேசத்தில் கனிகட்டி, பல நூல்களை எழுதின வித்வான் ஒருவனிருந்தான்; அவன் தன் பிரபந்தங்களில், தேவன் ஒரு வஸ்து என்பது இல்லவே இல்லையென்று பல நியாயங்களால் பிரசித்தப்படுத்திவந்தான். கடைசியாய் அவன் கை தாழ்ந்து, திமிர்வாதத்தோடு பாயும் படுக்கையுமா யிருக்கையில், தன் பள்ளித்தோழன் ஒருவனுக்கு எழுதினது என்னவென்றால்,

"ஒருவிதமான மார்க்க அபிமானம், என்னைச் சிலகாலமாய் ஆண்டுகொள்ளுகிறது; அதன் காரணம், எனக்குத் தரும் மருந்துகளின் சேஷ்டையோ, என்க்குக் கட்டும் மாப் பொட்டணத்தின் குணமோவென்பதைக் கடவுள் அறிவார். என் மனதில் எப்படியோ ஒரு மாறுதலிருக்கிறது. நாம் வியாதிபட்டு, பலம் ஒடுங்கி மரண படுக்கைக்கு வரும்போது இந்நிலைமைக்கு வருகிறோம். இதை ஒரு குற்றமாக என்மேல் சாட்டவேண்டாம். ஜர்மானியர், வஸ்துவான ஒரு அரசனைத் தங்கள் ஆபத்துக்காலத்தில் ஒப்புக்கொண்டு தேடுகிறதானால், நான் என் வஸ்துவான ஒரு தேவனை ஒப்புக்கொள்ளக்கூடாது. என் சிநேகிதனே, இங்கே ஒரு பெரிய சத்தியமிருக்கிறது. சுகமும், பலமும், மனுஷதன்மைக்குரிய சொஸ்தபுத்தியும் குறைந்து விடுகிறபோது, கிறிஸ்துமார்க்கம் ஆரம்பிக்கிறது". என்பதே.

தேவதாபக்தி கலந்த ஒருவித நாஸ்திகம் பல ஜனங்களின் பேச்சிலே யிருக்கின்றது. நமது அயலாரான பலர், தங்கள் பக்திக்கு ஒரு தேவனைத் தேடாமல், தங்கள் தேவனுக்கென்று ஒரு பக்தியைத் தேடி, இவ்வகையாய்க் கிறிஸ்துமார்க்கத்தை கிறிஸ்துவிலிருந்து பிரத்தியேகப்படுத்தப் பிரயாசப்படுகிறார்கள். மனோக்கியானிகளான பலர், தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொண்டாலும், தேவன் ஒரு வஸ்துவோ அல்லவோ என்று கேட்கப்படும்போது,—"அவ்வளவு திட்டமாய் அவர் ஒரு வஸ்துவல்ல" என்கிறார்கள். அவர்கள் வஸ்து என்பதின் கருத்தைப்பற்றி வேறுவிதமாய்த் தாற்பரியப் படுத்துகிறார்களாக்கும்; அவர்கள் அளவுள்ள ஒரு உடலுக்குள் உயிர் அடங்கி, மனுஷன் வஸ்துவாயிருக்கிறது போல, தேவனை வஸ்துவென்றொப்புக்கொள்கையில், அவரையும் அப்படி அளவுக்குட்படுத்துகிறதாக எண்ணி மலைகிறார்களாக்கும். இப்படிப்பட்ட ஆள் வஸ்துக்களை மாத்திரம் அவர்கள் கண்டிருக்கிறார்கள்; அதுவன்றி, தேவ மகத்துவத்தை இவ்வண்ணமாய்க் கனப்படுத்த நோக்கங்கொண்டிருக்கலாம். இவர்கள் ஒவ்வொரு நாளை

யும் தங்கள் சிறுபிராயத்தில் செய்துவந்ததுபோல, ஜெபத்தோடு துவக்கி, ஜெபத்தோடு முடிப்பார்கள். பேசவும், கேட்கவுமாட்டாததற்கு ஜெபம்பண்ணி லாபமென்ன? இந்தக் கல்விமான் நிலைவரமற்ற ஒன்றுக்கு ஜெபிப்பதும், ஒரு மிலேச்சன் பேசவும் அறியவுமாட்டாத விக்கிரகத்துக்கு ஜெபிப்பதும் ஒன்றுபோலதான். அருள் பெற்ற ஒருவர்,

> "நம்மோடு பேசாத் தேவன்
> உண்டென் றுரைப்புக் கொள்ளல், முன்
> ஒப்பிப் பின் ஒப்பாதாகும்;
> விக்கிரக பூசை எல்லாம்
> ஊமை செவிடுமான
> தேவரைச் சேவிப்பதாம்"

என்கிறார். ஜெபத்தின் உபாத்தியாயராகிய இயேசு, நீங்கள் ஜெபம் பண்ணும்பொழுது "எங்கள் பிதாவே" என்று கெஞ்சச் சொல்லுகிறார். ஆகவே அவர் போதிக்கும் மூல உபதேசமானது, தேவன் ஒரு ஆளாக அல்லது வஸ்துவாக இருக்கிறார் என்பதுதான். நீ ஒரு இழுப்புக்கு, அல்லது சட்டத்துக்கு, அல்லது முகிலுக்கு, அல்லது தூரத்துக்கு பிதா என்று சொல்லமாட்டாய்; மேலும் பிதாவென்பது, நினைக்கிறவனை அகற்றிய நினைவல்ல, நேசனை அகற்றிய நேசமுமல்ல; நாம் பிதா என்று சொல்லும்போது உயிருள்ள ஒரு ஆளைத்தான் குறிக்கிறோம். இந்த லோகத்தில் ஒரு மகன் ஒரு ஆளை "பிதா" என்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நாம் பிதா என்பதும் நிச்சயமாயிருக்கிறது; தாதா வென்பது மனுஷர் விஷயத்தில் எப்படி ஒரு ஆளை உணர்த்துகிறதோ அப்படியே தேவன் விஷயத்திலும் ஆளை உணர்த்துகிறது.

(2.) தேவனை "எங்கள் பிதாவே" என்பது, அவரை எல்லா மனுமக்களுக்கும் தகப்பனாக்குகிறது. இப்போது இதுவிஷயமாகச் சொல்லப்படுகிறதும், அடுத்த பிரிவில் சொல்லப்படப்போகிறதும் ஒரே போதனை

யின் பாகங்கள் என்று உணர்ந்துகொள்ளவேண்டியது. தேவ கிருபைக் குட்பட்டவனுக்கும், அதற்குப் புறம்பாயிருக்கிறவனுக்கும் அவர் ஒன்றுபோல பிதாவாயிருக்கிறார். சகல ஜீவாத்துமாக்களும் அவரிலிருந்து உற்பத்தியாயின; நமது சரீரத்தை வேறு சரீரங்களின் வழியாக அவர் உற்பத்தி செய்தபோதிலும், ஆத்துமா அவரிலிருந்து நமக்கு நேராய்க் கொடுக்கப்படுகிறது. தத்துவ சாஸ்திரப்படிக்கும், விசுவாசத்தின்படிக்கும், தேவன் நமது சரீரத்தை உருவேற்படுத்துகிறவராயிருந்தாலும் "நமது ஆவிகளின் பிதா"வாயிருக்கிறார் என்பது நமது கோட்பாடாயிருக்கிறது. ஆதிமனிதன் தேவனுடைய ஜீவ சுவாசத்தால் தன் ஆன்மாவைப் பெற்றதுபோல், நாம் ஒவ்வொருவரும், நேராக நமது ஆன்மாவை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளுகிறோம். இந்தச் சத்தியத்தின் கதிர்கள் பூர்வ அஞ்ஞானிகளின் மனதிலும் வீசியிருக்கின்றன. சுவிசேஷ கதிர்கள் வீசுவதற்கு, அநேக தலைமுறைகளுக்கு முன்னிருந்த ஒரு புலவன், அரூபவஸ்துவைப்பற்றி, அவர் "தேவர்களுக்கும் மனுஷருக்கும் பிதாவாயிருக்கிறார்" என்று சொல்லியிருக்கிறான். "யூப்பித்தர்" என்ற பேரே, தேவ பிதா என்னும் கருத்தைக் கொடுக்கிறது. அதே கருத்தை கிரேக்கைப்புலவர் தங்கள் கவிகளில் நீட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கவியொன்றைப் பரி. பவுல் எடுத்துக்கொண்டே, தாம் செய்த அத்தேனேப் பிரசங்கத்தில், விக்கிரகாராதனையைக் கண்டிக்கும் நியாயமாக எடுத்துப் பேசுகிறார். "அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியாரென்று சொல்லியிருக்கிறார்கள். நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க" விவேகிகளும், பகுத்தறிவுள்ளவர்களும், சிற்ப சாஸ்திரிகளும், சுயசித்தமுடையோரும், ஒரு ஆளுக்கிருக்கவேண்டிய பாசம், மனச்சாட்சி, மற்ற மனோதத்துவங்களும் சத்துவங்களுமுள்ள நாம், நம்முடைய பிதாவாகிய தேவன் "மனுஷருடைய சித்திர வேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன் வெள்ளி கல்

லுக்கு ஒப்பாய் இருக்கிறார் என்று நினைக்கலாகாது" என்கிறார். இந்த வாசகத்தால் விக்கிரகத்தொழும்பரும் நமது பரமபிதாவின் பிள்ளைகளாயிருக்கிறார்கள் என்பதைப் பரிபவுல் ஸ்தாபிக்கிறார்.

மரித்தவர்கள், உயிருள்ளவர்களைப்பற்றிய சம்பந்தத்திலிருந்து முற்றிலும் அற்றுப்போனதுபோல, தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருக்கிறவர்கள் அவரைப் பற்றி எண்ணமற்றிருப்பதும், அவருடைய பிதாப் பாந்தத்துக்குப் புறம்பாயிருப்பதும் நிச்சயமானாலும், அந்தப் பழுது தேவன் பட்சத்திலிராமல் மனுஷர் பட்சத்திலிருப்பதால், அப்படிப்பட்டவர்களுக்கு அவருடைய பிதாத்தன்மை அழிந்துபோகிறதில்லை; அவர்களுக்கு அவர் சத்துருவாய், அந்நியராய், கடின எஜமானாயிராமல் இன்னும் பிதாவாகவே இருக்கிறார். இதை நாம் ஆட்சேபிக்கலாமா? நம்முடைய பிள்ளைகளின் துரோக செய்கைகளால், நாம் அவர்களுக்குப் பிதாவாயிருக்கிறது அற்றுப்போகிறதுண்டா? இல்லையே. அதுபோலவே தேவன் விஷயத்திலும் சொல்லவேண்டியது.

ஒருகாலத்தில் அந்துரு புல்லர் என்பவருடைய மகனாகிய ராபர்ட் ஒரு யுத்தக்கப்பலில் வேலையமர்ந்து, கள்ளத்தனமாய் ஓடிவிட்டான் என்றும், அவன் பிடிபட்டு குற்றஞ்சாட்டப்பட்டு, இம்சையான மரணமடைந்தானென்றும் ஒரு செய்தி வந்தது; அவர் அப்போது இரத்தக்கண்ணீர் சிந்தினவரைப்போல பின்வருகிறபடிப் புலம்பினார்:—

இதற்குமுன் வந்ததுக்கங்களெல்லாம் என் கண்ணீரைச் சொரியப்பண்ணின. இப்போது அடங்காதவண்ணமாக ஓர்வித மனநோயால் தினம் தினம் அவதிப்படுகிறேன். என் கண்முன் வரும் காட்சியெல்லாம் அவனை எனக்கு நினைப்பூட்டுகிறது. ஐயோ......அவன் துஷ்டனாயிருந்தான்; அதை நான் கவனித்துத் தடுக்காதேபோனேன்;......அவன் கைதியாக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு மரணாக்கினைத் தீர்ப்பையும் பெற்றான்; அந்த

வரலாறென்றும் எனக்குத் தெரியாமற்போயிற்று;......அவன் தன் அவதியில் அலறி அழுதான்; அச்சத்தத்தை என் காது கேட்கவில்லையே; அவனைப் பார்த்துப் பரித பிக்க ஒரு கண்ணும், அவனைத் தாங்கிக்கொடுத்த ஒரு கரமு மில்லாமற்போயிற்றே;......ஆ, அப்சலோமே, என் மகனே, என் மகனே! உனக்காக நான் மடியும்படி தேவன் சித்தங்கொண்டால், மடிவேனே என் மகனே!'' என்பதுதான். *.

இது மிதமிஞ்சின புலம்பல் என்று எந்தத் தகப்பனா வது நினைப்பானா? மகன் எவ்வளவு கெட்டலைந்துபோனா லும், நல்ல தகப்பன் அவனை நேசித்த நேசம் இதில் விளங்குகிறதல்லவா? ஞானமும் இரக்கமுமுடைய தேவன், இதிலும் தாழ்ந்த அன்புள்ளவர் என்றெண்ண லாமா? தேவனுடைய நேசத்தைவிட மனுஷநேசம் அவ்வளவு பெரியதா? ''வானங்களே கேளுங்கள், பூமியே செவிகொடு........நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன், அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினார்கள்'' என்று தேவன் அபயமிடுவதில் பரிதா பம் விளங்கவில்லையா? அவருடைய பிதாப்பாந்தத்தை அவர் எவ்வளவு உறுதியாயெடுத்துப் பேசுகிறார் என்று பாருங்கள். ''எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கை விடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக் கொடுப்பேன்? நான் உன்னை எப்படி ஆத்மாவைப்போ லாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப்போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. என் உக் கிரகோபத்தின்படியே செய்யமாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல தேவனாயிருக்கிறேன்'' (ஓசியா, 11. 8, 9.) என்கிறார். இது மனுஷ பாசத்திலும் தாழ்வாயிராமல், அதற்கு மிஞ்சின தேவ பிதாப்பாசமாயிருக்கிறது.

---

*. சில காலத்துக்குப்பின் இந்தச் செய்தி அபத்தம் என்று வெளியா யிற்று.

லூத்தர் என்பவர் ஒருநாள், சக்சோன் நாட்டு ஏழைச சபை ஒன்றுக்கு ஞானோபதேசம் கற்றுக்கொடுத்தார். அப்போது, விசுவாசப்பிரமாணத்தை ஒருவன் சொன்ன போது: "வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்" என்று துவக்கினான். உடனே லூத்தர், "சர்வவல்லமை யுள்ள" என்பதின் கருத்தென்னவென்று வினவினார். அறிவீனமுள்ள அந்தப் பட்டிக்காட்டார், அதின் கருத்து எங்களுக்குத் தெரியாது என்று உள்ளதைச் சொன் னார்கள். உடனே லூத்தர், அதின் பூரண கருத்து எனக்கும் தெரியாது; எவ்வளவு தேறின சாஸ்திரியும் அதின் கருத்தைப் பூரணமாக அறியான். எப்படி யிருந்தபோதிலும், தேவன் உங்கள் பிதாவாயிருக்கிறார் என்றும், அவர் உங்களையும் உங்கள் அயலாரையும் பாதுகாத்து, இரட்சிக்க வல்லமையும் சித்தமுமுடைய வராயிருக்கிறார் என்றும் நீங்கள் அறிந்துகொண்டால் போதும் என்றார். தேவனுடைய பிதாத்தத்துவத்தைப் பற்றி லூத்தர் சொல்லும் கருத்தை நாம் அங்கிகரித்துக் கொள்ளவேண்டியது.

(3) தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்குப் பிதாவாயிருக்கிறார். நாம் இம்மட்டும் சொல்லிவந்த குறிப்புகளின்படியே இந்தச் சத்தியத்தையும் விளக்கிக் காட்டுவோம். கர்த்தருடைய ஜெபமானது, மற்றச் சுவி சேஷ போதனைகளின் ஒரு பாகமாயிருப்பதால், அவற் றின் போதனைக் கிசைவாகவே இதன் போதனையு மிருக் கிறது. இந்தச் சத்தியம், இயேசு நிக்கொதேமுவுடன் பண்ணின சம்பாஷணையில் முதலாவது வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. இயேசு அவனைப் பார்த்து, "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்" என்றும், "நீங்கள் மறுபடி யும் பிறக்கவேண்டும்" என்றும் சொன்னார். இந்த வார்த்தைகள் எசேக்கியேலில் சொல்லப்படுகிற தீர்க்க தரிசனத்தை உணர்த்துகிறதென்று சொல்லத் தடை யில்லை. "அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான

ஜலம் தெளிப்பேன்........நான் உங்களைச் சுத்தமாக்குவேன்; நீங்கள் சுத்தமாவீர்கள். உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுவேன்'' என்றெழுதியிருக்கிறது (எசே. 36. 25, 26.). சுத்த ஜலம் என்று இங்கே சொல்லப்படுவது, யூதச் சடங்குகளில் பலி இரத்தத்துடன் கலந்திருந்த ஜலம்தான். இது சுத்த தீர்த்தம் என்று யூதரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது; ஏனெனில் இரத்தங்கலந்த அந்த ஜலத்தைத் தெளிப்பதால், யூதச் சடங்காசாரப்படி தீட்டுள்ள எந்த மனுஷனும் சுத்தமாகிவிட்டதாக எண்ணப்பட்டது. அந்தத் தீர்த்தமானது சகல பாவங்களையும் கழுவும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை முன்குறித்து உணர்த்தினது. இயேசு நிக்கொதேமுடன் செய்த சம்பாஷணை முழுவதையும் நாம் கவனித்தால், தேவ ஆவியானவர் மறுபிறப்பின் கர்த்தாவாகவும், கிறிஸ்துவின் இரத்தம் கருவியாகவும், மனுஷனுக்குள்ள விசுவாசமானது அதைப் பெற்றுக்கொள்ளும் வழியாகவும், அந்த விசுவாசத்தின் முதல் செய்கையானது, நித்திய ஜீவனின் ஆரம்ப நேரமாகவுமிருக்கின்றனவென்றும் விளங்குகிறது. ஏனெனில் ''தேவன் தம்முடைய ஒரே குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனையடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' என்று இயேசு சொன்னார். இப்படியாக, தேவன் ''துரத்துண்டவன் தம்மைவிட்டு, முற்றிலும் விலக்கப்படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார்'' (2 சாமு. 14. 14.). நாம் பாவத்தால் இழந்துவிட்ட பிள்ளைப் பாத்தியத்தை தேவன் நினைக்கும்போதெல்லாம், ''நான் உன்னைப் பிள்ளைகளின் வரிசையிலே வைத்து...........நல்ல சுதந்தரமாகிய தேசத்தை உனக்குக் கொடுப்பது எப்படி?'' என்று தமக்குள்ளே கேட்டுக்கொள்ளுகிறார் (எரே. 3. 19.). தேவன் கிறிஸ்துவில் இருந்தார்; ஆகவே கிறிஸ்துவைக் கொடுத்ததில் தம்மையே கொடுத்தார். கலக சுபாவமுள்ள பிள்ளைகள், தேவன் தங்களை நேசிக்கிறார் என்பதை நம்பாமல்,

அவரைச் சாந்தப்படுத்தும்படி தங்கள் மனம்போன பலிகளைச் செலுத்துவது நலமென்றெண்ணிவந்தார்கள். இயேசுவோ, பிதாவைப்பற்றி உலகத்தார் கொண்டிருக்கும் எண்ணம் பிசகென்றும், தமது குமாரன் மூலமாக அவர் தம்மையே கொடுத்திருக்கிற விஷயமானது, பிதாவானவர் எதிர்பார்க்கிறதாக மனிதர் உணருகிற பிராயச்சித்த பலிக்குப் போதுமானதென்றும் வெளிப்படுத்தினார். இதை நாம் உணர்ந்து விசுவாசிக்கும்போது நித்திய ஜீவன் துவக்குகிறது. இதற்கு முன்னும் தேவன் நமக்குப் பிதாவாயிருப்பது நிசந்தான்; நாம் இன்னும் அவரை விரோதிக்கிறவர்களாயிருக்கையில், அவர் இந்தப் பெரிய ஈவையும் அருளுகிறார்; இதை நாம் அசட்டை பண்ணினாலோ, அந்த பிதாப்பாந்தமானது நமக்கு வரவேண்டிய தண்டனையைத் தடுத்துவிடமாட்டாது. இரட்சிப்புக்குரிய பிதாப்பாந்தமானது, சிருஷ்டிப்பு சம்பந்தமாய் நமக்குக் கிடையாமல், மறுபிறப்பின் பிதாப்பாந்தத்தால் கிடைக்கிறது. நாம் நமது தாயால் பிறக்கும்போதல்ல, பரிசுத்த ஆவியால் பிறக்கும்போது கிடைக்கிறது. ஆகவே இயேசு தமது முதலாம் சம்பாஷணையில் இரட்சிப்பைப்பற்றிப் போதித்து, தமது கடைசிச் சம்பாஷணையில் "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று உணர்த்துகிறார். (யோவா. 14. 6.)

இப்படி அவர் நேராய்ப் போதித்திருப்பதுடன், தமது அருள் பெற்றவர்களைக்கொண்டு "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை; அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்"

என்றும், "இயேசுவானவரே கிறிஸ்துவென்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான்" என்றும் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்றும், "நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" என்றும், "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியால், அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" என்றும் எழுதி ஒப்புவித்திருக்கிறார். (யோவா. 1. 11-13. 1 யோவா. 5. 1. 2 கொரி. 5. 17. கலா. 3. 26: 4. 6.)

இதினாலே, இயேசுவை விசுவாசித்து, மறுபடியும் பிறந்தவர்களுக்கு மாத்திரம் இந்த ஜெபத்தில் பாத்திபமுண்டு, மற்றவர்களுக்கு பாத்திபமில்லை என்று நாம் சொல்லுகிறதில்லை. நமது கருத்தெல்லாங்கூடி, கிறிஸ்து மார்க்க அறிவை அடைந்தும், இயேசுவை விசுவாசியாமலும், மறுபடியும் பிறவாமலு மிருக்கிறவர்கள், இந்த ஜெபத்தின் மூலமாய் எங்கள் பிதாவே என்று சொல்லப் பாத்திபப்படுவதில் அவர்களுக்குப் பிரயோசனமில்லை என்பதுதான். அவரைப்பற்றி ஒருக்காலும் கேள்விப்படாதவர்கள் தங்களுடைய பொது அறிவின்படி தேவனை நோக்கி எங்கள் பிதாவே என்று கெஞ்சுகிறதுண்டானால், அப்படிக் கெஞ்ச அவர்களை ஏவுகிறவர் பரிசுத்தாவி என்றும், அவரை அறியாமல் அப்படிக் கெஞ்சுகிறார்களென்றும், அப்படிப்பட்ட அறிவீனர் விஷயத்தில் பரமபிதா தயவுகாட்டி அவர்களுக்குஞ் செவி கொடுக்கலாமென்பதுமே நமது கருத்து. ஏனெனில் தேவனை அறியாமல் அவரை நோக்கிக் கூப்பிடுகிற பிள்ளைகளுமுண்டு.

(4) "எங்கள் பிதாவே" என்ற வார்த்தைகளால், இயேசு நமக்குள்ளிருக்கவேண்டிய சகோதர ஐக்கியத்தைப் போதிக்கிறார். பாவி தன் காரியக்காரன், இவ்

வுலக சித்தாந்தமெல்லாம் "தன் காரியத்தைப் பார்" என்பதுதான். பரமபிதாவின் சமுகத்தை மறக்கிற ஒவ்வொருவருடைய எண்ணமும், "எனக்கு முதல் பங்கு" என்றிருக்கிறது. கெட்ட குமாரனுடைய உவமை இதை விளக்குகிறது. அவன் தன் தகப்பனை விட்டுப் பிரிந்துபோகத் தீர் மானித்தபோது "தகப்பனே எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும்" என்று கேட்டான். அவன் திரும்பி வந்தபோதே, தன் தகப்பன் வீட்டிலுள்ள மற்றவர்களி லொருவனாகமாத்திரம் தன்னை ஏற்றுக்கொள்ளக் கேட்டான். மறுபடியும் பிறந்தவர்கள் தன் காரியக்குட்டிகளா யிராமல் பொதுக்காரியத்தை நாடுகிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் புதிய பாட்டைப் பாடுகிறதுபோல புதிய ஜெபமும் செய்கிறார்கள். இந்த ஜெபம் கிறிஸ்துவின் குடும்பத்தார் அனைவருக்கும் பொது ஜெபமானதால் "எங்கள் பிதாவே" என்று சொல்ல இரட்சகர் கற்பிக்கிறார்.

(a) இதினாலே, முதலாவது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் ஐக்கியத்தைக் காண்கிறோம். ஜான் புனியன் என்பவர் செய்த கடைசிப் பிரசங்கத்தில், "தேவனுடைய சாயல் ஒரு ஆத்துமாவில் இருக்கிறதாக நீ கண்டால் அவனை நேசி, நேசி; அந்த மனுஷனும் நானும் ஒருநாள் தேவசந்நிதியில், கூட நிற்க வேண்டும். ஒருவரை யொருவர் நேசித்து, ஒருவருக்கொருவர் நன்மை செய்யுங்கள்" என்று சொல்லியிருக்கிறார்.

"ஒன்றும் ஒன்றும் இரண்டென்றே
உபாத்தி மாரும் சொன்னாரே
ஒன்றும் ஒன்றும் ஒன்றென்றே
அன்பின் சட்டம் சொல்விற்றே"

என்று ஒரு கவிஞன் பாடியிருக்கிறான். காலம் செல்லச் செல்ல தேவகிருபையானது அநேகரை ஒன்றாக்குகிறது. அநேகரான நாம் மரணத்தில் ஒன்று கூடுகிறோம். அலைகள் அநேகமானாலும் கடல் ஒன்று தான்; கொடிகள்

பலவானாலும் திராட்சச்செடி ஒன்று தான்; கற்கள் அநேகமாயினும் கட்டடம் ஒன்றுதான்; பிள்ளைகள் அநேகமாயினும் குடும்பம் ஒன்றுதான்; ஆகவே நாமனை வரும் ஒரே குடும்பத்தாபாக "எங்கள் பிதாவே" என் றழைக்கிறோம்.

இதைப் பக்திவிநயத்துடன் சொல்லுகிறவர்கள் அப்படிச் சொல்லக்கூடாதவர்களுக்கும் உதவிசெய்கிறார்கள் என்பது ஒரு கருத்து. பிஷப் ஹால் என்பவர் "தேவனுடைய பிள்ளைகளுக்குள் பக்திக்குரிய ஒரு வியாபாரம் நடத்துகொண்டுவருகிறது; அவர்கள் ஒருவருக்காக ஒருவர் ஜெபம் செய்து, பரம வாழ்வுகளைப் பெற்றுவருகிறார்கள்; என் ஜெபத்தால் எனக்கு வரும் பங்கெவ்வளவோ அவ்வளவு மற்றவர்கள் ஜெபத்தாலும் எனக்குப் பங்குகிடைக்கிறது; அவர்கள் விண்ணப்பத்தில் உயிர் இருக்கையில் எனக்கு அதிலுள்ள பங்கு கிடையாமற்போகாது" என்கிறார். மேலும் லேட்டன் என்பவர், "ஒவ்வொரு விசுவாசிக்கும் மற்ற விசுவாசியின் ஜெபத்தில் பங்கு இருக்கிறது; கப்பல் வர்த்தகர் ஒவ்வொருவருக்கும், கடலில் செல்லும் ஒவ்வொரு சரக்கின் லாபத்தில் பங்கிருப்பதுபோல பரலோக யாத்திரைபோம் ஜெபக்கப்பல்கள் சரக்குகளிலும், அதின் லாபத்திலும் எல்லா விசுவாசிகளுக்கும் பங்குண்டு" என்கிறார்.

(b) "எங்கள்" என்னும் பதமானது எல்லா மனுஷரையும் அடக்கிக்கொள்ளும் அன்பின் கச்சைபோலிருக்கிறது. "நமக்கு ஒரே பிதா இல்லையோ, ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ?" அன்புள்ள குணத்தோடு இந்த ஜெபத்தைச் செய்கிறவர்கள் எல்லா மனுப்புத்திரருக்காகவும் இதை ஜெபிக்கிறார்கள். எல்லா மனுஷருக்கும் இந்த ஜெபத்தில் சொல்லப்படும் நன்மைகள் கிடைக்கவேண்டும் என்பது அவர்கள் வாஞ்சை என்பதை வெளியிடுகிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசி, "நமக்கொரு பாலன் பிறந்தார்; நமக்கொரு குமாரன்

கொடுக்கப்பட்டார்" என்று உலகத்தின் பொதுவாழ்வாகச் சொன்னதுபோல இந்த ஜெபத்தைச் செய்கிறவர்கள், எல்லாரையும் மதித்து, எல்லாரையும் நேசித்து, எல்லாருக்காகவும் ஜெபம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இப்பொழுது நாம் அடுத்த பாகத்தைக் கவனிப்போமாக.

## 2. நமது பிதா பரலோகத்திலிருக்கிறர்

பரலோகம் என்பதைக் குறிக்கும் கிரேக்க மூலபதமானது, எழும்புதல், உயருதல் என்னும் கருத்தால் உயரத்தையும், அந்தரத்தையும் உணர்த்துகின்றது. உயர்ந்த கருத்து, உயர்ந்த கல்வி, உயர்ந்த மாதிரி என்னும் வாசகங்கள் அதநின் மேன்மையை அல்லது மகத்துவத்தை விளக்கும் மாதிரியாயிருக்கின்றது. இதே மூலபதமே இவ்விடத்திலும் வழங்கப்படுகிறது. இதின் மூலபதத்தின் ஆதாரத்தைக்கொண்டு, நாம் பரலோக மின்னதென்று தெளிவாய் அறிந்துகொள்ளக் கூடாதேபோனாலும், இதின் கருத்தானது பூமியிலுள்ள நமது தகப்பன்மாரைவிட தேவன் எவ்வளவோ மேலானவரும், மகத்துவம் பொருந்தியவருமாயிருக்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகின்றது. மேலும் அவருக்கும் நமக்குமுள்ள பாந்தமானது உலகவிஷயங்களால் சம்பந்தப்படுத்தி அறியக்கூடியவைகளாயிராமல், மேலான வகையாய் அறியப்படக்கூடிய பிதாத்தன்மையா யிருக்கிறதென்பதையும் காட்டுகிறது. அதுவின்றி மொத்தமாகச் சொன்னால் "பரலோக பிதா" என்பது, அவரை எல்லா விஷயத்திலும் "பூரண பிதா" என்றுணர்த்துகிறது.

1. அன்பில் அவர் பூரணர். நாம் பரலோக விஷயங்களைப் பூலோக குறிப்புகளைக்கொண்டுதான் அறியவேண்டியதிருக்கிறது. உலகக் குறிப்பின்படி ஒரு பிதா எப்படிப்பட்டவனா யிருக்கவேண்டும்? அன்புள்ளவனா யிருக்கவேண்டுமென்பது உன் புத்திக்கு எட்டாத காரியமல்ல. நினைவில் அன்பும், செய்கையில் அன்பும், புத்தியில் அன்பும், சங்கடங்களில் அன்புமுள்ளவனா யிருக்கிறதை உணருகிறாய். மனுஷனில் இவ்வளவை

எதிர்பார்க்கிற நாம், தேவனில் இவ்வளவும் பூரணமாயிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளுகிறோம். ஒரு உலகத்தகப்பன் தன் பிள்ளையினிடத்தில் இன்பமடைகிறதில்லையா? உன் அறிவுக்கும் அனுபோகத்திற்கும் அது சரியாயிருக்கிறதில்லையா? நீ அனுபவிக்கிற எல்லாச் சந்தோஷத்திலும் அது உனக்கு மேலானதாயிருக்கிறதில்லையா? பரமபிதாவின் அன்பு அதைவிடத் தாழ்வென்றெண்ணுகிறாயா? பலஹீனமான பிள்ளைகளைத் தாங்கி நடத்துதல், தான் மகா வாக்குவல்லவனாயிருந்தாலும், தன் பிள்ளையின் மழலைச்சொற்களைக் குனிந்து கேட்குதல், விழுந்து தடுமாறினாலும் அது நடந்து ஓடுதலைப் பார்த்து அகமகிழுதல், பள்ளிப்பாடங்களைக் கற்று வகுப்பில் முந்தி, வளர வளரத் தன் பிதாவின் சாயல் அவன் நடையிலும், பேச்சிலும், முகத்திலு மிருக்கப் பார்க்குதல், பிதாவின் கனத்தை நாடிப் பேசுதல் பிரயாசப்படுதல், மகனின் பலவீனங்கள், நோய்களில் கண் விழித்து தன்னால்கூடிய உதவியையெல்லாம் செய்தல், மகனுடைய ஆபத்தும் அவதூறும் தனக்கு வந்ததுபோல எண்ணி அவனை ஆதரித்தல், அவன்மேல் தாபந்தப்பட்டு நம்பிக்கைகொள்ளுதல் ஆகிய இவையனைத்தும் உனக்குத் தெரியுமே. இவற்றிலும், இவைபோலொத்த எல்லா அன்பின் விஷயங்களிலும் நம்முடைய பரமபிதா பூரண லட்சணம் பொருந்தியவராயிருக்கிறார்.

நமது பரமபிதாவின் அன்பை நாம் இப்போது அறிந்திருந்தாலும், ஒருகாலத்தில் அதைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாகவே யிருந்தோம். அக்காலத்தில் நமது மனம், ஜர்மானியர் தங்கள் மந்திரியைப் பற்றிச் சொன்னதுபோல "எங்கள் பலத்த இரும்புத்தடியே" என்று சொல்லியிருக்கலாம்.

ஒருகாலத்தில், தன் தகப்பன் வீட்டைவிட்டு "தூரதேசம்" போய்த் தன்னிஷ்டப்படி காலங்கழிக்க விரும்பிப் புறப்பட்டுவிட்ட ஒரு மகனிருந்தான். ஒருநாள் தேவாதீனமாய் அவன் உள்ளத்தில் நல்லுணர்ச்சி யுண்

டானதால், அவன் புதுமனுஷனாக ஜீவிக்கவேண்டுமென்று தீர்மானித்தான். அவன் தன் ஸ்திதியை உணர்ந்துகொண்டு தனக்குள்ளே சொல்வான்:—

என் பிதா வீடு விட்டு
நான் புறப்பட்டபோது,
எரிந்த விளக்கின்னும்,
எரிகின்றதோ சொல்லும்?
மாமரக் கொப்புக்கூடே
மாஜோதி தெரியுமே
அப்பொன்மயக் காட்சிதான்;
சேர்ப்பாரா? நீசனைத்தான்!

இப்படிச் சொல்லி, எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடத்திற்கு வந்தான். அவன் நீசப்பாவியாயினும், அதற்காக மனஸ்தாபப்பட்டுத் திரும்பி வந்ததால் பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டான். எல்லா கிறிஸ்தவர்களும் அறிந்திருக்கிற கெட்ட குமாரனின் வரலாறு, ஒரு உபமானமாக மாத்திரமல்ல, தீர்க்கதரிசனமாயுமிருக்கிறது. அந்தத் தகப்பன் மெலிந்து, கந்தைகட்டிக் களைத்து, கண்ணீரோடு தள்ளாடிவந்த தன் மகனைக் கண்டு, ஓடித் தழுவி, முத்தமிட்டு, அவனை உடுத்தி, விருந்துகொடுத்துச் சந்தோஷப்பட்ட சரித்திரமானது, பாவ உணர்வடைந்து, பரமபிதாவை நோக்கி, மன்னிப்பை நாடி வரும் ஆத்துமாவையும், அவ்வாத்துமா அநுபவிக்கும் வாழ்வையும் மாத்திரமல்ல, அந்தப் பிதாவின் ஆச்சரியமான ஆழ்ந்த அன்பையும் நமக்கு விளக்குவிக்கிறது.

2. துணை உதவியில் அவர் பூரணர். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கிறபோது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா, தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு, நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" என்று இரட்சகர் சொல்லியிருக்கிறார். இதில் வரும் "போது" என்னும் காலஉருபு ஒரு நியாய தோரணையை மாத்திரமல்ல, ஒரு கேள்வியையும் குறிக்கிறது. தாய் தகப்பன்மார் நமக்கு வேண்டியவைகளை

எப்போதும் அறிவார்களா? ஆகார் தான் கொண்டுவந்த அப்பமும், தண்ணீரும் செலவழிந்த பிற்பாடு, வேறெதையாவது அறிந்தாளா? அவள் தன் பிள்ளையை, தூர ஒரு செடியின்கீழ் கிடத்திவிட்டுப் புலம்பி அழுதாளல்லவா? உன் வீட்டின் அக்கம்பக்கத்திலுள்ள நடபடிகளைக் கவனித்துப்பார்; பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடத்தில் பசித்து அழும்போது, அவர்கள் "உனக்குத் தர ஒன்றுமில்லையே மகனே" என்று சொல்லுகிறதை நீ கேட்டதில்லையா? உதவிசெய்ய ஆசைதான், ஆனால் எப்படி உதவிசெய்யலாமென்று அவர்களுக்குத் தெரியாதிருக்கிறார்கள். பிள்ளை பாயும் படுக்கையுமாகி, உதடு கறுத்து, முகம் வெளிறி, சிலேற்பனம் அடிக்கும்போது, பிள்ளை தனக்குச் சகாயம் செய்ய நோக்கமாய்த் தகப்பனை எட்டி எட்டிப் பார்க்கையில், அவன் உதவி செய்ய அறியாமல் திகைக்கிறதில்லையா? பரமபிதாவின் துணைவிஷயமோ அப்படியல்ல. "பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ அப்படியே" நமக்குத் துணை உதவிசெய்யும் விஷயங்களில் "உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." என்று அவர் பிரஸ்தாபிக்கிறார். (ஏசா. 55. 9.)

3. நமக்குச் சமீபமாயிருந்து கவனிப்பதில் அவர் பூரணர். யோசேப்பின் தகப்பனும் கூட இருந்தால், அவன் தன் சகோதரரால் அன்று விற்கப்பட்டிருக்க மாட்டான். சூனேமியாளின் குமாரனுக்கு வயல் வெளியில் தலைநோவுண்டானபோது, அவன் பிதா, கிட்ட இருந்தபடியால் "என் தலை நோகிறது, என் தலை நோகிறது" என்று உடனே சொல்ல ஏதுவிருந்தது. உலக தகப்பன்மார் எப்போதும் தங்கள் பிள்ளைகளின் பக்கத்திலிருக்க முடியாது. பரமபிதாவோ, அப்படி எப்போதும் தமது பிள்ளைகளுடன் கூட இருக்கக்கூடும். "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்று மனுஷர் சொல்லும்போது இதை உள்ளபடி உணர்ந்து கொள்ளுகிறதில்லை. அவர்கள் பரலோகம் என்பது,

வானசாஸ்திரத்தைச் சேர்ந்ததென்று எண்ணி, ஆகா, நமது பிதா எவ்வளவு தூரத்திலிருக்கிறாராம்; அங்கே அவர் இருக்கிறாரோ இல்லையோ யார் கண்டது; ஆனால் படித்தபிரகாரம் சொல்லிவிடுவோம் என்று ஜெபிக்கிறார்கள். அது அவர்கள் விசுவாசத்துக்குரிய உபதேசம் என்று எண்ணுகிறதில்லை. தாங்கள் ஒரு லோகத்திலும் தங்கள் பிதா தூரமான இன்னொரு லோகத்திலுமிருக்கிறாரென்பதே அவர்கள் தீர்மானமாயிருக்கிறது. "நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவரல்லவோ;" "வானம் என் ஆசனமாயும், பூமி என் பாதபடியாயுமிருக்கிறதல்லவோ" என்று கர்த்தர் சொல்லுகிறார். இயற்கையில் மகத்துவம்பொருந்திய தேவன் வானத்தை ஆசனமாக வைத்து, சர்வலோகங்களிலுமிருந்து அவைகளை ஆண்டுவருகிறார். தேவன் தமது தன்மையின்படி ஒரு அளவுக்குள் அடங்கினவரல்ல. இயேசு நமதுநிமித்தம் எடுத்த மாம்சத்தைக் களைந்துவிட்டு மகிமையுள்ள உடலுடையவராய் உயிர்த்தெழுந்தபின்பு மரியாளை நோக்கி "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு எழுந்துபோகவில்லை" என்று சொன்னார். அதாவது நாம் இப்பூமியிலிருக்கையில் என்னைத் தொடாதே நான் பரலோகம் போகுமட்டும் பொறுத்திருந்து, அப்புறம் தொடு என்கிறார்.

இயேசு பூமியிலிருக்கையில், அவரிடம் உதவி பெறும்படி மரியாள் ஒரு ஆள் மூலமாய்ச் செய்தியனுப்பி, நாலு நாளுக்குப்பின் அவரைக் காண இடம் பெற்றாள். இப்போதே, நாம் மன்றாடுகிற இந்நிமிஷமே அவருடைய சமுகத்தைக் காண இடமிருக்கிறது. உன் அவசரத்தில், நீ ஓடவேண்டியதுமில்லை, நடக்கவேண்டியதுமில்லை; உன் மனதைமாத்திரம் பறக்கவைத்தால், அந்நிமிஷமே அவர் சமுகம் உனக்குக் கிட்டுகிறது. வெளிச்சம், மின்தாது, ஓசை இவை வெகு தீவிரமாய்ச் செல்லுகிறதென்பதைக் காட்ட இக்கால தத்துவசாஸ்திரிகள் கணக்கிடுகிறார்கள். நமது ஜெபங்கள் பரமபிதாவண்டை செல்லும் வேகத்தைக் கணக்கிடக் கணக்கு

சாஸ்திரத்தில் இடமில்லை; "அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசா. 63. 24.). அநேக ஆண்டுகளுக்கு முன்னே, ஒருவன், தான் கப்பற் சேதத்திலிருந்து அற்புதமாய்த் தப்புவிக்கப்பட்டதைப்பற்றிப் பின்வருகிற வரலாறுகளை எழுதியிருக்கிறான்:—

"நாங்கள் கரைபிடித்துவிட்டோம் என்று மாலுமி சொன்னார்; கரையும் கண்ணுக்குத் தெரிந்தது; எங்களுக்காகக் காத்திருந்த பலர், கடலுக்குள் கட்டியிருந்த பாலத்தில் நின்று, சந்தோஷத்தால் கைகாட்டுகிறதையும் கண்டோம்; அப்போது திடீரென்று கப்பல் அமிழத் துவக்கிற்று; பிரயாணிகளில் பலர் கன்னிமரியம்மாளையும், பலர் அந்தோனியார் சூசையப்பர், அருளப்பர், முதலிய அர்ச்சியஷ்டரையும் பார்த்து எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்று அபயமிட்டார்கள்; நானோ, அவர்கள் என் பிதாவுக்கு எவ்வளவு கிட்ட இருந்தாலும், அவர்கள் மூலமாய்ப் போய் இந்த அவதிவேளையில் சகாயம்பெறத் தேடினால் அதற்குமுன் கப்பல் மூழ்கிப்போமாதலால் நேரே என் பரமபிதாவை நோக்கி, என்னையும் என் உடன்பிரயாணிகளையும் காப்பாற்றும்படி கெஞ்சிச் சகாயம் பெற்றேன்" என்று எழுதியிருக்கிறான்.

4. பயமில்லாத பூரண ஜீவியம். ஒரு பிள்ளைக்குத் தன் தகப்பனைப்பற்றிய சம்பந்தமானது பயமில்லாத தாராளம்தான். தனக்கு வேண்டிய காரியங்களை யாதொரு பயமின்றி தாராளமாகப் போய்க் கேட்கிறான். அயல் வீட்டுப் பிள்ளைகள் பயந்துநிற்கிறார்கள். இவனோ தாராளமாய்ப்போய்க் கேட்டுவாங்குகிறான். இந்தத்தாராளம் அவனுக்கு மனஅமைதலைக் கொடுக்கிறது. இந்த பயமற்ற தாராளமில்லாத ஆத்துமாக்கள் தங்களை ஒரு சூஸ்திரக் கருவிகளுக்கிடையி லிருப்பவர்களைப்போல, பயந்து எந்தநேரம் சக்கரத்துக்குள் சிக்கப்பட்டு, சின்னபின்ன மாக்கப்படுவோமோ என்று கலங்கிக்கொண்டி

ருக்கிறார்கள். வெகுகாலம் நாஸ்திகனாயிருந்த ஒரு மனுஷன், தேவன் உண்டென்ற சத்தியத்தை ஒருநாள் தன் மனதில் உணர்ந்துகொண்டபொழுது ஆனந்தத்தால் கூத்தாடி, "எனக்கினி பயமில்லை, இப்பட்டும் நடத்துவாரில்லாமல், வேகமாய்ச் சுழலும் யந்திர சாலைக்கிடையில் அகப்பட்டு மயங்குகிறவனைப்போலிருந்தேன், இப்போது அதைச் சீராய் நடத்துகிற ஒரு ஞானமுள்ளவர் இருக்கிறார் என்பதை அறிந்துகொண்டேன்; தேவன் இருக்கிறார், தேவன் இருக்கிறார்; யெகோவா என்ற நாமமுடைய தேவனே அவர்; யெகோவா தேவன் இருக்கிறார்" என்று சொன்னான். "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்று நாம் சொல்லும்போதெல்லாம், இந்த பயமில்லாத தாராளம் நம்மை ஆண்டுகொள்ளவேண்டியது.

5. "பரலோகத்திலிருக்கிற" என்ற பதமானது நமது நிலையான வீட்டை உணர்த்துகிறதாயிருக்கிறது. இந்த வார்த்தையால் நாம் நமது பிதாவின் பூரணங்களை அறிகிறதுடன் நமது நித்தியவீட்டின் நிச்சயத்தையும் அறிகிறோம். இந்த வீட்டின் உபதேசம் சிலருக்கு அவசியமற்றதுபோலிருக்கிறது. அவர்கள், சீனருக்குள்ளிருந்த கான்வியுசியஸ் என்பவன் சொன்னதுபோல "பரலோகம் என்பது ஒரு கோட்பாடு" என்கிறார்கள். நாமோ இது ஒரு ஸ்திதியாய் மாத்திரமிராமல், அதின் நிலையாய் இருக்கிறதென்றும், கோட்பாடாயல்ல ஓர் ஸ்தானமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறோம். பரலோகமானது பூரண மனுஷ சுபாவத்துக்கேற்ற பூரண வீடாயிருக்கிறது. மனுஷீகமானது ஆத்துமாவுடன் ஒரு சரீரமும் பொருந்தியிருக்கிறது; இந்தச் சரீரத்துக்கு இன்றியமையாத ஓர் இடம் வேண்டியது. இந்த சத்தியமானது, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே

நீங்களு மிருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்திலே சேர்த்துக்கொள்ளுவேன்" என்ற வாசகங்களால் உறுதிப்படுத்தப்படுகின்றது. (யோவா. 14. 1, 2.)

நாம் தேவ பிரசன்னத்தையும், அப்பிரசன்னத்தின் மூலஸ்தானத்தையும் வித்தியாசப்படுத்தியே உணருகிறோம். ஓர் அரசனுடைய அரசாட்சி பல தேசங்களில் சென்று அந்தந்த இடத்தில் அததற்குரிய இராஜமகிமைகள் விளங்கினாலும், அவன் இராஜதானியிலுள்ள வீட்டின் மகிமையும், அதிலுள்ள பண்டம்பாடிகளின் மகத்துவமும் விசேஷமாயிருக்கிறது. தேவ பிரசன்னம் வையக முழுவதிலு மிருக்கிறதை நாம் உணர்ந்து அதின் பிரதானஸ்தானம் பரலோகமாயிருக்கிறது. அதின் மகத்துவத்தையும் மேன்மையையும் எடுத்துச் சொல்ல ஒரு நாவாலும் முடியாது; அவற்றை எழுத ஒரு கையாலுமாகாது. ஒரு பூர்வக்கதை யுண்டு—சித்திரக்காரன் ஒருவன் அமெரிக்காவிலுள்ள நையாகிரா நதியில் அருவி விழுவதைத் தன் சித்திரத்தில் தீட்டிவிடும்படி போய் எழுதத் துவக்கினனாம்; எழுதிப்பார்க்கவே ஜலத்திரளைக் குறிப்பிக்குமுன், அதின் நுரையும், அதைச் சேர்ந்த புது வெள்ளமும், அதிலிருந்து பிறந்த சப்தமும், மூகிலும், நீர்த்திவலைகளும், அதின்மேல் ஜொலித்த சூரிய கதிர்களும் அதிலிருந்துண்டாகி நீடீர் நீடீரென்று கலந்து மாறின வானவில்லுகளின் கோரணிகளும் எல்லாம் அவன் மனதைக் கலவரப்படுத்தவே, எந்த வரிசைப்படி இவையனைத்தையும் தன் சித்திரத்தில் தீட்டலாமென்று தெரியாமல் விசனத்தோடு தன் சித்திரக் கோலைத் தூர எறிந்துவிட்டு, அவையனைத்தையும் பார்த்துப் பார்த்து மனங்களித்தானாம். அப்படியானால், இப்பூலோகத்தை மாத்திரம், அதிலும் ஒரு சிறிய பாகத்தை மாத்திரம் கண்டிருக்கிற நாம், பரலோகம் இப்படி என்று வரைந்து காட்ட அல்லது சொல்லிக் காட்டக்கூடுமோ? கூடாது. எந்தப் புலவனின் வர்ணிப்பாலாவது, சித்திரக்காரனுடைய வர்ணங்களாலாவது மோட்ச

மகத்துவங்களை விளக்கிக்காட்ட முடியாது; விளக்கிக் காட்டத்துணிந்தால், அப்படிச் செய்யும்போதே மரித்து, அநேகத்தைச்சொல்லி முடியாமல் விட்டுவிடுவான். அது நாம் நாடும் வீடுதான்; ஆனால் அதின் பூரண அறிவை நாம் அறியாதிருக்கிறோம். அதின் கதவு திறக்கப்பட்டிருந்தாலும், அது மகிமையுள்ளதென்று மொத்தமாய் அறிவோமேயல்லாமல், அவற்றின் நுட்ப மகத்துவங்கள் ஒன்றையும் நாமறியோம். மனுஷ தன்மைப்படி, இன்று நம்மில் ஒருவன் மோட்சத்தைக் கண்டால் உடனே பயந்து, "ஆண்டவரே நான் இன்று அதற்குள் பிரவேசிக்கப் பயப்படுகிறேன்" என்று சொல்ல வாய்வரும். ஆனால் நாம் நமது மரணத்தால் அந்த லோகத்தில் பிறக்கும் போதோ, நமது பயம் நீங்கிவிடும். ஏனெனில் இப்பொழுது கிருபையின் பிள்ளைகளாயிருக்கிற நாம், அப்போது அக்கிருபையின் மூலமாய் மகிமையின் பிள்ளைகளாவோம். அப்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் "நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" என்று அறிக்கையிடக்கூடும். நம்முடைய பூலோக ஜீவியத்தில், பரலோகத்தைப்பற்றி இந்த எண்ணமுள்ளவர்களாயிருப்பது நலம். இந்தக் கருத்துகளுடன் நாம் ஜெபிக்கும்போது, அது நமது ஜெபத்துக்கு புதிய பலத்தையும் கொடுக்கும். இவ்வித உணர்ச்சியானது கிறிசொஸ்தம் என்பவர் சொல்லுகிறபடி "ஜெபிக்கிறவனை இவ்வுலகத்திலிருந்து பிரிந்து, உன்னதத்திலிருக்கிற பரம வாசஸ்தலத்தில் நிறுத்துகிறது."

"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்று நீ ஜெபிக்கும்போதெல்லாம் பின்வருங் குறிப்புகளை உணர்ந்துகொள்வாயாக:—

"எங்கள் பிதாவே" என்பதில்,

1. தேவன் ஒரு சத்துவல்ல ஒரு ஆள் என்றும்;
2. தேவன் எல்லா மனுமக்களுக்கும் தகப்பன் என்றும்;
3. அவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு விசேஷ பிதா என்றும்;

4. இயேசு நமக்குள்ளிருக்கவேண்டிய சகோதர பாந்தத்தை உணர்த்துகிறார் என்றும்; உணருவோமாக.

"அவர் பரலோகத்திலிருக்கிறார்" என்பதில்,

1. தேவன் அன்பில் பூரணர் என்றும்;
2. அவர் துணை உதவி செய்வதில் பூரணர் என்றும்;
3. அவர் நம்மைக் கவனிப்பதில் கரிசனையுடையவர் என்றும்;
4. நாம் பயமில்லாது ஜீவிக்கலாம் என்றும்;
5. பரலோகம் நமது நிலையான வீடு என்றும் உணர்ந்து கொள்வோமாக.

## 4. முதலாம் விண்ணப்பம்.

"உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக."
(மத். 6. 9. லூக். 11. 2.)

இந்த விண்ணப்பத்தை வைத்து நமது பிதாவின் "நாமம்" என்பதின் கருத்தென்னவென்றும், அதை நாம் எப்படிப் பரிசுத்தப்படுத்துவது என்றும் கவனிப்போமாக.

I. அவருடைய "நாமம்" என்பதின் கருத்தென்ன? "எங்கள் பிதாவே" என்று படிக்கச் சொல்லுகிறீரே, அந்தப் பிதா யார்? என்று படிக்கிறவன் கேட்கலாம். இதற்கு உத்தரவாக: அவர் பேரைச் சொல்லவேண்டியதாகும். பேரானது, ஒரு மனுஷனிலிருந்து இன்னொரு மனுஷனைப் பிரித்துக் காட்டுகிற பதமாய் மாத்திரமிருக்கிறது. ஆனால் ஆதியிலோ, நாமமானது ஒரு ஆளைக் காட்டுகிறதாயிராமல் அந்த ஆளை வெளிப்படுத்துகிறதாய் வழங்கப்பட்டது. தேவனுடைய நாமத்தைப்பற்றிப் பேசும்போது, இந்தப் பூர்வபோக்கையே நாம் இன்னும் அநுசரித்து வருகிறோம். அவருடைய பேர் அவரை இன்னாரென்று வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது. எந்தப் பாஷையின்படியானாலும், இதுவே அதின் போக்காயிருக்கி

றது. ஒரு பாஷையானது இன்னொரு பாஷையிலும் மகத்துவம் பொருந்தியவிதமாய், ஒரு பேரின் உள் கருத்துகளை விளக்குகின்றதென்பதை நாம் அறிந்திருக்கிறோம். பிலேச்சருடைய பாஷையானது, நமது உணர்ச்சிக்குரிய பாகங்களையும், மற்றோருடைய பாஷையானது, அத்துடன் ஆத்தும தத்துவங்களை விளக்கும் பாகங்களையும் வெளிப்படுத்துகின்றன. இதற்கிசைவாக, ஜான் ஹென்றி நியுமன் என்பவர், "பிளேற்றோவின் கருத்துகளை ஆட்டென்டாட்டரின் பாஷையிலுள்ள வார்த்தைகளைக்கொண்டு தருசுமால்படுத்த முயலுவதில் பிரயோசனமில்லை" என்று சொல்லியிருக்கிறார். அப்படியே தேவன் பேசி, எழுதும் பாஷையைப்பற்றியும் சொல்லவேண்டியது: அவர் தமது நாமங்கள் எல்லாவற்றாலும் தம்மை வெளிப்படுத்துகிறார்; ஆனால் அவை எல்லாவற்றாலும் அவருடைய மகத்துவங்களின் போங்கு முழுவதையும் அறிந்துகொள்ள நம்மால் முடியாது.

1. இயற்கைப் பிரமாணத்தால் அவர் நமக்கு வெளிப்படுத்துவதே அவருடைய நாமமாயிருக்கிறது. சிறிய சிருஷ்டியிலும் பெரிய சிருஷ்டியிலும் நாம் அவர் வெளிப்படுவதைக் காண்கிறோம். வசந்தகாலத்தில் எரிக்கும் சூரியனும், துளிர்க்கும் மொக்குகளும், அடிக்கும் இன்பமான காற்றும், அறுப்புக்காலத்தில் அடிக்கும் தீட்சண்ய காந்தியும், நவதானியங்களின் கதிர்மாலைகளையும், புஷ்பராசிகளின் அழகும் மணமும், பழவர்க்கங்களின் பகட்டும் ருசியும் எல்லாம் தனித்தனியாயும் ஏகமாயும் நமது பிதாவின் மகத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. ரஸ்கின் என்பவர் சொல்வதுபோல "பெருமழையின் தாரைகளும், பசுமையான மரங்களும் நிழல்களும், கண்ணெட்டும் அந்தத்தில் காணும் வெண்மேகமண்டலங்களும், மலைமேடுகளும், மெல்லிய காற்றின் ஓசையும், பயங்கர இடியின் முழக்கமும், பலவருண வானவில்லும், சிவந்த சூரிய கதிர்களும் எல்லாங் கூடி "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" என்ற விண்ணப்பத்தின்

சத்தியத்தை உணர்த்துகின்றன" என்கிறார். மெய்யாகவே நமது பிதாவானவர் தரையிலும், ஆகாயத்திலும், மலையிலும், கடலிலும், கல்லிலும், மண்ணிலும், ஆழத்திலும், அந்தரத்திலும் தமது நாமத்தை எழுதித் தீட்டியிருக்கிறார்.

இப்படி இயற்கைப் பிரமாணங்கள் விளக்கும் பாஷைகள் மகத்துவமாயிருந்தபோதிலும், தேவபாவத்தைப் பற்றி அறியவேண்டிய எல்லா அறிவுகளையும் அதினால் அறிந்துகொள்ள வகையில்லை. நாம் மனப்பாக்கியமுள்ளவர்களாகும்படி அறிய அவசியமான வேறு அநேக பாகங்களுமிருக்கின்றன. ஜீவனுக்கும் மரணத்துக்கும் மத்தியிலுள்ள மாறுதல்கள் அனந்தம். அதிகாலைகள் எப்போதும் ஒன்றுபோல அமைதலும் பிரகாசமுமாயிருக்கிறதில் குருவிகளின் சத்தம் எந்நேரமும் ஒரே மாதிரி தொனியாய்க் கேட்கிறதுமில்லை; பனித்துளிகள் எல்லாக்காலையிலும், முத்துப்போல் பிரகாசிக்கிறதில்லை; சிற்றோடைகளின் கின்னரநாதம் எவ்வேளையிலும் ஒன்றுபோல் கேட்கிறதுமில்லை. செழிப்பும் பசுமையுமான பயிர்களையும் இலைகளையும் கொண்டல் காற்றுகளும், வெட்டுக்கிளிகளும், பச்சைப்புழுக்களும் அழித்துவிடுகின்றன. இந்த மாறுதல்களைத்தான் தேவபாவத்தை வெளிப்படுத்துகின்றனவா? அவர் இன்று பட்சமும் நாளையத்தினம் எரிச்சலுமாயிருக்கிறாரா? காலையில் என்னை ஆதரித்து மாலையில் என்னைக் கைவிடுகிறாரா? சிலதரம் என் சகாயரும் சிலதரம் என் அபாயருமாயிருக்கிறாரா? இப்படி நாம் இயற்கையை தியானிக்கத் தியானிக்க கலக்கம் அதிகரிக்கிறது. இக்கருமைக் கப்புகளை அகற்றி தேவஞானத்தையும் தயாளத்தையும் விளக்கும் நூல்களை நான் வாசித்தாலும் என் கலக்கம் கலக்கமே. ஜலத்திலும் ஆகாயத்திலும் சஞ்சரிக்கும் எண்ணிறந்த ஜீவன்களுக்கு அதினதின் தன்மைக்கேற்றபடி தயவு காட்டிவருகிறார். ஆனால் தேவன் சுறுமீனுக்கும், அது பாய்ந்து பிடித்துப் பட்சணிக்கும் மற்ற ஜீவனுக்கும் அன்புள்ளவர்தான். அவர் காட்டியுள்ள கிரு-

கத்தையும், அக்காட்டுக்குள்ளோடும் நீரோடையில் தாகம் தீர்த்துகொள்ளும் மானையும் காப்பாற்றுகிறார். அந்த மான் அச்சிங்கத்துக்கு இரையாகிவிடுவது அவரது தயவுதான். "பால சிங்கங்கள் இரைக்காகக் கெர்ச்சித்து, தேவனால் தங்களுக்கு ஆகாரங் கிடைக்கும்படி தேடும்" என்று சங்கீதக்காரன் சொல்வது யதார்த்தந்தான். இப்படியே மனுஷ ஜீவியத்திலுள்ள தகுவல் தப்புகளும், நோவு சஞ்சலங்களும், பிதிரார்ச்சிதமான பிணிகளும், நெடுங்காலம் நடந்துவரும் அநீதிகளும், தங்களிடத்தில் யாதொரு காரணமில்லாவிட்டாலும் இன்னும் பூலோகத்தின் மிச்சமான பாகம் இருளாலும் கொடுமைக் குடியிருப்புகளாலும் நிறைந்திருப்பதும், அநேகர் மரண இருளின் பள்ளத்தாக்கில் உட்கார்ந்திருப்பதுமான எல்லாங்கூடி, நமது பிதாவின் மகத்துவத்தைப் பங்கப்படுத்துவதுபோல காணப்படுவதால் நாம் மனவிசனப்பட்டு ஓர் புலவன் புலம்பினதுபோல,

"நீதி குப்பைக்குள் அடங்கினது
அநீதி சிம்மாசன மேறிற்று"

என்று சொல்ல ஏவப்படுகிறோம். லோக இயற்கையாலும் தேவசெயல்களின் போங்காலும் தேவனைப்பற்றி நாம் அநேக விஷயங்களை அறிந்துகொள்ளக் கூடியதாயிருந்தாலும், பாவிகளாகிய நமக்கு வேண்டிய அறிவெல்லாம் அவற்றால் வராது. நான் நீதியுள்ளவனாக ஆசிக்கிறேன். இயற்கையால் நான் நீதியுள்ளவனாகிறதெப்படி? "கர்த்தருடைய நாமம் பலமான துருக்கம், நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" என்ற சத்தியத்தை இயற்கை எப்படி விளக்கிக்காட்டும்? நான் என்னை ஒன்றுக்கும் உதவாதவன் என்றுணர்ந்து கலங்கும்போது "உதவத்தக்கதை விட்டு மற்றதை வெட்டு" என்ற இயற்கையால் எனக்கென்ன சந்தோஷம்? நான் பலவீனனாகும்போது "பலத்தவனுக்கு இரட்சிப்பு" என்ற இயற்கைப் போதனையால் என்ன ஆறுதலுண்டு? என் மனதில் வியாகுலங்கள் பெருகி நான் வாய்விட்டு

"எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத் தூரமாக விலக்கி, அவர்களை எனக்கு அருவருப்பாக்கினீர்" என்று புலம்பும் காலம் வரும்போது இயற்கை எனக்குச் சொல்லும் தேறுதலுண்டா? இல்லை—இல்லை. இயற்கையானது, இன்னும் தெளிவிக்கப்படாத விடுகதைபோலவே இருக்கிறது. நான் ஒரு கல்லைக்கொண்டு ஒரு ஆலயத்தின் முழுக் கட்டுமானத்தையும், ஒரு சங்காத்தைக்கொண்டு துணிகள் நெய்யப்படும் சூஸ்திரங்கள் அனைத்தையும் அறியக்கூடாததுபோல, இயற்கையாலும், தேவசெயலாலும் அவரை எனக்கு வேண்டிய பூரண அளவாக அறியவேகூடாது. தமது மகத்துவத்தின் பூரணத்தை நாம் அறியும்படி தேவன் இடங்கொடுக்கிறதில்லை. அவரை நாம் கண்டறியக் கூடியதில்லை. ஆதலால் நமது மனமானது தவித்து "ஆ மகத்துவம்பொருந்திய பரம இரகசியமே, உமது நாமம் இன்னதென்று சொல்லும்படி வேண்டுகிறேன்" என்று அலறுகிறது.

இயற்கைக்கும் நமது ஜீவியத்திற்குமுள்ள தகுவல் தப்புகளெல்லாம் உள்ளபடித் தகுவல் தப்புகளல்ல; ஏனெனில் இயற்கை பூர்வமாயுள்ளது; அதன்பின் பாவத்தாலுண்டான விழுதலின் பலனான மாறுதல் சம்பவித்தது. ஆகவே விழுதலுக்கு முந்தின ஏற்பாட்டை அதற்குப் பிந்தின அநுபோகத்தைக்கொண்டு கணிப்பது நியாயமாயிருக்கமாட்டாது. ஆகவே பரலோகத்திலிருந்து, விழுதலுக்குப் பின்வந்த, புதிய பிரமாணங்களை நாம் அறிவதால், அந்த விழுதலின் நஷ்டம் எப்படி லாபமாக மாற்றப்படக்கூடுமென்று நாம் அறிந்துகொள்ள இடமுண்டு.

2. வெளிப்படுத்தல்கள் மூலமாய் அவர் நமக்கு வெளிப்படுத்துவதும், அவருடைய நாமமாயிருக்கிறது.

விழுதலால் சம்பவித்த மாறுதல்களினிமித்தம், வானத்திலிருந்து கடைசியாக வந்ததும், சிம்மாசனத்திலிருந்து புதிதாய் வெளிப்பட்டதுமான சமாசாரங்களனைத்தும் பரிசுத்த வேதத்தில் அடங்கியிருக்கின்றன.

ஆகவே வெளிப்படுத்தல் விஷயமாய் மாத்திரமல்ல, அதின் போக்கின் விஷயத்திலும் வரவர தெளிவுண்டாகியிருக்கிறது. வஸ்துக்களைவிட வார்த்தைகள் எவ்வித போதனைகளையும் நிலைவரப்படுத்தி உரைத்ததுமல்லவா? சிலர் இக்காலத்தில் புன்னகையோடு உதட்டைக் கடித்து "நித்திய ஆவியானவர் தம்மைப்பற்றி மனுஷனுக்கு ஒரு ஆகமத்தின் மூலமாய் வெளிப்படுத்தினார் என்பதை ஒப்பலாமா?" என்று கேட்கலாம். காரியம் அப்படியே நடந்திருக்கிறது; அப்படி நடப்பதுதான் ஒழுங்கான முறையாயுமிருக்கிறது. தகுதியான காலங்களில் தகுமான ஏதுக்களைக்கொண்டு, தமது ஞானமுள்ள செயலை நிறைவேற்றிவருகிற தேவன், விழுதலுக்குப்பின் தமது திருநாமத்தையும், அவற்றின் மகத்துவங்களையும் தீர்க்கதரிசன வார்த்தைகளாலும், சரித்திர சமாசாரங்களாலும், கிருபையுள்ள சம்பாஷணைகளாலும், சிறந்த பழமொழிகளாலும், இருதயத்தை அசைக்கும் சொற்களாலும், பக்தர் பலருக்குத் தமது ஆவியைக்கொண்டு மொழிந்து, அவருடைய ஏவுதலால், அவர்கள் அந்த திவ்விய வாசகங்களை எழுதிவைக்கும்படிச் செய்தார். அவ்வெழுத்துக்களால் அவருடைய நாம மகத்துவம் வரவர அதிகத் துலாம்பரமாய் விளக்குவிக்கப்பட்டிருக்கின்றன. அச்சிறந்த நாமங்களில் சிலவற்றைப் பாருங்கள்:—யெகோவா:—இருக்கிறவராக இருக்கிறவர்; நித்தியர்:—இருந்தவர், இருக்கிறவர், இனி இருப்பவர்; எல்-ஷடாய்:—சர்வவல்லவர்; யெகோவாயிரே:—கர்த்தர் பார்த்துக் கொள்ளுவார்; யெகோவா ரோவி:—கர்த்தர் நம்மைக் குணமாக்குகிறவர்; யெகோவா நிசி:—நமது ஆத்துமா வெற்றியடைய கர்த்தருடைய கொடி; யெகோவா சபேயோத்:—விக்கிரக பக்தர் சேவிக்கும் வானசேனையின் அதிபதி; இஸ்ரவேல் ஜனமனைத்துக்கும் அதிபதி (இது ஒருகாலத்தில் கிறிஸ்துவுக்கு வழங்கினபோது சபைக்கு தலைவர் என்று மாற்றி வழங்கப்பட்டிருக்கிறது.); நமது நீதியாகிய கர்த்தர்; சமாதானப்பிரபு முதலியவைகளே. இந்த நாமங்களும், இன்னும் வேறு பல நாமங்களும்

அந்த ஒரே நாமத்தைப் பல தலைமுறைகளிலும் விளக்கிக் காட்டும் போங்காயிருக்கின்றன: அந்தந்த காலத்திலிருந்தவர்கள், இந்த நாமங்களின் பதார்த்தப்படியே தேவனை யறிந்து ஆராதித்துவந்தார்கள். காலங்கள் நிறைவேறினபோது, இதின் இரகசிய ஆழங்கள் தெளிவாய் விளங்கிவந்தன.

3. மனுஷவதாரத்தால் தேவ நாமம் தெளிவாக வெளியாயிற்று. "தேவனை நீங்கள் யாருக்கு ஒப்பாக்குவீர்கள்?" மனுஷனுக் கொப்பாக்கக் கூடாதல்லவா!—மனுஷனுக்குத்தான் ஒப்பாக்குகிறோம். ஆனால் "என்னுடைய நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல, என் வழிகள் உங்கள் வழிகளுமல்ல" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். கடலும் குளமும் ஒன்றல்ல; என்றாலும் குளத்தின் மெல்லிய அலைகளால் நுரை கிளம்புகிறது. கடலை நமது ஆயுசில் பார்க்கக்கூடாவிட்டாலும், குளத்தின் காட்சியால் கடலின் தன்மையை நிதானிக்க இடமுண்டு. தேவன் தம்மைத் தெளிவாக வெளிப்படுத்தினால் ஒரு மனுஷ ரூபத்தில்தான் வெளிப்படுத்தவேண்டும் என்று பூர்வஞானிகள் கிரகித்துவந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு மேலான மனுஷனை அவர்கள் கண்டுபிடிக்காததால், மனுஷனைப்போல ஒரு உருவத்தைச் செய்து, பலவித இரத்தினங்களால் அதை அலங்கரித்து, ஆலயங்கள் கட்டி அங்கே போய் அவ்வுருவங்களைத் தேவர்களென்று வணங்கிவந்தார்கள். ஒரு கிரேக்கனிடத்தில் தேவனைக் காட்டு என்றால், அவன் தன் கோயிலுக்குள் வைக்கப்பட்டு பலவித ரத்தினங்களால் ஜொலிக்கும் ஒரு மனுஷ சிலையைக் காட்டுவான். புத்தியுள்ள ஒருவன், இது மகத்துவம்பொருந்திய தேவனுடைய சுரூபமுமல்ல, அவருடைய தற்சுபாவத்தின் அச்சுமல்லவென்று தீர்மானிப்பான்.

கிறிஸ்தவர்களாகிய நாமும் ஒரு சொரூபத்தைத்தான் வணங்குகிறோம், அதைத் தந்தவர் தேவன்தான். "ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை

நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்'' என்ற கற்பனைக்கு விரோதமாய் நடப்பதுதான் பாவம். ஆனால் இரட்சிப்பைப்பற்றிய தேவனுடைய ஏற்பாட்டின்படி, தன் ஆத்துமாவின் இளைப்பாறுதலுக்கும் ஜெபத்தியானத்துக்கும் உதவியாக விசுவாச ஏற்பாட்டின்பிரகாரம், என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறவரை சிந்தையில் சிலைபோல் வைத்துப் பூசிப்பது விக்கிரகாராதனையாக மாட்டாது. ''மனுஷீகத்தின் மூலமாகமாத்திரம் தேவன் அறியப்படக் கூடியவர்'' அதற்கென்று பிரத்தியேகப் படுத்தப்பட்ட மனுஷ உடலானது, பூரண மனுஷனாகிய கிறிஸ்து இயேசுதான். ''அவரே காற்றுக்கு ஒதுக்காகவும் பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்கு பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பவர்'' (ஏசா. 32. 2.). ''அவரே அதரிசன தேவனுடைய தற்சொரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்; அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன'' (கொலோ. 1. 15–17.). ''பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, நான் இவ்வளவுகாலம் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியுமென்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?'' என்று இயேசு அவனுக்கு உணர்த்தியிருக்கிறார். பிதாவின் அன்பை நீ பார்க்கவேண்டுமோ?— இயேசுவைப் பார்; அவர் பரிசுத்தத்தையும், கரிசனையையும் காணவேண்டுமோ?- இயேசுவைப் பார். தேவன் பாவிகளை எப்படி மன்னிக்கக்கூடும் என்று நீ அறிய

வேண்டுமா?—இயேசுவைப் பார்; நீதியுள்ள தேவன் பாவியின்மேல் தமது கோபத்தைச் செலுத்தாமல் அவனை இரட்சிக்கிற இரகசியத்தைக் காணவேண்டுமா?—கல்வாரி மலையில் குருசிலே தொங்கும் இயேசுவைப் பார். தேவனைப் பிரியப்படுத்தும் வகை இன்னதென்று நீ அறிய வேண்டுமா?—இயேசுவைப் பார். இயேசுவே நமது வேதசாஸ்திரம்;—இயேசுவே வார்த்தை—அவரே நமது வேதம்—வேதாகம வாசகங்களெல்லாம் அவரில் திரண்டு விளங்குகிறது; ஆகவே, நமக்கு தேவன் அறியப்படாத தேவனாயிருக்கிறதில்லை. இயேசு சிருஷ்டிப்பை விஸ்தரிக்கிறார்; அவர் பழைய ஏற்பாட்டையும் விளக்குவிக்கிறார். அவர் நமது சிலுவையை ஒப்புக்கொள்ளப் பயணப்பட்டபோது, "இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது; நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியுமென்று சொல்வேனோ; ஆகிலும் இதற்காகவே, இந்த வேளைக்குள் வந்தேன்; பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்" (யோவா. 12. 27, 28.). மேலும் அவர் தமது சீஷருடன்செய்த கடைசிஜெபத்தின் முடிவில், "பிதாவே உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன், இன்னமும் தெரியப்படுத்துவேன்" என்று சொல்லியிருக்கிறார் (யோவா. 17. 26.). ஆதலால், இயேசு தேவனை வெளிப்படுத்துகிறவராயிருக்கிறார், புதிய ஏற்பாடு இயேசுவை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது.

## II. தேவநாமத்தை நாம் பரிசுத்தப்படுத்துவதெப்படி?

"பரிசுத்தப்படுத்தல்" என்பது வேதாகமப் பாஷையின்படி ஆட்களை அல்லது பொருட்களைச் சடங்கு முறையால் தேவனுக்கென்று பிரித்துவைத்து, மதிப்பதைக் குறிக்கிறது. தேவாலயமானது, தேவனை ஆராதிக்கவும், அவருக்கென்று பலிகளைச் செலுத்தவும் பிரித்துவைக்கப்பட்டு, பரிசுத்த ஸ்தலமாய் எண்ணப்பட்டது. தேவாலயப் பாத்திரங்கள் தேவாராதனை விசேஷமான வேலைகளிலே மாத்திரம் பிரயோகிக்கப்பட்டு "பரிசுத்தம்" என்று மதிக்கப்பட்டது. "பரிசுத்தப்படுவதாக"

என்று இந்த ஜெபத்தில் வரும் வாசகம், அதே கருத்தைக் கொடுக்கிறது. இந்த வாசகத்தால், தேவன் தமது இயல்பான பரிசுத்தத்தில் விருத்தியாகிறார் என்பதல்ல; தமது பரிசுத்தத்தால் மனுஷரை விட்டுப் பிரிந்திருக்கிற தேவன், அவ்வளவு மகத்துவமும், மேன்மையும் பொருந்தியவராயிருக்கிறார் என்கிற உணர்ச்சியுடன் எப்போதும் வணங்கப்படவேண்டும் என்பதைமாத்திரம் காட்டுகிறது.

1. பரிசுத்த ஆவி நமக்குள் வாசம்பண்ணுவதால், அவருடைய நாமம் பரிசுத்தப்படுத்தப்படுகிறது. பரிசுத்த ஆவியின் போதனையாலன்றி, நாம் தேவநாமத்தை முதலாய் அறியக்கூடாது. ஒருநாள் பரி. பேதுரு தேவனுடைய நாமத்தை இயேசுவில் கண்டபோது, இயேசு அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்றார் (மத். 16. 17.). அவர் விஷயத்தில் எப்படியோ நமது விஷயத்திலும் அப்படியே இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் விஷயங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமானால், "கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை,......... நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" என்று சொல்லவேண்டியது. பாஸ்கல் என்பவர் "இருதயத்திற்கு விளங்காத நியாயங்களும் இருதயத்திலிருக்கிறது" என்கிறார். ஆகையினால் இருதயமானது தன்னிலுள்ளதை அறிகிறபோது மனோதத்துவங்கள் குழம்பினாலும், அவர் கிறிஸ்துவைக் காட்டி அவரில் நிலைத்திருக்கும்படி ஏவுகிறார். இங்கு ஏவுதலானது இயேசுவுடன் அதிக உறவுக்குட்படுத்தி, அவருடைய சித்தத்தையும் சாயலையும் நம்மில் நிலைப்படுத்துகிறதால், துவக்கத்தில் கண்ணாடியிலே காண்கிறதுபோல விளங்கும் தேவசாயலானது, ஆவியாயிருக்கிற கர்த்தரால் மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமாகிற முடிவை நமக்குள் உண்டாக்குகிறது.

2. அவர்பேரிலுள்ள நம்பிக்கையால், அவருடைய நாமம் பரிசுத்தப்படவேண்டும். இது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொதுவான ஜெபமானாலும் தனித்தனி ஒவ்வொருவனும், தேவனில் நம்பிக்கைவைத்து இதை ஜெபிக்கவேண்டும். இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய நாமமாயிருக்கிறாரென்றும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமம், அவருக்கே உரியது என்றும், வானோர் பூதலத்தோர், பூமியின் கீழானோர் எல்லாரும், அந்த நாமத்துக்கே அடிபணிந்து தங்கள் ஸ்தோத்திரங்களைப் படைக்கிறார்களென்றும் எண்ணி, நம்முடைய ஜீவனும், பெலனும், நீதியும், மீட்பும், சம்பூரணமும் அந்த நாமத்திலேதானிருக்கிறதென்ற நம்பிக்கையோடும் ஜீவித்து ஜெபிக்கவேண்டும்.

3. நாம் ஜெபிக்கும் ஆவியில் அவருடைய நாமம் பரிசுத்தப்படவேண்டும். நாம் அடிமைத்தன ஆவியோடல்ல புத்திர சுவிகார ஆவியுடன் ஜெபித்தல் தேவநாமத்தைப் பரிசுத்தப்படுத்துகிறதாயிருக்கிறது. ஆப்பிரிகாவில் அவதிப்பட்ட ஒருவன், தன் அவதியை மாற்றி ஆறுதலைப் பெற்றுக்கொள்ளும்படி காட்டில் வசித்த ஒரு ரிஷியிடம் போக மற்றவர்களால் ஏவப்பட்டான். அவன் அப்படியே, அந்த ரிஷியின் ஸ்தானத்தைக் காட்டுவதாக வாக்களித்த ஒரு வழிகாட்டியுடன் புறப்பட்டு, வெகு தூரமான வனவெளிகளில் பசியோடும் தாகத்தோடும் பயணம்பண்ணி, களைத்து ஒரு மலைப்பண்டை வந்து, அதனுள்ளிருந்த ஒரு குகைக்குப் போகப் பிரயத்தனப்படவே, வழியில் அநேக செடிகளையும் முள்ளுகளையும் நீக்கிப் போனான். போகப்போக பாதை பின்னும் பயங்கரமும் அடர்ந்ததுமாய்க் காணப்பட்டது. அந்தப் பக்கங்களில் முழங்கும் புலியின் உறுமல்களும், எதிரில் கெர்ச்சிக்கும் சிங்க கும்மாளங்களும் அவன் காதில் தொனித்தது. அவற்றைக் கடந்துசெல்லவே சர்ப்பங்களின் சலசலப்பும் இரைதலும் கேட்டதோடு, தான் மரத்தின் ஒரு பெரிய வேர் என்று காலால் மிதித்து நின்ற வஸ்துவானது, புரண்டு, வலுசர்ப்பமாய் விளங்கித்தன்னை விழுங்கும்படி

தன் வாயை ஆவென்று விரிவாய்த் திறக்கிறதைக்கண்டு அலறி, மேலிருந்த பாறையில் குதித்து அதற்குத் தப்பி, சற்றுநேரம் இளைப்பாறி, அப்பால் தன் வழி காட்டி நின்றுபோகத் தான் ஒருவனே அந்த ரிஷி வசிக்கிறதாகச் சொல்லப்பட்ட கடைசிப் பள்ளத்தாக்குக்குள் இறங்கிச் செல்லவே வழியோரமெங்கும் நாகங்கள் படமெடுத்து வழி மறித்து நிற்பதைக்கண்டு கலங்கி, இனி என்ன அவதிப்பட்டும் வந்தவழியே திரும்பிவிடுவது தான் புத்தியென்று ஆலோசித்தானாம். அவன் நினைத்தபடி அந்த ரிஷியைக் காணவுமில்லை, தன் அவதியைச் சொல்லவுமில்லை. இதை ஒரு உபமானமாய் வைத்துக் கொள்ளலாம். சில கிறிஸ்தவர்கள் ஜெபத்தைப்பற்றி இப்படியே எண்ணுகிறார்கள். அநேக ஆத்துமாக்கள் பழைய யோபுவைப்போல, "நான் அவரை எங்கே கண்டு சந்திக்கலாமென்று அறிந்தால் நலமாயிருக்கும். அப்பொழுது நான் அவருடைய ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்ந்து, என் நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து, காரியத்தை ரூபிக்கும் வார்த்தைகளால் என் வாயை நிரப்புவேன்" என்று கவலை கொள்ளுகிறார்கள் (யோபு, 23. 3, 4.). அவர்கள் தேவனண்டை போகும் பாதையோ மகா நீளமும் பயங்கரமுமானதென் றெண்ணுகிறார்கள். இதை நினைத்து அவர்கள் மனச்சாட்சி சோர்ந்து, ஆவி களைத்து, பயங்கரங்களால் நிறைந்துவிடுகிறது. ஜெபம் செய்ய அவசியமும், ஆசையுமிருக்கிறது, அதைச் செய்வதோ மகா கஷ்டமாய் காணுகிறது; அதால் அவர்கள் ஜெபம் செய்வதை நிறுத்திவிடுவதுமுண்டு. இது கிறிஸ்துவை அறிந்தவனும், மறுபடியும் பிறந்தவனுமா செய்கிற செய்கையல்ல. சில தரம் தேவனுடைய நல்ல பிள்ளைகள் பயந்து ஜெபிக்கிறார்கள். இது பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறதாயிருக்கிறது; இது தேவ அன்பை ஊனப்படுத்தி, அவருடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறது. தேவன் அற்பத்தில் சினமடைவார், அவர் நமது தொல்லையைப் பொறுக்கமாட்டார், அவரைப் பிரியப்

படுத்துகிறவிதமாய் நடக்க நம்மால் முடியாது என்றெண்ணுவது, அவரை மனுஷ ஸ்திதிக்குத் தாழ்த்திவிடுகிறதாயிருக்கிறது. தேவனுக்கொத்த சரியான மனுஷன் இயேசுகிறிஸ்துதான். அவருக்கு நீ பயப்படுகிறாயா? "நீங்கள் திரும்பவும் பயப்படுவதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா, பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" என்று பரிசுத்த ஆவியால் எழுதப்பட்டிருக்கிறது (ரோ. 8. 15.). தேவனுடைய பிள்ளைகளுக்குப் பயம் இருக்கவேண்டியதுதான்; அந்த பயம் நம்மை கிறிஸ்துவைவிட்டுத் தூரத்துகிற பயமல்ல, அவரண்டைக்கு நமது இருதயத்தை உயர்த்திவிடுகிற பயமாயிருக்கவேண்டியது. இது உள்ளபடி பயம் என்றழைக்கப்படாமல் பக்திவிநயமான பாந்தத்துவம் என்றழைக்கப்படவேண்டியது.

4. நம்முடைய ஜீவியத்தில் அவர் நாமம் பரிசுத்தப்படவேண்டும். கிறிஸ்து நமக்குள்ளிருப்பதுதான் நம்முடைய கிறிஸ்துமார்க்கமாயிருக்கிறது. கிறிஸ்து உள்ளத்தில் நிலைத்திராத கிறிஸ்தவர்கள், பேருக்குமாத்திரம் கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். இவர்களால் தேவனுடைய நாமம் பரிசுத்தப்படாமல், தூஷிக்கப்படுகிறது. நமது ஜீவியத்தில் கிறிஸ்து இருப்பதால்மாத்திரம் தேவநாமம் பரிசுத்தமாகக்கூடும். "பிரியமானவர்களே, நாம் பரிசுத்த ஜீவனைப் பெற்றுக்கொண்டு மற்றதை தேவனிடத்தில் விட்டுவிடுவோமாக" என்று பிளெச்சர் என்னும் ஒரு பக்தன் சொல்லுகிறார். அவர் நமக்குள்ளிருந்தால், அந்த ரூபம் நமது நாடோடிய ஜீவியத்தால் உலகத்துக்கு வெளியாகும். கிறிஸ்துவின் ஜீவிய சாயலென்ன?—ஜீவியனுக்கு எப்போதும் ஒரு சாயலுண்டு. பரி. பவுல் "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகுமளவும், உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்" என்கிறார். இயேசு "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்" இருக்கிறார். இதேமாதிரி

ஜீவியம் நம்மிலும் விளங்கவேண்டும். நாம் பாவிகளுக்கு விலகினவர்களாய் ஜீவிப்பது, சந்நியாசிகளைப்போல இல்லறம் விட்டுத் துறவறம்பூண்டு வனங்களிலும், குகைகளிலும் வசிப்பதால் அல்ல, உப்பானது தான் விழும் மண்ணிலிருந்தும், ஒளியானது தான் பிரகாசிக்கும் இருளிலிருந்தும் பிரிந்திருப்பதுபோல, நாம் உலகத்தில் வசித்தும், உலகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவில் பிழைக்கிறவர்களாயிருக்கவேண்டும். மகிமைக்குட்பட்டிருக்கிற பரிசுத்தவான்களைப்பற்றி "அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளிலிருக்கும்" என்றெழுதப்பட்டிருக்கிறது (வெளி. 22. 4.). இதின் கருத்துப்படியே, யார்யார் மெய்யாய் கிறிஸ்தவர்களாயிருப்பார்களோ, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் சாயலையுடையவர்களாய் இவ்வுலகத்தில் விளங்குவார்கள் என்பதுதான் என் வியாபாரத்துக்கும், விதைப்புக்கும், படிப்புக்கும், கைத்தொழிலுக்கும் இப்படியிருந்து முடியுமா; என் அந்தஸ்துக்கும், அதிகாரத்துக்கும் இப்படி நடந்து முடியாதே என்று ஒருவரும் போக்குச்சொல்லக்கூடாது. எந்த ஊழியமும், எவ்வித செய்கையும் தேவ ஊழியமாயிருக்கிறது; ஆதலால் நமது எவ்வகையான லோக ஜீவியத்திலும் நாம் தேவ நாமத்தைப் பரிசுத்தப்படுத்தி வரவேண்டியவர்களாயிருக்கிறோம்.

5. நம்முடைய பேச்சில் பரிசுத்தப்படவேண்டும். எப்போதாவது, தேவநாமத்தை வீணாய் வழங்கும்போது, இது அப்படிச் செய்யக்கூடாதென்று நம்மை எச்சரிக்கிற மாதிரியாயிருக்கிறது. சிலதரம் நல்ல கிறிஸ்தவர்கள், தங்களுடைய மிதமிஞ்சின எரிச்சலில், தங்கள் மனதுக்குள் அடக்கமாயிருந்த ஒரு கெட்ட வார்த்தையைக் கக்கிவிட்டு மனஸ்தாபப்பட்டார்கள். பேதுருவின் மறுதலிப்பு அப்படியே இருந்தது. பூர்வ கிறிஸ்தவர்கள்

தங்கள் அஞ்ஞான உளையிலிருந்து விடுதலையாகியிருந்தாலும், பழைய சேறு அவர்களை ஒட்டிக்கொண்டிருந்ததால், முன்போல திடீரென்று தூஷணங்களையும், ஆணைகளையும் சொல்லிவந்தார்கள். வேத வசனம் அடங்கிப்போயிருந்த இருண்ட யுகங்களில், கிறிஸ்தவர்களுடைய பேச்சில் அநேக அசுசியும், பலவகையான ஆணைகளும் வழங்கிவந்ததால், போதகன்மார் அப்படிப்பட்ட கெட்ட வழக்கங்களை நிறுத்தும்படி "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பதின்மேல் அடிக்கடிப் பிரசங்கம் செய்துவந்தார்கள். கிறிசொஸ்தம் என்பவர் தமது சபையார் வீணாய் ஆணையிடுகிற வழக்கமுடையவர்களாயிருந்ததால், அதின்பேரில் இருபது பிரசங்கங்களை எழுதியிருக்கிறாரென்று பார்க்கிறோம். இக்காலத்திலும் இவ்விதக் குறையும் தமிழ் சபையாரிலிருக்கிறதல்லவா? நூதன கிறிஸ்தவர்கள் மாத்திரமல்ல மூன்று நாலு தலைமுறை கிறிஸ்தவர்களுங்கூட அடிக்கடி தூஷணங்களைப் பொழிகிறதையும், ஆணைகளைக் கொட்டுவதையும் காணலாம். இவைகளையெல்லாம் தடுக்கும்படி, நமது பேச்சில் தேவ நாமத்தைப் பரிசுத்தப்படுத்தும் பழக்கத்தைப் பண்ணிக்கொள்வது மெத்தவும் அவசரமாயிருக்கிறது.

இந்த வாசகத்தின்மேல் ஒரு பிரசங்கத்தை எழுதியிருக்கிற ஜெரிமி றேயிலர் என்னும் பிஷப், இதின் சம்பந்தமாக, சாதுரியமாய்ச் சொல்வதின் கருத்தாவது:— தேவனுடைய நாமமானது, மலைகளைப் பிளக்கவும், பர்வத அஸ்திபாரங்களைக் கிழிக்கவும் தக்க அவ்வளவு வல்லபமும் மகத்துவமுமாயிருக்கிறது; அது பிசாசுக்களைத் துரத்தி, நரகலோகத்தைக் குலுக்கி, மோட்சலோகத்தைச் சந்தோஷத்தால் நிரப்புகிறது; தேவநாமம் நமக்குப் பெலனும் உறுதியும், நமது வணக்கத்துக்காதாரமும், நம்பிக்கைக்கெல்லாம் அஸ்திபாரமுமாயிருக்கிறது; தேவன் தமது நாமத்தைக் கொடுத்தபோது, அதை ஏதேனின் சுடரொளி பட்டயத்தின் மத்தியில் கொடுத்தாற்

போல, பயங்கரத்தையும், மகத்துவத்தையும் வெளிப் படுத்துகிறவராய் ஆசாரியனுடைய கிரீடத்தின்மேல் கொடுத்தார். தமதுபோல் ஒரு சித்திர சொரூபமும் செய்யப்பட இடமிராதபடி "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்ற வாசகத்தைத் தீட்டிவைத்தார்.......தமது பேரை ஒரு நாவும் வசனமும் பிரயோகியாமல், கண் கண்டு மனம் கிரகித்துக்கொள்ளும்படிமாத்திரம் செய்தார். இன்னும் பேசவும் கிரகிக்கவும் கூடாத ஒரு மகிமையும் அதிலிருக் கிறது; அதாவது அந்த நாமத்தின் பொருளையெல்லாம் அடக்கி, இயேசுவில் அமைத்து, "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்று உரைத்தார். ஆகவே அவர் தேவனுடைய சுபாவத்தையும், அச்சையுமுடையவரா யிருக்கிறார்" என்கிறார்.

மேலும், "தேவனுடைய நாமத்தையடுத்த இந்த மகத்துவங்களெல்லாம் கூடி, அதால் ஆணையிடக்கூடா தென்றும், அந்த நாமம் நாம் ஜெபிப்பதற்கும், நம்புவதற் கும், சத்தியத்திற்குச் சாட்சி பகருவதற்கும், அவர் நமது இரகசியங்களை அறிகிறவரும், மோசத்தை வெளிப் படுத்துகிறவருமாயிருக்கிறார் என்பதை நாம் உணர் வதற்கும் கொடுக்கப்பட்டதேயன்றி வேறல்லவென்றும், பேச்சிலும், எண்ணத்திலும், பயமில்லாமலும், கருத்தில் லாமலும் கண்டபடிப்பேசி அந்தப் பரிசுத்தநாமத்தை அவசங்கை செய்யலாகாது" என்றும் சொல்லி எழுதி யிருக்கிறார்.

பேச்சிலும், ஆணையிடுவதிலும் நாம் தேவ நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவதுடன், ஜெபிக்கும்பொழுது கவன மற்று, வார்த்தைகளைச் சொல்லுவதையும் இது தடுக் கிறது. இப்படிப் பரிசுத்தக் குலைச்சல் செய்யும் வழக் கம் அநேக கிறிஸ்தவர்களிடமிருக்கிறது. ஜெபநேரத்

தில் தன் சிந்தையைச் சிதறவிட்டு, வார்த்தைகளை மாத்திரம் சொல்வது தேவாராமத்தைத் அவசங்கை செய்யும் பாவமாயிருக்கிறது. வேதாகமத்தையும், ஒய்வுநாளையும், கிருபையின் யத்தனங்களையும் அவசங்கையாகப் பேசிப் பழிப்பதும், மறுப்பதும் தேவ விசுவாசங்களை அற்பமாகத் தாழ்த்தி மதிப்பதும், அவருடைய நாமத்தைக் கனவீனப்படுத்துகிற செய்கைகளாயிருக்கின்றன. “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” என்று சொல்லும்போது இப்படிப்பட்ட பாவங்களுக்கு நாம் விலகிக் கொள்ளவேண்டுமென்ற உணர்ச்சியுடன் சொல்லவேண்டியது.

6. விக்கிரகம் கட்டோடு ஒழிந்துபோக முயற்சிப்பதில் தேவாராமத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும். தேவனை உண்மைப்படி அவனை தாம் மனம்வேண்டபடி ஏற்படுத்திக்கொள்ளும் சிலையே விக்கிரகமாம். பூர்வ காலத்திலிருந்த அநேக குடிகள் தங்கள் அரசரின் சிலைகளை வைத்துப் பூசித்துவந்தார்கள். அவர்களைப் பற்றிய பயமும் அச்சமும், இப்படிச் செய்ய அவர்களை ஏவிவிட்டது. வல்லேரியஸ் மக்சிமஸ் என்பவன் ஒரு பிரபந்தம் எழுதி அதைத் திபேரியு இராயன்பேருக்கு அரங்கேற்றினபோது, அதின் முகவுரையில் “மற்ற தேவர்கள் இருக்கிறார்களென்பது ஒரு எண்ணந்தான், ஆனால் தங்களின் தெய்வீகத்தை நாங்கள் முகதாவில் கண்டு உணர்ந்துகொள்ளுகிறோம்” என்றெழுதுகிறான். அந்தோனியஸ் தன்னை பாக்கஸ் என்னும் தேவபிதா என்கிறான்; கலிகுலாவென்பவன் யூப்பித்தனைப் பார்த்து “என்னைக் கொல்லும், அல்லாவிட்டால் நான் உம்மைக் கொல்லுவேன்” என்றான். தொமிஷான் இராயன், தன் கட்டளைகளெல்லாவற்றிலும் “உங்கள் ஆண்டவரும் தேவனுமான தொமிஷான்” என்ற வாசகத்தைப் பிரயோகித்துவந்தான். ஹெலியோகபலஸ் என்பவன் தன்னை

"சூரிய தேவன்" என்று விளம்பரம்பண்ணினான். இந்தியாவின் எத்திசைக்குப் போனாலும் விக்கிரக ஆலயங்களுக்கும் விக்கிரகங்களுக்கும் ஒரு கணக்கில்லை. "தேசம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறது." பம்பாய் இராஜதானியில் மாத்திரம் முப்பதாயிரம் விக்கிரகக் கோயிலுண்டென்று கணக்கெடுத்திருக்கிறார்கள். சென்னை இராஜதானியின் கணக்கு அதைக் கடந்துவிடும்; இதையெல்லாம் நாம் கவனிக்கும்போது, தேவனுடைய நாமம் எவ்வளவாய் பரிசுத்தக்குலைச்சலாகிறதென்பதை உணருகிறோமல்லவா? இவைமாத்திரமோ, கிறிஸ்தவர்களுடைய இருதயங்களில் இருக்கிற விக்கிரகங்களையும் நாம் கவனித்தால் அவை எவ்வளவு துயரக் காட்சியாய்த் தோன்றுகின்றன! நமது இருதயத்தின் பொருளாசை, கர்வம், மாய்மாலம், இச்சை முதலிய அக்கிரமமா யான பாவங்களுமென்ன? அவையனைத்தும் விக்கிரகங்கள்தானே. "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்ற வாசகத்தை நாம் சொல்லும்பொழுதெல்லாம், அஞ்ஞான விக்கிரகங்களும், கிறிஸ்தவர்களின் இருதய விக்கிரகங்களும் ஒழிந்துபோகவேண்டுமென்ற வாஞ்சையுடன் ஜெபிப்போமாக.

இம்மட்டும் சொன்ன போதனைகளின் குறிப்பை அடியில் ஒரு தொகுப்பாகக் காட்டுகிறோம்.

"உம்முடையநாமம்" என்பதில்,

1. சிருஷ்டிப்பால் தேவன் வெளிப்படுவதும்,

2. வெளிப்படுத்தலால் விளங்குவதும்,

3. மனுஷாவதாரத்தால் வெளியானதும் அடங்கியது.

"நாமம் பரிசுத்தப்படுவதாக" என்பதில்,

1. பரிசுத்தாவி நமக்குள் வாசம் பண்ணுவதாலும்;

2. தேவநாம நம்பிக்கையாலும்;

3. நாம் ஜெபிக்கும் ஆவியாலும்;

4. அவர் நாமத்தை நமது ஜீவியத்தால் விளக்குவதாலும்;

5. நமது பேச்சால் உறுதிப்படுத்துவதாலும்;

6. விக்கிரகங்கள் ஒழிந்துபோக முயற்சிப்பதாலும் அந்த நாமத்தைப் பரிசுத்தப்படுத்தவேண்டும்.

## 5. இரண்டாம் விண்ணப்பம்.

"உம்முடைய இராஜ்யம் வருவதாக."

(மத். 6. 10. லூக். 11. 2.)

மார்ட்டின் லுத்தர், இந்த வாசகத்தின்பேரில் 1518-ம் வருஷத்தில் எழுதிய ஒரு நூலில், பின்வரும் வினா விடையைக் காட்டுகிறார்.

தேவன் பிள்ளைகளைப்பார்த்து, பிள்ளைகளே! "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று சொல்லுகிறீர்களே; உங்கள் இருதயமும் நினைவும் பொல்லாப்புக்குச் சாய்கிறதாலும், நீங்கள் பாவத்துக்கு அடிமைப்பட்டிருக்கிறதாலும், என்னுடைய பாட்டை அந்நிய நாட்டில்

பாடக்கூடாததாலும், உங்களால் தேவமகிமையும் நாமமும் எப்படிப் பரிசுத்தமாக்கப்படக்கூடும்? என்று கேட்கும்போது;

பிள்ளைகள் சொல்லும் மறுமொழியாவது:—"அது மெய்தான் பிதாவே! எங்கள் நிர்ப்பந்த ஸ்திதியிலிருந்து எங்களைத் தூக்கிவிட்டருளும்; பாவம் ஒழிந்துபோகவும், நாங்கள் உமக்குப் பிரியமானபடி நடக்கவும், நீர் ஒருவரே எங்களுக்குள் ஆளுகைசெய்து, எங்கள் ஆத்துமா, சரீரத்தின் சத்துவங்களெல்லாம் உமக்கு அடங்கி நடக்கக் கிருபை செய்யும்" என்பதே.

இந்த வாசகமானது முதலாம் விண்ணப்பத்துக்கும், இரண்டாம் விண்ணப்பத்துக்குமிருக்கும் நெருங்கிய சம்பந்தத்தைக் காட்டுகிறது. இச்சம்பந்தமானது, ஒரு சங்கிலியிலுள்ள கண்ணிகள் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டிருக்கிறதுபோலாவது, முத்துக்கும் சிப்பிக்குமுள்ள பாந்தம்போலாவது இராமல், செழிப்பான ஒரு விருட்சத்தில் ஒரு கிளையிலிருந்து மறு கிளையுண்டாவதுபோல், நினைவிலிருந்து எழும்புகிற நினைவும் ஜெபத்திலிருந்தெழும்புகிற ஜெபமுமாயிருக்கிறது.

## I. இராஜ்யத்தைப்பற்றி.

"உம்முடைய இராஜ்யம்" என்னும் வாசகமானது: உம்முடைய ஆளுகை, அல்லது அரசாட்சி என்பதைக் குறிக்கிறது. நம்முடைய பாஷையில் இராஜ்யம் வேறே, இராஜரீகம் வேறே. விக்றோரியா ராணியாரின் இராஜ்யத்தையும், ஆளுகையையும் நாம் வித்தியாசப்படுத்தியே பேசுகிறோம். இங்கிலாந்து பிரபுக்கள் சபையில், "இராஸரியார், அயர்லாந்தின் ஒரு பாகத்தில் அரசாளாமல் நிலச்சுவான்கள் அரசாளுகிறார்கள்" என்ற வாசகம் வழங்கப்படுவதுண்டு. அதின்படி அந்த இராஜ்யம் இராணியாருடையதாயிருந்தாலும், அவருடைய ஆளுகை அவ்விடத்தில் இல்லை என்று விளங்கும். மூல பாஷையிலே இராஜ்யத்திற்கும், ஆளுகைக்கும் ஒரே வார்த்தை வழங்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் அது

ஆளுகையைக் குறிப்பித்து வழங்கப்படுகிறது. முதலாம் கருத்துப்படி உலகமுழுவதும் தேவனுடைய இராஜ்யமா யிருக்கிறது. என்றாலும் வேறு தேவர்கள் அதை ஆளு கிறார்கள். "பரலோக தேவனை விரோதிக்கும் அவபக் திக்கேதுவான ஒரு யுத்தம் பூலோக குடிகளால் ஆரம்பிக் கப்பட்டது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய ஆத்தும தத்துவங்களும், சத்துவங்களும் தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணிற்று. பூலோக மனுஷர் பரலோக தேவனை உதம்பும் தேவதுரோகம் உண்டா யிற்று. பாவ எண்ணங்கள் குரோதித்து "அவருடைய கட்டுகளை அவிழ்த்து, அவருடைய கயிறுகளை நம்மை விட்டு எறிந்துபோடுவோம்" என்றன. புத்தியானது சீர் கெட்டு "அவர் வருவாரென்று சொல்லப்பட்ட வாக்குத் தத்தம் எங்கே" என்றது. பிதாவானவர் குமாரனில் வெளிப்பட்டகாலத்தில், தன்னயமும் கர்வமும் ஒன் றாய்ச் சேர்ந்து, "இவர் எங்கள்மேல் அதிகாரம் செலுத்த நாங்கள் இடங்கொடுக்கமாட்டோம்" என்று சொன்னது.

இந்த உபதேசம் பலரால் பழித்துப் புறக்கணிக்கப் படுகிறது. அவர்கள்:—விழுதலைப்பற்றிய அந்த உபதேச மெல்லாம் பித்தலாட்டம்; "கடவுள் மனுஷனை எப்படி யுண்டாக்கினாரோ அப்படியே இன்னும் அவனிருக் கிறான், மாறுதலில்லை" என்கிறார்கள். ஆனால் நாடோடிய நடபடிகள் அவர்கள் கோட்பாட்டை விரோதிக்கின்றன. இடிந்துகிடக்கும் மடங்களைப்போலும், அழிந்துகிடக் கும் வீடுகளைப்போலும் அதைக் கட்டினவன் வைக்க வில்லை. இடிதலும் அழிதலும் பின்னாலுண்டாயிற்று. 'அப்படியே, ஆதியில் தேவன் மனுஷனைக் கலகமும், துரோக சிம்ஹாசனமுடையவனாக உண்டாக்கவில்லை. முன் பரமேறும் சக்தியுடையவனாய் படைக்கப்பட்ட வனை யாரோ கெடுத்து இப்பொழுதுபோலக் காலால் தரையில் நடமாடப் பண்ணிவிட்டானோ?—ஆம், வான நாட்டமுடையவனாகச் சிருஷ்டிக்கப்பட்டவனைப் பூமி நாட்டக்காரனாகச் சாத்தான் கெடுத்துவிட்டான். தேவன் ஆளுகை செய்யவேண்டிய இருதயத்தில் ஆணவமும்,

மாம்சமும், தன்னயமும், மரணமும் ஆளுகை செய்கின்றன. பிதாவின் அரசாட்சியோ, இன்னும் வரவேண்டிய ஒரு விஷயமாயிருக்கிறது. இதற்குப்பின்னால் வரும் போதனையில் நாம் "இராஜ்யம்" என்று வழங்கும் பதமானது இராஜரீகம் அல்லது, ஆளுகையைக் குறிக்கிறதாக வழங்கப்படுகிறதென்று அறிந்துகொள்ளவேண்டியது.

## II. இந்த இராஜ்யம் வரும் வழியைப்பற்றி.

1. இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தத்தின் மூலமாய் அது வரும். இந்தச் சத்தியம், தேவதுரோகம் முதலாவதுண்டான காலத்திலேயே, மந்தாரத்துக்குள் விளங்கும் சூரிய விம்பம்போல விளங்கினது. அப்போது சர்ப்பத்தைப் பார்த்து "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்று அறிவிக்கப்பட்டது. இந்த வாக்குத்தத்தமானது, பிந்தி வெளிப்பட்ட இரட்சண்ய புஷ்பங்களுக்கெல்லாம் மொக்குப்போலிருந்தது. காலம் செல்லச்செல்ல இந்த வாக்கு தெளிவிக்கப்பட்டது. தாவீதின் குமாரனான ஒருவர் "ஒரு சமுத்திரம் தொடங்கி மறு சமுத்திரம் வரையும், நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அரசாளுவார்; சகல இராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்ளுவார்கள்; சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள். அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானமிருக்கும்" என்று அறிவிக்கப்பட்டது (சங். 2. 8: 11. 7.). தாவீதின் குமாரனாகிய சாலொமோனிலும், அவன் மகனிலும் இந்த வாக்கு நிறைவேறவில்லை என்று, சில வருஷங்களுக்குப் பிற்பாடு வெளியரங்கமாயிற்று; என்றாலும் யூத ஜாதியாரின் அரசாட்சியும், ஏற்பாடும் குறைந்து, பலவீனப்பட்டுக் கொண்டுவந்த காலங்களிலும், வரப்போகிற இந்த இராஜாவையும் இராஜ்யத்தையும் குறித்து அநேக தீர்க்கதரி

சனங்கள் தொடர்ந்தேற்றியாய் சொல்லப்பட்டுவந்தன. அப்பால் சுமார் 400 வருஷங்களாக, அதைப்பற்றிய வாலாறு அவையடக்கமாயிருந்தாலும், கடைசியாக யோவான்ஸ்நானகன் என்னும் தீர்க்கதரிசி எழும்பி "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது," அதற்கென்று, ஆயத்தப்படுங்கள் என்று பிரஸ்தாபித்தார். அவர் அப்படிக் கட்டியங் கூறிக்கொண்டிருந்த காலத்திலேதான் அந்த இராஜன் வந்தார். அவர் வைதீக இராஜாவாக வெளிப்பட்டவுடனே, தமது இராஜ்யத்தின் தன்மையை ஒரு மலையின்மேல் நின்று பிரஸ்தாபித்தார்; அந்த விளம்பரத்தை நாம் மலைப்பிரசங்கம் என்று அழைக்கிறோம். "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்பதே அவ்வுடைய இராஜ்யபார விளம்பரத்தின் மொத்தப்பொருளாயிருக்கிறது. இந்த இராஜ்யத்தின் ஒரு பாகம் இவ்வுலகத்திலும், மற்றொருபாகம் வானத்திலுமிருக்கிறது; இவ்வுலக விஷயமாகச் சொன்னால் அந்த இராஜ்யம் சில இடத்தில் இப்போது இருக்கிறது; மற்ற இடங்களில் இன்னும் வரவேண்டியதாயிருக்கிறது. இப்பொழுது அவருடைய இராஜ்யத்துக் குட்பட்டிருக்கிற நாம், விசுவாசிகளானால், மரணத்தால் அவருடைய இராஜ்யத்தின் பூரணத்துக்குட்படுவோம்.

இயேசு மலைப்பிரசங்கத்தில், தமது இராஜ்யத்தின் தன்மையைப் பிரஸ்தாபித்து, அப்பால் அந்த "இராஜ்யம் வருவதாக" என்று ஜெபம் செய்துவரப் போதித்திருக்கிறார். அதே போதனையை நமது மனதில் காத்துக்கொண்டவர்களாய் நமது நாடோடிய ஜீவியத்தால் நாம் ஆவியில் எளிமையாயும், பாவத்துக்காகத் துயரப்படுகிறவர்களாயும், நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாயும், சாந்தகுணமுள்ளவர்களாயும், இருதய சுத்தமுள்ளவர்களாயும், சமாதானமுள்ளவர்களாயும் ஜீவிக்கவேண்டியது. இப்படி நமது ஜீவகாலமிருப்பது மெய்யானால், தேவன், கிறிஸ்துவின் மூலமாக மெய்யாய் நமக்குள் ஆளுகை செய்கிறார் என்பதை உலகமறிந்து, அவர்களும் அந்த ஆளுகைக்குட்பட விரும்புவார்கள்.

2. சிலுவையின் மூலமாய் வரும். சிலுவையின் மூலமாய் என்பது, சிலுவையில் நிறைவேறின பிராயச்சித்தப்பலியின் மூலமாய் என்பது கருத்தாகும். புதிதான கிருபையின் ஆளுகையை, கிறிஸ்துவுக்குள் பிதாவாகிய தேவன் அதின் மூலமாய்த்தான் ஸ்தாபித்திருக்கிறார். உன்னத அரமனையில் உறுதிபண்ணப்பட்ட சமாதான உடன்படிக்கையானது, "சிலுவையில் சிந்தின இரத்தத்தின் மூலமாகவே" கையொப்பமிடப்பட்டது. இந்த இரத்தத்தின் வல்லமையினால்தான் போர் முடிந்துவிடுகிறது. இதைப்பற்றி மனுஷரின் அபிப்பிராயங்களை நாம் தள்ளிவிட்டு, தேவனுடைய வார்த்தையைமாத்திரம் பிடித்து நடக்கிறோம். கிறிஸ்துவின் பரிசுத்த ஜீவியத்தாலும், பரோபகார மரணத்தாலும், தேவநீதி அமர்ந்து நாம் பாவமன்னிப்பையும் தேவனிடத்தில் சேரும் சலாக்கியத்தையும் பெற்றுக்கொள்ளுகிறோம் என்ற உணர்ச்சி நமக்குத் திருப்திகாமாய்விடுகிறது; அதுவின்றி கிறிஸ்துவின் சிலுவையை நோக்குவதால் நமது கலககுணம் மாறி, தேவனுடன் ஒப்புரவாகி ஜீவிக்கும் புதிய ஜீவன் எப்படியோ பிறக்கிறதென்பதை நாம் நமது ஆத்தும அநுபவத்தினால் அறிந்துகொள்ளுகிறோம். சிலுவையின் உபதேசம் எவ்வளவு நமது மனதில் நிலைவரப்படுகிறதோ, அவ்வளவுக்கு தேவனுடைய ஆளுகை நமது மனதில் ஊர்ஜிதப்படுகிறது.

இந்தச் சத்தியத்தை கிறிஸ்தவர்கள் அரைகுறையாய் மாத்திரம் விசுவாசித்து வருகிறார்கள். அவர்கள், கொன்ஸ்தந்தின் தரிசனையில் ஒரு சிலுவையைக் கண்டு, "இதினால் ஜெயங்கொள்" என்ற வாசகத்தையும் வாசித்ததுபோல், இந்தச் சத்தியத்தை மதித்து வருகிறார்கள். இதில்தான் பூரண ஜெயமிருக்கிறதென்று அவர்கள் நினையாமல், இதைப் பல கருவிகளில் ஒரு கருவியாக மாத்திரம் மதிக்கிறார்கள். கொன்ஸ்தந்தின் கிறிஸ்தவனானபோது, அநேக பிரபுக்களும் கிறிஸ்தவர்களாகி, அந்த மார்க்கத்தை இராஜமார்க்கமாக்கினாலும், கிறிஸ்துவின் ஆளுகை இன்னும் அவர்கள் மனதில் பூரணப்

படவில்லை; அதுபோல் இங்கிலாந்தில் சக்சோனிய பிரபுக்கள் கிறிஸ்தவர்களாகி ஞானஸ்நானம் பெற்றதை, அவர்கள் குடிகள் கண்டு, தாங்களும் ஞானஸ்நானம் பெற்றபோதிலும், அதினால் கிறிஸ்துவின் ஆளுகை இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்படவில்லை; ரோமை இராஜ்ய அஞ்ஞான ஆலயங்களும், திருவிழாக்கள், சடங்குகளும் கிறிஸ்துமார்க்கப் பேர்களால் மாறுதல் பெற்றதேயன்றி உள்ளபடி அஞ்ஞானங்கள் அழிந்து போகவே இல்லை. அதே தன்மை இக்காலத்திலுமிருக்கிறதைப் பார்க்கிறோம். புறமதங்களிலிருந்து, கிறிஸ்து மார்க்கத்தில் சேர்ந்திருக்கிற [illegible] பெயருக்கு மாத்திரம் கிறிஸ்தவர்களாயிருப்பதால், அவர்கள் இருதயங்களில் அவர் இன்னும் ஆளுகை செய்யவில்லை. கல்விவிருத்தி, வியாபாரமுயற்சி, சாஸ்திரவளர்ச்சி இவை முதலானது கிறிஸ்துவின் இராஜ்ய ஸ்தாபகத்துக்கு உபகரணங்களாயிருந்தாலும், இதினாலே ஆவிக்குரிய இராஜ்யபாரம் உண்டாகி விருத்தியாகுமென்றெண்ணுவது பிசகு. சிலதரம் கிறிஸ்தவ அரசர் பல யுத்தங்களில் ஜெயிப்பதும், அவபக்தரின் தேசங்களை ஆளுவதும் கிறிஸ்துவின் ஆளுகையை விஸ்தாரப்படுத்துவதாகப் பலர் எண்ணுகிறதுண்டு. வானசேனைகளின் அதிபதியானவர், இந்தப்பிரகாரமாய்த் தமது இராஜ்யபார யுத்தங்களை நடத்துகிறதில்லை. பரமபிதாவின் இராஜ்ய விஸ்தார உபகரணமோ சிலுவைதான். சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவின் பாடுகளாலும், மரணத்தாலும் உயிர்த்தெழுதலாலும் உலகம் தேவனை நேசித்தா, [illegible] அவர் தீர்மானித்திருக்கிறார்.

3. ஆவியானவருடைய வல்லமையால் வரும். மலைபோல் தங்கியிருக்கிற [illegible] கள்.. அது மெதுவாய் அசைந்து, அக்கம்பக்கத்திலுள்ள பள்ளங்கள், மேடுகள், மரங்கள், செடிகளை மூடி நம்மையும் கவிந்துகொள்ள வருகிறது. நாம் ஓடினாலும் அது வாராதிருக்குமோ?—போபோ வென்றாலும் போகுமோ?—

துப்பாக்கிகளால் சுட்டாலும் விலகுமோ, இல்லை. அது நம்மைக் கவிந்து தன் மெல்லிய திவலைகளால் நனைத்து, நம்மைக் கடந்து, தன் பாதையிலிருக்கிற பள்ளத்தாக்குகளையும், குடிசைகளையும், விருட்சங்களையும் கவிந்து கொள்ளுகிறது. பரிசுத்தஆவியும் அப்படியே.

இமயகிரியின்மேலுள்ள பனிக்கட்டிகளை வெட்டி உருட்டிவிடுகிறதும், அதை உருக்கி ஆறாக ஓடச்செய்கிறதும் யார்? இது மனுஷபிரயத்தனமல்லவே. ஆவியானவரின் கிரியைகளும் இப்படியே இருக்கின்றன. அவர் பாவமுள்ள மனமலையில் தங்கி, அதைக் குளிரப் பண்ணி, அதனிலிருந்து ஆவிக்குரிய பசுமையும், செழிப்பும், நீரூற்றும் உண்டாகும்படிச் செய்கிறார்.

ஒருநாள் பாபிலோன் இராஜா நித்திரை செய்கையில், தேவன் தீர்க்கதரிசன ஆவியாகிய முகிலை அவன்மேல் கவியச்செய்து, பலவித லோகங்களால் செய்யப்பட்ட ஒரு பெரிய சிலையானது, மனுஷனுடைய கைபடாது பேர்ந்துவந்த ஒரு சிறு கல்லால் உடைக்கப்பட்டு, பின்பு அந்தச் சிறிய கல்லே பருவதமாக வளர்ந்துவிட்டதாகச் சொப்பனங் காணச்செய்தார். இந்தச் சொப்பனத்தை தேவாவியால் நிரப்பப்பட்ட தானியேல் வியாக்கியானப் படுத்தினபோது, ஒன்றின்பின்னொன்றாக சில இராஜ்யங்கள் எழும்பி மறையும் என்றும், கடைசியாக "பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாதிருக்கும் ஒரு இராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த இராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பேர்க்கப்படாமல் மலையிலிருந்து பேர்ந்து உருண்டுவந்து, இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதையும் நீர் கண்டீரே; அப்படியே அது அந்த இராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி நிர்மூலமாக்கித் தானே என்றென்றைக்கும் நிற்கும்" என்றும் சொன்னார். (தானி. 2. அதி.)

தேவனுடைய இராஜ்யபாரமும் இப்படியே வரும்; அவர் மனிதனைப்போல் கைகளால் வேலைசெய்கிறவ

ரல்ல, அது ஆவியானவரின் பலத்தோடு வரும். கிறிஸ்தவர்களுடைய இருதயங்களில் ஆவியானவர் வாசம் பண்ணி, அவர்களுடைய நடக்கைகளால் கிறிஸ்துவின் இரட்சண்யம் விளங்க விளங்க, அது விருத்தியாகும். அது பயங்கரமான ஒரு இடியைப்போலும், பளிச்சென்று வீசும் மின்னலைப்போலும் வாராமல், தீமையை மெல்ல மெல்லக் குறைத்து, மரணத்தை ஜீவனால் விழுங்கிவிடும்.

## III. இந்த ஆளுகைக்காக எப்படி ஜெபிக்கலாம்?

1. அந்த ஆளுகை தன் இருதயத்தில் வரவேண்டுமென்று ஒவ்வொருவரும் ஜெபிக்கவேண்டும். நம்முடைய பேச்செல்லாம் புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்ற பிள்ளைகளுக்கேற்றதாயிருக்கவேண்டும். என் உள்ளத்தில் அந்த ஆளுகை வருகிற ஸ்திதியிலிருக்கிறதேயன்றி பூரணமாக வந்துவிடவில்லை என்று நாம் உணர்ந்துகொள்ளவேண்டியது. நம்முடைய ஜெபமானது, நமது பேச்சைவிட உத்தமமாயிருந்து, தினந்தோறும் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று அறிக்கையிட்டுக்கொண்டே வரவேண்டும். பாவமன்னிப்பு, இருதய சமாதானம், தேவபாதுகாப்பு, நமது கிரியைகளில் ஆசீர்வாதம் வேண்டுமென்று கேட்பதெல்லாம் இதற்குப் பிந்தினதாயிருக்கிறது. முதலாவது நமது இருதயத்தில் தேவனுடைய கிருபையுள்ள இராஜ்யம் வரும்படி ஜெபிப்பதுதான் சரியாயிருக்கும். நாமோ அடிக்கடி என் துன்பத்தை நீக்குமையா! என் நஷ்டத்தை மாற்றுமையா! என்று கெஞ்சுவதுண்டு; அதற்கு முந்தி தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றிக் கவனிப்பது நமது கடமை.

நாம் மோட்சத்தில் சேருமுன், நமது மனந்தானே மோட்சமாயிருக்கவேண்டும். நாம் பாவவியாதியின் தன்மையை அறியுமுன் புதிய ஜீவன் நமக்குள் ஆரம்பித்து வளரவேண்டும். நாம் தினந்தோறும், மகிமையின் இராஜா உட்பிரவேசிப்பதற்கு நமது மனதின் கதவு

களைத் திறக்கவேண்டும். நமது ஆத்துமபுரியில் அவர் வந்து வாசம்பண்ணும்படி தினந்தோறும் விரும்புகிறவர்களாய் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று ஜெபிக்கவேண்டும்.

2. அந்த ஆளுகை இந்த லோகத்தில் வரும்படி ஜெபிக்கவேண்டும். இவ்வுலகத்தில் நாம் பார்க்கும் பொல்லாப்புகளும் பாவங்களும், நாம் ஜெபம்பண்ணுவதில் பிரயோசனமில்லை என்று தடுக்கிறதாக இருக்கின்றன. இத்தனை வருஷமாக கிறிஸ்தவர்கள் கூடி "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று மன்றாடியும் என்ன பலனைக் கண்டோம்; இன்னும் பூமியின் மிச்சமான பாகம் இருளாலும் கொடுமைக் குடியிருப்பாலும் நிறைந்திருக்கிறதே என்போம். நமக்கு இன்னும் அதிகப் பொறுமை வேண்டியது; நாம் நமது ஜீவகாலத்துக்குட்பட்டவர்கள். தேவனோ நித்தியகாலத்தையுடையவர். நமது கண்ணுக்கு வராததுபோலிருக்கும்போதே அது வந்துகொண்டிருக்கலாம்; அதின் அசைவையும், சலனத்தையும் நாம் உணர்ந்துகொள்ளக்கூடாது. அது புளித்த மாவைப்போல எட்டிப் பார்க்கிறவர்களும், தொட்டுப் பார்க்கிறவர்களும் அறியாதபடி விருத்தியாகும் என்பது நிச்சயம். அதை நம்முடைய கண்கள் காணக்கூடாதே போனாலும், "உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் இராஜ்யபாரம் பண்ணுவார்" என்ற தீர்க்கதரிசனம் நிச்சயமாய் நிறைவேறும்.

மொத்தமாய்ச் சொன்னால் உம்முடைய இராஜ்யம் வருவதாக என்ற வாசகத்தைச் சொல்லும்போது பின்வரும் உணர்ச்சிகள் நமது மனதில் நிலைவரப்படவேண்டியதாயிருக்கிறது.

1. இராஜ்யம் என்பது ஆளுகையைக் குறிக்கிறது என்றும்,

2. இந்த இராஜ்யம் வரும் வழியானது:—

(1) இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தத்தின் மூலமாயும்,

(2) சிலுவையின் மூலமாயும்,

(3) ஆவியானவரின் வல்லமையாலும் என்றும்;

3. இந்த ஆளுகைக்காக ஜெபிக்கும்போது,

(1) அந்த ஆளுகை நமது இருதயத்தில் வர வேண்டும் என்றும்;

(2) இந்த லோகத்தில் வரவேண்டும் என்றும் நாம் ஜெபித்துவரவேண்டும்.

## 6. மூன்றும் விண்ணப்பம்.

"உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதுபோல, பூலோகத்திலேயும் செய்யப்படுவதாக."
(மத். 6. 10. லூக். 11. 2.)

இந்த வாசகமானது, இதற்கு முந்தின வாசகத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது தெளிவாக விளங்கும்.

I. இந்த விண்ணப்பத்தின் கருத்தேன்னவென்று பார்ப்போம்.

1. இந்த வாசகத்தை நாம் சொல்லும்போது, தேவனுடைய சித்தமானது, மனுஷனுடைய சித்தத்தின் மூலமாய் நிறைவேறவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். இதுதான் முக்கியமான கருத்து. இந்தக் கருத்தை உணராமல், சர்வவல்லவ தேவனைப்பார்த்து "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று ஜெபிப்பதில் என்ன லாபமுண்டாகும்? அவர் விஷயமாகச் சொன்னால், நாம் ஜெபித்தாலும், ஜெபிக்காவிட்டாலும், அவர் சித்தந்தான் நிறைவேறிவருகிறது. "அவருடைய சித்தத்தை எதிர்த்தவன் யார்?" எதிர்த்து என்ன செய்யக்கூடும்? "அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின்

சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து அவரை நோக்கி, என்ன செய்கிறீர் என்று சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை" (தானி. 4. 35.). கப்பேனியஸ் என்பவன், தீப்ஸ் பட்டணத்தைப் பிடிக்கும்படி கோட்டைமதிலின்மேல் ஏணியில் ஏறும்போது, "சேயு சித்தங்கொண்டாலும் சரி, சித்தங் கொள்ளாவிட்டாலுஞ் சரி, நான் இப்பட்டணத்தைப் பிடிக்கத்தான் செய்வேன்" என்று சொல்லி ஏறவே, இடிவிழுந்து செத்தான். நெப்போலியன் என்னும் சக்கரவர்த்தி "நான் மாஸ்கோ நகரத்தைப் பிடிக்கவே பிடிப்பேன்" என்றான். அப்போது ஒரு சேனாபதி "மனுஷன் ஆலோசிக்கிறான், ஆனால் தேவன் அல்லத் தட்டுகிறார்" என்னும் முதுமொழியைச் சொன்னான். அதற்கு அவன் "நானே ஆலோசிப்பேன், நானே அல்லத் தட்டுவேன்" என்று மறுமொழி கொடுத்தான். "வார்த்தைகள் காற்றும், நாவு களிமண்ணுமாயிருக்கிறது" என்றொரு பழமொழியுண்டு; நெப்போலியன் மாஸ்கோ யுத்தத்தில் அபஜெயமானதுமன்றி, அது முதல் அவன் வல்லமையும் குன்றிப்போயிற்று. மனுமக்கள் தங்கள் அளவுக்குமிஞ்சி கர்வவெறிகொள்ளும்போது, தங்களை ஆளுகிற மேலான ஒருவர் இல்லையென்று எண்ணிக் கெட்டுப்போகிறார்கள். நமது சித்தத்துக்குச் சரியாயிருந்தாலுஞ் சரி, தப்பாயிருந்தாலும் சரி, தேவசித்தம் நிறைவேறும் என்பது நிச்சயம்.

அப்படியானால் யுத்தங்கள் அவருடைய சித்தமா? அறிவீனம் அவருடைய சித்தமா? அநீதம் அவரது சித்தமா? இம்சைகள் அவர் சித்தமா?—பெரிய நகரங்களிலுள்ள அழுக்குகளாலும், ஜன நெருக்கத்தாலும் பல வியாதிகள் உண்டாகி, மனுஷர் மெலிந்து பலவீனப்பட்டு தாழ்ந்துபோவது அவருடைய சித்தமா? பாலியர் தூங்கவைக்கும் மருந்துகளாலும், பலப்படுத்தும் திராவகங்களாலும் மடிந்துபோவது அவரது சித்தமா? பாவம் அவருடைய சித்தமா?—தேவன் தாம் பிரியம்வைத்த ஜாதியாரைப் பார்த்து, "ஆ, என் கற்பனைகளைக் கவ

ணித்தாயானால் நலமாயிருக்கும், அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலவும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலுமிருக்கும்" என்று சொன்னபோது, அவருடைய சித்தம் எப்படி நிறைவேறும்? "எருசலேமே, எருசலேமே தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடுகள் பாழாக்கி விடப்படும்" என்றும் சொல்வது தேவசித்தமா? (மத். 23. 37, 38.)

நாம் தேவன் கட்டளையிடும் சித்தத்தையும், கீழ்ப்படுத்தும் சித்தத்தையும் எப்போதும் வித்தியாசப்படுத்திக் கொள்ளவேண்டியது. இந்த உலகத்தில் இப்போது தேவனுடைய ஆளுகை இன்னும் வரவில்லை. அவருடைய கட்டளை சித்தத்துக்கு விரோதமான அநேக காரியங்கள் இப்போது நடந்துவருகின்றன; இவைகள் அவருடைய கீழ்ப்படுத்துஞ் சித்தத்துக்குட்பட்டவைகளாய்" மாத்திரமிருக்கின்றன. இந்த வித்தியாசத்தை அறியாமல், தேவசித்தத்தைத் தடுக்கும் பிரயத்தனங்களையும் தேவசித்தம் என்று தப்பாய் எண்ணிவருகிறார்கள்.

நாம் தேவனுடைய ஆவியை நமது உள்ளத்திலும், அவருடைய வேதத்தை நமது கையிலும் வைத்து நடக்கும்போது அவருக்குக் கீழ்ப்படிந்து அவரது சித்தப்படி நடக்கிறவர்களாயிருக்கிறோம். சராசரமனைத்தும் தேவனுடைய சித்தப்படி ஆளப்பட்டு வருகின்றன. சமுத்திரத்தின் அலைகளையும், வானத்தின் நக்ஷத்திரங்களையும் அவர் தமது சித்தத்தின்படியே ஆண்டுநடத்துகிறார். தரையிலும், ஆகாயத்திலும், ஜலத்திலும் அவர் தமக்குச் சித்தமானபடி எல்லாவற்றையும் செய்கிறார். பட்சிகளும், புஷ்பங்களும், புழுக்களும் அவருடைய சித்தப்படி நடந்துவருகின்றன. ஆனால் ஒரு சித்தத்தோடு சிருஷ்

டிக்கப்பட்டிருக்கிற நாமோ, மற்றச் சிருஷ்டிகள் சித்தமில்லாமல் இயற்கைப் பிரமாணத்தின்படி நிறைவேற்றுவதை, நமது மனதோடு செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் மனசார நமது சித்தத்தை அவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய மகிமையைப் பிரஸ்தாபித்து, பரிசுத்த அலங்காரத்துடன் அவரைத் தொழுதுகொண்டுவரவேண்டியது. நாம் அடிமைகளைப்போல, நமது சித்தத்துக்கு விரோதமாக அவருக்குக் கீழ்ப்படியாமல், அன்புள்ள பிள்ளைகளைப்போல, நம்மில் அன்புகூரும் பிதாவை வணங்கிவரவேண்டும்.

"உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்ற விண்ணப்பமும், "உம்முடைய சித்தம்.........செய்யப்படுவதாக" என்று சொல்லும் விண்ணப்பமும் கருத்தில் ஒன்றுபோலிருக்கிறதாகவும், பிந்தினது முந்தினதின் விஸ்தரிப்புப்போலவும் தோன்றலாம்; என்றாலும் சற்று கூர்ந்து கவனித்தால் வித்தியாசத்தைக் காண்போம். "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்பதில் நமது கருத்து, பிதாவாகிய தேவனுடைய விஷயமாகிறது; உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக" என்பதில் அக்கருத்து நம்முடைய விஷயமாகத் திரும்பிவிடுகிறது; ஒன்றில் அவர் அரசாளவேண்டுமென்றும், மற்றதில் நாம் அந்த அரசாட்சிக்கு அடங்குவோமென்றும் காட்டுகிறது; ஒன்றில் நீர் எங்களுக்குக் கிருபையுள்ள இராஜாவாயிரும் என்று கேட்கிறதாகவும், மற்றதில் எங்களை உமது சித்தத்துக்கு இணங்கும் குடிகளாக்கும் என்று கேட்கிறதாகவும் இருக்கிறது. இந்த வாசகத்தால் எங்கள் பிதாவே உம்முடைய சித்தமானது, எங்களிலும், எங்கள்மூலமாயும், எங்களுக்காகவும், எங்கள்மேலும் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல செய்யப்படுவதாக என்று ஜெபிக்கிறோம்.

2. இது புதுப்பிக்கப்பட்ட சித்தத்தின் ஜெபமாயிருக்கிறது. தேவனுடைய சித்தப்படி நடத்தப்படவேண்டுமென்று நம்முடைய சித்தத்தோடு ஜெபிக்கிறோம். சில

கிறிஸ்தவர்கள், நாம் புதிய இருதயமுடையவர்களாகும் போது, நமது சித்தம் செத்துவிடுகிறது, நமக்குச் சொந்தமான சித்தமேயில்லை; நாம் தேவசித்தப்படி நடக்கிறோமென்று தப்பாக நினைக்கிறார்கள். இது சந்நியாசி மடத்துப் போதனையேயன்றி வேதாகமப் போதனையல்ல. பின்வரும் சரித்திரம் அதைத் திருஷ்டாந்தப்படுத்தும். பிரான்சிஸ்கர் என்னும் சந்நியாசி வகுப்பாருக்குள், தங்கள் சித்தம் முழுவதையும், தங்கள் சிரேஷ்டருக்குக் கையளித்துவிடவேண்டுமென்பது ஒரு நிபந்தனையாயிருந்தது. ஒருநாள், சந்நியாசிகளிலொருவன் தன்னிஷ்டப்படி நடக்கிறதாகத் தெரியவந்தது; அவன் சித்தத்தை அடக்குவது அவசியமென்று அம்மடாதிபதி கண்டு, மற்றவர்களைக் கூப்பிட்டு "ஒரு குழியை வெட்டுங்கள்" என்று உத்தரவு செய்தான். உடனே ஒருவனை நிலையில் நிறுத்திப் புதைக்கத்தக்க அளவாக ஆழமான ஒரு குழி வெட்டப்பட்டது. "இந்தத் தன்னிஷ்டக்காரனைக் குழியில் நிறுத்துங்கள்" என்று பிரான்சிஸ் உத்தரவு கொடுத்தான்; அப்படியே நிறுத்தினார்கள். அப்பால் அவன் முழங்கால்வரையும் மணலைத் தள்ளினார்கள்; மடாதிபதி நிறுத்துங்கள் என்று சொல்லி குழிக்குள் குனிந்து, "நீ இன்னும் சாகவில்லையா?" என்று கேட்டான், அவன் பதில் சொல்லாமல், மரம்போல நின்றான்; உடனே புதைத்துவிட உத்தரவு செய்தான். மண் இடுப்புக்கு வந்தது, கழுத்துக்கு வந்தது, உதட்டுக்கு வந்தது; பிரான்சிஸ் மறுபடியும் குனிந்து, "இப்போது செத்துப்போனாயா? இன்னும் சாகவில்லையா?" என்றான். அந்த தைரியநெஞ்சன் நாம் இப்போது தப்பிக்கொள்ளாவிட்டால் மரணமடைவான் என்று பயந்து, அச்சமும், இரக்கமுமில்லாமல் ஜொலித்த பிரான்சிசைப் பார்த்து "நான் செத்தேன், என் சித்தம் செத்தது" என்றான். உடனே அவனைக் குழியிலிருந்து தூக்கிவிட உத்தரவுபண்ணினான்.

இந்தமாதிரிச் சாவு, "நான் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்" என்று சொல்லிய மகத்துவ வாசகத்துக்கு இணையானதல்ல. மனுஷன் சித்த

மற்றிருந்தால், அவன் மனுஷனாகமாட்டான்; நாம் சித்தத்தில் செத்திருந்தால் தேவன் நம்முடைய தேவனாயிருக்கமாட்டார்; ஏனெனில் அவர் மரித்தோரின் தேவனாயிராமல் உயிருள்ளோரின் தேவனாயிருக்கிறார். நாம் ஆவிக்குரிய பிரகாரமாக விரும்புகிற சாவானது, நமது சித்தத்தின் சாவாயிராமல், "தான்"—"நான்" என்பதின் சாவாயிருக்கிறது. இயேசுவை நமது இருதயத்தின் இராஜாவாய் நாம் கிரீடம் சூட்டும்போது, தான் என்பது சாகிறது. புதுப்பிக்கப்பட்ட இருதயத்தின் சித்தமானது தேவனுடைய சித்தத்தை அங்கிகரித்து, அதற்கிசைவாக தன் சுயசித்தத்தை நடத்தி, ஊக்கத்துடன் அவர் சித்தத்துக்கு ஏற்றவைகளைச் செய்துவர வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் இந்த விண்ணப்பத்தைச் செய்யும்போது, நம்முடைய ஜீவியமானது, தேவசித்தத்தை விரோதியாமல் அதற்கேற்றவைகளையே செய்துவர விரும்புகிறதாக வெளியிடுகிறோம். இந்த விண்ணப்பத்தைப்பற்றி அகுஸ்தின் சொல்வதாவது:—"நாங்கள் நேரானதைக் கோணலானதுக்கு வளைக்காமல், அதாவது உமது சித்தத்தை எங்கள் சித்தத்துக்கு மடக்காமல், நாங்களும் மற்றவர்களும் கோணலானதை நேரானதற்கு, அதாவது எங்கள் சித்தத்தை உம்முடைய சித்தத்துக்கு நேராக மடக்கி உமது சித்தத்தின்படிச் செய்யக் கிருபை செய்யும்" என்கிறார். இயல்பாக நாம் இப்படி ஜெபம் செய்கிறதில்லை. நாம் தேவனையல்ல, முதலாவது நம்மையும் நமது சித்தத்தையுந்தான் ஸ்தாபிக்கிறோம். புதுப்பிக்கப்பட்ட இருதயமோ இதை மாற்றி, தன் சித்தமானது, தேவனுடைய சித்தத்துக்குள்ளேயும் அடங்கிக் கிரியைசெய்யும்படி மன்றாடுகிறது.

3. இந்த விண்ணப்பத்தில் "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்று ஊன்றிச் சொல்லுகிறோம். நாம் செய்யவேண்டிய ஜெபங்களுக்கு மாதிரியாகக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ஜெபத்தில், நாம் கேட்பதெல்லாம், "உம்முடைய சித்தத்தின்படி ஆவதாக" என்னும் அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டதா யிருக்கவேண்

டும் என்பதை இது உணர்த்துகிறது; அவருக்குச் சித்த மில்லையானால், எங்கள் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டாம் என்று நாமே ஒப்புக்கொள்ளுகிறோம். உம்முடையநாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய் சித்தம் செய்யப்படுவதாக" என்கிற மூன்று வாசகங்களும், நாம் இவ்வுலகத்தில் செய்யவேண்டிய மற்றெல்லா ஜெபங்களுக்கும் அஸ்திபாரம்போலிருக்கின்றன.

இந்தச் சத்தியம் அநேகருடைய மனதில் படாமல், நமது மனம்போல ஏதாவதொன்றை விரும்பிக்கொண்டு, அது கிடைக்கும்படி ஊக்கத்தோடும், விசுவாசத்தோடும் ஜெபித்தால் அது கிடைக்கும் என்று தப்பாக நினைக்கிறார்கள்; சிலர், நாம் விரும்புகிற காரியம் நிறைவேறும்படி ஜெபமானது நாம் பிரயோகிக்கவேண்டிய ஒரு சூத்திரம் என்கிறார்கள். இது பிசகு; ஜெபமானது இயற்கைப்பிரமாணத்தை யடுத்த ஒரு வல்லமையாயிராமல் கிருபையின் யத்தனங்களில் ஒன்றாயிருக்கிறது. அது ஒரு வைத்தியன் எழுதும் மருந்துச் சீட்டுப்போலவும் அல்லது கச்சேரிக்கு எழுதும் மனுப்போலவுமல்ல, அதின் வல்லமையெல்லாம், நம்மிடத்திலிருக்கும் ஆவியிலிருக்கிறது. தேவன் தமது பிள்ளைகளுக்குக் கொடுக்கும் நல்ல ஈவுகளைப் பெறுவதற்கு ஜெபம் கருவியாயிருந்தாலும், அவர் தமது பிள்ளைகளைப் படிப்பிக்கிற ஒரு போதனையின் போங்காயுமிருக்கிறது. அதின் மூலமாய் நம்முடைய ஆத்துமா அவருடன் ஐக்கியப்படுகிறது. நாம் கேட்கும் விஷயங்கள் தேவனுக்குச் சித்தமானால் கொடுக்கட்டும் என்ற எண்ணத்துடன் இருக்க வேண்டியது. அவருடைய சித்தத்தின்படி என்பதில், நம்முடைய கீழ்ப்படிதல், இருதயசுத்தம், நேசம் முதலிய எல்லா கிறிஸ்துமார்க்கக் குணங்களும் அடங்கியிருக்கின்றன.

இதினாலே, நாம் விரும்புகிறபடி விசுவாசத்துடன் கேட்டால் எதையும் பெற்றுக்கொள்ளுகிறோம் என்னும் பிசகான உபதேசத்தை நாம் கண்டிக்கிறவர்களாயிருக்

கிறோம். இப்படிப்பட்ட எண்ணந்தான் நாஸ்தீகத்தைப் பிறப்பிக்கிறது. இது விசுவாசத்தை வியர்த்தமாக்கி, ஜெபத்தின் வல்லமையையும் கெடுத்துவிடுகிறது. மனுஷனுடைய சித்தத்தின்படி கேட்கப்படும் எல்லா ஜெபங்களையும் தேவன் ஏற்றுக்கொள்ளுவாரென்று நினைக்கவே கூடாது. விதைத்தவன் மழை வேண்டுமென்றும், அறுத்துக் களமடிக்கிறவன் மழை வேண்டாமென்றும் ஜெபிப்பான். யுத்தத்தில் தன்பட்சம் ஜெயிக்கவும், எதிர்பட்சம் தோல்வியடையவும் ஜெபிப்பான். இப்படிப்பட்ட ஜெபங்கள், அவரவர் விரும்பியபடி கேட்கப்படமாட்டாது.

எந்தத் தகப்பனாவது தன்னுடைய பிரியமான மகனுடைய சித்தத்தின்படி செய்யச் சம்மதிப்பானா?—ஒரு தகப்பன் தீயையும் கத்தியையும் வைத்து விளையாட விரும்புகிற தன் குழந்தையின் சித்தத்துக்கு இணங்கி அவை இரண்டையும் கொடுப்பானா?—வச்சநாவியையும் பாலையும் சாப்பிடச் சித்தங்கொண்ட ஒரு மகனுடைய விருப்பத்துக்குத் தாய் இடங்கொடுப்பாளா?—பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டேன், புஷ்பச்செடிகளைப் பிடுங்குவேன், பழமரங்களை வெட்டுவேன் என்று சொல்லுகிற மகனுடைய சித்தத்தின்படி செய்யப் பிதா இணங்குவானா?—தேவன் நாம் விரும்புகிறபடி செய்ய வேண்டும் என்பதும், அப்படியே செய்துவருகிறார் என்பதும் முற்றும் பிசகாகமாத்திரமிராமல், நமக்கு நஷ்டமாகவுமிருக்கிறது.

4. தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறதுபோல பூலோகத்திலும் செய்யப்படவேண்டுமென்கிறோம்.

இதினாலே தேவசித்தம் நிறைவேறவேண்டிய அளவு இன்னதென்று அறிகிறோம். பரலோகத்தில் எந்த அளவாகச் செய்யப்பட்டுவருகிறதோ, அந்த அளவாக நாமும் அவருடைய சித்தம் நிறைவேறவேண்டியதற்குரிய கிரியைகளைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. தேவன் நமக்குக் கொடுக்கும் அளவும், காட்டும் மாதிரியும் எப்போதும் நமது வல்ல

மைக்கு மிஞ்சினதாகவே இருக்கிறது. நாம் விசுவாசிக்கும் பரலோகமானது, ஒரு நிலைமையாயிராமல் ஸ்தானமாயிருக்கிறது. அங்கே தேவன் தமது மகத்துவத்துடன் வீற்றிருக்கிறார். பாக்ஸ்டர் சொல்லுகிறபடி அங்குள்ள குடிகள், "அறிவோடும், ஜாக்கிரதையோடும், உத்தமத்தோடும், பூரணத்தோடும், தீவிரத்தோடும், பிரியத்தோடும், இளைப்பில்லாமலும், கட்சியில்லாமலுந் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வருகிறார்கள்" என்கிறார். ஆர்ச்சு பிஷப் அஷர் என்பவர், "அவர்கள் மனோற்சாகமாயும், உடனேயும் உத்தமமாயும், நிறைவாயும், ஓயாமலும் ஊழியம்செய்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றிவருகிறார்கள்" என்கிறார். நாம் செய்யும் ஜெபங்களும் இந்தக் கருத்துகளை அடக்கியதாகவே இருக்கவேண்டியது. இதற்கு மிஞ்சின ஆத்தும வளர்ச்சியுமில்லை, உத்தம ஜெபமுமில்லை என்று சொல்லவேண்டியது. இந்தக் கருத்தின்படி ஒவ்வொரு இராஜ்யத்திலும், தேசத்திலும், மாகாணத்திலும், ஊரிலும், குடும்பத்திலும், தனித்தனி ஆளிலும் தேவசித்தப்படி நடக்கும் குணமுண்டாகவேண்டுமென்று நாம் ஜெபிக்கிறோம். ஒவ்வொரு வீடும் தேவனுடைய ஆலயமாகவும், ஒவ்வொரு போசனமும் திருவிருந்தாகவும், ஒவ்வொரு ஸ்தானமும் பரிசுத்த ஸ்தலமாகவும், ஒவ்வொரு ஆளும் ஆசாரியனாகவும் இருக்க நாம் கேட்கிறதாக இருக்கிறது. உலகமுழுவதிலும், பிதாவானவர் குமாரன் மூலமாய் வெளியாக்கப்பட்டு, ஒவ்வொரு கையும் அவரைச் சேவித்து, ஒவ்வொரு கண்ணும் அவரைக் கண்டு, ஒவ்வொரு வாயும் அவரை ஸ்தோத்திரிக்கவேண்டுமென்ற தேவசித்தமானது, இந்தப் பூலோகத்தின் ஒரு முனை தொடங்கி மறுமுனை வரைக்கும், சமுத்திரம் தொடங்கி பூமியின் எல்லைவரையும் விளங்கவேண்டியது.

II. இந்த விண்ணப்பத்தின்படி நாம் தேவசித்தத்தை நிறைவேற்றவேண்டியது.

1. நமக்குக் கட்டளையிடப்படும் எல்லா விஷயங்களிலும் நாமே அந்தப்படி செய்யவேண்டியது. இந்த

விண்ணப்பமானது, நமது விருப்பத்தையும், ஆசையையும் வெளியிடுகிற ஒரு பெருமூச்சு அல்லது ஏங்கலாய் இராமல், நாம் தேவசித்தப்படி நடக்கவேண்டும் என்று உணர்த்தும் கட்டளையாயுமிருக்கிறது.

"செய்யப்படுவதாக" என்கிறோம். யார் செய்கிறது?—மற்றவர்கள் அல்ல—நாம்தான். உமது சித்தத்துக்கு அடங்கிவிடுகிறேன்—உமது சித்தப்படி சகித்துக்கொள்ளுகிறேன்—உமது சித்தமாகிய கடின நுகத்தைச் சுமக்கிறேன் என்பது கருத்தல்ல; அந்தச் சித்தம் செய்யப்படவேண்டும் என்பது கருத்தாகிறது. உமது சித்தத்தைப் பற்றி நினைப்பேன், அதைப்பற்றி மன்றாடுவேன் என்பதல்ல அதின்படி செய்வேன் என்பதைக் காட்டுகிறது. இதிலிருந்து நாம் நாள்தோறும், "ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்கும்படியான ஒரு ஏவுதலுண்டாகிறது. இயேசுவின் ஜீவியம் அவருடைய ஜெபத்திலும் வெளிப்படுகிறது. அவர் அநேக தலைமுறைகளுக்கு முன்னமே "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்யப் பிரியமாயிருக்கிறேன்" என்று அறிக்கையிட்டார். அவருடைய பெத்லகேம் ஜீவியத்திலும், அவருடைய மற்ற ஜீவியங்களிலும், கெத்செமனேப் போரிலும், கல்வாரிப் பயணத்திலும், பிதாவே உம்முடைய சித்தத்தின்படி செய்கிறேன் என்று அவர் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறார்.

இதுவே நம்முடைய மனதின் வாசகமாயுமிருப்பதாக, நாம் செய்யும்படி என்னென்ன கட்டளையிடப்படுமோ அதைச் செய்துவருவோமாக. நமது ஜீவியம் முழுவதும் கட்டளைக்குட்பட்ட ஜீவியமாயிருக்கிறது. தேவன் நமக்குப் பிதாவாயிருப்பதுபோல, இராஜாவாயுமிருக்கிறார். அவருக்குக் கீழ்ப்படிவது நமது கடமையாயிருக்கிறது. நாம் எதைச் செய்யவேண்டியதென்று கேட்கவேண்டிய பாகம் நமக்குண்டேயன்றி, ஏன் அதைச் செய்யவேண்டுமென்ற பாகம் நமக்கில்லை. அப்படி நாம் முகாந்தரத்தைக் கேட்க முயலும்போது

“நான் செய்கிறது இன்னதென்று நீ இப்பொழுது அறியாய், இனிமேல் அறிவாய்” என்ற உத்தரவு தேவனிடத்திலிருந்து பிறக்கிறது. அந்தியோக்கஸ் என்பவனுடைய மகன் ஒருநாள் தன் தகப்பனைப் பார்த்து “அப்பா யுத்தம் எப்போது ஆரம்பிக்கும்” என்று கேட்டான். அதற்குத் தகப்பன் “மகனே, இத்தனை சேனைகளில் நீ ஒருவன் மாத்திரம், யுத்த எக்காளச் சத்தத்தைக் கேளாமற் போவேன் என்று பயப்படுகிருயோ?” என்று சொன்னான். நாம் நமது சேனாபதி கட்டளையிடுமுன் ஒன்றைச் செய்யவும் கூடாது, கட்டளையிட்டபின் அதைச் செய்யத் தாமதப்படவும் கூடாது.

ஒருதடவை ஒரு யுத்தக்கப்பல் ஆப்பிரிக்காவின் கரையிலிருக்கையில் ஒரு பாறையில் மோதிற்று. அது உடைந்துபோனதை மாலுமி அறிந்து அறிவித்தான். உடனே இரணபேரிகை முழங்கினது, எல்லாச் சேவகரும் அணிவகுத்து நின்ருர்கள். கரையிலிருந்து சகாயத்துக்கு வந்த படவுகளில் ஸ்திரீகளும், பிள்ளைகளும் ஏறி தப்பிக்கொள்ள வகை செய்யப்பட்டது. இதற்குள்ளாகக் கப்பல் அமிழத் துவக்கிற்று. அணிவகுத்து நின்ற சேனை யுத்தத்தில் வீரத்துவம் காட்டுவதுபோல் அசையாது நின்று, வெற்றிவெடி தீருவதுபோலத் தங்கள் சாவுவெடியை முழக்கி நின்ற நிலையிலே ஆழ்ந்தார்கள். பரம இராஜாவின் சேவகரும் இப்படியே அவருடைய சித்தத்தின்படி செய்வதில் மரணபரியந்தம் உண்மையாய் இருக்கவேண்டியது. பிதா தமது வேதத்தில் எதைக் கட்டளையிட்டிருக்கிருரோ அதின்படி செய்வோமாக. மரித்தாலும் பிழைத்தாலும், அவருடைய சித்தப்படி செய்வதே நமது கடமையாயிருக்கிறது. அகுஸ்தின் என்பவர் “நாங்கள் செய்யவேண்டியதை இன்னதென்று சொல்லி, அதின்பின் உம்முடைய சித்தத்தின்படி நிறைவேற்றக் கட்டளையிடும்” என்கிருர். இதுவே நம்முடைய விருப்பமாயு மிருக்கவேண்டியது.

2. சோதனைகளுக்கு அடங்குவதிலும் அவருடைய சித்தத்தின்படி செய்யவேண்டும்.

பாவத்தாலுண்டாகிற பலவித துக்கங்களை: பரமபிதாவானவர் தமது பிள்ளைகளைத் திருத்தவும், தடுக்கவும், படிப்பிக்கவுமான கருவிகளாகப் பிரயோகித்துவருகிறார். அந்தஸ்தும் அன்புமுள்ள ஒரு குடும்பத்துடைய ஜீவியம் மாறிவிடுகிறது; அநேக வருஷங்களாக அன்போடு ஆதரித்துவந்த தாய் வியாதிப்பட்டு மரித்து மண்ணுக்குள் இறங்கிவிடுகிறாள். அந்த வீட்டுப் பிள்ளைகளின் சந்தோஷங்களெல்லாம் அழிந்துவிடுகிறது.

அல்லது முயற்சியுள்ள பிரயத்தனத்தால் வாழ்வடைந்த ஒருவன் வயசாகி, யாதொரு வேலையும் செய்ய இயலாமலும், வரும்படிக்கு வழியில்லாமலும், அன்றாடகப் போசனத்துக்காக அவதிப்படுகிறான்; அல்லது மரணப் படுக்கையிலிருக்கும் தகப்பனை அவனுடைய ஒரேமகன் பார்த்து: அவன் கண்கள் குழிவிழுவதையும், மேல் மூச்செடுத்து அவன் சாவுநிலைமையிலிருப்பதையும் விழிப்போடு பார்க்கிறான்; இன்னொருவன் காசநோயால் அதிககாலம் இளைத்துக் களைத்து, மெலிந்துபோகிறான்; இப்படி அவதிப்படுகிறவர்கள், "பிதாவே உம்முடைய சித்தத்தின்படி ஆவதாக" என்று சொல்வது வருத்தம்; சரீரம் நோவினால் அவஸ்தைப்படும்போது அப்படிச் சொல்ல உதடு எழும்பாது; அதுவன்றி ஆத்தும தத்துவங்கள் பலமும் ஊக்கமும் அனதுமாயிருக்கிறசமையத்தில் சரீரம் நோயிலிருந்தாலும், இப்படிச் சொல்ல இலேசில் மனம்வராது. உயிட்லி என்னும் ஆர்ச் பிஷப் ஒருதடவை வியாதிப்படுக்கையிலிருந்தார்; அவருடைய மனமோ ஊக்கமும், உறுதியுமாயிருந்தது. ஆத்தும தத்துவங்களில் பூரணமாயிருந்த இவருக்குச் சரீரநோய் அதிகச் சங்கடமாயிருந்தது. தமது மனத்திடனுக் கேற்ற கிரியைகளைச் செய்ய சரீர பலவீனமும் தடையுமாயிருக்கிறதே என்று அவர் அதிகக் கவலைப்பட்டார். ஒரு நாள் அவருடைய சொந்தச் சாப்பிளன் குரு வந்தபோது அவரைப்பார்த்து "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்ற வாக்கியத்தின்பேரில் நீர் எப்போதாவது பிரசங்கம் செய்திருக்கிறீரா? என்று கேட்டார். ஆம்

என்றூர். எப்படிப் பிரசங்கித்தீர்? என்று விவரங் கேட்டார். விபரித்துச் சொன்னூர். அப்போதவர் கம்மின குரலோடு "ஆமாம், ஆனால் சில சமையங்களில் அப்படிச் சொல்வது மகா பிரயாசையாயிருக்கிறது" என்று மறுமொழி கொடுத்தார். தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் கடந்துபோகவேண்டிய கெத்செமனேயுமுண்டு, குடிக்கவேண்டிய கசப்பான பானமுமுண்டு, செய்யவேண்டிய வியாகுல விண்ணப்பங்களுமுண்டு. இப்படிப்பட்ட வியாகுலத்தாலும், பாடுகளாலும் நம்முடைய பாவங்களுக்கு யாதொரு பிராயச்சித்தமுண்டாகாதேபோனாலும், இதுவே நாம் மறுமைக்குச் செல்லும் பாதையாயிருக்கிறது. இப்படிப்பட்ட துன்பமும் சோதனையுமான வேளையில் நாம் "பிதாவே, என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று சொல்லுவதுடன், "இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடாதானால்" என்ற வாசகத்தையும் மறந்துவிடக்கூடாது. இந்த விண்ணப்பத்தோடு, நாம் நமக்கு நேரிடும் உபத்திரவங்களைக் கடந்துபோகும்போது, தேற்றுகிறவருடைய துணையினால், நமது துக்கங்களை ஆற்றுவதற்கேற்ற அநேக வாக்குத்தத்தங்களின் வாழ்வு நமக்குக் கிடைக்கும். இந்த வாக்குத்தத்தங்கள் நம்மை உற்சாகப்படுத்துவதால், நமக்குத் துன்பங்களும் உபத்திரவங்களும் நேரிடும்போதெல்லாம், "பிதாவே உமது சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று ஜெபிக்க ஏவப்படுகிறோம். கிறிஸ்தவர்கள் சிரசாக்கினையடைந்த காலத்தில், ஒரு கொலைகாரன், காமரின் என்பவளைக் கூப்பிட்டு, கூடைக்குள்ளிருந்த ஒரு சாமானைக் காட்டி "காமரினே," "இதென்ன தெரியுமா?" என்று கேட்டான். அந்தக் கூடைக்குள் ஒரு நல்ல வாலிபனுடைய வெட்டப்பட்ட தலை இருந்தது. "தெரியும்—தெரியும் என் மகன் தலை—என் நேசமகனின் தலைதான்; தேவ சித்தம் நலமானது. கர்த்தர் இதைச் செய்தார்; அவர் எனக்கும் என் மகனுக்கும் தீமை செய்யவேமாட்டார்; எங்களுடைய ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிரு

பையும் எங்களைத் தொடரும்படிச் செய்வார்" என்று
சொன்னார். நாம் தேவசித்தத்தின்படியே நடக்கும்போது
நன்மையும் கிருபையும் நம்மைச் சூழும் என்பதற்குச்
சந்தேகமில்லை. அவர் நமக்குத் தீமை செய்கிற தகப்ப
னல்ல; தீமை செய்ய அவருக்குத் தெரியாது என்று
சொல்லலாம். ஒரு சமுசாரி தன் வீட்டுத்தோட்டத்தில்
ஒரு காற்றாடிச் சூட்சத்தை நட்டு அதின் சிறகுகளில்
"தேவன் அன்பாயிருக்கிறார்" என்ற வாசகத்தை எழுதி
வைத்தான். அதை வாசித்த ஒருவன், இந்தக் காற்றாடி
அசைந்து மாறுவதுபோல, தேவஅன்பு இருக்கிறதென்று
உணர்த்தவா இப்படி எழுதிவைத்தாய் என்று கேட்
டான். அதற்கவன்: "அல்ல—அல்ல; தென்றலடித்தா
லும், வாடையடித்தாலும், சூறாவளி அல்லது எவ்வித
காற்றடித்தாலும், "தேவன் அன்பாயிருக்கிறார்" என்
பதை உணர்த்த அப்படி வரைந்து வைத்தேன்" என்று
மறுமொழி கொடுத்தான். அது மெய்தான். நமது
தேவன் எப்போதும் "அன்பாகவே இருக்கிறார்." சில
நாட்களுக்குப்பின் இந்தச் சமுசாரியின் மனைவி மரித்
துப்போனாள். இதுவும் தேவனுடைய அன்பா? என்று
ஒருவன் கேட்டபோது, ஆம் என் காற்றாடி வாசகத்
தின்படி இதுவும் தேவனுடைய அன்புதான்; "தேவன்
அன்பாகவே யிருக்கிறார்" என்றான். இப்படியே நாம்
நமக்கு நேரிடுகிற எல்லா விஷயங்களிலும் "பிதாவே
உம்து சித்தத்தின்படி ஆவதாக" என்று சொல்வோமாக.

3. அவருடைய நடத்துதலுக்கு நம்மைச் சமர்ப்பிப்
பதிலும், அவருடைய சித்தத்தின்படிச் செய்யவேண்
டும்: நமது ஆத்துமாவின் யாத்திரையானது, இம்மட்
டும் நாம் அறியாத புதிய பாதைகளில் நடக்கவேண்டிய
தாய் நேரிடுகிறது. அதன் முன்னிருக்கும் வழியும்
அதின் தன்மையும் இரகசியமானதாயிருக்கிறது. தேவ
மகிமைகள் அவைகளை மறைத்துவிடுகின்றன. நமது
பிரயாணத்துக்கு வேண்டியவைகள் என்னவோ, எவ்வ
ளவுகாலப் பிரயாணமோ? — எங்கெங்கே அபாயங்க
ளுண்டோ? — எவ்வளவு தூரமோ — மோட்சவாசலை

நாம் எப்போ சேர்வோமோ வென்பதை அறிந்து வெளிப்படுத்தின தீர்க்கதரிசிகள் ஒருவருமில்லை. தேவசித்தம் தான் நம்மை வழிநடத்த வேண்டியதாயிருக்கிறது. மறுமைக்குரிய எல்லா விஷயங்களிலும் நாம் அவரைத் தான் நம்பவேண்டியதாயிருக்கிறது. சிலவேளை நாம் தேவனுடைய பிற்கால சித்தத்தை முந்தியே கணித்து அதற்கேற்றபடி காரியங்களை ஒழுங்குபடுத்துகிறோம். யோசேப்பு இப்படியே செய்தான். யோசேப்பு தன் மக்கள் இருவரையும் கொண்டுவந்து "எப்பிராயீமை தன் வலதுகையினாலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும், மனாசேயைத் தன் இடதுகையினாலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும் விட்டான். அப்பொழுது இஸ்ரவேல் மனமறிய தன் வலதுகையை நீட்டி இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே மூத்தவனாயிருந்தும், தன் இடதுகையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்தான்" (ஆதி. 48. 13, 14.). யோசேப்பு நினைத்ததும் ஒழுங்குப்படுத்தினதும் வேறே, தேவன் நினைத்ததும் நடத்தினதும் வேறே. அதைத் தடுத்தும், யோசேப்பால் யாக்கோபின் கைகளை மாற்றக் கூடாமற்போயிற்று. இக்காலத்திலும் அப்படித் தான். நடத்துகிறவரை நடத்த நம்மால் முடியாது; அவரே நடத்தட்டும். அவர் நன்றாய் நடத்துவார், அவரைப் பின்செல்லுவதுதான் நமது கடமை. சிலதரம் நாமே நமது பிற்கால வாழ்வுக்குரிய ஒழுங்குகளைத் திட்டம்செய்து, அதில் அநுகூலம்பெற்று ஜீவிக்கையில் பலத்த இடறல்களும் துன்பங்களும் நம்மைச் சந்திக்கின்றன; உடனே நமது அபயம் பரலோகத்தை முட்டுகிறது; இந்த அவஸ்தை, நாம் நமக்கென்று தெரிந்து கொண்ட பாதையில் சம்பவித்திருக்கின்றனவென்று உணருகிறோம். சிலதரம் தேவன் நமது ஜெபங்களைக் கேளாமலிருப்பது நமக்கு நன்மையாய் முடிவதால் நாம் நமது ஸ்தோத்திரங்களை எழுப்பி, என் விருப்பத்தின் படிச் செய்யாததற்காக உம்மை ஸ்துதிக்கிறோம் என்று சொல்லவும் ஏவப்படுகிறதுண்டு.

மோனிக்காள் என்பவள் தன் மகன் அகுஸ்தின் தன் குற்றத்தை உணரவும், அவன் ஆப்பிரிக்காவிலிருந்து இத்தாலி தேசத்துக்குப் போகாதிருக்கவும் ஜெபித்தாள். கடைசியாக அவன் இத்தாலிக்குப் போனான் என்ற செய்தி வந்தபோது, தன் விண்ணப்பம் கேட்கப்படவில்லையே என்று அவள் துக்கப்பட்டாள். அப்படியிருந்தும் அவன் மில்லான் நகரத்திலிருக்கையில், அம்புரோஸ் பிஷப்பின் அரிய சாதுரிய பிரசங்கத்தைக் கேட்டு, சாதுரியத்தில் விருத்தியாக நோக்கமாய் ஒரு நாள் அவருடைய ஆலயத்துக்குப் போனபோது, அன்று அம்புரோஸ் செய்த பிரசங்கத்தால் குணப்பட்டு, புதிய ஜீவியமார்க்கத்தில் நடக்கத் தொடங்கினார். இந்த வரலாறு விஷயமாக அகுஸ்தின் தாமே சொல்வதாவது:—"கர்த்தாவே நீர் நல்லவரும், ஆலோசனையில் ஆழமுள்ளவருமாயிருக்கிறீர். தேவரீர் என் தாயின் விண்ணப்பத்தின்படி நீர் செய்யாதேபோனாலும் அவள் விரும்பிய விருப்பம் என்னில் நிறைவேறும்படிச் செய்தீர்" என்பதே. தேவசித்தப்படியுள்ள நடத்துதலுக்கு நாம் நம்மை ஒப்புவிப்பது காலத்தின்படியும், இடத்தின்படியும் மாத்திரமல்ல, சுகத்திலும், துக்கத்திலும், ஜீவனிலும், சாவிலும், "பிதாவே உமது சித்தத்தின்படி ஆகக்கடவது" என்ற பிரமாணத்தை அநுசரித்து வருகிறதினாலேதான், அவருடைய சித்தத்தின்படி நிறைவேற்றுகிறவர்களாவோம்.

4. அவருடைய இராஜ்யம் பிரபலமாக நாம் செய்யும் முயற்சிகளிலும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டியது.

இதுவிஷயமாக உனக்குள்ள ஆஸ்தியில் ஒரு பாகத்தைக் கொடுக்கவேண்டுமென்பது தேவசித்தமாயிருக்கலாம். அல்லது நீயே போய் அந்த வேலையைச் செய்ய, அல்லது உன் மக்களில், ஒருவனை அல்லது சிலரை

ஒப்புவிக்கச் சித்தங்கொண்டிருக்கலாம். இந்தவகையான சித்தத்தை நீ நிறைவேற்றவேண்டும். இப்படி நிறைவேற்றுகையில், அவற்றை தேவனுக்கு மனோராசியாய் ஒப்படைக்கிறதுபோல் அல்ல, அதை உன்னுடைய கடமைபோல் செய்யவேண்டும். அது உன் மனதில் ஒரு பாடுபோல் தோன்றாமல், நீ செய்யவேண்டிய வழக்கமான செய்கையாயிருக்கவேண்டும். நீ தேவனுக்குச் செலுத்தும் ஜீவபலியானது உண்மையுள்ளதும், மனப்பூர்வமானதுமா யிருக்கவேண்டும். ஆகையால் சகோதரனே இந்தவிஷயத்தில் நீ தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவாயாக.

கடைசியாக இந்த விண்ணப்பத்தால் நாம் தியானிக்கும் போதனைகளின் பொருளடக்கத்தைக் காட்டி இதை முடிக்கிறோம்.

I. இந்த விண்ணப்பத்தின் கருத்து.

1. தேவசித்தமானது, மனுஷசித்தத்தால் நிறைவேற வேண்டியது.

2. இது புதுப்பிக்கப்பட்ட இருதயத்தின் ஜெபமாயிருக்கிறது.

3. "உம்முடைய சித்தம்" என்று, தேவசித்தத்தை ஊன்றிச் சொல்லுகிறோம்.

4. தேவசித்தம் பரலோகத்தில் நிறைவேறுவதுபோல் இங்கும் நிறைவேறக் கேட்கிறோம்.

II. இந்த விண்ணப்பத்தின்படி நாம் தேவசித்தத்தை நிறைவேற்றவேண்டியது.

1. நமக்குக் கட்டளையிடப்படும் விஷயங்களிலும்,

2. நமக்கு வரும் சோதனை துன்பங்களுக்கு அடங்குவதிலும்,

3. அவருடைய நடத்துதலுக்கு நம்மை ஒப்புவிப்பதிலும்,

4. அவருடைய இராஜ்ய பரிபாலன முயற்சிகளிலும் நாம் தேவசித்தத்தை நிறைவேற்றவேண்டும்.

## 7. நாலாம் விண்ணப்பம்.

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்." (மத். 6. 11.)

"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்." (லூக். 11. 3.)

"அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்." (ஜெப. புஸ்.)

இம்மட்டும் நாம் தியானித்த விண்ணப்ப வாசகங்களின்படி நமது இருதயம் திருத்தப்பட்டு, நம்முடைய ஜீவியமானது "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே,

உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக, உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று நாம் செய்யும் விண்ணப்பத்தாக்கு இசைந்திருக்கும்போது—இந்தப் பரிசுத்த எல்லைக்குள் நமது ஆசைகளனைத்தும் நின்று ஆளப்படவேண்டியதென்று உணரும்போது, நம்முடைய காரியமாக, முதலாவது "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று கேட்கிறோம்.

இந்த வாசகத்தின் கருத்தை நாம் பூரணமாய் அறியும்படி இதிலுள்ள வாசகங்களையும், வார்த்தைகளையும் தனித்தனி ஆராய்வோமாக.

I. "அன்றன்றுள்ள அப்பம்" என்னும் வாசகத்தைக் கவனிப்போம்.

"அன்றன்றுள்ள" இந்த அர்த்தத்தைக் கொடுக்கும் மூலபாஷைப் பதமானது, வைதீக நூல்களிலாவது, லௌகீக பிரபந்தங்களிலாவது வழங்கப்படவே இல்லை. ஆகவே, பரி. மத்தேயும், லூக்காவும், இயேசு பேசின அராமிக் வார்த்தையிலிருந்து, இதைப் புதுப்பதமாய் கட்டியிருக்கிறதாக எண்ணப்படுகிறது. இப்பதமானது முப்பதுவிதமாகத் தாற்பரியப்படுத்தப்பட்டிருக்கிறது. இலக்கண வித்துவான்கள், இதின் மூலப்பதத்தை "வருகிற நாளுக்குரிய எங்கள் அப்பத்தை" என்று அர்த்தப்படுத்துகிறார்கள். எப்படியும் இது பலமும், நலமுமான உண்வைக் குறிக்கிறதுடன், அதால் சரீரத்துக்குண்டாகும் சத்துவையும் குறிக்கிறது என்பது ஒரு அபிப்பிராயம்.

"அப்பத்தை" இது தெளிவான ஒருபதம்; ஆனாலும் அநேக கருத்தை அடக்கும் விசேஷபதமா யிருக்கிறது. அநேக காரியங்கள் இதிலடங்கியிருக்கிறது. நாம் இதின் தாழ்ந்த கருத்திலிருந்து உயர்ந்த கருத்துக்கு படிப்படியாக ஏறுவோமாக.

1. "அப்பம்" என்பது நமது சரீரத்தைப் பிழைப்பூட்டும் போசனத்தைக் குறிக்கிறது. இது தானியத்தாலுண்டாகும் போசனத்தை மாத்திரமல்ல, வேறெந்தவகையான உணவையும் பொதுவில் உணர்த்துகிறது. இது பழவர்க்கப்போசனமானாலும் சரி-வேட்டை இறைச்சிப் போசனமானாலும் சரி—தானிய போசனமானாலும் சரி—உத்தியோகத்தால் வரும் பணப் போசனமானாலும் சரி—எல்லாவற்றையும் பொதுவில் அடக்கிக்கொள்ளுகிறது.

சிலர் இது ஆத்துமாவுக்குரிய ஞானபோசனத்தை மாத்திரம் குறிக்கிறதென்று வியாக்கியானப்படுத்துகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவினால் படிப்பிக்கப்பட்ட இந்த ஜெபத்தில், சரீர சம்ரட்சணைக்கடுத்த இந்தத் தாழ்ந்த விஷயத்தை அவர் சேர்க்கவேமாட்டார் என்கிறார்கள்; இந்த அற்ப விஷயத்தையிட்டு தேவனைத் தொந்தரவு செய்வது புத்தியீனமாயும் வெட்கமாயுமிருக்கிறது என்கிறார்கள். பூர்வ வியாக்கியானிகள் இது ஆவிக்குரிய போசனத்தைத்தான் குறிக்கிறதென்று வியாக்கியானப்படுத்தினார்கள். லுத்தரும் கூட அப்படியே சொல்லுகிறார். இதுமாத்திரம் இதின் கருத்தாயிருக்கமாட்டாது. தேவன் மனுஷனிலுள்ள ஆவியைமாத்திரம் கவனித்து, சரீரத்தைக் கவனிக்கமாட்டாரென்று நினைப்பது சுத்த பிசகாயிருக்கும். நம்முடைய ஆத்தும தத்துவங்களானவை சரீர தத்துவங்களை ஆண்டு அழித்துவிடவேண்டுமென்கிற சந்நியாசிகளின் போதனையானது, பூரணமான சுத்தபோதனையல்ல. ஏனென்றால் ஜீவியத்தில் சரீர உணவு அசட்டை பண்ணப்படவில்லை; விதைப்பு, அறுப்பு, மாரி, கோடைமுதலிய பருவகாலங்களின் ஏற்பாடுகள் சரீர வாழ்வை யடுத்ததாயிருக்கின்றன. சரீரத்தை உண்டாக்கினவர், அதைப் போஷித்து வளர்க்க வெட்கப்படமாட்டார். நம்முடைய சரீர உறுப்புகளை எடுத்துக்கொண்டு சுமார் 33 வருஷம் சஞ்சரித்தவரும், பசித்தவர்களுக்கு அற்புதம் செய்து அமுதளித்தவரும், அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்துப் பங்கிட்டவரும், சரீரமானது பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது

என்று வெளிப்படுத்தினவரும், செத்த சரீரத்தையும் உயிரோடெழுப்பச் சித்தங்கொண் டிருக்கிறவருமான வர் அதைப் போஷிக்கவும், அதின் புசிப்புக்கேற்ற போசனத்துக்காக தேவனைக் கேட்க எவரும் வெட்கப் படுகிறதில்லை. ஆதலால் நமது சரீரத்துக்கு வேண்டிய உணவு விஷயமாக நாம் இந்த வாசகத்தைச் சொல்ல லாம்.

2. "அப்பம்" என்பது, இந்த உலகத்திலுள்ள நமது எல்லாவித ஜீவ பாதுகாப்புக்கடுத்த போசனத்தையும் குறிக்கிறது. சரீர ஜீவனைப்பார்க்கிலும் வேறு அநேக ஜீவன் நமக்கு வேண்டியதாயிருக்கிறது. நம்முடைய ஜீவனானது, மண்ணிலிருந்தும் விண்ணிலிருந்தும், தூளி லிருந்தும் தேவ சுவாசத்திலிருந்து முண்டான சேர்க்கை வஸ்துவாயிருக்கிறது. இதிலும் அது விசேஷித்திருக் கிறது. ஏனெனில் நமது ஜீவனானது நாம் வைக்கப் பட்டிருக்கிற நிலைமைக்கேற்றதா யிருக்கவேண்டியது. அநேக ஜீவன்கள் நம்முடைய ஜீவனைச் சார்ந்திருக்கிற தால், அந்த ஜீவன்களுக்கெல்லாம் போதுமான போஜ னம் நமக்குக் கிடைக்கவேண்டுமென்றும் உணர்த்து கிறது, ஒரு அரசனுக்கு அன்றாடகம் வேண்டிய போஜ னம் என்பது, கூலிக்காரனுக்குப் போதுமான கால்படி அரிசி என்பது அர்த்தமாகுமா? அன்றன்றுள்ள அப்பம் என்பது அவரவர் குடும்பம், அந்தஸ்து, தொழில்சாலை, பண்ணையாள் முதலிய எல்லா நிலைமைக்கும் அடுத்த தான, அவரவருடைய செலவுக்குப் போதுமான, அன் றன்றுள்ள போசனம் என்பதைக் குறிக்கிறது.

3. அன்றன்றுள்ள "அப்பம்" என்பது, நமக்குப் போதுமானமட்டும் வேண்டும் என்பதைக் குறிக்கிறது. "அப்பம்" என்பது வழக்கமான உணவைப் பொதுவில் குறிப்பிக்கிறது. இன்று எங்களுக்கு ஒரு விருந்து தாரும் என்று கேட்கும்படி நாம் போதிக்கப்படவில்லை. நமது நிலைமைக்கும் அவசரத்துக்குமேற்ற அளவான உணவு நமக்குக் கிடைக்கவேண்டுமென்றுமாத்திரம் நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். "என் படியை எனக்கு

அளந்து போஷியும்" என்று ஆகூர் எதிர் பார்த்தபடி மாத்திரம் நாமும் எதிர்பார்க்கவேண்டியது. நாம் சுகமும் பெலனும், சந்தோஷமுமாய் ஜீவிக்க எவ்வளவு போஜனம் வேண்டியதோ அவ்வளவு குறைவின்றிக் கிடைக்க ஜெபிக்கலாம்.

தேவன் நம்மை வைத்திருக்கிற நிலைமைக்கு மிஞ்சின உணவை விரும்பிக் கலகம் செய்தால், அல்லது நமது பெருமைக்கும், டம்பத்துக்கும், இச்சைக்குமேற்ற வேறு போஜனங்களையும், அதிக உணவையும் நாம் நாடினால், நாம் மோசமான ஸ்திதியிலிருக்கிறோம். அப்போது நமது ஜெபங்கள் திருப்தியில்லாமல் கத்தும் பிள்ளைகளின் சத்தமாக மதிக்கப்படும்; அந்த ஜெபம் கேட்கப்பட்டாலும், அத்தால் ஆசீர்வாதம் பிறக்காமல், அந்த உணவனைத்தும் நஷ்டமாக மாறலாம். இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பயணம்பண்ணினபோது, தேவன் அவர்களை நாடோறும் போஷித்தாலும், அது போதாதென்று அவர்கள் மொறுமொறுத்தார்கள். "மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாய் வருஷிக்கப்பண்ணி வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்; தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்புவித்தார்." அவர்களோ இதைத்தவிர வேறே போசனம் வேண்டுமென்று விரும்பி அலட்டுப்பண்ணினார்கள். தேவன் அவர்கள் தலைவனை நோக்கி, "நாளைக்காக உங்களைப் பரிசுத்தம் பண்ணுங்கள், நீங்கள் இறைச்சி சாப்பிடுவீர்கள்; எங்களுக்கு இறைச்சி சாப்பிடக்கொடுப்பது யார் என்றும், எகிப்திலே எங்களுக்கு சௌக்கியமாயிருந்ததென்றும் கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே ஆகையால் நீங்கள் சாப்பிடும்படி கர்த்தர் உங்களுக்கு இறைச்சி கொடுப்பார், நீங்கள் ஒரு நாள், இரண்டுநாள், ஐந்துநாள், பத்துநாள், இருபது நாள் மாத்திரமல்ல ஒரு மாசமுழுவதும் புசிப்பீர்கள்" என்று சொல்லச் சொன்னார். இதின் முடிவென்ன? தேவன் சொன்னபடி காடைகள் திரளாக வந்து அவர்

கள் கூடாரத்தைச் சுற்றின; அவரவர் தங்களிஷ்டம் போல பிடித்து, ஆக்கித் தின்றார்கள்; ஆனால் அத்தோடு இப்படி மொறுமொறுத்ததினிமித்தம் வாதையுண்டாகி அநேகர் மரித்தார்கள். அவர்களை அடக்கம் செய்த ஸ்தானம் இச்சையின் பிரேதக்குழி என்னப்பட்டது (எண். 11. 33, 34.). இந்த வரலாற்றை எடுத்துக்கூறும் பவுல் அப்போஸ்தலன் "இவைகளெல்லாம் திருஷ்டாந்தரங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும் படிக்கு எழுதப்பட்டுமிருக்கிறது" என்கிறார். (1 கொரி. 10. 11.)

II. "எங்களுக்குத் தாரும்" என்ற வாசகத்தைக் கவனிப்போம்.

1. இந்த வாசகம் தேவன்மேலுள்ள நம்முடைய சாருதலை உணர்த்துகிறது. இது, பிதாவே, அன்றன்று நீர் படியளக்காவிட்டால், எங்களுக்கு ஒன்றுங் கிடையாது, நாங்கள் பட்டினிதான் என்று அறிக்கையிடுகிறதுபோலாகிறது. "அன்றன்றுள்ள அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்" என்ற விண்ணப்பமானது, கையில் செலவுக்கு ஒரு காசும், பானையில் ஒருபிடி தானியமுமில்லாதவன் வாயிலிருந்து வரவேண்டிய விண்ணப்பமாயிருக்கிறது; களஞ்சியம் நிறைய தானியம் வைத்துக்கொண்டிருக்கிறவனுக்கும், கப்பல் வர்த்தகனுக்கும், நிலச்சுவானுக்கும் இது ஏற்றதாயிருக்குமா? தாவீது காட்டில் பசியும் பட்டினியுமாயிருக்கையில் இப்படிக் கேட்க ஏவப்பட்டாலும், சகல மகிமையும் பொருந்திய அவன் மகன் சாலொமோன் இப்படி ஜெபிக்க வாய் வருமா? யோபு தன் மக்கள் வீட்டில் வரிசையாக விருந்துண்டு மனங்களித்தகாலத்திலும், யோசேப்பு தன் களஞ்சியங்களைத் திறந்து தானியமூட்டைகளின்மேல் குதித்து விளையாடுகிறபோதும் இந்த விண்ணப்பம் அவசியமா? என்று சிலர் எண்ணலாம். ஆம், எல்லாருக்கும், எல்லாக்காலத்திற்கும் இது ஏற்ற பொதுவான விண்ணப்பமாகவே இருக்கிறது. நாம்

எல்லாரும் ஒன்றுபோல அவருடைய பண்டசாலையி லிருந்துதான் தினம் தினம் போஷிக்கப்படுகிறோம் என்றுணரவேண்டியது. கப்பற்காரனைத் தாழ்ந்த ஒரு புசல் போதும், களஞ்சியத்தை அழிக்க ஒரு தீப்பொறி போதும், விளைவைத் தொலைக்க ஒரு வெள்ளம் போதும்; இராஜாங்கத்தை மாற்ற ஒரு யுத்தம் போதும்; ஒரே நாளில் அரசன் ஆண்டியாகலாம், ஞானி பைத்தியக்காரனாக லாம், சமுசாரி கூலியாளாகலாம். ஆதலால் இந்த விண் ணப்பம் என்னை யடுத்ததல்லவென்று ஒருவரும் சொல் லக்கூடாது. நாம் என்னென்ன நிலைமையிலிருந்தாலும் அன்றன்று தேவனால் போஷிக்கப்பட்டு அவரில் சார்ந்து ஜீவிக்கவேண்டுமென்ற சத்தியத்தை மறக்கவே கூடாது.

2. இந்தவாசகம் கொடுப்பதில் தேவன் பிரியப்படுகிற வர் என்பதை நமக்கு உணர்த்துகிறது. தேவன் நமக் குக் கொடுக்கிறார் என்பதை நாம் நினைக்கும்போது, அவர் வேண்டாவெறுப்பாக, நாம் செய்யும் தொல்லை பொறுக்கமாட்டாமல், கொடுக்கிறவராக நினைத்தால் அது பாவமாயிருப்பதுடன் நமக்கு நஷ்டமாயு மிருக்கும். தேவனை அவருடைய கொடையினால் நாம் அறிகிற அளவு மற்றவைகளால் அறிகிறதில்லை என்னலாம். இயற்கைப் பிரமாணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் கவர்ச்சி, மழை, காற்று, வெளிச்சம், புஷ்பவாசனை, கனிகளின் ருசி இவையெல்லாம் அவருடைய தயாள மான ஈவுகளல்லவா? நம்மைப் பிழைப்பூட்ட மாத்திர மல்ல நாம் சந்தோஷமுள்ளவர்களாகவும் தேவன் அநேக வஸ்துக்களைக் கொடுத்திருக்கிறார்.

3. இந்த வாசகம் நீர் எங்கள் பிதா என்பதை உணர்த் துகிறது. தாம் பிதாவாயிராத எண்ணிறந்த சிருஷ்டிகளை அவர் போஷித்துவருகிறது நமக்குத் தெரிந்திருக்கிறது. அவைகளில் ஒன்றும் அவருடைய ஆவியைப் பெற்ற வைகளல்ல. அவர் அவைகளுக்கு ஆகாரம் கொடுக் கிறார் அல்லவா! எங்கள் ஆகாரத்தையும் தாரும் என்று கேட்கிறோம். தேவன் இயற்கைப் பிரமாணத்தின்படி அந்தந்த ஜீவனுள்ள சிருஷ்டி தன் தன் ஆகாரத்தைச்

சம்பாதித்துக்கொண்டு, திருப்தியடைந்து பாடவும் கும்மாளம்போடவும் ஏற்பாடு செய்திருக்கிறார். மற்றெல்லா ஜீவன்களைவிட அடைக்கலான், தேவ பராமரிப்பை நமக்குத் தெளிவாகப் போதிக்கத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது. நமது வீடுகளெங்கும் தாராளமாய்ப் பறந்து திரிந்து, கூரைகளில் வாசம்பண்ணும் அடைக்கலானைக்கொண்டு இயேசு தமது பிள்ளைகளுக்குச் சொன்ன போதனையை அறிவோமே. "அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் மேலானவர்களல்லவா?" என்கிறார். லீலிப் புஷ்பங்களை அலங்காரமாக உடுத்துகிறவரும், அடைக்கலான்களை அநுதினம் போஷிக்கிறவருமான பிதா நமது பசியைப்பற்றிக் கவலையற்றிருப்பாரா? பொல்லாதவர்களாகிய நாம் நமது பிள்ளைகளைப்பற்றி எவ்வளவு கவலைப்படுகிறோம்; பரமபிதா நமக்காகக் கவலைப்படாமலிருப்பாரா? "எங்கள் அப்பத்தை எங்களுக்குத் தாரும்" என்று நாம் ஜெபிக்கும்போது, பிள்ளை தகப்பனிடத்தில் கேட்பதுபோலக் கேட்கிறோம்.

4. "அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று சொல்லும்போது, நாங்கள் செய்யும் நியாயமான பிரயத்தனங்களை ஆசீர்வதித்து அதின் மூலமாய் எங்களைப் போஷியும் என்று கேட்கிறோம். ஒரு சாயரட்சை முகம்மது தன்னுடைய சீஷர் பலருடன் ஞானவிஷயமான சம்பாஷணை செய்துகொண்டிருக்கையில், அவர்களிலொருவன் "நான் என் ஒட்டகத்தைக் கட்டவிழ்த்து விட்டுப்போட்டு நம்புவேன்" என்றானாம்; அப்போது முகம்மது "சிநேகிதனே, அதைக் கட்டிப் போட்டு நம்பு" என்றானாம். நாம் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்து நம்பி ஜீவிக்கவேண்டும். செய்து நம்பியிரு, விழித்து ஜெபித்திரு. "ஒருவன் வேலை செய்யாவிட்டால் அவன் சாப்பிடவும் கூடாது" என்பது தேவனுடைய இராஜ்யத்தின் பிரமாணங்களில் ஒன்றாயிருக்கிறது. மனுஷன் தான் செய்யவேண்டிய அளவு செய்து முடித்தால், மற்றதை தேவன் பார்த்துக்

கொள்ளுவார். நான் சும்மாயிருப்பேன், எல்லாவற்றையும் தேவன்தான் நடத்தி முடிக்கவேண்டியது என்கிறவன், தேவ பராமரிப்பைத் தூஷிக்கிறவனாயிருக்கிறான். வழக்கமான ஜீவியத்தின்படி இந்த விண்ணப்பத்தை மாற்றினால் "பிதாவே அன்றன்று எங்களுக்கு வேலை தந்து, அதைச் செய்ய பெலனை அருளும்" என்று கேட்கிறோம். நாம் செய்யும் வேலையும் அதின் மூலமாக வருகிற வருமானமும் தேவ ஈவாகவே இருக்கிறது. சூதாட்டத்தின் லாபமும், அநீதமான வரவும், அடுத்தாரைக் கெடுத்து வாழ்வதும், பாவத்துக் கனுகூலமான வியாபார வரும்படியுமான இவைபோலொத்த பிரயத்தனமும், அதினாலுண்டாகும் லாபங்களும் தேவ ஆசீர்வாதமுள்ளவைகளல்ல. மேலும் இந்த விண்ணப்பத்தால், அன்றன்று போசனத்தை நாங்கள் சம்பாதிக்கத் துணை செய்யும், சரீர அவயவங்களாகிய கைகள், விரல்கள், கண்கள், கால்களும், அறிவும் புத்தி விவேகம் ஞாபகம் முதலிய தத்துவங்களும் பழுதுபடாமல் உம்மால் காத்து நடத்தப்படவேண்டுமென்றும் கேட்கிறோம். ஏனெனில் இவைகளில் ஒன்று அல்லது பலது நஷ்டப்பட்டால், நமது அன்றன்றுள்ள அப்பத்துக்கு நஷ்டம் நேரிடலாம்.

5. இந்த வாசகமானது, "பிதாவே, வழக்கமான எங்கள் பிரயத்தனங்கள் வாய்க்காத சமையத்தில் நீரே எங்கள் அப்பத்துக்கு ஒரு வழியைக் கட்டளையிடவேண்டும்" என்று உணர்த்துகிறது. தேவன் சர்வ வல்லமையுள்ள பிதாவாயிருக்கிறார். நம்முடைய முயற்சிகளால் வாய்க்காத விஷயங்களை அவர் லேசாக முடிக்கக்கூடும். "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" என்று வேதம் அறிவிக்கிறது. நம்முடைய முயற்சிகளால் ஒரு காசுக்கும் வழியற்று, நாம் உதவிக்குக் கெஞ்சும் ஆட்களில் ஒருவரும் இல்லையென்று கையை விரித்து, தட்டின கதவெல்லாம் திறக்கப்படாமல், கர்த்தாவே, உமக்கே காத்திருக்கிறோம் என்றிருக்கும்போது "நீங்கள் நின்றுகொண்டு, கர்த்தருடைய இரட்சிப்பைப்

பாருங்கள்" என்ற சப்தமுண்டாகிறது. நாம் சாகப் போகிற கடைசி நிமிஷத்தில் அவர் தூக்கி ஆதரிக்கிறார்.

நாத்தான்வேல் லாரென்ஸ் என்னும் குரு கி. பி. 1662–ல் தமது வேலையிலிருந்து அநியாயமாய்த் தள்ளப் பட்டார். ஒருநாள் தன் குடும்பத்துக்கு ஆகாரத்துக்கு வழியில்லாமல், பசியோடு ஒரு வேலியோரத்தில் உட் கார்ந்து கவலைப்படும்போது, பக்கத்திலிருந்த ஒரு பள் ளத்தில் ஒரு பொன் நாணயம் கிடக்கிறதைக் கண்டு எடுத்து, எங்களைப் போஷிக்கும்படி வானத்திலிருந்து இது விழுந்தது என்று சொல்லி, மகிழ்ந்து பரமபிதாவை ஸ்துதித்தார்.

ஆலிவர் ஏவுட் என்னும் குருவும் தமது உத்தியோ கத்திலிருந்து அகற்றப்பட்டபோது, தமக்கிருந்த அற் பத்தொகையைக்கொண்டு சிலகாலம் தமது குடும்பத் தைப் பராமரித்துவந்தும், அது செலவாகி, அடுத்த வேளைப் போஜனத்துக்கு ஐவேசில்லாதிருக்கையில், தமது மனைவி மக்களுடன் குடும்ப ஜெபத்தில் உட் கார்ந்து,

பானையில் எண்ணெய் மாவும்
இல்லா தற்றுப் போயினும்,
உன்னத பிதாவையே,
இன்னமும் நம்புவோமே!

என்று பாடினார்கள். ஜெபம் முடிந்தபின்பு வேலைக் காரி வெற்றுக்கூடையோடும், வெறும்பையோடும், தெருத்தெருவாய்ச் சுற்றிச் சகாயங்கேட்டும் ஒன்றும் கிடையாமல், பசித்து வீட்டில் அவதிப்படும் நல்ல பிள்ளைகளுக்கு என்னசெய்வேன் என்று புலம்பி மறு படியும் வீட்டுக்குத் திரும்புகையில், ஒரு மனுஷன் தின் வாசல்படியண்டை நின்று அவளைக் கூப்பிட்டு, உன் எஜமானுக்குக் கொடுக்கனுப்பும்படி ஐந்து கினி (அதாவது 105 ஷிலிங்) இப்போதுதான் என் முதலா ளியிடமிருந்து வந்தது; அதை யனுப்ப ஆள்பார்த்துக் கொண்டிருக்கிறேன்; நீ வந்தது நல்ல சமையம் என்று

சொல்லி அவளிடம் அந்தப் பணத்தைக் கொடுத்தான். அவள் சந்தோஷத்துடன் பணத்தை வாங்கி, போசன பதார்த்தங்களோடும் பணத்தோடும் வீடுபோய்ச் சேர்ந்தாள். அவள் வீட்டுக்குள் சாமான்களுடன் பிரவேசித்தது, எல்லாருக்கும் ஒரு அற்புதம்போலிருந்தது. அன்று சாயந்தரம் அவர்கள் குடும்பஜெபத்திற்குக் கூடி வந்திருக்கையில், தகப்பனார் அவர்களைப் பார்த்து, "ஆண்டவர் இரக்கஞ்செய்ய மறக்கவில்லை." ஆதிமுதல் அவருடைய வார்த்தை உண்மையாயிருக்கிறது. "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" என்று சொன்னார்.

III. "எங்கள்" என்ற வார்த்தையில் நமது கவனத்தை இனி வைத்துத் தியானிப்போமாக.

"எங்கள் அப்பம்" என்று அவரவருக்கு வேண்டிய போஜனத்துக்காகக் கேட்கிறோமேயன்றி மற்றவர்களுக்காகக் கேட்கிறதில்லை. ஒருவன் தனக்குரிய அளவுக்கு மிஞ்சி எதிர்பார்க்கவும் கூடாது; மற்றவன் பாகத்தைப் புசிக்கவும் கூடாது. ஒரு நாளில் சரியான வேலை செய்யாமல், அந்த நாளுக்குரிய சரியான சம்பளத்தை வாங்கிக்கொள்ளுகிறவன் தன் பாகத்துக்கு மிஞ்சின போஜனத்தை எடுத்துக்கொள்ளுகிறான். ஒரு நாளின் சரியான வேலையை வாங்கி, சரியான சம்பளம் கொடாத ஒரு எஜமான் தன்பாகத்துக்கு மிஞ்சி எடுத்துக்கொள்ளுகிறான். எந்த வியாபாரி அநீதமான லாபம் வைத்து வாழ்வடைகிறானோ அவன் அயலானுடைய போஜனத்தைச் சாப்பிடுகிறவனைப்போலிருக்கிறான். நாம் அவரவர் தன் தன் போஜனத்தை நாடவேண்டுமேயன்றி பிறருடையதற்கு ஆசைப்படக்கூடாது.

IV. "இன்று" என்ற வார்த்தையில் நமது கவனத்தை வைப்போமாக. மத்தேயு ஹென்றி என்பவர், தமது வழக்கமான தெளிந்த நடையிலே கர்த்தருடைய ஜெபத்தின்பேரில் தமது பிள்ளைகளுக்குப் போதனை செய்த

போது சொல்லுகிறார்; "கர்த்தருடைய ஜெபமானது பூமியிலிருந்து வானத்துக்கு அனுப்பப்படுகிற ஒரு கடிதமாயிருக்கிறது. அதின் மேல்விலாசத்தில் கடிதம் போய்ச் சேரவேண்டிய ஆள் "பிதா" என்றும்; இடம், "பரலோகம்" என்றும் தெரியவருகிறது. அதனுள் பல காரியங்களுக்காக மனுப்பண்ணியிருக்கிறது. "ஆமென்" என்பது கடிதத்தின் முத்திரையாயும், அது அனுப்பப்படுகிற தேதி அல்லது க்ஷேமமாயுமிருக்கிறது" என்கிறார். "இன்று தாரும்" என்ற வார்த்தையானது, நாளையத்தின அப்பத்துக்கு இன்று கேட்கிறோம் என்ற வியாக்கியானத்தை தப்பென்று தீர்த்துவிடுகிறது. "அன்றன்றுள்ள" போஜனத்துக்காக மாத்திரம் கேட்கும்படிச் சொல்லுகிறார். பின்தின போதனையும் அதற்கு இசைவாயிருக்கிறது "என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகளல்லவா?" என்று சொல்லிக் கடைசியாக "ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்; அந்தந்த நாளுக்கு, அதினதின் பாடு போதும்" என்று சொல்லியிருக்கிறார்.

தேவ பராமரிப்பை உணர்த்தும் இந்த அதிகாரமானது, "அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்பதின் ஞானக்கருத்தையே விளக்குகிறது. "இன்று"தான் உன் ஜீவியத்தின் கடைசிநாளாயிருக்கலாம்; உன் விசுவாசம் இன்றுதான் அதிக பலமாய் விளங்கவேண்டும், உன் ஊழியம் உண்மையாய் முடியவேண்டும்; உனக்கு மிச்சப் புண்யபலனில்லை. நாளையத்தினக் கவலையை இன்று நீ வைத்தால், நாளையத்தினக் காட்சியை இன்று பார்க்க ஆசித்தால், நாளையத்தினம் நீந்தவேண்டிய ஆற்றை இன்று நீந்தப் பார்த்தால், நாளையத்தினம் ஏறவேண்டிய மலைச் சிக

ரத்தை இன்றே ஏறிவிட முயன்றால், நாளையத்தினம் முதுகிலேறவேண்டிய மூட்டையை இன்றைக்கே ஏற்றிச் சுமந்தால், நீ பலவீனப்பட்டுப்போவாய்; அது உன் வல்லமைக்கு மிஞ்சினதைச் செய்கிறதாயிருக்கிறபடியால், ஒருதரம் செய்ய அல்லது சுமக்கவேண்டியதை இரண்டு தரம் செய்யவும் சுமக்கவும் இடமாகிறது. "நாளைப் போஜனம் நாளைப் பசிக்கு" என்பது ஒரு பழமொழி. ஒவ்வொருநாளுக்கும் விடிந்தவுடன் அந்தந்த நாள் வேலை உனக்கு வைக்கப்பட்டிருக்கிறது. "உன் நாட்களுக்குத் தக்கதாக உன் பெலனுமிருக்கும்" என்ற வாசகப்படி, நாம் அன்றன்று கர்த்தரிடத்தில் சகல உதவிகளையும் பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் நேற்றையதினம் விட்ட சுவாசத்தால் இன்று பிழைத்திருக்கிறதுமில்லை, நாளையத் தினம்மட்டும் பொறுத்திருந்து சுவாசம் விடவும் கூடாது. அன்றாட சுவாசம் அன்றாட ஜீவனுக்கு வேண்டியது. அப்பமானது சரீரத்தின் உணவாயிருக்கிறதால் இன்றையத்தினத்துக்கு வேண்டிய உணவு இன்று நமக்கு வேண்டியது.*

V. இந்த விண்ணப்பம், மேலான ஒரு விண்ணப்பத்தை நமக்கு உணர்த்துகிறது. வேதாகமத்திலுள்ள பல வசனங்களில், இயேசுகிறிஸ்துவின் கிருபைப் பிரசாதங்களை ஆவிக்குரிய போஜனமாக உபமானித்துப் பேசியிருக்கிறது. ஆதலால் இந்த வார்த்தைகளை வியாக்கியானப்படுத்தும் பூர்வ கல்விமான்களெல்லாரும், இங்கே ஆவிக்குரிய போஜனத்தைப்பற்றிய வாஞ்சை காட்டப்பட்டிருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள். நாமோ அப்படிச் சொல்லாமல், சரீர போஜனத்தைப் பற்றிப் பேசி அதின்மூலமாய் ஞான போஜனம் உணர்த்தப்படுகிறதென்று சொல்லுகிறோம். ஆவிக்குரிய மன்னாவானது, அழிந்துபோகிற அன்றாட போஜனத்திலிருந்து

* "இன்று வேண்டியது இருக்கும்போது நாளைப் போஜனத்துக்குக் கவலைப்படுகிறவன் விசுவாசமில்லாதவன்; நாளைப் படைக்கிறவர், அந்த நாளின் உணவைப் படைக்கிறார்" என்பது தல்மூத்திலுள்ள ஒரு வாசகம்.

தன்னை "நித்தியஜீவன்வரையும் நிலைநிற்கும்" போஜனத்துக்கு ஏறெடுக்கும் என்பது நிச்சயம். இந்த விண்ணப்பத்தைச் செய்யும்போது, சரீர போஜனத்தையும் ஆத்தும போஜனத்தையும் மனதில் வாஞ்சித்து ஜெபிப்பது நலமாயிருக்கும்.

சர். மத்தேயு ஹேல் என்பவர், "கர்த்தாவே, நீரே முதலாவது உமது சுதாவில் என்னைப் பிறப்பித்தீர்; நான் பிறக்குமுன் பிறக்கத் தகுதியாயிருக்கவில்லை; அப்பால் என்னை உமது சுய ஆதரவால் ஆதரித்துவந்தீர், அதற்கும் நான் பாத்திரனல்ல; ஆதலால், ஒரு ஏழை வருகிறதுபோல், யாதொரு நியாயம் பாராட்டாமல், இன்றைக்கும் வந்து, இன்றைக்குள்ள ஆகாரத்தைத் தாரும் என்று கெஞ்சுகிறேன். இப்படியே நாளையத் தினம், அந்த நாளின் உணவுக்காகக் கெஞ்சுவேன்.... எல்லாவற்றுக்கும் மேலாக, என் சரீரம் புசித்தும், ஆத்துமா பசித்திராதபடி தினம் உமது ஜீவ அப்பத்தையும், அதின்மேலுள்ள பசியையும் தந்தருளும்" என்று ஜெபித்துவந்தார்.

அன்றன்றுள்ள அப்பம், நமக்குக் கிடைக்கும் ஈவாயிருக்கிறது. நாம் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம், தேவன் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார். நாம் தியானிக்கும் இந்த வாசகத்தை அங்கிலோ சக்சோனர் "அன்றன்றுள்ள எங்கள் ரொட்டியை எங்களுக்கு இன்று விற்றருளும்" என்று வாசித்து ஜெபித்துவந்தார்கள்.

ஒருநாள் ஒரு ஏழை ஸ்திரீ திராட்சக் குலைகள் தொங்கின ஒரு தோட்டத்தண்டை போய், தான் நாலுநாளாய்ச் சம்பாதித்த அரை ரூபாயைத் தோட்டக்காரனண்டை நீட்டி, ஐயா! இதை வாங்கிக்கொண்டு, ஒரு திராட்சக் குலை தாரும்; என் மகன் இதற்காசைப்பட்டு வியாதியாய்க்கிடக்கிறான் என்று கேட்டாள். அவனோ அல்லவென்று தலையசைத்துப் போய்விட்டான்; அவள் உடனே தன் வீட்டுக்குப்போய், படுக்கையிலிருந்த கம்பளியை எடுத்து விற்று, அவனிடம் போய் ஐந்து ரூபாயைக்

காட்டி, இதைவாங்கிக்கொண்டு ஒருகுலை திராட்சப்பழம் தாருமையா என்று கெஞ்சினாள்; அவனோ பெருஞ் சத்தமிட்டு அவளைத் திட்டித் துரத்தினான்; அவள் அழுது மறுபடியும் கெஞ்சிக் கேட்டாள்; இப்படியிருக்கும் சந்தியில் இராஜகுமாரத்தி அச்சத்தங்கேட்டு அங்கே வந்து, என்னவரலாறென்று விசாரிக்கவே, தோட்டக்காரன் தான் சொல்லவேண்டியதையும் அந்தப் பெண்பிள்ளை தான் சொல்லவேண்டியதையும் சொன்னார்கள். இராஜகுமாரத்தி அந்த ஸ்திரீயைப் பார்த்து, ஏழை மனுஷியே நீ தப்பிதமாய் நினைத்திருக்கிறாய், என் தகப்பனார் வியாபாரம் செய்து லாபமடைகிறவரல்ல—அவர் தயவுள்ள அரசராக்கும்—விற்கிறது அவர் வேலையல்ல, கொடுக்கிறதுதான் அவர் வேலை என்று சொல்லி சில திராட்சக்குலைகளை அறுத்து அவள் மடியில் போட்டு அனுப்பினான். பரமபிதா தரும் கிருபைகளும் இப்படியே இருக்கின்றன.

தேவன் தரும் ஒவ்வொரு கிருபையினும், "இலவசம்" என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும்விட, அன்றன்றுள்ள ஜீவஅப்பத்தின்மேல் அது தீர்க்கமாய் வரையப்பட்டிருக்கிறது. இதின் விலை என்ன என்கிறாயோ?—இரட்சண்யம் விற்பனைச்சரக்கு என்று சொப்பனத்திலாவது நினைக்கிறாயோ?—தேவன் பாவமன்னிப்பை விற்கக்கூடுமா?—புது இருதயத்தை விற்கக்கூடுமா? அன்பு, சந்தோஷம், பலம், பரிசுத்தம் ஆகிய கிருபைகள் ஒவ்வொன்றையும் விற்கிறாரா?—இல்லை. அவையனைத்தும் அவருடைய ஈவாயிருக்கிறது. ஈவுக்கு விலைகொடுக்க உன்னால் முடியாது. என்றாலும் அந்த ஈவுகளைக் கேட்கலாம். நீ கேட்கவேண்டியதுதான். "உனக்கு வாக்குத்தத்தமுண்டு, ஆனால் அது நிறைவேற நீ ஜெபம் பண்ணவேண்டும்" என்று சொல்வது, ஒருவனைப் பார்த்து "இந்த உண்டியலை நீ மாற்றி எடுத்துக்கொள்ளலாம்; ஆனால் நீயே அதைப் பாங்கில் போய்க் கொடுக்கவேண்டும்" என்று சொல்வதற்குச் சரியாயிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நீ விசுவா

சந்தோடு "அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எனக்குத் தாரும்" என்று ஜெபித்தால், தேவன் உன் பசியை அன்றன்று நன்மையால் நிரப்பிவருவார்; அப்போது, அன்றன்று தேவன் கிறிஸ்துவின் மூலமாய் உன்னண்டை வந்து "எனது கிருபை உனக்குப் போதும்" என்பார்; நீயும் அன்றன்று, "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியுடன்" உன் ஜீவகாலத்தைக் கழித்து, பின்வருகிறபடி பாடுவாய்.

ஜீவபாதை மேடுபள்ளம்
கற்கரடு கார் இருளாம்
என்பாவம் நீட்டு நீங்காவே
நீரெனக்குப் போதும், போதும்.

சுகநாளில் நீரே போதும்
துக்கநாளில் நீரேபோதும்
சாவுநாளில் நீரேபோதும்
என்றென்றைக்கும், நீரேபோதும்.

## பொழிப்பு.

I. "அன்றன்றுள்ள அப்பம்." (1) சரீரத்தைப் பிழைப்பூட்டும் உணவு. (2) பொது ஜீவபாதுகாப்புக்கடுத்த போஜனம். (3) போதுமான போஜனம் என்பதைக் குறிக்கின்றது.

II. "எங்களுக்குத் தாரும்." (1) தேவன்மேலுள்ள நமது சாருதலையும், (2) அவர் கொடுப்பதில் பிரியப்படுகிறவர் என்பதையும், (3) பிதாப்பாந்தத்தையும், (4) நமது முயற்சிகளை ஆசீர்வதிக்க வேண்டுமென்பதையும், (5) எங்கள் பிரயத்தனம் வாய்க்காத சமயத்தில் நீரே தஞ்சம் என்பதையும் குறிக்கிறது.

III. "எங்கள் அப்பம்" = தனித்தனி விண்ணப்பம்.

IV. "இன்று தாரும்" = தின விண்ணப்பம்.

V. இந்த விண்ணப்பம் ஞானபோஜன வாஞ்சையையும் வெளிப்படுத்துகிறது.

## 8. ஐந்தாம் விண்ணப்பம்.

"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." (மத். 6. 12.)

"எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களுக்குக் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே." (லூக். 11. 14.)

பாவமன்னிப்பு விஷயமான இந்த விண்ணப்பம், அன்றாடகப் போஜனத்தைப்பற்றிய விண்ணப்பத்தைப் பின்தொடர்ந்து வருகிறதைக் காண்கிறோம். இதினாலே பாவமன்னிப்பில்லாமல், சரீரம் ஜீவித்திருப்பதில் லாபமில்லை என்பது வெளியாகிறது. தேவன் தினந்தோறும் தமது ஈவுகளைத் தந்து சரீர ஜீவனை ஆதரித்துவருகிறபோது, ஆத்துமா பாவவழிகளில் சாய்ந்துவிடுகிறது; ஆதலால் தினந்தோறும் அதற்குப் பாவமன்னிப்பு வேண்டியதாயிருக்கிறது.

1. இந்த விண்ணப்பத்தில், நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதையிட்டு பாவமன்னிப்பைத் தரக் கேட்கிறோம். தேவனுக்கு அந்நியராய்; அவருடைய கைதிகளாய், அல்லது அவர் தண்டனைக்குட்பட்டவர்களாய் இந்த விண்ணப்பத்தைச் செய்யாமல், கிறிஸ்தவர்களாக இதைச் செய்கிறோம். முன் பாவமன்னிப்பைப் பெற்றவர்கள், தங்கள் தின பாவமன்னிப்புக்காகச் செய்யும் விண்ணப்பமாயிருக்கிறது. இது விபரீதமான வாசகமாகத் தோன்றலாம்; இதைச் சற்று தெளிவிக்கிறோம்.

தேவ துரோகிகளாயிருந்த நம்முடைய பாவங்கள், நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, தேவனுடைய பிள்ளைகளான நிமிஷத்தில் சமூலமாய் மன்னிக்கப்பட்டுப்போயின. அதாவது, நாம் மறுபிறப்படையுமுன்

செய்த பாவங்களெல்லாம் இயேசுவை விசுவாசித்த வுடனே மன்னிக்கப்பட்டுப் போயின. இந்தப் பாவ மன்னிப்பைப்பற்றிப் பின்வரும் வசனங்களில் காண லாம். "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" என்றிருக்கிறது (சங். 103. 12.). இந்த அதிசய தூரத்தை அளந்து தீர்மானிக்கிறவர்க ளுண்டா? "என் பாவங்களை யெல்லாம் உமது முதுகுக் குப் பின்னாலே எறிந்துவிட்டீர்" என்றிருக்கிறது (ஏசா. 38. 17). இதைக்கவிப்போக்கென்று கழித்துவிடலாகாது; வேதகவியானாலும் வசனமானாலும் சத்தியத்தையே பேசு கிறது. தேவனுக்கு எவ்வளவு தூரத்துக்குப் பின்னாலே நமது பாவங்கள் எறிந்துவிடப்பட்டதோ, யாருக்குத் தெரியும்? "நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத் திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்" என்றிருக் கிறது (மீகா. 7. 19.). இந்த ஆழத்தின் அளவு என்ன வோ? இந்த வாசகமெல்லாம், பரமபிதாவானவர் நமது பாவங்களை மனப்பூர்வமாய் மன்னித்துவிடுகிறார் என் னும் சத்தியத்தை எவ்வளவு வல்லமையுடன் உணர்த்த வேண்டுமோ அவ்வளவுக்குத் தக்கதான மனுஷ பாஷை யாயிருக்கிறது. ஆகவே நாம் இயேசுவை விசுவாசித்த வுடன் தேவன் நம்முடைய முந்தின பாவங்களனைத்தை யும் மன்னித்து, மறந்துவிடுகிறார் என்று வேதம் அறி விக்கிறது. இப்படி நாம் பாவமன்னிப்பைப் பெற்றவர் களாயிருந்தாலும், சமையா சமையங்களில் முந்தின பாவங்களைப்பற்றிய ஞாபகம் நமது மனதில் வருவ தாலும், மறுபிறப்படைந்த பின்பும் நாம் பாவத்தில் விழு வதாலும், தினந்தோறும் நமது பாவங்களை நினைத்து, அறிக்கையிட்டு மன்னிப்புக்காகக்கெஞ்சி வருகிறோம். மறுபடியும் பிறந்து, தேவனுக்குப் பிரியமானவராய் ஜீவித்துவந்த டோனி என்னும் வேத சாஸ்திரி, தன்னு டைய முந்தின பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைக்க வேண்டுமென்ற வாஞ்சையுடன் செய்யும் கவி விண்ணப் பத்தைப் பாருங்கள்:—

1. "என் முதற்பாவத்தை மன்னிப்பீரோ?
அநேக ஆண்டாச்சே மன்னிப்பீரோ?
முதற்பாவ மென்னி லின்னுமுண்டே;
அதே இன்னும் என்னைத் தொடருதே;
நீர் மன்னித்தும், இன்னும் பாக்கியுண்டே!
பாக்கியுண்டே.

2. என் பிறனைப் பாவியாக்கினேனே,
மன்னிப்பீரோ? அந்தப் பாவத்தையே,
இரண்டோர் ஆண்டாய் விட்ட பாவத்தையே
பின்னும் நான் தொடர்ந்து பிடித்தேனே!
அதின் மன்னிப்பின்னும் பாக்கியுண்டே!
பாக்கியுண்டே.

3. நான் பயந்து காலங்கழிக்கிறேன்.
பயத்தால் சாவேன் என்றிருக்கிறேன்.
ஆனால் உமது நேச சுதனார்
தினம் என்னைக் கண்டார், கழுவினார்;
நிசம்; நித்தம் தமதாவிதந்தார்.
பயமில்லை."

இந்த பக்தன் சுமார் 250 வருஷங்களுக்கு முன் புலம்பி அறிக்கையிட்டதுபோல, இப்பொழுது, விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்டு, முந்தின பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்ற தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் தினம் தினம் புலம்பிக் கெஞ்சுகிறார்கள். அவர்கள் கோபாக்கினையின் நிலைமையைவிட்டுத் தாண்டி, கிருபையின் நிலைமைக்குட்பட்டாலும், அந்தக் கவலையும் ஏக்கமும் அவர்களிடம் இன்னுமிருக்கிறது.

நாம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டு, மறுபடியும் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளென்னப்பட்டாலும், இவ்வுலகத்தி லிருக்குமளவும் பாவமுள்ள பிள்ளைகளாகவே இருக்கிறோம். இதைக்குறித்து அந்துருபுல்லர் சொல்வதாவது:—"பாவத்தைச் செய்யாமல் நன்மையே செய்கிற நீதிமான் இவ்வுலகத்தில் இல்லை; இப்படியிருப்பது வெட்கந்தான். ஆனால் காரியம் அப்படியே இருக்கிறது. இதை மறுப்பது, நமக்கு அனுகூலமாயிராமல் பிரதிகூலமாகத்தா

யிருக்கிறது; இதைப்பற்றிய கிறிஸ்துவின் போதனை யானது, சிலர் தங்கள் மனப்பேதலிப்பினால், தாங்கள் பாவமில்லாப் பரிசுத்த பூரண ஸ்திதியைக் கண்டடைந் தோமென்பது தப்பிதமென்று உணர்த்துகிறது. கிருபாப் பிரமாணத்தின் ஆவிக்குரிய ஆழத்தையும், பூரண நேசத்தையும், பரிசுத்தத்தையும் கவர்ந்துகொள்ளுகிற எந்த மனுஷனும் தன்னிலுள்ள குறைவை எந்தக் காலத்திலும் ஒத்துக்கொள்ளாதிரான். நாம் நிதானிக்கும் உயர்ந்த பரிசுத்தமும், அன்பும் தேவனுடைய மகிமை யுள்ள சமூகத்துக்குமுன் மகா தாழ்வானதாக மதிக்கப் படும். இந்த விண்ணப்பத்தைக்கொண்டு ஆட்சேபிக்கிற வன், இது பிந்தின பாவங்களின் மன்னிப்பையல்ல முந்தின பாவங்களின் மன்னிப்பைத்தான் குறிக்கிற தென்று சொல்லலாம். ஆனால் இது அன்றன்றுள்ள ஆகாரத்தைப்பற்றிய விண்ணப்பத்தைத் தொடர்ந்து வருவதால், அன்றன்றுள்ள பாவத்துக்குரிய மன்னிப் பையும் உணர்த்துகிறதாயிருக்கிறது" என்கிறார்.

நாம் தினம் தினம் தாழ்ச்சியுள்ள மனதுடன் இந் தப் பாவமன்னிப்பின் விண்ணப்பத்தைச் செய்துவரு வோமாக. நாம் பாவம் செய்யவில்லை என்று சொல் வது, தன்னிலே பாவமாயிருக்கிறது. நாம் தினந் தினம் பாவம் செய்கிறது எவ்வளவு நிச்சயமோ, அவ் வளவு இவ்விண்ணப்பத்தைத் தினந் தினம் செய்ய வேண்டும். நாம் பரிசுத்தம் என்றெண்ணுவதற்கும், பாவம் என்றெண்ணுவதற்கும் இந்த விண்ணப்பம் வேண்டியது; நமது கண்ணீருக்கும், ஜெபத்துக்கும், பரிசுத்தத்திற்கும், அன்புக்கும், தாழ்மைக்கும் இந்த விண்ணப்பம் வேண்டியதாயிருக்கிறது. ஏனெனில் நீ எவ்வளவு பரிசுத்தவான் என்று உன்னைப்பற்றி நினைத்துக்கொண்டாலும், நியமரென்று உன் பாவம் உன்னை அப்படியல்லவென்று திருஷ்டாந்தப்படுத்த லாம். அல்லது மன்னிக்கப்பட்டாயிற்று என்று நினைத் துக்கொள்ளுகிற எத்தனையோ பாவங்கள், இன்னும் மன் னிக்கப்படாமல், உனக்கு விரோதமாய் எழுதிவைக்கப்

பட்டிருக்கலாமே. உன் பெருமூச்சையும், புலம்பலையும், ஜெபத்தையும், மாறுதல்போல் காணும் சில கிரியைகளையும் பார்த்து, என் பாவங்களனைத்தும் மன்னிக்கப்பட்டுப் போயினவென்று நீ சொல்லுவதும், தள்ளுவதும் சரியல்ல. உன்னை எந்நேரமும் பாவி என்று ஒத்துக்கொண்டு அறிக்கையிடுகிறதில் உனக்கு லாபமேயன்றி நஷ்டமில்லை.

பியுரித்தானர் வகுப்பைச்சேர்ந்த ஒரு பக்தன் சொல்வதாவது:—“தேவனுடைய பிள்ளை ஒருவனுடைய மனந்திரும்புதலினால், அவர் அவனுடைய பாவங்களை ஒரே நிமிஷத்தில் பூரணமாக மன்னித்துவிட்டாலும், அது அந்தப் பிள்ளைக்கு அதே நிமிஷத்தில் பூரணமாய்க் கிடையாமல் சொட்டுச் சொட்டாக விழுவதுபோலக் கொஞ்சங் கொஞ்சமாய் அருளப்படுகிறது. இதை தாவீதின் விஷயத்தில் பார்க்கிறோம். நாத்தான் தீர்க்கதரிசி, தாவீதின் பாவமன்னிப்பை உணர்த்தும்படி “நீர் சாகாதபடிக்குக் கர்த்தர் உன் பாவம் நீங்கச்செய்தார்” என்றுரைத்தார் (2 சாமு. 12. 13); என்றாலும் அதற்குப்பின்பு அவர் 51-ம் சங்கீதத்தை எழுதி; தான் மன்னிப்புப் பெற்ற பாவத்தை மறுபடியும் நினைத்து அறிக்கையிட்டு, துயரகவிகளால் பாவமன்னிப்புக்காக வேண்டிக்கொள்ளுகிறார்” என்பதே.

தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்களில் இருவகைக்காரர் இந்த விண்ணப்பத்தை நாங்கள் சொல்லமாட்டோமென்று ஆட்சேபிக்கிறார்கள்.

சிலர் நமக்குக் கிடைக்கும் பாவமன்னிப்பானது, முன்செய்த பாவங்களுக்கு மன்னிப்பை மாத்திரமல்ல, பரிசுத்தவானாகுதல் என்னும் ஈவையும் அருளுகிறது; அதனால் விசுவாசத்தினால் நீதிமானாகிறவன், பாவம் செய்யாத பரிசுத்த ஜீவியத்தையும் அதோடு பெற்றுக்கொள்ளுகிறான்; இதற்கு மறுபடியும் பாவமன்னிப்பு அவசரமில்லை என்கிறார்கள். ஒரு வாலிபன் நானூறு பேரிருந்த ஒரு பக்திவிருத்திக் கூட்டத்தில் பின்வருகிறபடி அறிவித்தான்:—

"என் நேசரே, இன்றிரவு நான் இரட்சிக்கப்பட்டவனாயிருக்கிறேன் என்று சொல்லக்கூடிய நிலைமையிலிருக்கிறதையிட்டு தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்றான். உடனே "அல்லேலூயா" என்று எல்லாரும் கூவினார்கள். அவன் அப்பால் சொன்னதாவது:—"மற்ற மனுஷரைப்போல நானும் இந்நகரத்தின் தெருக்களில் நடந்துதிரிகிறேன்...... அவர்கள் என் இருதயத்தை அறியார்கள், ஆனால் தேவன் அதை அறிவார்; அவர் என் இருதயத்தைப் பார்க்கும்போது, அது உறைந்த மழையிலும் வெண்மையாயிருக்கிறதென்று காண்கிறார். ஆறு மாதத்துக்கு அதிகமான காலமாக, நான் என் பாவத்தை மன்னிக்கவேண்டுமென்று தேவனை நோக்கி மன்றாடத் தேவையிருந்ததில்லை; ஆனால், ஒவ்வொருநாள் இரவில், இன்று நான் பாவஞ் செய்யாமலிருக்கக் காத்துக்கொண்டதற்காக ஸ்தோத்திரம் மாத்திரம் செலுத்தும் வேலை எனக்கிருந்தது. அவர் ஆறுமாதமாக நான் பாவஞ் செய்யாதபடிக் காக்கக்கூடுமானால், என் ஜீவகாலம் முழுவதிலும் அப்படிக் காக்கக்கூடும்; அப்படி என்னைக் காக்கக்கூடுமானால் உங்களையும் காக்கக்கூடும். உங்கள் ஒவ்வொருவரையும் அப்படி காக்கக்கூடும்" என்பதே.

பரிவ மன்னிப்பின் சாஸ்திரத்தை அறியாமல் இப்படிப் பிதற்றினான். இக்காலத்தில் அநேகர் இப்படிச் சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட அறிக்கையால், இயேசு வெற்றியடைகிறார் என்று தப்பாய்ச் சொல்லிக்கொள்ளுகிறதையிட்டு, அதற்கொரு திருஷ்டாந்தரமாக மாத்திரம், இதை இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறோம். இரட்சகர் இந்த ஜெபத்தைக் கற்றுக்கொடுத்தபோது, இது தமது பிள்ளைகளில் சிலருக்கு ஏற்றது, மற்றவர்களுக்கு ஏற்றதல்ல என்றெண்ணிக் கொடுக்கவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் ஜீவகாலத்தில் ஒவ்வொரு நாளிலும் இதைச் சொல்லவேண்டியவர்கள் என்பதைத் தீர்மானித்தே அருளிச்செய்திருக்கிறார்.

வேறு சிலர், இப்படிப்பட்ட விண்ணப்பத்தை நாங்கள் சொல்லவேண்டியதில்லை. ஏனென்றால், நாங்கள் தினந்

தினம் பாவஞ் செய்துவருவது நிஜமானாலும், எங்கள் ஜீவனின் கடைசிவேளை பார்த்தால் எல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறது. எங்கள் சாபம் மாறி, நாங்கள் நீதிமான்களானோம் என்று பரலோகத்தில் விளம்பரமானதுமுதல், நாங்கள் அப்புறம் பாவமன்னிப்புக்காக மன்றாட அவசரமில்லையே; இப்பொழுது நாங்கள், எங்கள் பாவங்களை மன்னியும் என்று தினந்தோறும் மன்றாடாமல், எங்களுக்குக் கிடைத்த பாவமன்னிப்புக்காக உம்மை ஸ்துதிக்கிறோம் என்றுமாத்திரம் அறிக்கையிட வேண்டியவர்களாயிருக்கிறோம் என்கிறார்கள்.

“ஒரு பாவம் நடப்பிக்கப்படாமல், எப்படி மன்னிக்கப்படக்கூடும்? பாவத்துக்காக அழுது புலம்பிக் கெஞ்சுவதற்குமுன் அதற்கு மன்னிப்புக் கிடைத்ததற்கு வேதத்தில் ஏதாவது ஆதாரமுண்டா? மன்னிப்பு, எப்போதும் மனஸ்தாபத்தைப் பின்தொடருகிறது. மனஸ்தாபத்தால்மாத்திரம் மன்னிப்புக் கிடையாவிட்டாலும், அது மன்னிப்புக்கு எப்போதும் முன்செல்லுகிறது. “நீதிமானாக்கப்படுகிறோம்” என்பது பாவமன்னிப்பையும் சேர்த்துக்கொள்ளுகிறதுபோல, “மகிமைப்படுத்தியுமிருக்கிறார்” என்னும் ஸ்திதி சில பல வழியாக அதைப் பின்தொடருகிறது. நாம் முடிவு பரியந்தம் நிலைத்திருக்கும்படியான ஒரு ஏவுதலும் வாக்குத்தத்தமும் வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒருவன் முடிவுபரியந்தம் பயத்தோடும், நடுக்கத்தோடும் தன் இரட்சிப்பு நிறைவேற ஜாக்கிரதைப்படவேண்டியதில்லையென்றால் அவன் மகிமைப்படுத்தப்படவேண்டிய அவசரமு மிருக்கமாட்டாது. அவன் பாவத்தைச் செய்து மன்னிப்பு அவசியமில்லை என்றிருக்குமானால், அவனுக்கு பாவமன்னிப்பே இல்லை என்றுமாகும். முடிவான காரியத்தை வாக்களித்திருக்கிறவர், அது உடனுக்குடனே கிடைக்கத்தக்க ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார்” என்று அந்துரு புல்லர் என்பவர் எழுதியிருக்கிறார்.

நாம் மன்னிப்பைப் பெற்று பாவத்திலிருந்து விடுதலையாவது நிஜமேயானாலும், இந்த ஜீவகாலமளவும் அந்த மன்னிப்பு நாளொரு வண்ணமாகமாத்திரம் அருளப்படுகிறது. மன்னிக்கும் நேசகளஞ்சியம் நம்முடையதாகிவிட்டாலும், நாம் கேட்கக் கேட்கத்தான் அக்களஞ்சியத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம். இப்படி நாம் பாவம் செய்யாமல் முற்றிலும் ஓயுமட்டும் கேட்டுப் பெற்றுக்கொள்ளுகிறோம். நம்முடைய முடிவானகாரியம் இதுதான்; ஆனால் நாம் நித்தியலோகத்துக்குள் பிரவேசித்து "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கு முண்டாவதாக" என்று பாடுங்காலம் வரும்வரையும், நம்முடைய விசுவாசத்தின் பலனாகிய "ஆத்தும இரட்சிப்பை" எப்போதும் அடைந்துகொள்ளுகிறவர்களாயிருப்போம். நமக்கு வேண்டிய பாவமன்னிப்பெல்லாம் சம்பாதித்து வைக்கப்பட்டிருக்கிறது, என்றாலும் நாம் தினந்தினம் "எங்கள் பிதாவே......எங்கள் குற்றங்களை மன்னியும்" என்று கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

II. பாவம் ஒரு கடனாக ஸ்தாபிக்கப்பட்டு, பாவமன்னிப்பைப் பெற ஏவுகிற விண்ணப்பமாயிருக்கிறது. மலைப்பிரசங்கத்தில் "கடன்" என்று அழைத்ததை, இரண்டாந்தடவை "பாவம்" என்றழைத்திருக்கிறது. முன்னே நான் கடன் என்று சொன்னதின் கருத்து பாவம்தான் என்று இரட்சகரே வியாக்கியானப்படுத்துகிறார். இரண்டுதடவையிலும் போதனை ஒன்றுதான். லூக்காவின் சுவிசேஷத்தில் "பாவம்," "கடன்" என்ற இரண்டு பதங்களும் ஏககருத்தாகவே வழங்கியிருக்கிறது. (லூக். 11. 4.)

பாவத்தைக் கடனாக ஸ்தாபிக்கிறதைப்போல தைக்கத்தக்க உபமானம் வேறில்லை என்று சொல்லலாம். இவ்வுலகத்தில் ஒரு உத்தம கிறிஸ்தவனுக்கு கடனைப்போல மனதில் கஷ்டத்தைக் கொடுக்கும் பாரம் ஒன்

றில்லை என்று சொல்லலாம். ஆவியில் எளிமையுள்ள ஒரு ஆத்துமா, கடன் என்ற வார்த்தையால் குலுங்கி விடுகிறது; அவன், நான் கடன்காரர் கிடங்குக்குப் போவதிலும் வேலைக்கேற்ற வயலுக்குப் போகிறேன் என்பான்.

கடன் என்பது கலக்கத்தையும் நிர்ப்பந்தத்தையும் கொடுக்கிறது. தனவான் கடன் என்றால் தணிகிறான்; கடனுடன் கடைவழி போக இயலாது, கண்டவனெல்லாம் கைப்பிடித்து, என் கடனுக்கு வகைசொல்லு என்பான், அவன் வெட்கத்துடன் தரையை நோக்கவேண்டியது; கடன்காரன் கடன் கொடுத்தவன் தெருவழி நடக்க அஞ்சி பக்கவழியாய்ப் போகிறான்; வெளியே போன மகன் வந்து கதவைத் தட்டினாலும், தனக்குக் கடன் கொடுத்தவன் வந்து தட்டுகிறதாக நினைத்து ஒளித்துக் கொள்ளுகிறான். அவன் தன் சிநேகிதருடன் சந்தோஷத்துடனிருக்கையிலுங்கூட, "நீ கடன்காரன்" என்ற வாசகம் அவனுக்கெதிரான சுவரில் எழுதப்பட்டிருக்கிறதாக உணருகிறான். கடன் வியாகுலமுள்ளது, கடன் புத்தியை மடமையாக்குகிறது, பேசக்கூடாமல் தொண்டையை அடைக்கிறது; கடன், மேன்மேலும் கடன்படும்படி இழுத்துவிடுகிறதுடன், பொய்களைச் சொல்லவும், பித்தலாட்டம் பண்ணவும், மோசம் போக்கவும் ஏவிவிடுகிறது.

தேவனுக்கும் மனுஷனுக்குமுள்ள ஆவிக்குரிய சம்பந்தத்தைக் கொடுக்கல் வாங்கலாகப் பாவித்து, இரட்சகர் இவ்விடத்தில் உணர்த்தியிருக்கிறார். இதில் விளங்கும் போதனை என்னவென்றால், பாவமானது சிலர் நினைக்கிறபடி, நமது பட்சத்திலுள்ள ஒரு பலவீனமாய், அல்லது நோயாய் இராமல் தேவன் பட்சமாயுள்ள நமது தீமையாயிருக்கிறது என்பதுதான். இதற்கு முந்தின வாசகங்கள் இந்தக் கருத்தை உறுதிப்படுத்துகின்றன:—தேவன் நம்முடைய பிதாவா?—நாம் அவரை நேசித்துக் கனப்படுத்தும் கடன் நமக்குண்டு; அவர் பரலோகத்திலிருக்கிறாரா?—நமக்குள் பரம சிந்தையும் ஜீவியமு

யிருக்கவேண்டிய கடனுண்டு; "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று நாம் சொல்லவேண்டுமா?—அவரை மகிமைப்படுத்தும் கடன் நமக்குண்டு; உம்முடைய இராஜ்யம் வருவதாக என்று சொல்லவேண்டுமா?—குடிகளைப்போல நடக்கும் கடன் நமக்குண்டு; உமது சித்தத்தின்படி ஆவதாக என்று விரும்புகிறோமா? — நம்மை அவருக்கு ஒப்புவிக்கும் கடன் நமக்குண்டு—அன்றன்றுள்ள ஆகாரத்துக்கு அவரைக் கேட்க வேண்டுமா?—அவரைச் சார்ந்து ஜீவிக்கும் கடன் நமக்குண்டு; இவையனைத்திலும் நமக்குக் கடன் பாக்கியுண்டு. இந்தக் கடன்களைத் தீர்க்க நமக்கென்ன ஐவேசிருக்கிறது! சில வியாபாரிகள் தங்கள் கடன் கணக்குப் புஸ்தகங்களைப் பார்த்தால் மனம் தடுமாறிப்போமென்று நினைத்து, கணக்கைப் பாராமல், கண்டபடி கடன்மேல் கடன்பட்டு வியாபாரத்தை நடத்துவார்கள். பாவிகளும் அப்படியே, தங்கள் பாவக்கடன்களை எவ்வளவேனும் சிந்தியாமல், மேன்மேலும் "பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டி" தேவகடனை அதிகப்படுத்துகிறார்கள். சிலரை தேவன் கிருபையாய் உணர்த்தி வருவதால் அவர்கள் தங்கள் நிலைமையை யறிந்து "என் அக்கிரமம் என் தலையின்மேலேறி பாரச்சுமையைப் போல் எனக்கு மிஞ்சின பாரமாயிற்று" என்று அழுது "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று கெஞ்சுகிறார்கள். மனந்திரும்பினபின் செய்யும் பாவமும், அதற்கு முன்செய்த பாவமும் தன்மையில் ஒன்றுபோலவே இருக்கிறது. பாவங்களை எப்போது செய்தாலும், அவை கடன்கள்தான்.

III. இது கிருபைக்காகச் செய்யும் விண்ணப்பமாயிருக்கிறது. பாவமன்னிப்பு கிருபையான செய்கை. பாவமன்னிப்பை முதலாவதாக விரும்புகிறவனுடன் நாம் பேசுவோம் — தேவனுடைய கடனாளியே, உன் கடனைத் தீர்க்க என்னவழி சொல்லுகிறாய்?—வட்டி போட்டுக் கணக்குக்கூட்டி எழுதச்சொல்லுகிறாயா?—சரிக்கட்டுகிறாயா?—பொறுமையாயிருக்கச் சொல்லுகிறாயா?—

காலம் கேட்கிறாயா?—அதிகமாய் ஊழியஞ்செய்து தீர்க்க ஒழுங்குபண்ணுகிறாயா?—பாவமுள்ள முந்தின காலத்தைப் பாவமில்லாப் பிந்தினகாலத்து நடக்கையால் திருப்திப்படுத்தப்போகிறாயா?

ஒருவன் செய்யவேண்டிய கடமைக்கு மிஞ்சினது என்ன இருக்கிறது?—பிற்காலம், முற்காலத்தை என்னமாய்த் திருப்திப்படுத்திவிடும்?—இன்றுமுதல் கடன்படாமல் ஜீவிப்பது முந்தின கடனை நீக்கிவிடும் என்று நமக்குச் சொன்னது யார்? எந்த வியாபாரி தன்னிடத்தில் லட்சம் ரூபாய் சரக்கு வாங்கிக் கடன்பட்ட ஒருவன், இனிமேல் நான் வாங்கும் சரக்குகளுக்கு முன் பணம் கட்டி வாங்குகிறேன் என்று சொல்லி அப்படியே வாங்கிவருகிறதினிமித்தம், அவனுடைய பழைய லட்சம் ரூபாய்க் கடனையும் கிறுக்கிவிடுவான்? இப்படிப் பேசுவது முதலாய் புத்திஈனமென்று சொல்லப்படுமல்லவா! இந்தப்பிரகாரமாய் நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. அது முற்றிலும் நமது பரமபிதாவின் கிருபையால்மாத்திரம் கிடைக்கிறது. ஆதலால் தினந்தோறும் "தேவனே பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று கெஞ்சிக் கேட்பதுதான் நமது கடமை.

IV. நாம் இந்த விண்ணப்பத்தால் தேவன் பாவமன்னிப்பருளும் முறை எதுவோ அதற்குட்படுகிறோம். இதைச் சொல்லுகிறவனுக்கு ஒரு முறையை இங்கே காணோம். இதைச் செய்கிறவன் யாதொரு நிபந்தனையும் சொல்லாமல், தனக்குக் கிருபை வேண்டுமென்றுமாத்திரம் கேட்கிறான். அது எந்த வழியாய் அல்லது எந்த முறையாய் அருளப்படுமோ அதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. இதை முதலாவது படித்து ஜெபித்தவர்களுக்கு, இதில் சொல்லப்படும் பாவமன்னிப்பு எந்த வழியாய் வருமென்று தெரியாது. இப்பொழுது நாம் அந்த வழியை அறிந்துகொண்டோம். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவ

ருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்குண்டாயிருக்கிறது.” இந்த விண்ணப்பம் கற்றுக்கொடுக்கப்பட்ட காலத்தில், இதிலடங்கியிருந்த இரகசியம் வெளிப்படுத்தப்படவில்லை. இப்பொழுது இந்த வெளிச்சம் நமக்கு வந்திருக்கிறபடி, நாம் நமது பாவமன்னிப்பைப்பற்றி விண்ணப்பம் செய்யும்போதெல்லாம், இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால்மாத்திரம் மன்னிப்புண்டு என்ற நினைவை வைத்துக் கேட்கவேண்டும்.

வியாபாரக் கணக்குப் புஸ்தகங்களில் பற்றுவழி செல்லு என்ற இரண்டு பக்கமுண்டு; கடன் பற்றுப் பக்கத்தில் அநேக வரிகளும், அநேக தொகைகளும் வரலாம், ஆனால் செல்லெழுதும் பக்கத்தில் ஒரே வரியும் ஒரே தொகையும் காணப்படலாம்; பல பற்றுகளின் மொத்தம், ஒரே செல்லுத்தொகையில் அடிபட்டு, இரண்டு பக்கத்தின் அடியிலுள்ள மொத்தமும் சரி என்று எழுதப்பட்டிருக்கும். தேவனுடைய புஸ்தகங்கள் திறக்கப்படும்நாளிலே நம்முடைய கடன்பக்கம் நிறைவாயும், பெரிய தொகையாயுமிருந்தாலும், மறு பக்கத்தில் காணப்படும் இயேசுவின் நீதியின் தொகை, நமது கடனைத் தீர்த்து, நம்மைக் கடன்காரர் அல்லவென்று வெளிப்படுத்திவிடும்.

பாவமன்னிப்பு இயேசுவின் நிமித்தம் நமக்குக் கிருபையாய்க் கிடைக்கிறதென்பதைச் சிலர் ஆட்சேபித்து “ஒன்றும் வாங்காமல் அருளப்படுவதல்லவா கிருபை; ஆனால் உங்கள் உபதேசத்தின்படி தேவன் கிறிஸ்துவினிமித்தம் தானே மன்னிக்கிறார்; அபராதமின்றி மன்னிப்பதல்லோ கிருபையாகும்; தேவன் தாமே கடனாளியின் கடனை வேறொருவன் கட்டிவிடுவதால் மன்னித்துவிடுகிறார்; இதிலென்ன கிருபையிருக்கிறது” என்பார்கள்.

இப்படி ஆட்சேபிக்கிறவன், தன் கடனைத் தீர்க்கும் ஆளைத் தானே சம்பாதித்துக் கொண்டதுண்டானால், அது ஒருவகையில் ஆட்சேபனையாகலாம். ஆனால்

பாவக்கடன் விஷயத்திலோ, தேவன் கடன்தீர்க்கும் ஆளைக் கண்டுபிடித்தது மாத்திரமல்ல, அவரே ஆளாகவும் இருக்கிறார். சர்வ வல்லபமும், சர்வஞ்ஞருமான தேவன் தமது நீதியுள்ள ஏற்பாடுகள் நிறைவேறும்படி தாமே, தேவகுமாரனில் வெளிப்பட்டு அக்கடனைத் தீர்த்தார்; அதின் முகாந்தரமாய்ப் பாவியையும் மன்னிக்கிறார். தேவ ஏற்பாட்டுக்கும் முறைக்கும் இதுதான் சரியான ஒழுங்காயிருக்கிறது. ஆதலால் நாம் இந்த ஜெபத்தில் பிதாவே எங்கள் கடன்களை மன்னியும் என்று கேட்கும்போது, பிதாவே, பாவமன்னிப்புக்கென்று நீர் ஏற்படுத்தியிருக்கிற மத்தியஸ்தர் மூலமாக நாங்கள் உம்மிடம் வந்திருக்கிறோம், அவர் எங்கள் கடன்களைத் தீர்த்துவிட்டார், ஆதலால் அவர்நிமித்தம் எங்களுடைய கடன்களை மன்னியும்! என்று கெஞ்சுகிறோம்.

V. மன்றாட்டோடு சேர்ந்த அறிக்கை. "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல" என்று அறிக்கையிடுகிறோம். இதினாலே, நாம் நமது ஜீவியத்தில் நமக்கு விரோதமாக எவர்கள் தப்பிதம் செய்கிறார்களோ, அவர்களுக்கு மன்னிப்புக்கொடாவிட்டால், நமக்கும் தேவனிடத்தில் மன்னிப்பு இல்லை என்றும் விளங்குகிறது. "மன்னியாதவனுக்கு மன்னிப்பில்லை" என்பது சரியான வாசகந்தான். இதினாலே நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்யும் குற்றத்தை நாம் மன்னித்துவிட்டால், தேவனும் நமக்கு விரோதமாக நாம் செய்த பாவங்களை மன்னித்துவிடுகிறார் என்பது கருத்தல்ல. இப்படி நினைப்பது, நம்முடைய பாவமன்னிப்புக்கு நம்மிலும் கொஞ்சம் மிச்சப்புண்ணியம் உண்டென்ற தப்பான கருத்தாயிருப்பதுடன், நாம் மற்றவர்களுக்கு மன்னிக்கும் குற்றமும், தேவன் நமக்கு மன்னிக்கும் குற்றமும் ஒன்றுபோல்தான் என்ற பிசகான கருத்தையும் கொடுக்கலாம்.

அப்படியல்ல, நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கும் மன்னிப்புக்கும் தேவன் நமக்குத் தரும் மன்னிப்புக்குமுள்ள

சம்பந்தமானது புண்ணியம், அல்லது முகாந்தர பாகமா யிராமல், நாம் அவரிடத்தில் போய் அவருடைய மன்னிப்பைக் கேட்கிறதற்கு நம்மைத் தகுதியாக்குகிற நிபந்தனையாயும், நம்முடைய அவசியத்துக்கேற்ற அவருடைய தீர்மானமாயுமிருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் மன்னிப்புக்கொடுக்கும் கிறிஸ்துவின் கட்டளையானது, தம்மைப் பின்பற்றுகிறவர்கள் ஏகமனதுடன் கூடி வாழ அவர் சொல்லியிருக்கும் வேறு அநேக போதனைகளுடன் சேர்ந்ததாயிருக்கிறது.

மற்ற மனுஷர் நமக்குச் செய்யும் தப்பிதங்களையும், தேவனுக்கு விரோதமாக நாம் செய்யும் பாவங்களையும் தாரதம்மியப்படுத்துகிற பாவனையாக இயேசு ஒரு உவமையும் சொல்லியிருக்கிறார். அந்த உவமையாவது:—"பரலோக இராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு இராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகமில்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் விற்றுக் கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து வணங்கி: ஆண்டவனே என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி அவனை விடுதலைபண்ணிக் கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப் போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய, தன் உடன் வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு அவனைப் பிடித்துத் தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவன் உடன்வேலைக்காரன் அவன் காலிலே

விழுந்து: என்னிடத்தில் பொறுமையாயிரும்; எல்லா வற்றையும், உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று அவனே வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல் போய், அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்கு மளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவன் உடன்வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப் பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது அவனுடைய ஆண்ட வன் அவனை அழைப்பித்து, பொல்லாத ஊழியக்கா ரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியால் நான் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட் டேன்; நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப் புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்" என்பதே. (மத். 18. 23–35.)

இந்த உவமையானது கீழ்தேச அரசரின் ஆளுகைப் போக்கை மனதில் வைத்துச் சொல்லப்பட்டதாக நினைக் கலாம். இதில் உணர்த்தப்படும் அரசன் தேவனையும், கணக்குப் பார்த்தல் நியாயத்தீர்ப்பையும் குறிக்கிறது. பதினாயிரம் தாலந்து என்பது, நாம் தேவனுக்கு விரோதமாய்ச் செய்திருக்கும் எண்ணிறந்த பாவங்களைக் குறிக்கிறது. அதை எண்ணமுடியாததும், தொலைக்க இயலாததுமான பெரிய கடனாயிருக்கிறது. பதினாயிரம் தான் கிரேக்கர் கணக்கு சாஸ்திரத்தில் உயர்ந்த தொகை யாயிருந்தது. இது பெரிய தொகைதான். இதை வெள் ளித் தாலந்தாக விலையிட்டால், பவுனுக்குப் பதினைந்து ரூபாய் வீதப்படி நாலரைக்கோடி ரூபாயாகும்; இதைப் பொன் தாலந்தாக விலையிட்டால் 70 கோடிக்கு அதிகமாகும்.

வேதாகமத்தில் வரும் தாலந்து கணக்குகளில், இது உயர்ந்த கணக்கு.*

• உன் கடனைப்பற்றி கவலையற்றவனாய், சாங்கோபாங்கத்துடன் உட்கார்ந்திருக்கிறவனே, உனக்கு 70 கோடி ரூபாய் கடனிருக்கிறதென்று உணர்ந்துகொள். உன் கடனுக்கு மிஞ்சின தொகை, கணக்கு சாஸ்திரத்தின் லக்கங்களில் இல்லை என்றும் உணர்ந்துகொள்வாயாக. இந்தக் கடனை நீ தீர்க்காவிட்டால், நீ தொலைந்தாய். இனி நேராகப் பேசுவோம். "நீ நிறைவேற்றாத ஒரு கடமை, செலுத்தாமலிருக்கிற ஒரு கடன்" என்று அறிந்துகொள். மேலும் நீ தேவனுக்குச் செலுத்தவேண்டிய கடனோ, இந்த உபமானத் தொகைக்கும் அதிகந்தான்; அதைச் சரியாய் உபமானித்துக் காட்ட இவ்வுலகத்தில் திருஷ்டாந்தமில்லை, லக்கமுமில்லை. உன் பாவங்கள் ஆத்துமாவை அழிவுக்குட்படுத்தத்தக்க அவ்வளவு பாரமாயிருக்கின்றன!

இதைக் கேட்கிற ஒருவன் என்விஷயத்தில் காரியம் வேறே—எனக்கு அவ்வளவு கடனான பாவபாரமில்லை—நான் தேவனுடைய புத்திரன்—அவருடைய குமாரனாகிய இயேசுவின் மூலமாய் என் கடன் அனைத்தும் தீர்ந்துவிட்டது—என் கடன் கணக்கு கிறுக்கப்பட்டாயிற்று—மெய்தான் நான் நாள்தோறும் பாவம் செய்தாலும், என் இரட்சகராகிய இயேசுவண்டைப் போய் "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று கெஞ்சுகிறேன். அவர் எனக்கு மன்னிப்பைத் தருகிறார் என்று சொல்லுகிறான்.

---

* தேவாலயம் கட்ட சேகரிக்கப்பட்ட பொன் தாலந்து, 29 (யாத். 38. 24.). தாவீது ராஜன் சேர்த்துவைத்த பொன் தாலந்து, 3,000 (1 நாளா. 29. 1–7.). பிரபுக்கள் ஆலயத்துக்குக் கொடுத்த பொன் தாலந்து, 5,000 (1 நாளா. 29. 1—7.). சேபாவின் ராஜஸ்திரீ கொண்டு வந்த தாலந்து, 120 (1 இரா. 10. 10.). எசேக்கியாமேல் சுமத்தப்பட்ட பொன்தாலந்து, 30 (2 இரா. 18. 14.). யோசியாமேல் சுமத்தப்பட்ட பொன்தாலந்து, 1. (2 நாளா. 36. 3.)

அப்படிச் சொல்லுகிறவனே, உனக்கு விரோதமாய் குற்றஞ்செய்தவர்களுக்கு நீ மன்னித்திருக்கிறாயா?—ஆம், மன்னித்துவிட்டேன் என்கிறாயாக்கும்—நல்லது. மன்னித்தும் மறந்தும் விட்டாயா?—இல்லை என்று மெது வாகச் சொல்லுகிறாய். மன்னிக்கக்கூடும், மறக்கக்கூடு மா? என்கிறாய். தேவன் உனக்கு இப்படிச் சொன்னால் சரிதானா?—உன் மனம் ஆறிப்போகுமா? — ஆறாதே. அவரோ, “நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்” என் கிறார் (எரே. 31. 34.). தேவன் மன்னிக்கிற மாதிரி இதுதான். அவர், நான் உங்கள் அக்கிரமங்களை மன் னித்து, உங்கள் பாவங்களை மனதில் நினைத்துக்கொள் ளுவேன் என்று சொல்லுவாரானால், நமக்கென்ன ஆறு தலிருக்கும்! மறவாமலிருப்பது மன்னியாமலிருப்பதல் லவா?

கிறிசொஸ்தம் என்பவருடைய சபையிலுள்ள சிலர், கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லும்போது, “எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல” என்ற வாசகத்தைச் சொல்லவில்லையாம். வாசிக்கிறவனே, நீ அந்த வாசகத்தைப் பூரண மனதோடு சொல்லக்கூடுமோ? நீ இந்த வாசகத்தை ஆழ்ந்து யோசிக்கிறபோது, உன் வாய் அடைபட்டுப்போகிறதில்லையா? நாம் மற்றவர்களுக்கு மன்னிக்கிறதில் எவ்வளவு வருத்தமிருக்கிறதோ அதற்கு அதிகமாக தேவன் நமது பாவங்களை மன்னிப்பதிலும் வருத்தமிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளவேண்டும்.

நீங்கள் உங்கள் அயலார் உங்களுக்குச் செய்த தப் பிதங்களை மன்னிக்கவில்லை என்றால், இந்த விண்ணப் பத்தைச் சொல்ல உங்களுக்கு நியாயமில்லை. ஒருதட வை இயேசு இப்படிப்பட்ட சகோதர அன்பைப் பற்றித் தமது சீஷருக்குப் போதித்தபோது, அவருடைய போதனையின்படி நடக்க நம்மால் சக்தியில்லையே என்று சீஷர் அங்கலாய்த்து “ஆண்டவரே, எங்கள் விசுவாசத் தை வர்த்திக்கப்பண்ணும்” என்று வேண்டிக்கொண் டார்கள் (லூக். 17. 5.). நாமும் இப்படியே விண்ணப்

பம் செய்வோமாக. நமது விசுவாசம் வளரவளர நமது அன்பும் வளர்ந்து, ஒருவருக்கொருவர் மன்னிக்கவும், ஏவப்படுவோம்.

பொருளடக்கம்.

I. நாம் தேவனுடைய பிள்ளைகளாகப் பாவமன்னிப்பைக் கேட்கிறோம்.

II. பாவம் ஒரு கடனாக ஸ்தாபிக்கப்பட்டு, மன்னிப்புக் கேட்கிறோம்.

III. இது கிருபை விண்ணப்பமாயிருக்கிறது.

IV. பாவமன்னிப்பு விஷயத்தில் நாம் தேவனுடைய முறைக்குள் அடங்குகிறோம்.

V. இது மன்றாட்டோடு சேர்ந்த அறிக்கையாயிருக்கிறது.

## 9. ஆறும் விண்ணப்பம்.

"எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதிரும்."
(மத். 6. 12. லூக். 11. 4.)

கர்த்தருடைய ஜெபமானது, நித்திய வீட்டுக்குப் பயணம் பண்ணிப்போகும் வீட்டாருக்கு அனுதினப் பிரயோசனமாயிருக்கிறது. இந்தப் பிரயாணம் இலேசானதல்ல. அந்தப் பிரயாணத்துக்கு இருப்புப்பாதையில்லை. பூர்வ பாதை எதுவோ அதுவே இப்போதும், இனிமேலும் நாம் நடக்கவேண்டிய பாதையாயிருக்கிறது. அந்தப் பரமவீட்டின் பாதை, உண்டுபண்ணப்பட்ட பாதையாயிராமல் நாமே நடந்து உண்டாக்கவேண்டிய பாதையாயிருக்கிறது. பூலோக யாத்திரையில் நாம் தூங்கினாலும் வண்டி ஓடுமே; பரலோக பயணத்திலோ அப்படியல்ல, நாமே வண்டி; நாமே அது போக விசை கொடுக்கவேண்டும். நமது தூக்கத்தில் அந்த வண்டி நடவாது. நாம் அந்தப் பாதையில்

தரிசித்தல்ல, விசுவாசித்து, நடந்து, கடந்துபோகிறோம். அப்படிப் போகும்போது, நம்மில் சிலருக்கு நமது நிழல் வரவர நீளமாகத் தோன்றி, ஜீவகாலப் பொழுது அஸ்தமனமாகிறதுபோலத் தெரிகிறது. நமக்கு முன் நடந்துபோன இயேசு, நமது கண்ணுக்கு மறைந்து, பரலோகத்தின் வெளிச்சமாய்ப் பிரகாசிக்கிறார்; நாமும் அந்தப் பிரகாசத்தை நோக்கி நடந்துபோகிறோம்;—

"மேல் நோக்கிப் போகின்றாயோ?
மேல் நோக்கியே போ, போ;
கோல் தடியோடு போ, போ;
கீதம் பாடிப் பாடிப் போ;
எட்டி நட, மேலே போ."

நாம் நமது மோட்ச பயணத்தில் பாடிப்பாடி நடப்பதுடன் ஜெபித்து, ஜெபித்தும் நடக்கவேண்டியது. அப்படிப்பட்ட ஜெபங்களில் "எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதிரும்" என்பதும் ஒரு பிரயாணப் பிரார்த்தனையாயிருக்கிறது.

I. இது நமக்கு வழி காட்டுகிறவரைப் பார்த்துச் செய்யும் ஒரு மனுவாயிருக்கிறது.

1. நமது தகப்பனாரே நமது வழிகாட்டி என்பதை இது குறிக்கிறது. வேறு வழிகாட்டிக்கு மோட்சவழி தெரியாது. அப்படித் தெரியாமலிருப்பது சரிதான், ஏனெனில் நமது பயணம், இடத்தைப் பற்றினதாயிராமல் காலத்தைப் பற்றினதாயிருக்கிறது. நாம் எத்தனையோ காரியங்களை இதற்குமுன் பார்த்திருந்தாலும், நாளையத்தினம் நமக்கு இன்னும் தெரியாது. எந்தெந்தப் படங்களை நாம் பார்த்தாலும், வருங்காலப் படத்தை நாம் பார்த்தவர்களில்லை; பூமிசாஸ்திரப் படமொன்றும் இதில் நமக்கு உதவிசெய்யமாட்டாது. நமது அடுத்த நிமிஷம் மந்தாரம்போலிருக்கிறது. சிலவேளை நாம் அவநம்பிக்கை என்னும் அந்தகார உளையில் அகப்பட்டு அவதிப்படலாம்; அல்லது கஷ்டகிரியை கஷ்டத்தோடு ஏறலாம்; அல்லது மரண நிழலின் பள்ளத்தாக்கிலுள்ள

காளி கூளிகளான பயங்கரங்களைக் காணலாம்; அல்லது சந்தேக துருகத்துக்குள் அடைபட்டிருக்கலாம்; அல்லது ஆனந்த மலையின் வாழ்வுகளைப் பெற்று அகமகிழலாம். நமது வழியில் சிங்கங்களுமுண்டு; நம்மை வழிமறிக்கும் இராட்சதருமுண்டு. நாம் அவர்களை வெல்லுவோமோ, அவர்கள் நம்மை வெல்லுவார்களோ, யாருக்குத் தெரியும்? அதை நமக்குத் தெரிவிக்க ஒரு ஜோசியமுமில்லை. அவை அனைத்தையும் நமது பிதா அறிந்திருக்கிறார்; ஏனெனில் அவர் அநாதிநித்தியராயிருக்கிறார். அவர் ஆதியிலிருந்தே அதின் அந்தம் இப்படியாகுமென்பதை அறிகிறார். அவர்பேரிலேதான் நாம் நமது நம்பிக்கையை வைத்து, அவரை நோக்கிக் கூப்பிடுகிறோம்."

இந்த விண்ணப்பமானது முந்தின விண்ணப்பங்களைத் தொடர்ந்ததாகவே இருக்கிறது. ஒவ்வொரு விண்ணப்பத்தின் ஆரம்பத்திலும் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்ற முகவுரை வாசகத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டியது; அப்போது இந்த விண்ணப்பமானது "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதிரும்" என்றாகும். இதை நாம் தினந்தோறும் சொல்ல மனச்சடை வடைகிறதில்லை. நாம் அதிகச் சாதாரணமாக வழங்கிவரும், பின்வரும் கீதத்தைப்போல் இந்த விண்ணப்பத்தையும் சொல்லவேண்டும்:—

பாதை காட்டும்!
தூரம் வேண்டாம்; ஓர் அடி போதும்;
காலைக் காரும்; ஓர் அடி போதும்;
புதுப்பாதை, தூரம் போகேன்;
பாதை காட்டும்!
முன் இஷ்டம்போல் நடந்தேன், இப்போ நீர்
பாதை காட்டும்!
டம்பம் நாடிப் பயமற்றிருந்தேன்;
கர்வங் கொண்டேன்;
போனதை மறவும்!

தயாபலந் தந்தீர்; இன்னும் தாரும்!
இன்னும் தாங்கும்!
காடு, மலை, சேறு, மழை தாண்டி;
ராப்போ மட்டும்.
அதிகாலை வரும்; அப்போ காண்பேன்,
ஆசித்த தூதரை;
சந்தோஷமாய்!

இங்கே சோதனைக்குட்படப் பண்ணாமல் பாதை காட்டும் என்று கேட்பதின் சரியான கருத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டியது. வழிகாட்டுகிறதும் வழி நடத்துகிறதும் வேறே. வழி நடத்துகிறது அன்போடும் பட்சத்தோடும் மெதுவாய் சகாயம் செய்வதையும், வழி காட்டுவது, பலவந்தமும் விசையுமாய்ச் சகாயம் செய்வதையும் உணர்த்துகிறது. வழி நடத்துவது கைபிடித்துச் சகாயம் செய்வதையும், வழிகாட்டுகிறது, தான் முன் நடந்து, அல்லது தன் கையைக் காட்டி உதவி செய்வதையும் குறிக்கிறது. ஒருநாள் ஒரு வீட்டார், கார்ன்வால் நாட்டுமலை உச்சிக்கு ஏறினார்கள். தகப்பன் முந்தியும் தாய் பிந்தியும் மகன் மத்தியிலுமாய் ஏறிப்போனார்கள். ஒரு சிகரத்தில் அவர்கள் ஏறிப்போகையில் தாய் தாழ இருந்து, "மகனே, உன் தகப்பனுருடைய கையைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டாயா?" என்று கூவினாள்; மகனோ, "இல்லை, அம்மா! தகப்பனார் என் கையைப் பலமாகப் பிடித்திருக்கிறார்" என்று மறுசத்தம் கொடுத்தான். இப்படியே நம்முடைய பரமபிதாவும் நம்மை மோசங்களுக்கு ஊடே கைபிடித்து நடத்தி, தீமைக்குட்படாதபடி நம்மை ஆதரித்துவருகிறார். சோதனைகளாகிய பாதைகள் நமக்கிடையில் வரும்போது, நாம் உடனே "பிதாவே, எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதேயும்" என்று கூப்பிடுகிறோம்.

2. நமது பிதா கிட்ட இருக்கிறார் என்ற உணர்ச்சியால் இந்த விண்ணப்பத்தைச் செய்கிறோம். தூரத்திலிருக்கிற ஒரு தேவனைப்பார்த்து நாம் இப்படிக் கேட்கிறதில்லை. அப்படிப்பட்ட தேவன் நாம் கூப்பிடும்

தருணத்தில் நமது குரலைக் கேட்கவும், உடனே வந்து
நம்மை வழிநடத்தவும் முடியாது. சிலருடைய மன
துக்கு, தேவன் நெருங்க முடியாதவரும், நித்திய
ஜோதிக்குள் வாசம்செய்கிறவரும், தம்மட்டில் கவுர
தையா யிருப்பவரும், லட்சாதிலட்சம் மயிலுக்கப்பா
லிருந்து, ஒருவர் கண்ணுக்கும் தென்படாதவருமான
வர் என்கிற எண்ணமிருக்கிறது. நமக்கோ அப்படி
யல்ல. நாமோ, அவர் பரலோகத்திலிருக்கிற நம்
முடையபிதாவானபடியால், எங்குமிருக்கிறார் என்று
அறிந்திருக்கிறோம். அவர் அளவிடப்படாதவரானதால்
மாத்திரம் அவர் பரலோகத்திலிருக்கிறார் என்று சொல்
லுகிறோம். பிதாவானவர் குமாரன் மூலமாய், பரிசுத்த
ஆவியைக்கொண்டு நம்மை நடத்துகிறார்; அவர் தம்மு
டைய ஆவியால் நம்முடைய ஆவியுடனிருக்கிறார். அவர்
பூரண தேவனாயிருப்பதால், சமீபத்தில்தானிருக்கவேண்
டியது. கைக்கும், அது எட்டி எடுக்கும் பொருளுக்கும்,
சிறகுக்கும் அது வீசும் காற்றுக்கும், ஆற்றுக்கும்,
அது புறப்படும் ஊற்றுக்கும், சூரியனுக்கும் அது வீசும்
ஒளிக்கும், எவ்வளவு சமீபமோ அவ்வளவு தேவனுக்
கும் நமக்கும் சமீபமுண்டு. இல்லை—இவற்றிலும் சமீப
மென்றே சொல்லவேண்டும், ஏனெனில் விசுவாசிகள்
உள்ளத்திலிருக்கும் அன்பானது, அவர் அவர்கள் உள்
ளத்தில் வசித்து, அவரே கொடுக்கும் அன்பாயிருக்
கிறது. ஒருவன் மனதுக்குப் பாவம் சமீபம், ஆபத்து
சமீபம், சாத்தான் சமீபம், துக்கம் சமீபம், மரணம்
சமீபம், ஆனால் நமது ஆத்துமாவின் வழிகாட்டியோ
அவைகளிலும் அதிக சமீபமாயிருக்கிறார். ஆதலால் இந்த
விண்ணப்பம் தூரத்திலிருக்கிற ஒருவரைப் பார்த்து
கூப்பிட்டுச்சொல்லும் சத்தமாயிராமல் தனக்குச் சமீப
மாய், தன்னோடிருக்கும் தேவனோடு மெதுவாகக் கலந்து
பேசுகிற மன்றாட்டாக மாத்திரமிருக்கிறதென்று உணர்
ந்துகொள்ளவேண்டியது. அவர் எப்போதும் நமக்குத்
துணை செய்யவும், நம்மை வழிநடத்தவும் சமீபமா
யிருக்கிறார்.

II. இந்த மன்றாட்டானது, முந்தின விண்ணப்பத்தின்படி நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டாலும், மறுபடியும் பாவத்தில் எங்கே விழுவோமோ என்ற பயத்தோடு செய்யப்படுகிறது. நாம் பாவத்திலிருந்து பிறந்து, பாவத்துக்கே பயணம் செய்கிறவர்களாயிருந்தாலும், அடிக்கடிப் பாவத்தில் விழுகிறவர்களானபடியால், முந்தின விண்ணப்பத்தின்படிப் பாவமன்னிப்பைக் கேட்டோம். நாம் அப்படியே பாவமன்னிப்பைப் பெற்றாலும், நமது ஆவியானது செலுத்தவேண்டிய கடன்களைச் செலுத்த இயலாமல், அப்போஸ்தலனைப்போல கிறிஸ்துவின் அன்புக்கு விரோதமான காரியங்களைப் பேசி அல்லது செய்து மறுபடியும் பாவத்துக் குட்படுகிறோம். ஆதலால் நம்மைப் பாவத்தில் விழாதபடி காக்க இந்த விண்ணப்பத்தைத் திரும்பத் திரும்பப் பண்ணுகிறோம். ஆதலால் முந்தின மன்றாட்டுக்கும் இதற்கும் சம்பந்தமிருக்கிறது. முந்தின பாவங்களுக்கு மன்னிப்பைப்பெற்ற பின், இனிப் பாவஞ் செய்யாதபடி அவருடைய கிருபை வேண்டுமென்று கெஞ்சுகிறோம்.

“சோதனை” என்ற பதம் வேதத்தில் இரண்டு கருத்தாக வழங்கப்பட்டிருக்கிறது. ஒன்று பரீட்சையையும், இன்னொன்று நயப்படுத்துவதையும் உணர்த்துகிறது. இதில் பரீட்சைக் கருத்து நன்மையும், நயப்படுத்தும் கருத்து நஷ்டமுமானது. “தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்” என்பதில் வரும் கருத்து, ஒரு தோட்டக்காரன் தன் செடிகளைக் கிளை நறுக்குவதுபோலும், ஒரு தட்டான் பொன்னைப் புடமிடுவதுபோலும் என்பதைக் குறிக்கிறது. “சாத்தான் தாவீதைச் சோதித்தான்” என்பதில், அவன் தாவீதைப்பாவத்தில்விழ நயப்படுத்தினான் என்பதைக் குறிக்கிறது. நமக்கு நேரிடுகிற சோதனைகளெல்லாம் பரீட்சை என்றும், சாத்தானுடைய சோதனைகளையும் ஆண்டவர் நடத்தி நமக்கு நன்மையாய் முடியப்பண்ணுகிறார் என்றும் நாம் எண்ணிக்கொண்டாலும், சாத்தானால் நமது கஷ்டத்துக்கென்று என்னென்ன சோதனைகளுண்டாகுமோ, அவற்றையெல்லாம் அகற்றி நமக்குச் சகாயம் செய்

யவேண்டுமென்பதுதான் இவ்விடத்தில் நாம் செய்யும் விண்ணப்பத்தின் கருத்தாயிருக்கிறது. பாவத்தைப்பற்றிய நினைவு நம்மை நடுநடுங்கப்பண்ணுகிறபடியால், நாம் பயந்து, "பிதாவே! எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாதிரும்" என்று ஜெபிக்கிறோம்.

III. நமது ஜீவியத்தின் பாதையில் சோதனைக்கேதுவான ஏதுக்களும், சமயங்களுமிருக்கிறதை அறிகிறதால் இப்படி மன்றாடுகிறோம்.

நமது ஜீவபாதையில் வரும் சோதனைகள் இன்னதென்று நமக்குத் தெரியுமானால் விலகிக்கொள்ளலாம். ஒவ்வொரு சோதனையின் பக்கத்தில் "இங்கே மோசம்," "இங்கே வலை," "இங்கே சாவு," "இது விஷம்" என்று ஒருபலகையில் எழுதப்பட்டுத் தொங்குமானால், அதைப் படித்துப் பார்த்து அந்தந்தப் பாவத்தை விட்டு விலகிக் கொள்ளலாம்; ஒரு தெளிவான தெப்பத்தில் முதலை நீந்தும்போது எவன் அதனுள் இறங்கி ஸ்நானம் செய்வான்? தாமரைமலர்மேல் பூநாகமிருக்கையில் எவன் அதைப் பறிக்கக் கை நீட்டுவான்? பைத்தியகாரன்தான் அப்படிச் செய்வான். ஜீவனுக்கு மரணத்துடன் சிநேகமில்லை; பக்தர் பாவத்துக்கு இயல்பாகவே விலகுவார்கள்; ஆனால் நமக்குச் சமீபத்திலிருக்கும் பாவமானது, தன்னைப் பாவம் என்று காட்டாமல், வேறு ரூபங்கொண்டு காணப்படுகிறதால், அடிக்கடி நாம் மோசப்பட்டுப் போகிறோம்.

நமது வழக்கமான தொழிலிலே நாம் சோதிக்கப்படலாம். தொழில் நடத்துவது பாவமல்ல. இவ்வுலகத்தின் வாழ்வுகளையும் பாக்கியங்களையும், சம்பாதிக்கிறதும் அநுபவிக்கிறதும் பாவமல்ல. ஆனால், அதின் வழியாய் நாம் பாவத்துக்கு இழுக்கப்பட்டுப் போவதுண்டு; அதின் வாழ்வையே சதமென்றெண்ணி, அதற்காகவே முயற்சி செய்து, தேவனைப்பற்றிய எண்ணத்தையும், மோட்சத்தைப்பற்றிய நினைவையும் இழந்துபோகிற அநேகரை நாம் பார்க்கிறோம். மனிதனைப் புதைத்தால், அவன் மண்ணாய்ப் போகிறதுபோல, உலகத்தை நாடித் தன் தொழிலை நடத்துகிறவன் கடைசியாக உலகத்தானாகி விடுகிறான்

நமது கூட்டுறவால் நமக்குச் சோதனையுண்டாகிறது முண்டு. இதை ஒரு சரித்திரத்தால் திருஷ்டாந்தப் படுத்துகிறோம். - ஆதிச்சபையில் மார்க்கஸ் என்று பேருடைய பக்தியுள்ள ஒரு கிறிஸ்தவனிருந்தான். அவன் மனைவியோ, பழைய அஞ்ஞான எண்ணங்களில் சிலவற்றை தன் மனதில் பேணிவந்தாள். அவளுக்கு அப்பொல்லோ, யூப்பித்தர், வீனஸ், தியானாள் முதலிய பொய்த் தேவர்களைப்பற்றிய கதைகளில் அதிகப் பிரீதியுண்டு. அவர்கள் தங்கள் மக்களைத் தங்களுடைய உயர்ந்த அந்தஸ்துக்கேற்றபடி பிரபுக்களின் பிள்ளைகள் படிக்கும் கல்விச்சாலைகளில் கல்வி கற்க ஏற்பாடு செய்தார்கள். இந்தப் பிள்ளைகள் வாலிபரானபோது, தங்கள் பெற்றோரிடம் வந்து, நாம் மற்றவர்களுடன் கூடி அப்பொல்லோவின் கோவிலுக்குப் போய் வந்தாலென்ன? இன்னார் வீட்டுக் கலியாணம் அஞ்ஞானமுறைப்படி நடந்தால் நமக்கென்ன? இதினாலெல்லாம் நம்முடைய மார்க்கத்தை நாம் விட்டுப்போகிறதாகுமா? நம்முடைய விசுவாசம் அசையவாபோகிறது? இப்படி அவர்களுடன் பலவிஷயங்களில் கலந்து ஜீவித்தால் அல்லவா, அவர்களை நமது மார்க்கத்துக்கு இழுக்கலாம், மற்றப்படி இத்தனை ஆயிரம் ஜனத்துக்குள் நாம் எம்மாத்திரம் என்றிப்படி, அடிக்கடிச் சொல்லித் தொந்தரவு செய்தார்கள். மார்க்கஸ் நல்ல பக்தனாயிருந்தாலும், அவர்கள் வார்த்தைகளால் மேற்கொள்ளப்பட்டு, உங்கள் மனதின்படிச் செய்யுங்கள்; ஆனால் மெய்யான தேவனையும், இயேசுகிறிஸ்துவையும் மறவாதேயுங்கள் என்று எச்சரித்துச் சொன்னான். அவரை மறப்போமா என்று வாது கூறினார்கள். அப்பால் வரவர விக்கிரக ஆலயங்களுக்குப் போனார்கள்; விக்கிரகங்களைக் கும்பிட்டார்கள்; அவைகளுக்குப் படைக்கப்பட்டதைப் புசித்தார்கள், சிலவற்றை வீட்டுக்கும் கொண்டுவருவார்கள்; அஞ்ஞானச் சடங்குகளில் சம்பந்தப்படுவார்கள்; கடைசியாக சில விக்கிரக சிலைகளையும் கடையில் விலைக்கு வாங்கித் தங்கள் வீடுகளில் மாலைபோட்டு, தூபங்காட்டுவார்கள். இவையெல்லாம்

விக்கிரகங்கள்பேரிலிருந்த நம்பிக்கையினாலும், பயத்தி னாலுமல்ல, ஊரிலுள்ள நாலுபேரைப்போல ஒப்புக்குச் செய்தால் நமது குடும்பத்துக்கு ஊரில் ஒரு மதிப்பு இருக்கும், மற்றப்படி நம்முடைய அந்தஸ்துங் கெட்டுப் போம் என்றெண்ணித்தான் செய்தார்கள். தகப்பனார் வர வரக் காரியம் மிஞ்சுகிறதைத் தடுத்தும் அவர் சொல்லைத் தட்டிவிட்டார்கள். அப்பால் அவ்வூரிலுள்ள மற்றக் கிறி ஸ்தவர்கள், இதென்ன அநியாயம்! இப்படியும் செய்வா ருண்டா? இதுதானா கிறிஸ்துமார்க்கம் என்று கேட்டால், அவர்களுடன் எதிர்பேசி, தாங்கள் செய்த காரியங்கள் தோஷமில்லை என்று நியாயம் சொல்லுவார்கள். முடி வாகச் சொன்னால், குழந்தைப்பிராயத்தில் நல்ல கிறிஸ்த வர்களாயிருந்த பிள்ளைகள் தங்கள் கூட்டுறவால் கெட்டு, அஞ்ஞான வாலிபரின் சோதனைக்குட்பட்டு முற்றிலும் அஞ்ஞானிகளாய்ப்போனார்கள். இக்காலத்திலும் இப் படியே பார்க்கிறோம். அநேகருடைய கிறிஸ்துமார்க்கம் இந்துக்களின் கூட்டுறவால் கெட்டுப்போகிறது. அவர் களை இழுக்க அவர்களுடன் உறவாடுகிறோம் என்கிற பலர் அவர்களால் இழுக்கப்பட்டு கிறிஸ்துவை மறுத லிக்கும் சோதனைக்குட்படுகிறார்கள்.

இல்லறம் விட்டுத் துறவறம் போகிறதாலும் நாம் சோத னைக்குட்படலாம். கிறிஸ்துமார்க்க உபதேசங்களைக் கவ னித்தால், இவ்வுலகத்தைச் சேர்ந்தவர்கள் அநேகர் என் றும், அதை முற்றிலும் வெறுத்துவிட்ட பக்தர் சிலர் என் றும் தெரியவரும். நாம் இவ்வுலகத்தி லிருந்துகொண்டு உலகத்தை ஜெயிக்கவேண்டுமேயன்றி, அதை விட்டுப் போட்டுக் காடுவனாந்தரங்களில் வசித்துக் காய்கறிகளைப் புசிப்பதால் பாவத்தை ஒழித்துவிடலாமென்பது பிசகு. இன்பமுள்ள பரதீசில், கனிவர்க்கங்களைப் புசித்துவந்த ஆதிமனிதர் தங்கள் பரிசுத்த ஸ்திதியிலிருந்தே பாவம் செய்தார்கள். அதை விட்டு நாம் ஒரு வனத்துக் கோடி னாலும் பாவம் நம்மைப் பின்தொடருமென்பது மெய். ரிஷிகளில் அநேகர் மலைக்கெபிகளில் வசித்து, இலைகளில் படுத்து, கிழங்குகளைத் தின்று, சுத்தமான சுனைத்தண்ணீ

ளைப் பானம்பண்ணினாலும், அவர்களும் பாவ சிந்தைகளைத் தங்கள் இருதயங்களில் வளர்த்துக் கெட்டுப்போகிறார்கள்: முதலாம் ஆதாம் தோட்டத்திலும், இரண்டாம் ஆதாம் வனாந்தரத்திலும் சோதிக்கப்பட்டார். ஆதலால் அவருடைய பிள்ளைகள் பாவத்துக்கும் சோதனைக்கும் விலகிக்கொள்ள ஒரு கெபியையாவது, வனத்தையாவது, தோட்டத்தையாவது நாடிப்போவது சரியல்ல.

நாம் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருக்கும்போதே சோதனைக்குட்படலாம். கிறிஸ்துவானவர் சோதிக்கப்பட்ட காலத்தைக் கவனியுங்கள்; அதைப்பற்றி பிஷப் ஹால் சொல்வதாவது:—"இயேசு ஞானஸ்நான ஜலத்திலிருந்து கரையேறினவுடனே சோதனை என்னும் நெருப்புக்குள் விழுகிறார்; ஆவியானவர் புறாவைப்போல இறங்கினமாத்திரத்தில், ஆவியால் வனாந்தரத்துக்குக் கொண்டுபோகப்படுகிறார்; பிதாவானவர் இவர் என்னுடைய நேசகுமாரன் என்று சொன்ன அடுத்தநேரத்தில் பிசாசு நீர் தேவனுடைய குமாரனேயானால், என்று சொல்லி ஒரு சந்தேகத்தை அவர் மனதில் வைக்கப் பார்க்கிறான்" என்பதே. இம்மாதிரிதான் நமக்கும் சம்பவிக்கும் என்பதற்கு அது அத்தாட்சியாயிருக்கிறது. நீ தேவனோடு நல்லிணக்கமாயிருந்து, அவரால் வரும் இன்பத்தை உன் இருதயத்தில் அநுபவித்துக்கொண்டிருக்கும்போதே சாத்தான் உன்னைச் சோதனைக்குள் விழுத்தட்டலாம். அவனுடைய தந்திரங்களை நீ கண்டறிந்துகொள்ளமாட்டாய்.

IV. நாம் சோதனைக்குட்படத் தக்கவர்கள் என்பதை. இந்த மன்றாட்டால் காட்டுகிறோம். தேவதூதர்கள் இப்பூலோகத்தில் தேவகோபத்தை அல்லது தயவை வெளிப்படுத்த வந்ததில், அவர்கள் இவ்வுலகத்தின் பாவத்தால் கெடுக்கப்பட்டுப்போனதில்லை. நெருப்பில் புழுப் பற்றுவதுபோலவும், சூரிய கதிர்கள் நீட்டப்படுவதுபோலவும் அவர்கள் காரியமிருந்தது. ஆனால் மனுஷருடைய காரியமோ அப்படியல்ல. ஜலப்பிரளயத்துக்கு முன்

னும் பின்னும் அது சோதனையுள்ள பூமியாகவே இருந்தது. தேவ குமாரனாகிய இயேசு முதலாய், பாவந்தவிர மற்றெல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டார். நம்முடைய சுபாவத்தில், நாம் சோதனைக்குட்படும் தன்மையிருக்கிறது. சாத்தான், அதைத் தனக்கிஷ்டமானநேரத்தில் பிரயோகித்து நம்மை சோதனைக்குட்படுத்தலாம். அந்தச் சோதனையில், ஒருவரும் எதிர்பாராததும், சொன்னாலும் நம்பக்கூடாததுமான பாவங்களைப் பேசி அல்லது செய்து முடிப்பான். அவை அவனுடைய முந்தின குணங்களுக்கும் செய்கைகளுக்கும் முற்றும் விரோதமாக விளங்குவதால், அவனல்ல, வேறு யாரோ அவனுக்குள்ளிருந்து அவ்வளவையும் செய்து முடிக்கிறதாகத் தெரியவரும். பக்தியுள்ள ஆத்துமாக்களைப் பிசாசு கெடுக்கிறவகையில் இது ஒன்று. இத்தால் அந்த ஏழை ஆத்துமா தன் ஜீவகாலமெல்லாம் தவித்து, ஐயோ நிர்ப்பந்த மனுஷன் நான் என்று புலம்பிக் காலங்கழிக்கப் பண்ணிவிடுவான்.

நம்முடைய தன்மையில் இயல்பாயிருக்கிற பாவச் சுபாவத்துடன், பாவத்துக்கு இலேசில் சாய்கிற பலவீன குணமும் நமக்கு இருக்கிறது. "அவனவன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு, சோதிக்கப் படுகிறான்" என்று, யாக்கோபு அப்போஸ்தலன் சொல்லுகிறார். வண்டியை மாடுகள் இழுக்கிறதுபோலும், காந்தம் ஊசியை இழுப்பதுபோலும், மனுஷன் பலவீனமாய், தன்னை மறந்தவனாய் ஒரு சோதனையால் இழுக்கப்பட்டு அதில் அகப்படுகிற வேளைகளும் சிலதரம் நேரிடுகிறது. தன்னை இழுக்கும் யந்திரம் ஒன்றுக்கு ஒருவன் ஜாக்கிரதையுடன் தப்பிக்கொண்டாலும், தானே தனக்குள் தப்பிக்கொள்வது கூடாமையாயிருக்கிறது. மனுஷன் ஒரு ஆத்துமா உடையவனாயிருப்பதுபோல ஒரு சரீரமுமுடையவனாயிருக்கிறான். இவ்விரண்டையும் ஒன்றோடொன்று சண்டைக்கு மூட்டிவிட்டு நம்மைச் சாத்தான் கெடுக்கிறதுமுண்டு; அவை இரண்டையும் சேர்த்துக்கொண்டு சோதனைக்குட்படுத்துகிறதுமுண்டு.

ஒருவன் நான் இயேசுவுக்குச் சமீபமாய் ஜீவிக்கிறேன், அவருடைய ஆவி எனக்குள்ளிருக்கிறது; சோதனைகள் என்னை அணுகாது; பாவங்கள் என்னைக் கண்டவுடன் பட்சிகளைப்போலப் பறந்துவிடும் என்று நாலைந்து நாளைக்குச் சொல்லிக்கொண்டு திரியலாம். இயேசு தமக்குச் சமீபமாக வசித்து, தமது உபதேசத்தை இரவுபகலாய்க் கேட்ட சீஷரைப் பார்த்து "உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும், வெறியினாலும், லௌகீக கவலையினாலும் பாரமடையாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொன்னார் (லூக். 21. 34.). இயேசு தமது சீஷருக்குச் சொன்னதிலும், ஏழுதரம் அதிகமாக நம்மெல்லாரையும் பார்த்து "எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொல்லுகிறார்.

ஒவ்வொரு மனுஷனும் தனக்குப் பிரியமான பாவ சோதனைகளுக்கு விலகிக்கொள்ளப் பார்க்கவேண்டும். ஒருவன் மனது பிரியப்பட்டு, விட்டுவிட மனமற்ற பாவமானது, இன்னொருவனுக்கு இலேசாக விட்டுவிடக்கூடியதாயிருக்கலாம். மேலும் ஒருவன் ஒரு சோதனையை எளிதில் ஜெயித்ததுபோலத் தானும் ஜெயிக்கக்கூடும் என்றெண்ணுவது பிசகு. இரண்டுபேர் ஒரு ஊருக்குப்போகிற வழியில் இரண்டு கெஜ அகலமுள்ள ஒரு சேற்றுப்பள்ளமிருந்தால், இருவரும் ஒரே வயசுள்ளவர்களாயிருந்தாலும், ஒருவன் அதைத் தாண்டலாம், மற்றவன் அவனைப்போலத் தாண்டப் பிரயாசப்பட்டுச் சேற்றில் அகப்பட்டு, தேகமும் வஸ்திரமும் அழுக்காகிவிடலாம். அவ்விருவரும் மறுபடியும் திரும்பும்போது முன் சேற்றில் அகப்பட்டவன் மறுபடியும் நான் தாண்டப் பிரயாசப்படுவேன் என்று துணிந்து தாண்டினால் மறுபடியும் முன்போல அசுத்தமடைவான்; அவன் புத்திசாலியானால், இனி மறுபடியும் அதைத் தாண்டுவதைவிடச் சுற்றிப்போய்விட்டால், நானும் என் வஸ்திரமும் சுத்தமாயிருக்க வகையுண்டு என்று அப்படியே செய்தால் நலமாயிருக்கும். பாவத்துக்கும் அதின் சம்பந்தமான சோதனைகளுக்கும் விலகிக்கொள்வது இப்

படித்தான். பாவத்தோடு சமர்த்துப் பண்ணக்கூடாது. நாம் வழக்கப்பட்டதும், விட்டுவிட்டதுமான பாவ சோதனைக்கு நாம் சமீபிக்கும்போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டுச் சுத்தமான நான் எனக்கு முன்னிருக்கும் இந்தச் சேற்றைத் தாண்ட முயற்சித்து அதற்குள் விழுந்து அழுக்காகிறதைவிட அதின் கரைவழியாய்ச் சுற்றுச் சுற்றி நடந்து கடந்துவிடுவேனாக என்றெண்ணுவது புத்தியாயிருக்கும். மேலும் அந்தப் பள்ளத்தைத் தாண்ட சக்தியுள்ளவர்களும்கூட இப்படிச் சுற்றி விலகிக்கொள்வதே நலம். ஏனெனில் அந்தச் சேற்றைத் தாண்டும் பராக்கிரமனையும்கூடக் காலைத்தட்டிச் சேற்றுக்குள் விழத்தட்டச் சாத்தான் அந்தப் பாவச்சேற்றுக்குள் மறைந்துகொண்டிருக்கிறான். ஆதலால் பலவானும் பலவீனனும் அச்சேற்றுக்குப் பாலமிருந்தால் அப்பாலத்தின் வழியாயும், பாலமில்லாவிட்டால் அதைச் சுற்றியும் தன் ஜீவகால யாத்திரையைச் செய்வது புத்தியாயிருக்கும். நாம் ஒரு தரம் எந்தச் சிநேகிதனால், எந்தக் கூட்டத்தில், என்ன இடத்தில் பாவச்சோதனைக்குட்பட்டோமோ, அந்தச் சிநேகிதனையும் அப்படிப்பட்ட கூட்டத்தையும், இடத்தையும் விட்டு விலகி நடந்துகொள்வது நல்லது. கூத்துப் பார்க்குதல், நாடகம் பார்க்குதல் முதலிய தீயவழக்கங்களை விட்டுவிடவேண்டியது.

மொத்தமாகச் சொன்னால் கிறிஸ்தவனுடைய தேவபக்தியைக் குளிரப்பண்ணும் எந்த ஏதுக்களையும், அவன் ஞானஜீவனைப் பலவீனப்படுத்தும் எந்த விஷயத்தையும், தேவ ஊழியத்தை நஷ்டப்படுத்தும் எந்தப் பிரயத்தனத்தையும், வேத வாசிப்பையும் தியானிப்பையும் தடுத்துவிடுவதையும், கிறிஸ்துவின்மேலுள்ள அன்பைக் குளிரப்பண்ணுவதையும், எல்லாம் நீ கவனித்து விலகி நடக்கவேண்டியது. பலவித மன முயற்சிகளும், உடல் முயற்சிகளும் நல்லதுதான்; ஆனால் அவைகள் மிதமிஞ்சும்போது புத்தியையும் சரீரத்தையும் சேதப்படுத்திவிடும். "விசுவாசிகளுடைய மனமகிழ்ச்சிக்கு உயர்ந்த

மகிழ்ச்சி வேறில்லை" என்று பாக்ஸ்ற்றர் சொல்லுகிறதுடன் "மற்ற மகிழ்ச்சிகளெல்லாம் விசுவாசத்தின் மூலமாய்க் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திலிருந்தும், அவருடைய வசனத்திலிருந்தும், தர்ம செய்கைகளிலிருந்தும், நித்திய பேரின்ப தியானத்திலிருந்தும் வரும் மகிழ்ச்சிகளை நஷ்டப்படுத்திவிடும்; ஆதலால் மாம்சத்துக்கேதுவான மகிழ்ச்சி எனக்கு மகிழ்ச்சி அல்ல" என்கிறார்.

என்னை அறியாமல் பாவம் என்னமாய் வந்துவிடும் என்று ஒருவரும் வீம்பாகப் பேசக்கூடாது. ஒரு அரபிக்கதையில், கடலுக்குள்ளிருந்த ஒரு மலை தன் காந்த சக்தியால் சமீபத்தில் வரும் கப்பல்களையெல்லாம் உடைத்துவிட்டதென்று எழுதப்பட்டிருக்கிறது. நம்மை ஒரு பாவம் இழுத்து மோசப்படுத்தினதுண்டானால், அதினண்டை மறுபடியும் நெருங்குவது சரியல்ல; நெருப்புப் பொறிபறக்கும் இடத்தண்டை நாம் வெடிமருந்தோடு போகலாகாது; நாம் அற்ப விசுவாசிகளானால் பரிசுத்த புதையல்களுடன் கள்ளர் வீதிவழி நடக்கலாகாது; நமக்குத் தூரத்துக் காட்சி கட்டையானால் மேடு பள்ளமுள்ள காடுவழி பயணம் பண்ணக்கூடாது; நாம் பயங்காளிகளானால் நாய்களண்டைப் போகலாகாது; கோபஸ்தரானால் வம்பர் கும்பண்டைப் போகலாகாது; நாஸ்திகரானால், அதன் சம்பந்தமான புஸ்தகங்களை வாசிக்கலாகாது. நாம் டம்பாச்சாரியானால், மாயா சந்தைக்குத் தூரத்தில் குடியிருக்கவேண்டும்; நம்மைச் சோதனைக்குட்படுத்துகிறவர்களைக் கண்டால் "பிதாவே என்னைச் சோதனைக்குட்படப் பண்ணாதேயும்" என்று மன்றாடவேண்டும்.

## பொழிப்பு.

I. இது நமது வழிகாட்டுகிறவரைப் பார்த்துச் செய்யும் மனு.

1. நமது தகப்பனாரே வழிகாட்டி.

2. நமது பிதா கிட்ட இருக்கிறார் என்று உணருகிறோம்.

II. இந்த மன்றாட்டு, மறுபடியும் எங்கே பாவத்தில் விழுவோமோ என்ற பயத்தால் செய்யப்படுகிறது.

III. சோதனைக்கேதுவான ஏதுக்களும், சமையங்களுமிருக்கிறதால் இப்படி ஜெபிக்கிறோம்.

IV. நாம் இயல்பாக சோதனைக்குட்படத் தக்கவர் என்பதை இந்த மன்றாட்டால் உணர்த்துகிறோம்.

## 10. ஏழாம் விண்ணப்பம்.

"தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்."
(மத். 6. 13. லூக். 11. 4.)

"தீமையினின்று" என்னும் பதம் "தீயோனினின்று" என்று சிலரால் வியாக்கியானம் செய்யப்படுகிறது. இப்படி வியாக்கியானப்படுத்துகிறவர்கள், நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட பல வேதாகமப் பிரதிகளைத் தங்களுக்கு ஆதாரமாக வைத்துப் பேசுகிறதுண்டு. நாம் அந்த மூலபதத்தின் தாற்பரியத்தைப்பற்றிய கட்டி யின்னதென்று கவனிக்க அவசரமில்லை. இங்கே "தீமை" என்பது பாவமும் தீமையுமான எல்லாவற்றையும் பொதுவாக உணர்த்துகிறதாயிராமல் ஒரு விசேஷ தீமையை உணர்த்துகிறதாக எண்ணிக்கொள்ளவேண்டும்.

தீமைகளில், அந்தந்த ஆத்துமாவுக்கேற்ற வலிய தீமை இருக்கிறது. ஒரு மனுஷனுக்கு வலிமையாக இருக்கும் தீமை, இன்னொருவனுக்கு இலேசானதாயும், ஒருவனுக்கு இலேசானது மற்றொருவனுக்கு வெல்ல இயலாத வலியதாகவும் இருக்கும். அந்தந்தத் தீமையின் வலிமை அல்லது வலிமை இன்மை, அந்த ஆத்தும தத்துவத்துக்கும், அதினதின் பழக்கத்துக்கும் தக்கதா

யிருக்கலாம் என்பதை யாவரும் ஒத்துக்கொள்ளவேண்டியது. மேலும் இந்த வாசகத்தை அதின் முந்தின சம்பந்தங்களுடன் கவனித்தால், இயேசு தீயோனையல்ல, அந்தந்த ஆத்துமாவைச் சுற்றி நிற்கும் பிரதான தீமையைக்குறித்துப் பேசினுர் என்பது தெரியவரும்.

I. இந்தத் தீமை எது என்று கவனிப்போம். இப்பதத்தின் மூலக்கருத்தின்படி இவ்வார்த்தை மற்றத் தீமைகளை விலக்கி ஒரு விசேஷித்த தீமையைச் சுட்டிப் பேசுகிறதாயிருக்கிறது. மேலும் "தீமை" என்று ஒருமையில் பேசியிருக்கிறதேயன்றி "தீமைகள்" என்று பன்மையில் பேசப்படவில்லை. ஆகவே இயேசு ஏதோ ஒரு விசேஷித்த தீமையை இங்கே உணர்த்துகிறுரென்பது தெளிவாகிறது. எக்காலமும் ஏககாலமாயிருக்கிற இயேசுவுக்கு, அந்தந்த ஆத்துமாவுக்கு தன் ஜீவகாலத்தில் நேரிடும் விசேஷ தீமை இன்னது என்பது நன்றுய்த் தெரிந்திருக்கிறது. அந்த விசேஷித்த தீமை, அவன் ஆயுளில் சம்பவிக்கும் மற்றெல்லாத் தீமையிலும் வலியதாயிருக்குமென்பதை அவர் அறிந்திருக்கிறுர்; அந்த ஒன்றைப்பற்றித்தான் அவன் பயத்தோடும், எச்சரிப்போடும் ஜீவிக்கவேண்டியது; அதை அவன் விழிப்போடிருந்து வெறுக்கவேண்டியது; அதற்காக ஜெபிக்கவேண்டியது. "உன் வலது கண் உனக்கு இடறல் உண்டாக்கினுல் அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது நலமாயிருக்கும்; உன் வலது கை உனக்கு இடறலுண்டாக்கினுல், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாயிருக்கும்" என்று இரட்சகர் சொன்ன வாசகம், அந்தந்த ஆத்துமாவின் சம்பந்தமான பிரதான ஒரு தீமையைத்தான் உணர்த்துகிறது. இங்கே தீமை என்பது பாவந்தான். வேறெதைத்தான் இது குறிக்கும்?

1. இங்கே "தீமை" என்பது உலகத்தைக் குறிக்கிறதில்லை. சிலர், இது உலகத்தைத்தான் குறிக்கிறதென்று பேசுகிறதும், எழுதுகிறதும், பிரசங்கிக்கிறதுமுண்டு. அவர்கள் இங்கே தீமை என்பது, தேவன் உண்டாக்கினதும், நல்லதென்று கண்டதும், பலவித விருட்சங்களும் புஷ்பங்களுமிருந்து அலங்கரித்து மணப்படுத்துவதும், நாம் பிறந்து, வசித்து, மரிப்பதுமான இந்த மண்ணுலகத்தையே குறிக்கிறதென்றும்; இதிலுள்ள நல்ல வாழ்வுகள் நமது மனதைக் கவர்ந்துகொள்வதால் நாம் தீயவர்களாகிவிடுகிறோம்; "நாயன் நாட்டை யுண்டாக்கினார், நாம் நகரத்தை யுண்டாக்கினோம்." இந்த நகர ஜீவியத்தின் தீமைகள் நம்மைக் கெடுத்துவிடுகிறது, அதினின்று இரட்சிக்கப்படக் கேட்கிறோம் என்றும் சொல்லுவார்கள்.

அல்ல; நாட்டையுண்டாக்கின நாயனே நகரத்தையும் உண்டாக்கினார். தேனீக்கள், தூக்கணான், பீவர் என்னும் கடல் நாய்களுக்கு ஓர் அளவான அறிவைக் கொடுத்து அதது கூடு கட்டவும், சுகமாய் வசிக்கவும் செய்தவரே, மனுஷருக்குரிய அளவான அறிவைக் கொடுத்து கல்வீடு கட்டவும், புகைவண்டியில் பயணம்பண்ணவும், தந்தி மூலமாய்ப் பேசவும், தூரதிஷ்டிக் கண்ணாடியால் பார்க்கவும், சப்த யந்திரத்தால் கேட்கவும், மருந்துகளால் சுகவீனங்களைத் திருத்திக்கொள்ளவும் வகைபண்ணியிருக்கிறார். இவ்வளவு விவேகமும் ஆண்டவருடையதுதான். இவை ஒவ்வொன்றும், நம்முடைய பரமபிதாவாகிய தேவன் ஞானத்தில் பூரணரும், பரிசுத்தத்தில் பயங்கரமானவரும், அன்பில் ஆழமறியக் கூடாதவருமானவர் என்பதையே நமக்கு உணர்த்துகிறது. நாம் கற்கும் கல்வியோ, சிற்பசாஸ்திரமோ, யந்திரசூக்ஷமமோ எல்லாங்கூடி நித்திய சிற்பாசாரியின் மகத்துவத்தைத் தான் நமக்குக் காட்டுகிறது.

இரட்சகர் தமது சீஷருக்காகச் செய்த கடைசி ஜெபத்தின் முடிவு வாசகத்தில் அவர் இவ்வுலகத்தையும் அதிலுள்ள தீமையையும் பிரித்துவிட்டார் என்னலாம்.

"நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார். (யோவா. 17. 15.)

இந்தத் தீமை இன்னதென்பதை நீங்கள் அறிய விரும்பினால், பரி. யோவான் என்னும் பக்தர் சொல்வதைக் கேளுங்கள்:—"நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்; உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" என்கிறார். (1 யோவா. 2. 14–16.)

2. இங்கே தீமை என்பது துன்பங்களைக் குறிக்கிறதில்லை. துன்பங்கள் தீமையானவைகளல்லவென்று விஸ்தரித்துக் காட்டுவது வேறு விஷயம். ஒருகாலத்தில் உபத்திரவ அவதியால் வருத்தப்பட்ட ஒருவன் "ஆ துன்பமே, துன்பமே! நீ வர யாதொரு காரணத்தையும் காணேன், என்றாலும் நீ தீமையென்று நான் ஒருக்காலும் சொல்லமாட்டேன்" என்று சொன்னான். நாம் வேதனையையும் துக்கங்களையும் அவதூறையும், தரித்திரத்தையும், மற்றெல்லா நஷ்டங்களையும் தீமைகளென்று சொல்லுகிறோம். இவை ஒன்றின்பின்னொன்றாக ஒருவனைத் தொடரும்போது, "அநேக தீமைகள் என்னைச் சூழ்ந்துகொண்டது" என்று அவன் அங்கலாய்ப்புடன் சொல்லலாம்; "இடியினும் பெருங்காற்றினின்றும், பெருவாரி வியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும், யுத்தத்திலும் கொலையிலும் சடுதியில் வரும் மரணத்திலும் நின்றும், என்னை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே" என்று அபயமிடலாம். இப்படி நாம் அபயமிடுவது இயற்கைப் பிரமாணத்தின்படிச் சரி

யாயிருந்தாலும், இதின் மத்தியில் "பிதாவே, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்ற விண்ணப்ப வாசகத்தின் கருத்தையும் மறந்துவிடக்கூடாது. ஏனெனில் இவை ஒவ்வொன்றும் "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது" என்ற சத்தியத்துக்கு இசைவாகவே இருக்கிறது (ரோ. 8. 28.). தேவ நடத்துதலின் போக்கானது, நம்மைத் துன்பங்களிலிருந்து நீக்கிவிடுகிறதாயிராமல், அவைகளைக்கொண்டு படிப்பிக்கிறதாயிருக்கிறது. உபாத்தியாயர் கையிலிருக்கும் ஒரு பிரம்புபோல, துன்பங்கள் தேவனுடைய கரத்திலிருக்கின்றன. ஒரு சுமக்கிறவனின் பாரத்தைக் குறைக்காமல், அவன் பலத்தை விருத்திபண்ணுவதும், ஒரு கப்பலைக் கரையில் வைத்திருப்பதைவிட, அது புசலுக்கும், அமளிக்கும் நிற்கத் தக்கதாகப் பலமாகச் செய்து கடலுக்குள் ஓட்டுவதும் லோகத்தில் சாதாரண வழக்கமாயிருக்கிறதல்லவா? ஆதலால் நாம் நமக்குண்டாகும் உபத்திரவங்கள் நீங்கும்படி ஜெபிக்கிறதில், அப்படி நீங்குவதையல்ல, அவற்றால், நமது ஆத்தும சுகபலத்துக்கு எவ்வளவேனும் சேதமுண்டாகாதபடிப் பார்த்துக்கொள்ளவேண்டியது.

துன்பங்கள், தாளோடிருக்கும் தானியத்தை தாளிலிருந்தும், பதரிலிருந்தும் பிரிக்கும்படிப் பிரயோகிக்கும் தண்டாயுதம்போல மாத்திரமிருக்கிறது; இதைப் பற்றி ஒரு பக்தன் சொல்வதாவது:—

"தடிஅடி பட்டால் மணி வரும்
பதர்போய் விட்டால் தானியம் தேறும்
அரைபடும் மட்டும் மாவாகாதே
அரைபடப்பட வெண் மாவாமே.

'துன்பம் வரும்வரையும் நாம் தேறோம்
இன்பத்தால்மாத்ரம் நாம் தூயராகோம்
தாளை விட்டுப் பிரியா மணியை
மதியார்; மதிப்பார், பிரிந்ததை.

தேவதண்ட துன்பந்தொட்டால், நம்மை;
தூய்மையாவோம்; விளங்குமே, நன்மை,
'தேவாவி நம்மைத் தூற்றிப்புடைத்தால்
தீமை நீங்கிச் சுத்தமாவோம், அத்தால்.

நம்மை லோகம் விட்டுப் பிரிக்கவே
அதின் பற்றைவிட அடிப்பாரே
நமதுடலாந் தோல் நீங்குமட்டும்
துன்ப உரல்தடி நம்மைக் குத்தும்.

அத்தால் ஆவி உடலை வெறுக்கும்
சலித்து மெலிந்து மேலே நோக்கும்
முன்பு வானவாழ்வு கிட்டாதானால்,
பின்பு நித்தியவாழ்வு கிட்டும், தானாய்"

என்பதே.

தானியத்தைத் தாளிலிருந்து பிரிக்கும் தடியையும், இரத்தினங்களைப் பிரகாசிக்கப்பண்ணும் சாணைக்கல்லையும், வளர்ந்த கிளையை நறுக்கும் கத்தியையும், நிலத்தைச் செய்கால்படுத்தும் கலப்பையையும், சுகத்தைத் தரும் மருந்தையும், அழகைக் கொடுக்கும் தைலத்தையும், பாம்புப் புற்றிலிருந்து ஒரு பிள்ளையின் கையைப் பலவந்தமாய் இழுப்பதையும் எப்படித் தீமை என்போமோ அந்தக் கருத்தின்படித்தான் துன்பங்கள் தீமையாயிருக்கிறது. நமது கனத்த துக்கங்களிலிருந்துதான், மிதமிஞ்சின சந்தோஷம் நமக்கு வருகிறதுண்டு. உள்ளபடி அவைகள் தீமைகள் அல்ல.

3. இங்கே தீமை என்பது மரணத்தைக் குறிக்கிறதுமில்லை. மரணமானது பஞ்சு மிதியடி போட்டுவந்தது போல மெதுவாய் வந்து நமது ஜீவனை மேற்கொள்ளலாம். நம்மை அறியாமல் மரணம் நம்மைப் பிடிக்கலாம். மரணந்தான் என்னைத் தொடருகிறதென்று நோயாளி அறிகிறதில்லை. அவன், இந்தக் குளிர் என்ன? இந்த இரத்தக்கொதிப்பின் காரணமென்ன? இந்த அசாத்திய முடம், பலவீனமும் ஏன் வருகிறதென்று தனக்குள் சொல்லிக்கொள்ளலாம். இது மரணமாகுமோ? சுரத்துக்கு வருமோவென்று கேட்கலாம்.

ஒரு தகப்பன் தன்னுடைய குருட்டுப்பிள்ளையைத் தோளில் சுமந்து வேறொரு வீட்டுக்குப் போனான். அந்த வீட்டிலிருந்த ஒரு ஆள் வாய்பேசாமல் அந்தப் பிள்ளையைத் தூக்கித் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டான். அப்போது தகப்பன் பிள்ளையைப் பார்த்து, மகனே உன்னைத் தூக்கி வைத்திருக்கிறது யாரென்று தெரியுமா?—என்று கேட்டான்; அதற்கவன்,—தெரியாது அப்பா, ஆனால் அது இன்னாரென்று உமக்குத் தெரியும் அல்லவா என்றான். அந்தப் பிள்ளையைப் போல, நாம் யாருடைய கரத்திலிருந்தாலும் சரி நமது பரமபிதா அதை அறிவார் என்று மனதிற்கொண்டு, அவர் பேரில் நம்பிக்கையோடு ஜீவித்துச் சாகவேண்டியது.

மரணத்துக்கு ஆயத்தப்பட்டிராதவர்களுக்கு, அது பயங்கரமாகத்தானிருக்கும்; அவர்கள் மரணத்தை ஜீவனின் பிராண சத்துரு என்று சொல்லுவார்கள். குணப்படாமல் சாகப்போகிறவர்களை நாம் பார்க்கும்போது, பரிதாபப்பட்டுக் கர்த்தாவே, அவர்களைத் தற்காரும், அவர்கள் பாவ உணர்வடைந்து, மரணத்துக்கு ஆயத்தப்பட்டவர்களாய் மரிக்கும்படி அவர்களுக்கு இன்னும் சிலநாட்களை நீட்டியருளும் என்று ஜெபிக்கிறதுண்டு. ஒருதடவை ஸ்க்கொத்திலாந்தில் யுத்தமுண்டானபோது ஓரிடத்தில் சேவகர் கூட்டமாகக் கூடி வேதம் வாசித்து ஜெபம் செய்யும்போது, யுத்த எக்காளம் தொனித்து, குண்டுகள் வந்து விழுந்தன; உடனே அவர்கள் தங்கள் வேதாகமங்களை மூடிவிட்டு யுத்த ஆயுதங்களை எடுத்து யுத்த சன்னத்தராய் நின்றார்கள். அப்போது அவர்கள் குரு வானத்துக்கு நேராகக் கரத்தை உயர்த்தி, கர்த்தாவே "முதிர்ந்த கனிகளை அறுத்து பிஞ்சியையும் காய்களையும் விட்டுப் போம்" என்று ஜெபித்தார். குணப்படாதவர்கள் குணப்பட்டு மரிக்கவேண்டுமென்பதே அவருடைய ஆவல். நாமும் மரிக்குமுன் குணப்பட்டவர்களாயிருக்கும்படி இப்பொழுதே குணப்படுவோமாக.

மரணத்துக்கு ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கு அது நல்ல வாழ்வாயிருக்கிறது. அவர்கள் தங்கள் மரண

ரதமேறி பாவமும் தீமையுமான இவ்வுலகத்தை விட்டு, பாவம், நோய், துக்கம், கண்ணீரில்லாத ஒரு நல்ல லோகத்தில் பிரவேசிக்கிறார்கள். அவர்களுக்கு மரணமானது நித்திய பரிபூரணத்திற்குட்படுவதாயிருக்கிறது. மற்றவர்களுக்குப் பெரிய நஷ்டமாயிருப்பது அவர்களுக்குப் பெரிய லாபமாயிருக்கிறது. ஆர்ச்சுபிஷப் லீட்டன் என்பவர் மரணத்துக்கேதுவான வியாதிப்படுக்கையில், சற்று வியாதி தெளிந்து நிமிர்ந்து உட்கார்ந்திருந்தார்; அவருடைய முகம் துக்கசாகரத்தால் நிறைந்திருந்தது. தங்கள் மனதின் கவலை என்ன? இவ்வளவு முகங் குறுகுதலுக்குக் காரணமென்னவென்று, பக்கத்தில் நின்ற ஒருவர் கேட்டபோது "என் பயணம் முடிந்தது, பாவம் நின்றது—கரை பிடித்து நங்கூரம் போடலாமென்றிருந்தேன்; இப்போதோ துறைமுகத்துக்குள் வந்தாலும், மறுபடியும் நடுக்கடலுக்குள் காற்றடித்துத் தள்ளுகிறதேயென்றுதான் விசனப்படுகிறேன்" என்றார். இப்படி நாம் இன்னும் இவ்வுலகத்தில் வசிப்பதில் பாவத்துக்குப் பயந்தாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்குச் சகாயமுண்டு என்ற நம்பிக்கையுடன் ஜீவித்து வருவோமாக.

4. இங்கே சொல்லப்படும் தீமை பாவம்தான். வேறு கருத்துக்களை நாம் ஒப்புக்கொள்ளக்கூடாது. இந்த தீமை, தீயோனை அதாவது பிசாசைக் குறிக்கிறதென்பார்கள். பிசாசு பெரிய தீயோனோ பாவம் பெரிய தீமையோ?—பாவந்தான் பிசாசிலும் கொடியது. பாவம்தான் தூதனைப் பிசாசாக்கினதல்லவா? தீமைதான் தீயோனைப் பிறப்பிக்கிறது. பிசாசால் அல்ல, பாவத்தால்தான் இருதயம் முதலானது கேடு அடைகிறது; அந்தக் கேட்டோடு பிசாசு கூடிக்கொண்டு அதிகக் கேட்டையும் தீமையையும் விளைவிக்கிறான். பாவம் என்னும் வித்திலிருந்துதான் நரகசோலைகளான காடுகள் விருத்தியாகின்றன. அக்காட்டுக்குள் பூதகணங்கள் வசிக்கும் கெபிகளும், ஏறி விளையாடும் விருட்சங்களும், கூத்தாடும் வனங்களுமிருக்கின்றன. பாவமானது, ஆக்கினை

யின் வித்தாயிருக்கிறது. அது தன்னிலே தீமையா யிருக்கிறது. தீமையானது தவிர வேறொன்றும் அதி லிருந்து உற்பத்தியாகமாட்டாது. ஆதலால் நாம் இந்த விண்ணப்பத்தில் தீயோனின் இன்றல்ல, தீமையினின்று இரட்சிக்கப்படக் கெஞ்சுகிறோம்.

II. இரட்சித்தருளும் என்ற வார்த்தையைக் கவனிப் போம்.

1. இரட்சித்தருளும் என்ற வார்த்தை முந்தின சம் பந்தத்தை நமக்கு ஞாபகப்படுத்துகிறது. இவ்விடத் தில் பாவத்தின் சம்பந்தமாய் மூன்று விண்ணப்பங்கள் வருகின்றன. அம்மூன்றையும் தனித்தனிப் பிரித்து விடாமல், ஒன்றின்பின் ஒன்றைக் கோத்துக்கொள்ள வேண்டியது. பாவங்களைக் கடனுக்கொப்பிட்டுப் பேசும் விண்ணப்பத்தோடு இதைச் சேர்த்து, பிதாவே நாங்கள் பாவக்கடனுக் குட்படாதபடி எங்களை இரட்சித்தருளும் என்று கேட்கிறோம். நான் இயேசுகிறிஸ்துவை விசுவா சிக்கிறேன். அவர் என் பாவக்கடனைத் தீர்த்துவிட்டவர்; நான் பாவம் செய்தால் அவரிடம் திரும்பப் போய் விசு வாசத்தால் அவருடைய சிலுவையைப் பிடித்துப் பாவ மன்னிப்பைக் கேட்பேன், எனக்கு மன்னிப்புக் கிடைக் கும் என்று சொல்லிக்கொள்வது போதாது. இது பாவம் போக்கும் ஆட்டின் தலையில் கையைவைத்து என் பாவத்தை வெறும் பலியில் சுமத்திவிட்டேன் என்று சொல்வதுபோலாகும். நாம் இனிமேல் பாவத்தில் விழாதபடி தற்காக்கப்பட மன்றாடிவரவேண்டும். அது தான் சரியான பாவ நிவாரணமுறை. மேலும் சோதனை யைப்பற்றிச் சொல்லும் விண்ணப்பத்தோடு இதைச் சம் பந்தப்படுத்தி, பிதாவே எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல் இரட்சித்தருளும் என்று கேட்கிறோம். பாவத்துக்கேதுவான சோதனையிலிருந்து இரட்சிக்கப் படக் கேட்பது பாவத்தினின்று இரட்சிக்கப்படக் கேட் கிறதாயிருக்கிறது. மேலும் இரட்சிப்பானது பாவத் தின் தண்டனையிலிருந்து தப்புவிக்கப்படுகிறதை மாத்திர

மல்ல, அதின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப்படுவதை யும் குறிக்கிறது.

2. நாம் இந்த விண்ணப்பத்தால், இயேசுவின் மூல மாகத்தான் நாம் இரட்சிக்கப்படக்கூடும் என்பதை அறிக்கையிடுகிறோம். நாம் ஒவ்வொரு விண்ணப்பத் தைச் செய்யும்போதும் இந்த நினைவே நமது மனதிலிரு க்கவேண்டியது. எங்கள் பிதாவே என்று நாம் சொல்லும் போது, “நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக் கிறேன்” என்று இயேசு சொன்ன சத்தியத்தை மனதில் உணர்ந்தவர்களாய்ச் சொல்லுகிறோம்; “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” என்று சொல்லும்போது, “உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன், இன்னும் வெளிப்படுத்துவேன்” என்று சொன்னவர் மூலமாய் உமது நாமம் பரிசுத்தப்படுவதாக என்று உணர்ந்து கொள்ளுகிறோம்; “உம்முடைய இராஜ்யம் வருவதாக” என்று சொல்லும்போது “வானத்திலும் பூமியிலுமுள்ள சகல அதிகாரமும் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக் கிறது” என்று சொன்னவர் மூலமாக, உமது இராஜ் யம் வருவதாக என்று உணருகிறோம்; “உம்முடைய சித் தம் செய்யப்படுவதாக” என்று நாம் சொல்லும்போது, தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிற இரண்டாம் ஆதாம் மூலமாயும், நாம் நினைக்கவும் செய்யவும் நமக் குள் கிரியை செய்கிறவர் மூலமாயும் அவருடைய சித் தம் செய்யப்படவேண்டும் என்று உணருகிறோம்; “இன்று எங்கள் ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்” என்று கேட்கும்போது “ஜீவ அப்பம் நானே” என்று சொ ன்னவர் மூலமாய் எங்கள் ஆகாரத்தைத் தாரும் என்று உணர்ந்துகொள்ளுகிறோம்; “எங்கள் பாவங்களை மன்னியும்” என்று கேட்கும்போது, தம்முடைய கிரு பையின் ஐசுவரியத்தின்படியே அவருடைய இரத்தத்தி னால் பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாகிறது என்று உணர்ந்துகொள்ளுகிறோம்; “சோதனைக்குள் பிர வேசிக்கப் பண்ணாதேயும்” என்று கெஞ்சும்போது “பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் நம்மைப்போல

சோதிக்கப்பட்ட பிரதான ஆசாரியர்பேரிலுள்ள நம்பிக்கையைக் கொள்ளுகிறோம். "தீமையினின்று இரட்சித்தருளும்" என்று மன்றாடும்போது, அவர்களைக் குழியில் இறங்கவிடாமல் இரட்சியும் என்று சொன்னவர் மூலமாக சகாயம் கிடைக்கவேண்டுமென்று உணர்ந்து ஜெபித்துவருகிறோம். இந்த ஜெபத்தின் ஒவ்வொரு விண்ணப்பமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ச் செய்யப்படுகிறதாகவே நாம் உணருகிறோம்.

3. கிறிஸ்தவர்களுடைய பழைய பாவங்கள் புதுப்பேலன் அடையும்பொழுது, இந்த விண்ணப்பம் அவர்களுக்கு அதிகப் பிரயோசனப்படுகிறது. நாம் பாவமன்னிப்பைப் பெற்றிருக்கிறோம் என்ற உணர்ச்சியால் இருதயம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அனுபவிக்கிற சமயத்திலும், "இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்" என்று மகிழ்ச்சியுடன் அறிக்கையிடுகிறபோதும், ஒரு சமையா சமையத்தில் "தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்" என்ற இந்த விண்ணப்பத்தை நாம் செய்யும்படி அவசியம் நேரிடுகிறது. நமக்கு அருளப்படும் கிருபையின் இரகசியமானது, நமக்குள்ளிருக்கும் பாவச் சுபாவத்தை முற்றிலும் மாற்றிவிடுகிறதாயிராமல், அதற்கு விரோதமாய்ப் போராடி அதை அடக்கிக் கடைசியாக அது அழிந்து போக முயற்சிசெய்கிறதாயிருக்கிறது. ஒருதரம் தீமையாயிருந்தது என்றென்றைக்கும் தீமையாகவே இருக்கிறது. பழைய சுபாவம் என்றென்றைக்கும் பழைய சுபாவந்தான். அது நமது மரணையையும் பரிசுத்தத்தை எதிர்த்துக்கொண்டு வருகிறதுடன், மரணப்படுக்கையிலும், பக்தரின் ஆத்துமாக்களுடன் போராடிக்கொண்டே வருகிறது. நாம் கிருபைக்குட்பட்ட முதலாம் நாளுக்கும், மகிமைக்குட்படுகிற முதலாம் நாளுக்கும் இடையில் அநேக ஆவிக்குரிய பயங்களும், அமளிகுமளிகளுமுண்டு. ஆவிக்குரிய யுத்த சாஸ்திரங்களை அநுபோகத்தால் அறிந்த ஆத்துமாக்களுக்கு இதின் உண்மை தெளிவாகத் தெரியவரும். ரோமையிலிருந்த ஒரு பக்தன்,

தன் இருதய நிலைமையை பரி. பவுலின் இருதய நிலைமையுடன் ஒப்பிட்டுத் தியானித்து, அவரைப் புகழுகிறவகையாக "பாக்கியவாளன்; அவர் மனம் எப்போதும் பரத்திலிருந்தது; அவருடைய அன்பின் அனலைக் குளிரப்பண்ணவும், அவர் இருதய சமாதானத்தைக் கலைக்கவும் ஒன்றினாலும் கூடவில்லை; அவருடைய இருதய வாழ்வு எனக்குக் கிடைத்தாலோ!" என்று அறிக்கையிட்டான். அந்தப் பரிசுத்த அப்போஸ்தலனுங்கூடத் தமது இருதய நிலைமையைப்பற்றிச் சொல்லுகிறதாவது:—"உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்; ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாகப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன். அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்கிறார்.

இந்த ஞானப்போரானது காலத்துக்குக் காலம் அதின் தன்மையில் வித்தியாசப்படுகிறதுண்டு; சிலவேளை அது இருதயத்தை அசதியாக்கலாம், அப்போது ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொள்ளும்; அதிலிருந்து எழும்ப இயலாமல் அவதிப்படுவோம்—ஜெபம் செய்ய முழங்கா லூன்றுவோம், நமது ஜெபத்திலோ அனலும், ஊக்கமுமிராது—அது பாவமாக முடிந்தாலும் முடியலாம்—சில காலம் ஜெபத்தை நிறுத்திவிடும்படியான அசதி நம்மைப் பிடித்துக்கொள்ளலாம் — வேதம் வாசித்தால் வெள்ளோலை வாசித்ததுபோலாகிவிடலாம்; வேலை செய்யலாம்; ஆனால் ஆவியின் அனல் இல்லாமையால் அவையனைத்தும் லாபமற்ற வேலையாகிவிடலாம்; தேவ பிரசன்னத்தை இருதயம் பார்க்க விரும்பினாலும், அதின் காட்சிக்குத் தென்படாதுபோகும். நாம் பார்ப்பதும், கேட்பதும் எல்லாம் சரீர உணர்ச்சியாகுமேயன்றி ஆத்

தும உணர்ச்சிகளா யிருக்கமாட்டாது. நமது ஆத்துமா செத்த சவம்போல ஸ்மரணையும் அசைவுமற்றிருக்கலாம்.

"விண்ணில், கடலில் அசைவே இல்லை
கட்டைபோல் கப்பல் நின்றோடவில்லை"

என்ற வாசகத்துக்கொப்பாக நமது ஆத்துமாவின் ஸ்திதி யிருக்கலாம். இச்சமையத்தில், ஐயோ இதென்ன அசதி; இதைவிடப் பெருங்காற்றும் கோஷ்டமும் நல்லதாயிற்றே; இந்தச் சிலேற்பனக் குளிர்ச்சியைவிடக் காய்ச்சலின் கொதிப்பு நல்லதே? ஐயோ! இதென்ன ஆத்தும ஸ்திதி? இது மாறாதா? "பிதாவே தீமையினின்று என்னை இரட்சித்தருளும்" என்று நாம் கெஞ்சுவோம்.

சிலதரம் நமக்குள்ளிருக்கும் இயல்பான தீமைச் சுபாவமானது, சுரங்கம் வெடித்ததுபோல திடீரென்று எழும்பிவிடலாம். ஒவ்வொரு மனுஷனிடத்திலும் அவனவனுக்குரிய தீமையின் வேர் இருக்கின்றது; அது ஆவியின் நல்முயற்சிகளின் தளர்ச்சிக்குத் தக்கதாகத் திடீரென்று எழும்பித் தன் தீய கிரியைகளை நடப்பிக்கலாம். ஒருவனில் பதஷ்டமும், ஒருவனில் எரிச்சலும், ஒருவனில் பிடிவாதமும், ஒருவனில் தூஷணமும் ஒருவனில் பெருமையும், ஒருவனில் சிற்றின்பமும், ஒருவனில் பொறாமையும், ஒருவனில் பொருளாசையும், ஒருவனில் அவதூறும், ஆக நரகத்தின் கிரியைகளில் ஒவ்வொருவரு பலவாறது வெளியாகலாம். ஒருகாலத்தில் நமக்குள் அதிகாரம் செலுத்திவந்து பின்பு நம்மால் அடக்கிவிடப்பட்ட பாவமானது, மறுபடியும் தன் பழைய சுயாதீனத்தையும் ஆதிக்கத்தையும் அடையச் சமையந் தேடிக்கொண்டேயிருக்கும். நமக்குள் ஆரம்பமாகி வளரும் புதிய சுபாவமானது, அந்தப் பழைய சுபாவத்தை லயப்படுத்தி பலவீனப்படுத்தியிருந்தாலும், அது எப்போதும், நான் மறுபடியும் பெலனடையேனா? என்று ஏங்கிக்கொண்டுதானிருக்கிறது. புதிய சுபாவம் தன் பலத்தில் சன்னம் சன்னமாய்க் குறையும் போது, பழைய சுபாவம் அதின் அளவுக்குத்தக்கதாகக்

கொஞ்சம் கொஞ்சமாய் விருத்தியாகி, கடைசியில் புதிய் சுபாவத்தை மடக்கிவிடும். அச்சமையத்தில் அவன் தன் பலவீனத்தை உணர்ந்து, இனியேது நமக்குச் சகாயம் என்று அங்கலாய்த்து, பிதாவே "தீமையி லிருந்து என்னை இரட்சித்தருளும்" என்று ஓலமிட அவசியமுண்டாகும். ஏனெனில் இரட்சிக்கப்பட்ட வன் பாவத்தில் விழுந்தாலும், அதில் நிலைத்திருக்க மாட்டான். அதேநிமிஷத்தில் அவன் தன்னைப் பயங் கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருக்கிறதாக அறிந்து, தன் சகாயனை நோக்கி வேண்டிக்கொள்ளு வான்.

4. "தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்" என்று நாம் சொல்லும்போது, நாம் முற்றிலும் தீமை யிலிருந்து இரட்சிக்கப்பட்டுப் பூரண பரிசுத்தராகும் கடைசி வாழ்வையும் எதிர்க்கிறவர்களாயிருக்கிறோம்.

பூர்வகாலத்தில் இங்கிலாந்திலுள்ள இராஜாவுக்கும், பார்லிமெந்தாருக்கும் யுத்தமுண்டானபோது, தாண்ட் டன் என்னும் நகரத்தை முற்றிகை போடப்பட்டது. போசனம் வழக்கமான கிரயத்திலும் இருபதுமடங்கு அதிகப்பட்டது. அப்பட்டணத்தில் பாதி, பீரங்கிக் குண்டுகளால் அழிக்கப்பட்டது. அநேகர் பஞ்சத்தால் ஆகாரமின்றி மாண்டார்கள். இவ்வளவு சம்பவித்தும், அந்நகரத்தார் பரி. மேரியின் ஆலயத்தில் கூடி ஜெபித்து வந்தார்கள். அவர்கள் ஜெபமெல்லாம் இந்த அவதியில் "எங்களை இரட்சித்தருளும்" என்பதுதான். ஒருநாள் அவர்கள் இப்படியே கூடி, முற்றிகை போட்டிருக்கும் சத்துருக்கள் பின்வாங்கிப்போகமாட்டார்களா என்று ஏங்கிக்கொண்டிருக்கையில், உல்லாசமுள்ள ஒருவன் ஓடிவந்து, கோவில் வாசல்படியில் நின்று "விடுவிக்கப் பட்டோம்" என்ற ஒரே வார்த்தையைமாத்திரம் சொன் னான். அந்த வார்த்தை சற்றுநேரத்துக்குள், அக்கோ விலுக்குள்ளிருந்த எல்லாருடைய காதிலும் மாற்றி மாற்றி ஓதப்பட்டதால், "விடுதலை" என்ற சத்தம் அந்த ஆலயத்தில் முழங்கிற்று.

இந்தச் சமையத்தில் அங்கிருந்தவர்களின் மனதிலுண்டான ஆனந்தத்தை நாம் ஒருவாறு கிரகிக்கலாமே. பூமிக்குரிய விஷயங்களில் நாம் பல சகாயங்களைப் பெற்று அநுபவித்திருக்கலாமே. வேடனுடைய கண்ணிக்குத் தப்பின குருவியைப்போல் எங்கள் ஆத்துமா தப்பிற்று, கண்ணி தெறித்தது; நாம் தப்பினேம் என்று சொல்லத்தக்க சமையங்களும் நமக்கு நேரிட்டிருக்கலாம். மரணப்பிடிக்கும் நாம் தப்பியிருக்கலாம்; பயங்கரமான ஒரு சோதனையிலிருந்தும் நாம் தப்பியிருக்கலாம்; நாம் இருளின் அதிகாரத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கும் வந்திருக்கலாம். என்றாலும், நாம் இன்னும், முற்றிலும் பூரணமாகத் தீமையிலிருந்து விடுதலையாக்கப்படாமலிருக்கலாம். சிலநேரம், நாம் ஒருகாலத்திலும் தீமையிலிருந்து விடுதலையாக்கப்படுதல் கூடாதவிஷயம்போலிருக்கிறதே! என்று முதலாய் நினைத்திருக்கலாம்.

நமது ஆவிக்குரிய போரில், ஒரு பாவத்தை, அல்லது அதின் ஒரு பாகத்தை ஜெயித்தவுடனே, நமது ஜெயமெல்லாம் வந்துவிட்டதுபோல வெற்றியடைந்தோம், வெற்றிகொண்டோம் என்று கூவுகிறதுண்டு. அப்படி நாம் ஜெயித்த பாவங்களும், அதின் பாகங்களும், மறுபடியும் நமக்குள் துளிர்த்துவருகிறதை நாம் கவனித்து, இதெப்படி மறுபடியும் துளிர்த்தது என்று கவனிக்கிற நமது பல்லையும், உதட்டையும் கடித்துக்கொள்ளலாம். நமது சுபாவத்தின் ஒரு பக்கத்தில் தீமை குறைந்தாலும், மறுபக்கத்தில் அது அதிகப்படுகிறதைக் காணலாம். நாம் பாவமன்னிப்பின் துவக்கத்திலுள்ள இன்பத்தை ருசிக்கையில், இத்தோடு நமது ஞானப்போரின் தொல்லை ஒழிந்தது, இனிமேல் சுத்தமான ஆவியைச் சுவாசித்து இயேசுவின் சகாயத்தால் சாங்கோபாங்கமாகப் பரிசுத்தத்தில் பூரணப்பட்டுவிடலாமென்று எண்ணிக்கொள்ளலாம். அச்சமையத்தில் உன் ஆவி துள்ளி "என் ஆத்துமாவே நீ பலவான்களை மிதித்தாய்" என்று முதலாய்ச் சொல்லும்; ஆனால் பாவம் சாவின் ஸ்திதிக்கு

வரும்போது, அதிக பராக்கிரமங்கொள்ளும் என்பதை மறவாதே. துபாக்கியால் சுடப்பட்டுக் கீழே விழுந்த கழுகு உன் கையைப் படுகாயப்படக் கொத்துமே. அது தன் சிறகை வீசி உன்னை விசையாய் அடிக்குமே; குண்டு பட்ட புலி உன்னைக் கண்டால் மா வலிமையுடன் உன் மேல் பாயுமே; உன்னைக் கீறிக் காயப்படுத்துமே; சாடும் குதிரை தன் கால்களை விசையாய் உதறுவதால் பக்கத்தில் நிற்கும் உன் காலை முறிக்குமே; குத்துண்ட திமிங்கிலம், தன்னை வேட்டையாடுகிறவர்களின் மரக்கலத்தைப் புரட்டிவிடுமே; பாவம் அப்படியே செய்கிறது. அது தன்னை ஜெயித்தவரால் படுகாயப்படக் குத்தப்பட்டுக் கிடந்தாலும், தன் கடைசி அவதியில் நம்மைப் பற்றிப்பிடித்து நமது ஆவி மடிந்துபோகத்தக்க பலத்தபிடி பிடிக்கும். அது சாகும்போது, உயிரோடிருக்கிற காலத்திலிருந்ததைவிட அதிக பராக்கிரமமுள்ளதாக விளங்கலாம். என்றாலும் நாம் அதின் வல்லமைக்குத் தப்பி "விடுதலையானோம்" என்று கெம்பீர சத்தமிடுவோம்.

நாம் இவ்வுலகத்திலிருக்கும்போது "தீமையிலிருந்து இரட்சித்தருளும்" என்று ஜெபித்த விண்ணப்ப வாசகம், கிறிஸ்துவுக்குட்பட்டதான நமது நல்ல மரணத்தால் நின்றுபோம்; அப்பால் நாம் வெள்ளை அங்கி தரித்து, குருத்தோலை பிடித்து, கிரீடமணிந்து, சுடரொளியுள்ளோராய் தேவனுடைய சிம்மாசனத்துக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்பாக நின்று ஆர்ப்பரிக்கும் திரள்கூட்டமான ஜனத்துடன் கூடிக்கொண்டு "மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" என்று சதா நித்திய காலமாக ஆர்ப்பரிப்போம். அந்த நல்லகாலம் வரும் வரையும் பிதாவே, "தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்" என்று தினந்தோறும் ஜெபித்துவருவோமாக.

## பொழிப்பு.

I. இந்த தீமை எது? (1) உலகமல்ல, (2) துன்பங்கள் அல்ல, (3) மரணமுமல்ல, (4) பாவந்தான்.

II. "இரட்சித்தருளும்" என்ற வார்த்தை.

1. முந்தின சம்பந்தத்தை ஞாபகப்படுத்துகிறது.

2. இயேசுவின் மூலமாகவே இரட்சிப்பு என்பதை அறிக்கை செய்கிறோம்.

3. பழைய பாவங்கள் புதுப்பெலனடையும்போது இப்படிச் சொல்லக்கூடும்.

4. பூரண பரிசுத்தராகும் கடைசிவாழ்வை நினைத்தும் இப்படி ஜெபிக்கிறோம்.

## எங்களின் அண்மைக்காலத் தியான நூல்கள்

ஏழு வார்த்தைகள்
கிறிஸ்தவ ஜீவியம்
கிறிஸ்தற்ற கிறிஸ்துமார்க்கம்
என் சுய சரிதை
நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர்
— எஸ். பரமானந்தம்

நிமிடச் செய்திகள்
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

கண்ணீரைப் போக்கும் காலைப்பொழுது
— ஜான் எச். பீட் தமிழாக்கம் : தி. தயானந்தன் பிரான்சிஸ்

தூய ஆவியே வாரும் முழுப் படைப்பையும் புதிதாக்கும்
— தமிழில்: வி. தேவசகாயம்

உயர, உயர.....
— கே. ஜி. எபநேசர்

ஆண்டவரே சொல்லும் அடியேன் கேட்கிறேன்
— கே. ஜி. எபநேசர்

எல்லாம் இயேசுவே
— எபநேசர் டிக்கிகஸ்

சிறுவர்களே உங்களுக்கு
— ராஜம்மாள் டிக்கிகஸ்

யாமறிந்த நூல்களிலே
— தி. தயானந்தன் பிரான்சிஸ்

மோட்சப் பிரயாணம்
— ஜான் பனியன் தமிழாக்கம் சாமுவேல் பவுல்

தியானச் சோலை
தியான ஆலயம்
உங்களோடு ஒரு நிமிடம்
ஆத்தும நேசரின் அங்க மகத்துவம்
— சாமுவேல் பவுல்

CLS

விலை ரூ. 40 (இந்தியாவில் மட்டும்)